# நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவர்கள்

You Matter to God(Tamil)-2018.indd 1 5/22/2018 6:18:05 PM

You Matter to God(Tamil)-2018.indd 2 5/22/2018 6:18:05 PM

# டெரிக் பிரின்ஸ்

# நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவர்கள்

தேவனுடைய பார்வையில் உங்களுடைய மெய்யான மதிப்பையும், அடையாளத்தையும் கண்டடையுங்கள்

DEREK PRINCE MINISTRIES - INDIA



You Matter to God(Tamil)-2018.indd 3 5/22/2018 6:18:05 PM

**YOU MATTER TO GOD**

© 2010 Derek Prince Ministries - International

Printed by Derek Prince Ministries

All rights reserved.

"NEENGAL DEVANUKU MUKKIYAMANAVARGAL" (Tamil)

TAM-YMTG/2000/0319/LOP

ISBN 978-81-936713-3-7

Published by permission in the Tamil language.

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :

**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

Derek Prince
MINISTRIES - INDIA

You Matter to God(Tamil)-2018.indd 4 5/22/2018 6:18:05 PM

# பொருளடக்கம்

**அறிமுகம்**........................................7

1. நீங்கள் எவ்வளவு மதிப்புள்ளவர்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா ?........................................13
2. நம்முடைய இலக்கைத் தவற விட்டோம்........................................23
3. தேவனுடைய கண்ணாடியில் உங்களைப் பாருங்கள் ........................................31
4. ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம்........................................43
5. முரட்டாட்டம் - ஒரு அடிப்படை பிரச்சனை........................................58
6. தீர்வு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது ........................................66
7. எவ்வாறு எல்லாம் ஒன்றாய் சேருகின்றன........................................77
8. தேவனுடைய திட்டத்தின் ஒழுங்கு........................................92
9. ஆவியிலிருந்து ஆத்துமாவை நோக்கிய வீழ்ச்சி........................................103
10. முழுமையாய் பரிசுத்தமாக்கப்படுதல்........................................117
11. வாழ்க்கையின் உச்சகட்டம்........................................124
12. நாம் உருமாற்றப்படுவோம்........................................142
13. நீங்கள் ஒரு புதையல்........................................154

You Matter to God(Tamil)-2018.indd 6 5/22/2018 6:18:05 PM

# அறிமுகம்

தனது 88வது வயதில் மரித்து, இவ்வுலகைக் கடந்து பரலோகம் சென்ற அருமையான வேத ஆசிரியராகிய டெரிக் பிரின்ஸ், தனது கடைசி வருடங்களில், இன்னும் இன்னும் அதிக அன்பும், பரிவும் கொண்ட இருதயமுடைய ஒரு நபராக மாறினார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அதற்காக அவர் முன்பு அன்பில் குறைவுபட்டிருந்தார் என்று அர்த்தமல்ல. அவருடைய வாழ்க்கை முழுவதும் அவருடைய அன்பும், கனிவும் வெளிப்படையாய் தெரிந்தது. ஆனால் டெரிக்கின் கடைசி வருடங்களில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை நீங்கள் கேட்கிறீர்கள் என்றால், குறிப்பாக, தேவனுடைய தயவையும், உண்மையையும் குறித்து அவர் பகிர்ந்து கொள்ளும்போது, உணர்ச்சிவசப்பட்டு அவருடைய பேச்சு தடைபடுவதை, எவ்வித தயக்கமும் இன்றி அவருடைய குரல் உடைந்து போவதை நீங்கள் தெளிவாகக் கேட்டிருப்பீர்கள்.

டெரிக், தேவனை முகமுகமாய் சந்திக்கும் அந்த நேரம் நெருங்க நெருங்க, அவர் தேவனால் அன்பும் பரிவும் கொண்ட ஒரு நபராகவே மாற்றப்பட்டார் என்றுதான் தெரிகின்றது. அவருடைய வாழ்க்கையின் பின் நாட்களில், அவர் பகிர்ந்து கொண்ட செய்திகள் அதைத்தான் காண்பிக்கின்றன. ஜனங்களை குறிப்பாக, விதவைகள், அனாதைகள் மற்றும் ஏழைகளை பரிவுடன் விசாரிக்க வேண்டும் என்பதற்கு அவர் கொடுத்த முக்கியத்துவம், அவருக்குள் நடந்து கொண்டிருந்த மென்மையாக்கும் கிரியையை வெளிப்படுத்தியது. ஒவ்வொரு நபரும் பிதாவாகிய தேவனுடைய பார்வையில் எவ்வளவு விலையேறப்பெற்ற வராக இருக்கிறார் என்பதைக் குறித்த இவருடைய போதனை, இவருடைய இருதயத்தின் மனதுருக்கம் அதிகமாகிக் கொண்டே போனது என்பதை பிரத்தியட்சமாய், வெளியரங்கமாய் எடுத்துக் காண்பிக்கும் ஆதாரங்களில் ஒன்றாக இருக்கிறது.

## நீங்கள் விலையேறப்பெற்றவர்கள் - இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?

தேவனுடைய வார்த்தைக்கு தன்னை அர்ப்பணிக்கின்ற விஷயத்தில், சத்தியத்தை வலியுறுத்தி போதிப்பதில், அதை தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பின்பற்றுவதில், டெரிக் ஒரு கற்பாறையைப்போல உறுதியாக இருந்தார். ஆனாலும் அவருடைய



You Matter to God(Tamil)-2018.indd 7 5/22/2018 6:18:05 PM

மென்மையான அணுகுமுறைதான், அவருடைய போதனைகளில் அதிகதிகமாக வெளிப்பட்டது. நாம் தேவனுக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லும்போது, அந்தக் கனிவான அணுகுமுறை வெளிப்படுகிறது. அதற்கு ஒரு தெள்ளத் தெளிவான எடுத்துக்காட்டு, "நீங்கள் எவ்வளவு விலையேறப்பெற்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்ற தலைப்பில் டெரிக் தன்னுடைய நடையில் எழுதிய போதனையாகும்.

அந்தப் போதனையில் சொல்லப்பட்ட விஷயங்கள்தான் இந்தப் புத்தகத்தின் முதுகெலும்பாய் இருக்கின்றன. நீங்கள் தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்ற இப்புத்தகம், உங்களுடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய சத்தியங்களை உங்களுடைய கரங்களில் தந்திருக்கின்றன. இதை நினைத்து, நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். டெரிக் பிரின்ஸ் எழுதியிருக்கிற இவ்வார்த்தை, தங்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது என்று சாட்சி பகிர்ந்திருக்கிற எண்ணிலடங்கா ஜனக்கூட்டத்தோடு நீங்களும் சேருவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

நாம் கர்த்தருக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்பதை டெரிக் வலியுறுத்திச் சொல்வதற்கான எல்லாக் காரணங்களும் நமக்குத் தெரியாது. ஒருவேளை, பல வருடங்களாக ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டு, விடுதலையின் ஊழியத்தை செய்து வந்தபோது, நம்முடைய எதிரியாகிய பிசாசு, ஜனங்களுடைய வாழ்க்கையில் உண்டாக்கின மகா மோசமான சேதங்களை அவர் பார்த்தது, அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

மனுஷர்களுடைய வாழ்க்கையில், நிராகரிக்கப்பட்ட உணர்வும், குற்ற உணர்வும் உண்டாக்கின மகா மோசமான சேதங்கள்தான், வேதாகமத்திலிருந்து மகத்தான உற்சாகமூட்டக்கூடிய சத்தியங்களை எடுத்து உரக்கப் பேசும்படி டெரிக்கை உந்தித் தள்ளியது. இந்த ஆவிக்குரிய சத்தியங்களை கிறிஸ்தவர்கள் அறிக்கையாகச் செய்வதன் மூலம், சாத்தானுடைய குற்றம் சாட்டுகிற வேலையை எதிர்கொண்டு, மேற்கொள்ள முடியும். இதைப் பார்க்கும்போது, டெரிக் நரகத்தின் மீதே சீற்றம் கொண்டு, பயங்கரமான கோபத்தோடு நடந்து கொண்டதைப் போலவும், இனியும் அவர் இதைப் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை என்பது போலவும்தான் இருந்தது. ஜனங்கள் பிசாசினுடைய கரங்களில் கொடுமையாக நடத்தப்படுவதை இனியும் பொறுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதில் அவர் நோக்கமாயிருந்தார்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போது, ஒன்றை நீங்கள் முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தேவன் தன்னுடைய நேச குமாரனாகிய இயேசுவையே அனுப்பி உங்களை மீட்குமளவிற்கு, நீங்கள் தேவனுக்கு அவ்வளவு விலையேறப் பெற்ற வர்களாக இருக்கிறீர்கள். பிதாவாகிய தேவன் நம்மை எவ்வளவு

முக்கியமானவர்களாகப் பார்க்கிறார் என்பதை தெளிவாக நமக்கு எடுத்துக் காண்பிக்கும் ஒரு புத்தகமாக இது இருக்கிறது. அது மட்டுமல்ல, இது நம்மை ஒரு யுத்தத்திற்கு அழைக்கும் புத்தகமாகவும் இருக்கிறது. தொடர்ந்து குற்ற உணர்வையும், உங்களுடைய மதிப்பைக் குறித்த சந்தேக எண்ணங்களையும் விதைக்கின்றவனைப் பார்த்து, ''கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக (யூதா 9),'' என்று நீங்கள் எழுந்து சொல்லும்படி, டெரிக்கோடு இணைந்து நாங்களும் உங்களை அழைக்கின்றோம்.

## புத்தகங்கள் எப்படி தொடர்ந்து வெளிவருகின்றன ?

டெரிக் பிரின்ஸ் மரித்து பல வருடங்கள் ஆன பிறகும், அவருடைய பெயரில் புத்தகங்கள் வெளிவருவதைக் குறித்து எழும்புகிற கேள்விகளுக்கு இப்பொழுது பதில் சொல்லியாக வேண்டும். ''டெரிக் இப்பொழுது உயிரோடு இல்லையென்றாலும், உங்களால் எப்படி ஒரு புதிய புத்தகத்தை வெளியிட முடிகின்றது ?'' என்று ஜனங்கள் எங்களைக் கேட்கின்றார்கள். இது ஒரு நியாயமான கேள்விதான். இதற்கான பதில், உங்களை உற்சாகப்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கும்.

டெரிக் இந்த பூமியில் வாழ்ந்தபோது, அவர் நிறைய வேதாகமச் சத்தியங்களைப் போதித்திருக்கிறார். நீங்கள் அவரோடு உரையாடியிருப்பீர்கள் என்றால், தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒரு சில புதிய வெளிப்பாடுகளையாவது நிச்சயம் அவர் உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆரம்பித்திருப்பார். அதை அவரால் தவிர்க்க முடியாது. டெரிக்கின் போதனைகள், ஏதோ ஒரு விதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன அல்லது படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தொகுக்கப்பட்ட அவருடைய போதனைகள், நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. அதோடு கூடுதலாக, உலகமெங்கும் இருக்கின்ற டெரிக் பிரின்ஸினுடைய அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள், இதுவரை கண்டுபிடிக்கப்படாத போதனைகளை தொடர்ந்து வெளிக்கொண்டு வந்து கொண்டே இருக்கின்றனர். சமீபத்தில், டெரிக் பிரின்ஸ் அலுவலகம் ஒன்று, இதுவரை மறைந்து கிடந்த டெரிக்கின் போதனைகள் அடங்கிய ஒலி-ஒளி நாடாக்களை கண்டுபிடித்தனர். அதிலிருந்த போதனைகள், இதுவரை கேட்டிராதவை என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர்.

அதோடு கூடுதலாக, டெரிக்கின் போதனைகளில் பெரும்பாலானவை இன்னும் அச்சிடப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆக, இங்கு விஷயம் இதுதான்: டெரிக் பிரின்ஸினுடைய புத்தகங்கள் இன்னும் அதிகமாய் வரப் போகும் வருடங்களில் வெளியிடப்படும் என்பதை நீங்கள் எதிர்பார்க்கலாம்.



You Matter to God(Tamil)-2018.indd 9 5/22/2018 6:18:05 PM

குறைந்தபட்சம், மூன்று முக்கியமான காரணங்களுக்காகத்தான், நாங்கள் இந்தப் புத்தகத்தை வெளியிடும் புது முயற்சியில் தைரியமாக இறங்கியிருக்கிறோம். முதல் காரணம், வேதாகமச் சத்தியங்கள் அடங்கிய டெரிக்கின் முக்கியமான போதனைகள், சவால்கள் நிறைந்த இந்த நாட்களில், சபைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. வேதாகமச் சத்தியத்தின் ஆழத்தைக் கருத்தாய் போதிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய ஒரே நோக்கமாய் இருந்தது.

இரண்டாவது காரணம், டெரிக்கின் வேத போதனை, காலத்திற் கேற்றபடி மாறாத, காலத்தைக் கடந்த ஒன்றாக இருக்கிறது. காரணம், அவர் தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதில் கருத்தாய் கவனம் செலுத்தினார். அதில் மற்ற அலங்காரமான விஷயங்கள் குறைவாகத்தான் இருந்தன. அவருடைய போதனை, தற்கால சூழ்நிலைகள் மற்றும் பிரச்சனைகளையெல்லாம் கடந்து, நித்தியமான தரத்தை உடையதாய் இருக்கிறது. முப்பது வருடங்களுக்கு முன்பு டெரிக் போதித்த போதனைகள், அவர் அவற்றைப் போதித்தபோது இருந்ததைக் காட்டிலும், இப்பொழுது இன்றைக்கு இன்னும் மேலான விதத்தில் பொருந்தக் கூடியதாய் இருக்கின்றன.

மூன்றாவது காரணம், மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இந்தப் போதனையைப் பயன்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் இன்றும் நம் வாழ்க்கையில் ஒரு பாதிப்பை உண்டு பண்ணுகிறார். எளிமையாகச் சொன்னால், இந்தப் போதனை, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைச் சுமந்து செல்கிறது. ஐந்து, பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்பு டெரிக் போதித்த போதனை களை கர்த்தர் இன்றைக்கும் பயன்படுத்துகிறார் என்று இதை வாசிக்கிறவர்களிடமிருந்து நாங்கள் அடிக்கடி கேள்விப்படுகிறோம். தங்களுக்குள் ஒரு உணர்வைக் கொண்டு வருகிறது, தாங்கள் செல்கிற பாதையை ஒழுங்குபடுத்துகிறது, தங்களுடைய வாழ்க்கையை சரியான திசைக்கு நேராக செலுத்துகிறது, தங்கள் வாழ்வில் நிலையான மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என அவர்கள் சாட்சி பகருகின்றார்கள்.

நேரடியாகச் சொன்னால், டெரிக்கின் போதனைகள் எந்த வடிவத்தில் இருந்தாலும், அது இப்படிப்பட்ட ஆவியானவரின் கிரியையை ஜனங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து உண்டாக்கிக் கொண்டே இருக்கும். எனவே இவ்வுலகில் வாழும் எல்லோருடைய கைகளிலும் இந்தப் போதனைகள் சென்றடைவதை நாங்கள் தொடர்ந்து உறுதி செய்வோம்.

டெரிக் பிரின்ஸின் இப்படிப்பட்ட வல்லமை நிரம்பிய போதனையைத்தான் இப்பொழுது உங்களுடைய கைகளில் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம்.



You Matter to God(Tamil)-2018.indd 10 5/22/2018 6:18:05 PM

நீங்கள் இதை வாசிக்கும்போது, மேலே நாங்கள் குறிப்பிட்ட இந்த மூன்று விஷயங்களையும் நீங்கள் ஒரு அனுபவமாகப் பெற வேண்டும். டெரிக் பிரின்ஸின் தேவஅன்பு நிறைந்த இந்தப் போதனையை நீங்கள் வாசிக்கும்போது, இந்தச் சத்தியங்கள், உங்களைச் சிருஷ்டித்த சிருஷ்டிகருக்கு நீங்கள் எவ்வளவு விலையேறப் பெற்றவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய இருதயத்தில் நீங்கள் ஆழமாக அறிந்து கொள்ள உதவி செய்யட்டும். இந்தச் சத்தியங்கள், தொடர்ந்து உங்களை குற்றஞ்சாட்டிக் கொண்டே இருக்கிற சத்துருவின் முகத்திற்கு நேராக, உங்களை தைரியமாக நிற்கச் செய்யட்டும். நீங்கள் தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்ற எளிமையான சத்தியத்திலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்கிற வெளிப்பாடு, அந்த எதிரியை எதிர்த்து நிற்பதற்கும் உங்களுக்கு உதவி செய்யட்டும்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் சர்வ தேச பதிப்பகக்குழு



You Matter to God(Tamil)-2018.indd 11 5/22/2018 6:18:05 PM

You Matter to God(Tamil)-2018.indd 12 5/22/2018 6:18:05 PM

# 1

# நீங்கள் எவ்வளவு மதிப்புள்ளவர்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா?

*தேவன் நம் மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.*

1 யோவான் 4:16

ஒரு கேள்வியோடு நாம் இப்புத்தகத்தை வாசிக்க ஆரம்பிப்போம்: ‘‘நீங்கள் எவ்வளவு விலையேறப் பெற்றவர்கள் என்பதை அறிந்திருக்கிறீர்களா?’’

நம்மில் பெரும்பாலானோர் அதை உணருவதில்லை என்றுதான் நான் நம்புகிறேன். தங்களைக் குறித்து மிகவும் குறைவுபட்ட உணர்வையும், மதிப்பையும்தான் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய பெலவீனம் என்று நான் சொல்வேன். நீங்கள் இதைக் கவனித்திருக்கிறீர்களா? நீங்கள் சிலரிடத்தில் பேசும்போது, அவர்கள் ஒருபோதும் உங்களுடைய கண்களைப் பார்த்து பேச மாட்டார்கள். அவர்கள் உடை அணியும் விதமே, அவர்களுடைய பரிதாபமான சுயமதிப்பைத்தான் வெளிக்காண்பிக்கும். நாம் உடை அணியும் விதம், ஒன்று, நம்முடைய தன்னம்பிக்கையை எடுத்துக் காண்பிக்கும் அல்லது நம்முடைய விரக்தியின் உணர்வை வெளிக்காண்பிக்கும். இதில் ஒருபோதும் நடுநிலை என்பது இல்லை. பெரிய அளவில் தளர்வாகத் தொளதொளவென்று தொங்கும் விதத்தில் உடையணிந்திருக்கிற ஒரு வாலிபப் பெண்ணை நான் பார்க்கும்போது, அது அவளுடைய பரிதாபமான சுயமதிப்பின் எடுத்துக்காட்டு என்றுதான் நான் எனக்குள் சொல்லிக் கொள்வேன். பரிதாபமான சுயமதிப்பு, பல விதங்களில் வெளிப்படுகிறது. இது ஒரு மதத்தின் பொதுவான ஒரு பிரச்சனை என்றுதான் நான் நம்புகிறேன்.

சில நேரங்களில், இந்தப் பரிதாபமான சுயமதிப்பை, தாழ்மை என நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம். பரிதாபமான சுயமதிப்பு



You Matter to God(Tamil)-2018.indd 13 5/22/2018 6:18:05 PM

உங்களுக்குள் இருக்குமென்றால், உங்களால் தாழ்மையாக இருக்க முடியாது. காரணம், உங்களிடம் எதுவும் இல்லாதபடியால், நீங்கள் எதைக் குறித்து தாழ்மையாக இருப்பீர்கள்? உங்களுடைய உண்மையான மதிப்பை நீங்கள் அறிந்து கொள்ளும்போதுதான், தற்பெருமைக்கும், மாய்மாலமான தாழ்மைக்கும் நடுவில் உங்களால் சரியாகச் செல்ல முடியும்.

''தேவனுக்கு நாம் எவ்வளவு முக்கியமானவர்கள்?'' என்ற கருப்பொருளை இப்புத்தகம் முழுவதும் கருத்தாய் நாம் ஆராய்ந்து பார்க்கப் போகிறோம். அதே நேரத்தில், ''நான் யார்?'' என்ற நம்முடைய தனிப்பட்ட அடையாளத்தைக் குறித்த கேள்விக்கான பதிலையும் நாம் கண்டுபிடிப்போம். நாம் யார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் அவருக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

நம்முடைய ஆராய்ச்சி, மனுஷனை சிருஷ்டித்ததில் தேவனுடைய உண்மையான நோக்கம் என்ன என்று பேசுகிற ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களிலிருந்து ஆரம்பிக்கிறது. இப்புத்தகம் முழுவதும், தேவனுடைய வார்த்தையை நாம் சேர்ந்து ஆராயப் போகிறோம். அதில் எழுதப்பட்டிருக்கிறபடி, நம்மைக் குறித்த அவருடைய எதிர்காலத் திட்டங்களை அறிந்து கொள்ளும்போது, அது இன்னும் இன்னும் அதிகமான உற்சாகத்தை நமக்குக் கொடுக்கும்.

முதலில், தேவன் எவ்வாறு நம்மை சிருஷ்டித்தார், ஏன் நம்மைச் சிருஷ்டித்தார் என்பதைக் குறித்து வேதவசனம் என்ன சொல்கிறது என்று நாம் கவனிப்போம்.

## தற்பெருமையினால் உண்டாகும் ஆபத்து

எல்லாவற்றையும் சிருஷ்டித்து முடித்த பிறகு, கடைசியில்தான் தேவன் ஆதாம் ஏவாளைச் சிருஷ்டித்தார் என்ற உண்மையை உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். சேராபீன்கள், கேருபீம்கள், பிரதான தூதன், மற்ற தூதர்கள், இன்னும் பார்ப்பதற்கு ஆச்சரியமானவைகளை, அதிசயமானவைகளை, தனித்தன்மை உடையவைகளை, மகிமையான தூதர்களின் சேனையை தேவன் ஏற்கனவே சிருஷ்டித்திருந்தார். அவர்களில் ஒருவன், லூசிபர் என்ற பெயரைக் கொண்ட பிரதான தூதன் ஆவான். அவன் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்த பிறகு, அது சாத்தான் என்று மாற்றப்பட்டது. லூசிபர் என்றால், ''பிரகாசமானவன், ஞானமானவன், ஜொலிக்கிறவன்,'' என்று அர்த்தம். சாத்தான் என்றால், ''சத்துரு, பகைஞன், எதிரி,'' என்று அர்த்தம். லூசிபர் தன்னுடைய தற்பெருமையினால் விழுந்து போனான்.



You Matter to God(Tamil)-2018.indd 14 5/22/2018 6:18:05 PM

தற்பெருமை, மகா ஆபத்தான ஒரு பாவமாயிருக்கிறது. இது பேரழிவை, பெரிய அளவில் சேதத்தை உண்டு பண்ணி விடும். நாம் எல்லோருமே இதன் தாக்குதலுக்கு ஒரு எளிதான இலக்காகத்தான் இருக்கிறோம். வெற்றியில் திளைக்கும்போது, தற்பெருமையினால் மேற்கொள்ளப்படுவதென்பது, நம் எல்லோருக்குமே எளிதாக நடக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. நிறைய ஊழியங்கள் இவ்வாறு அழிந்து போனதை நான் கண்டிருக்கிறேன். ஆகையால் என்னுடைய தனிப்பட்ட ஜெபம் இதுதான்: ‘‘கர்த்தாவே, தற்பெருமைக்குள் சிக்கி விடாதபடி, எப்படியாகிலும் என்னைக் காப்பாற்றும்.’’

லூசிபர் தற்பெருமை பிடித்தவனாய் இருந்தபடியால்தான், அவன் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தான். தற்பெருமை கொள்ளுமளவிற்கு அவனிடத்தில் நிறைய இருந்தது. எசேக்கியேல் 28-ம் அதிகாரம், உங்களுக்குப் பரிட்சயமாயிருந்தால், அது இரண்டு நபர்களைக் குறித்துப் பேசுகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த அதிகாரத்தின் முதல் பாதி, தீரு அதிபதியைக் குறித்துப் பேசுகிறது. இதன் இரண்டாம் பாதி, தீரு ராஜாவைக் குறித்துப் பேசுகிறது. தீரு அதிபதி, அப்பொழுது ஆட்சி செய்த ஒரு மனுஷனைக் குறிக்கிறது. ஆனால் தீரு ராஜா, ஒரு பிரதான தூதனைக் குறிக்கிறது. அவன்தான் லூசிபர். அவனைக் குறித்து இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது:

*‘‘கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம். நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தின ங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும், உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.’’*

எசேக்கியேல் 28:11-13

மகிமை நிறைந்த ஒருவனாக லூசிபர் இருந்தான். அதோடு தனித்துவம் உடைய ஒரு ஸ்தானத்திலும் அவன் இருந்தான். ‘‘நீ மூடுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்,’’ என்று அடுத்த வசனம் அவனைக் குறித்து சொல்கிறது. அதாவது தேவனுடைய சிங்காசனத்தை மூடுகிற ஒருவனாய் அவன் இருந்தான். சிங்காசனத்தின் மீது தன்னுடைய செட்டைகளை விரித்திருக்கும்படி வேறுபிரிக்கப்பட்ட கேரூப் ஆக அவன் இருந்தான். அந்தக் கனம், லூசிபருக்குக் கொடுக்கப்பட்டது.

*‘‘நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி, உன்னில் அநியாயம்*



You Matter to God(Tamil)-2018.indd 15 5/22/2018 6:18:05 PM

*கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறை யற்றிருந்தாய்.''*

(14-15 வசனங்கள்)

ஆக, வார்த்தைகளில் விவரிக்க முடியாத ஞானமும், மேன்மையும், வல்லமையும், தேவனுடைய சிங்காசனத்தை மூடும்படியான தனித்துவமுள்ள சிலாக்கியம் கொண்ட, மகிமை நிறைந்த பரலோகவாசியாய் அவன் இருந்தான். அதுவரையிலும் அவனிடத்தில் அக்கிரமம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அவன், தற்பெருமை தனக்குள் பெருகும்படி இடம் கொடுத்தான். அந்த தற்பெருமை, அவனை வீழ்ச்சிக்கு நேராக நடத்தினது. தேவன் வாசம் பண்ணுகிற பரலோகத்திலிருந்து, கீழே தரங்குறைந்த தாழ்வான ஒரு இடத்தை நோக்கி அவன் தூக்கியெறியப்பட்டான்.

## இப்பொழுது மனுஷன் காட்சிக்குள் நுழைகின்றான்

இந்தச் சம்பவத்தைக் குறித்தும், மனுஷனுடைய சிருஷ்டிப்பின் மீது இது உண்டாக்கக்கூடிய தாக்கங்களைக் குறித்தும், தேவனுடைய திரித்துவத்தின் மூன்று நபர்களும் சேர்ந்து ஆலோசிப்பதை நம்முடைய கற்பனையில் படம் பிடித்துப் பார்ப்போம். என்னுடைய வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதியை நான் ஆப்பிரிக்காவில் செலவிட்டேன். அது என்னை பல விதங்களில், ஒரு ஆப்பிரிக்கனைப்போலவே சிந்திக்க வைத்தது. அதாவது ஒவ்வொரு விஷயத்தையும் உயிரோட்டமுள்ள ஒரு காட்சியாக நான் என் மனக்கண்ணில் படம் பிடித்துப் பார்ப்பேன். தேவனுடைய திரித்துவத்தின் மூன்று நபர்களும் இவ்வாறு கலந்துரையாடியிருப்பார்கள் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன்: ''லூசிபரிடத்தில் இருந்த பிரச்சனை என்னவென்றால், அவன் மகா மகிமை பொருந்தினவனாய் இருந்தான் என்பதுதான். அவன் பூரண அழகுள்ளவனாய் இருந்தான்; அவன் மிகுதியான வல்லமையும், ஞானமும் உடையவனாய் இருந்தான் என்பதுதான் அவனுடைய பிரச்சனை. ஆகையால் இப்பொழுது அப்படியே நேரெதிர் முனையிலிருந்து ஆரம்பிப்போம். தாழ்மையான, முக்கியத்துவம் அற்ற ஒன்றை எடுப்போம். அப்பொழுதுதான் அதினால் தற்பெருமை கொள்ள முடியாது. நாம் கொஞ்சம் மண்ணை எடுப்போம். வெறும் மண்ணை எடுத்து, அதோடு கொஞ்சம் தண்ணீரைக் கலப்போம். அதை களிமண்ணாக்கி, சரீர உருவத்தைக் கொடுப்போம்.'' இப்படித்தான் அவர்கள் பேசியிருப்பார்கள் என்று நான் என் மனக்கண்ணில் பார்க்கிறேன்.

ஆக, அங்கே ஒரு சரீரம், தேவனால் வடிவமைக்கப்பட்டு, உண்டாக்கப்பட்டது. அது ஒரு பூரணமான சரீரம். ஆனாலும் அது வெறும் களிமண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டது.



You Matter to God(Tamil)-2018.indd 16 5/22/2018 6:18:05 PM

நம்மைக் குறித்த மிகவும் விசேஷமான ஒன்றை இங்கே நாம் கண்டுபிடிக்கப் போகிறோம். வெறும் மண்ணிலிருந்து தேவனே வடிவமைத்து உண்டாக்கின இந்த வியக்கத்தக்க சிருஷ்டிப்பிற்கு, அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நாம் பார்க்கப் போகிறோம். ''பின்பு தேவன், 'நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக,' என்றார்.'' (ஆதியாகமம் 1:26).

தேவன் தம்மை பன்மையின் வடிவத்தில் சொல்கிறார். இது வேதவசனத்தின் பல இடங்களில் வெளிப்படுகின்றது. இது தேவன் திரித்துவமானவர், மூன்று நபர்களாயிருக்கிறார், ஆனாலும் ஒருவராயிருக்கிறார் என்ற இரகசியத்தைக் குறித்துப் பேசுகிறது. ஆனால் இங்கு ஒன்றை நாம் கவனிக்க வேண்டும்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என மூன்று நபர்களாயிருந்தாலும், அவர் ஒரே மெய் தேவனாயிருக்கிறார் என தேவனுடைய திரியேக இயல்பைக் குறித்து வேதாகமம் வெளிப்படுத்துகிறது. அதேபோல, மனுஷனுடைய திரியேக இயல்பைக் குறித்தும் வேதாகமம் பேசுகிறது. அதாவது மனுஷன் மூன்று கூறுகளை தன்னில் உடையவனாக இருந்தாலும், அவன் ஒரே ஆளுமையை உடையவனாக இருக்கிறான் என்று வேதம் சொல்கிறது. தேவனுடைய ஜீவ சுவாசத்தினால் இது எப்படி நிகழ்ந்தது என்பதை அடுத்த பகுதியில் பார்ப்போம். மனுஷனின் இந்த அம்சத்தைக் குறித்து நாம் இப்புத்தகம் முழுவதும் விலாவாரியாக ஆராயப் போகிறோம். ஆனால் இப்பொழுது திரியேக தேவன், திரியேக மனுஷனை உண்டாக்கினார் என்பதைக் கவனிப்போம்.

சாயம் மற்றும் ரூபம் என்ற இரண்டு வார்த்தைகளைக் கவனிப்போம். சாயல் என்பது மனுஷனுடைய திரியேக இயல்பைச் சுட்டிக் காண்பிக்கிறது. ரூபம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை முற்றிலும் வித்தியாசமான ஒன்றைக் குறிக்கின்றது. அது தற்கால எபிரெய மொழியில், ''ஒரு புகைப்படம் எடுப்பது'' என்ற வித்தியாசமான அர்த்தத்தில் வருகின்றது. ஆக, ரூபம் என்பது புற உருவத்தைச் சித்தரித்துக் காண்பிக்கிறது. மனுஷனுடைய ரூபத்தில், அவனுடைய புறத் தோற்றத்தில் ஏதோ ஒரு விஷயம் தேவனைப் பிரதிபலிக்கிறது.

இதை ஏற்றுக் கொள்வது சிலருக்குக் கடினமாக இருக்கலாம். தேவன் ஒரு மனுஷனாய் மாம்சத்தில் வெளிப்பட்டபோது, அவர் ஒரு எருதின் வடிவத்திலோ அல்லது பூச்சியின் வடிவத்திலோ அல்லது ஒரு பறவையின் வடிவத்திலோ வெளிப்படவில்லை. எனவே இது உண்மைதான். மனுஷன், மனுஷியினுடைய ரூபம் அல்லது சரீரம், தேவனுடைய உள்ளான வடிவத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதாய் இருந்தது.



You Matter to God(Tamil)-2018.indd 17 5/22/2018 6:18:05 PM

பிறகு தேவன் தொடர்ந்து சொல்கிறார்:

*''அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள்,'' என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார் (இங்கே நாம் ஒருமைப் பதத்தைப் பார்க்கிறோம்). அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.*

ஆதியாகமம் 1:26-27

அந்தக் கடைசி வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை. இந்த முக்கியமான சத்தியத்தைக் குறித்து பலவிதமான மாறுபாடான கருத்துக்கள் பல வருடங்களாக எழுதப்பட்டு வருகின்றன. தேவன் இரண்டு விதமான நபர்களை சிருஷ்டித்தார்: ஆண் மற்றும் பெண். அவர்கள் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். அவர்களுக்கிடையே பொதுவான விஷயம் என்று எதுவுமில்லை.

அதோடுகூட, இந்தப் பூமியை ஆளும்படி தேவன் அவர்களைச் சிருஷ்டித்தார். அவர்கள் தேவனுடைய பிரதிநிதியாய் ஆளுகை செய்து வந்தனர்.

நான் இந்தியாவில் பிறந்தேன். அந்த நேரத்தில், பிரிட்டனில் இருந்த அரசனுடைய பிரதிநிதியாய் ஒருவர் இந்தியாவில் ஆளுகை செய்து வந்தார். அப்படிப்பட்ட ஒரு நிலையைத்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவன் திட்டமிட்டிருந்தார். அவர்கள் தேவனுடைய பிரதிநிதியாய் ஆளுகை செய்ய வேண்டும். இதுதான் தேவனுடைய திட்டமாயிருந்தது. இதுதான் அவருடைய சிருஷ்டிப்பாகிய மனுஷனைக் குறித்த அவருடைய நோக்கமாயிருந்தது.

## மனுஷன் எவ்வாறு ஜீவாத்துமாவானான்?

தேவன் மனுஷனை சிருஷ்டித்த விதத்தைக் குறித்து வாசிக்கும்போது, அது நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்வதை உணருவோம். அதிக முக்கியத்துவம் கொண்ட இந்தச் சம்பவத்தை, வேதாகமம் ஒரு சுருக்கமான வசனத்தில் சொல்லி விடுகிறது. இவ்வசனத்தில் நிறைய ஐசுவரியங்கள் மறைந்து கிடக்கின்றன. நாம் அதை நிறைய நேரத்திற்கு பேசிக் கொண்டே இருக்க முடியும். தேவன் மனுஷனை சிருஷ்டித்த நிகழ்வு இவ்வாறுதான் நடந்தது: ''தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்'' (ஆதியாகமம் 2:7).

''உயிருள்ள மனுஷனானான்'' என்ற அர்த்தத்தில் ஆங்கிலத்தின் பல்வேறு தற்கால மொழிபெயர்ப்புகளில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையோடு எனக்கு உடன்பாடில்லை. ஆத்துமா என்ற



You Matter to God(Tamil)-2018.indd 18 5/22/2018 6:18:05 PM

வார்த்தைதான், பொருத்தமான, உகந்த ஒரு வார்த்தையாக எனக்குத் தெரிகிறது. கிங் ஜேம்ஸின் ஒரிஜினல் மொழிபெயர்ப்பில், ஜீவ ஆத்துமா என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மனுஷன் ஜீவாத்துமாவானான்.

''தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே உருவாக்கி'' என்று எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளில், எபிரெய மொழி, ஒரு வினைச்சொல்லைப் பயன்படுத்துகிறது. அதிலிருந்துதான் 'குயவன்' என்ற வார்த்தை உருவாக்கப்பட்டது. இது களிமண்ணிலிருந்து ஒரு உருவத்தைச் செய்வதைக் குறிக்கிறது. தேவன் மண்ணைப் பயன்படுத்தினார் என்று இவ்வசனம் சொன்னாலும், இதற்கு முந்தின வசனம் இவ்வாறு சொல்கிறது, ''மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது'' (**6**-ம் வசனம்). ஆக, தேவன் உலர்ந்த மண்ணைக் கொண்டு வேலை செய்யவில்லை. அது ஈரமான மண்ணாயிருந்தது. அது ஒரு உருவத்தைக் கொடுக்கக்கூடிய களிமண்ணாயிருந்தது.

மனுஷனுடைய தாழ்மையான ஆரம்பம் இவ்விதமாக இருந்தது. ஆனால் அவன் ஒரு திடீர் திருப்பத்தைச் சந்தித்தான். தேவன் ஜீவ சுவாசத்தை அவனுடைய நாசியில் ஊதினார்; அவன் ஜீவாத்துமாவானான் என்று வசனம் சொல்கிறது. தேவனுடைய ஆவிக்குள் இருந்த ஜீவன், தேவன் சுவாசிக்கும் அவருடைய ஜீவ சுவாசமே களிமண்ணிற்குள் வந்தது. இது என் கவனத்தை ஈர்க்கிற ஒரு அழுத்தமான நிகழ்வாக இருக்கிறது. இது உயிரோட்டமுள்ள ஒரு காட்சியாக என் முன் ஓடுகிறது. இங்கு எழுதப்பட்டபடியே இது நிகழ்ந்தது என்று விசுவாசிக்குமளவிற்கு நான் இதை எளிதில் அப்படியே நம்பி விடுகிறேன். இதில் உங்களுக்கு பிரச்சனைகள் இருக்குமென்றால், குறைந்தபட்சம் நானாவது அப்படியே நம்பும்படி விட்டு விடுங்கள்.

அடுத்ததாக, மனுஷ வரலாற்றில் நசரேயனாகிய இயேசுவில் கர்த்தராகிய தேவன் வெளிப்பட்டார் என்று நான் விசுவாசிக்கிறேன். இது உண்மை. காரணம், யோவான், தான் எழுதிய சுவிசேஷத்தின் ஆரம்பத்தில், சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று என்றும், உண்டானதொன்றும் அவராலே அல்லாமல் உண்டாகவில்லை என்றும் எழுதியிருக்கிறார். ஆகையால் இந்த சிருஷ்டிப்பின் வேலையில், இயேசு, பிதாவாகிய தேவனுடைய பிரதிநிதியாயிருந்தார் என்றுகூட சொல்லலாம்.

மனுஷனோடு தேவன் இடைபட்ட விதங்களைப் பார்க்கும்போது, ஒரு சுவாரசியமான அம்சத்தை நாம் பார்க்க முடியும். ஒவ்வொரு முறையும் அவர் அப்படிச் செய்கிறபோது, அவர் தன்னையே தாழ்த்தி குனிந்து செயல்பட வேண்டியிருந்தது. சிருஷ்டிப்பில், நான் படம் பிடித்துக் காண்பித்தபடி, மகிமையும், கனமும் நிறைந்த உன்னதமான தேவன் மண்டியிட்டு, தன் பரிசுத்தமான கரங்களை களிமண்ணில்



You Matter to God(Tamil)-2018.indd 19 5/22/2018 6:18:05 PM

இட்டு, ஒரு சரீரத்தை வடிவமைத்து உண்டாக்கினார். இப்பூமியில் மிகச் சிறந்த கைவினைக் கலைஞர்கள் உண்டாக்கக்கூடிய வேறு எதைக் காட்டிலும், ஒப்பிட முடியாத விதத்தில் மிக மிகச் சிறந்த ஒன்றாக அது இருந்தது. அதில் ஒரு குறையும் இல்லை. பரிபூரணமான ஒரு வடிவமாக அது இருந்தது. ஆனால் அது உயிரற்றதாக இருந்தது. அது வெறும் களிமண், அவ்வளவுதான்.

பிறகு உன்னதமான தேவன் இன்னும் கீழே குனிந்து, தன் பரிசுத்தமான உதடுகளை களிமண்ணின் உதடுகளோடு பொருத்தினார். அவர் தன் பரிசுத்தமான நாசியை களிமண்ணின் நாசியோடு சேர்த்து வைத்தார். ''கர்த்தர் அவனுடைய நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார்,'' என்று வசனம் சொல்கிறது. 'ஊதினார்' என்ற வார்த்தைக்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன். காரணம், எபிரெய வார்த்தை, இதை வல்லமையாய் படம் பிடித்து, விளக்கிக் காண்பிக்கும் ஒரு வார்த்தையாக இருக்கிறது.

எபிரெய மொழி, ஒரு பட மொழியாக இருக்கிறது. எபிரெய வார்த்தைகளின் சத்தம், அவைகளின் அர்த்தத்தை விளக்கிக் காண்பிக்கும் செயலோடு தொடர்புடையதாய் இருக்கிறது. ''அவர் ஊதினார்,'' என்று சொல்கிற இடத்தில், எபிரெய மொழியில், 'நப்ச்' என்று சொல்கிறது. இவ்வார்த்தையில், 'ப்' என்ற எழுத்தின் சத்தம், வெடிப்பொலியை எழுப்புகிறது. அதைத் தொடர்ந்து 'ச்' என்ற நீண்ட ஒரு சத்தம் வருகிறது. பேச்சொலிகளைக் குறித்து நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள் என்றால், வெடிப்பொலியின் சத்தத்தை எழுப்பக்கூடிய ஒரு எழுத்தை நீங்கள் உச்சரிக்கும்போது, அங்கே வெடிப்பாற்றல் வெளிப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆங்கிலத்தில் வெடிப்பொலி எழுப்பும் ஒரு நல்ல எழுத்து இருக்கிறது. அது ப்பி என்ற எழுத்தாகும். ஒரு எடுத்துக்காட்டிற்கு, பெப்பர் என்ற வார்த்தையைச் சொல்லிப் பாருங்கள். அதன் ஒவ்வொரு 'ப்பி'யிலும் ஒரு சிறிய வெடிப்பாற்றல் வெளிப்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

பிறகு அங்கே 'ச்' என்ற சத்தம் வருகின்றது. சாதாரணமாக, ஆங்கிலம் பேசும் ஒருவரும் அதைச் சொல்ல மாட்டார்கள். ஸ்காட் தேசத்தார், லோச் என்பது போன்ற வார்த்தைகளைக் கூட உச்சரிப்பார்கள். இந்த சத்தம், ஆங்கிலச் சொற்களின் தொகுப்பிலிருந்து காணாமல் போய் விட்டது. இது நீளமாக, தேவைக்கும் அதிகமாக மூச்சை வெளியே விட்டு, வெளிப்படுகிற ஒரு சத்தமாக இருக்கிறது. இதில் வல்லமையான ஆற்றல் வெளிப்படுகிறது.

ஆகையால் தேவன் மனுஷனுக்குள் தன் ஜீவ சுவாசத்தை ஊதினபோது, முதலில் அங்கு மிகுதியான வெடிப்பாற்றல் வெளிப்பட்டது. பிறகு அங்கு நீளமான மூச்சு வெளியே விடப்பட்டது. வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவன் அந்தக் களிமண் உருவத்திற்குள்



You Matter to God(Tamil)-2018.indd 20 5/22/2018 6:18:05 PM

வெறுமனே தன் ஜீவ சுவாசத்தை ஊதவில்லை, வேறு எந்த ஆற்றலையும் அதற்குள் செலுத்தவில்லை. மாறாக, அவர் தன்னையே அதற்குள் ஊதினார். அவர் தன்னையே முழுமையாய் அதற்குள் கொடுத்தார். அந்த ஜீவ சுவாசத்தின் மூலமாக, தேவனே உள்ளே வந்தார். இவ்வாறு ஆச்சரியப்படத்தக்க விதத்தில், அந்தக் களிமண் உருவம், ஜீவனுள்ள ஒரு மனுஷனாக உருமாறினது. நீங்களும் நானும் அனுபவிக்கிற எல்லா நன்மைகளையும், எல்லா ஆற்றல்களையும் உடைய மனுஷ சரீரமாக அது மாறியது. மூளை, இருதயம், நுரையீரல் என எல்லா உறுப்புகளும் இயங்க ஆரம்பித்தன.

ஒரு மனுஷனுடைய கண்ணில் முப்பது லட்சத்திற்கும் அதிகமான பாகங்கள் இயங்குகின்றன என்று மருத்துவர்கள் சொல்கின்றனர். அது ஏதோ தற்செயலாக நிகழ்ந்தது என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்றால், என்னால் அதை அப்படி நம்ப முடியாது! தேவனுடைய நோக்கங்களே அந்தக் களிமண்ணிற்குள் செலுத்தப்பட்டது என்பதில் எனக்கு எந்த சந்தேகமுமில்லை. அதாவது, ஒவ்வொன்றும் என்னவாக மாற வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று தேவன் நினைத்திருந்தாரோ, அப்படியாகவே அவையெல்லாம் மாறும்படி தேவன் கட்டளையிட்டார். ஆக, தேவனுடைய ஜீவசுவாசத்திலிருந்து ஜீவனுள்ள மனுஷன் வெளியே வந்தான்.

இதுதான் நம்முடைய ஆரம்பம். எனவே தேவன் நியமித்த நித்தியமான ஒரு முடிவு நமக்கு உண்டு என்று நான் விசுவாசிக்கிறேன். நமக்குள் இருக்கும் இந்த வெளிச்சம் அணையாது. இது தேவனுடைய வெளிச்சமாக இருக்கிறது. இது நம் எல்லோருக்குள்ளும் ஆழமாகப் பதிய வேண்டும். நாம் நித்தியத்திற்கும் வாழ்வோம் என்பதுதான் இதன் அர்த்தமாக இருக்கிறது. ஆகையால் நமக்கு முன் இரண்டு வாய்ப்புகள்தான் இருக்கின்றன. ஒன்று, நாம் தேவனுடைய பிரசன்னத்தில் நித்தியத்திற்கும் வாழ்ந்திருப்போம். இல்லையென்றால், நித்தியத்திற்கும் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து அகற்றப்பட்ட நிலையில் வாழ்ந்திருப்போம். இந்த இரண்டு வாய்ப்புகளில் ஏதாவது ஒன்றைத்தான் நாம் அனுபவிக்கப் போகிறோம். ஒன்று, மேலான நித்திய வாழ்க்கையாய் அது நமக்கு இருக்கும். அல்லது மோசமான நித்திய வாழ்க்கையாய் அது நமக்கு இருக்கும்.

## சூழ்நிலை அப்படியே நேரெதிராய் திரும்புகிறது

அதுதான் நம்முடைய ஆரம்பம். அங்கிருந்துதான் நாம் வந்தோம். தேவன் சிருஷ்டித்த உலகத்திலே உங்களுக்கு ஒரு விசேஷமான இடம் இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க ஆரம்பித்து விட்டீர்களா? நம்முடைய ஆரம்பம், களிமண்ணாய், முக்கியத்துவம் இல்லாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் நாம் தேவனுடைய கரத்தினால் உருவம்



You Matter to God(Tamil)-2018.indd 21 5/22/2018 6:18:05 PM

கொடுக்கப்பட்டோம். பிறகு தேவனுடைய ஆவியானவரால் ஜீவ சுவாசம் கொடுக்கப்பட்டு, உயிரூட்டப்பட்டோம்.

இந்தச் சத்தியம் நமக்குள் ஒரு தாக்கத்தை உண்டாக்கவில்லை என்றால், ஒரு நிறைவை நாம் ஒருபோதும் கண்டடைய மாட்டோம். நாம் தேவனுக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதை நாம் உணரவில்லை என்றால், நாம் என்னவாக மாற வேண்டும் என்று அவர் நினைத்திருக்கிறாரோ, அவ்விதத்தில் நாம் ஒருபோதும் மாற மாட்டோம்.

தேவனுடைய இந்த சிருஷ்டிப்பின் வேலைப்பாட்டை நாம் அசட்டை செய்திருக்கிறோம், அவமதித்திருக்கிறோம். நாம் இதன் மதிப்பைப் புரிந்து உணரத் தவறியிருக்கிறோம். தேவன்தாமே சிருஷ்டித்த ஆச்சரியமான இந்தப் படைப்பை, நாம் அநீதியான வாழ்க்கையிலும், முட்டாள்தனமான அற்ப சந்தோஷங்களிலும், பாவ சிற்றின்பங்களிலும் பயன்படுத்தி வீணடித்து அழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் நாம் தேவனுடைய சாயலிலும் ரூபத்திலும் உண்டாக்கப்பட்டிருக்கிறோம் என்பது வேதாகமத்தின் மாறாத உண்மையாயிருக்கிறது.

சாத்தான், ஆதியில் மகிமையான நிலையிலிருந்தான். இப்பொழுது அங்கிருந்து அகற்றப்பட்ட நிலையில் இருக்கிறான். எனவே தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த மனுஷனை அவன் வன்மத்தோடும், பகையோடும், வெறுப்புணர்ச்சியோடும் பார்க்கிறான் என்றால், அது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல. தேவனுடைய இந்த சிருஷ்டிப்பை அழிக்கும்படி ஒரு சரியான சந்தர்ப்பத்திற்காக அவன் காத்திருந்தான். பிறகு ஒரு நாள், ஏதேன் தோட்டத்தில் அவனுடைய சந்தர்ப்பம் வந்தது. அதுதான் நம்முடைய அடுத்த அத்தியாயத்தின் மையப் பொருளாக இருக்கப் போகிறது.



You Matter to God(Tamil)-2018.indd 22 5/22/2018 6:18:05 PM

# 2

# நம்முடைய இலக்கைத் தவற விட்டோம்

*அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்..........முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும். காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும். அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாள மாகவும் இருக்கும்.*

ஏசாயா **55:11,13**

ஆதாமும் ஏவாளும் உன்னதமான ஒரு நோக்கத்திற்காக தேவனால் சிருஷ்டிக்கப்பட்டனர். தேவனோடு ஒரு இணக்கமான ஐக்கியம் கொண்டிருப்பதே அந்த நோக்கமாகும். புத்துணர்ச்சியூட்டும் மென்காற்று வீசுகிற நேரத்தில், அந்த நாளின் குளிர்ச்சியான வேளையில், ஆதாம் ஏவாளோடு ஐக்கியம் கொள்ளும்படி தேவன் தோட்டத்திற்குள் வந்தார் என்று வேதவசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இந்த ஐக்கியத்தைக் குறித்த ஒரு அழகான படத்தை வேதாகமம் நமக்குக் கொடுக்கிறது.

தேவன் ஆதாமுக்கு ஒரு வேலையைக் கொடுத்திருந்தார். அவன் அந்தத் தோட்டத்தைப் பண்படுத்திக் காக்க வேண்டியவனாய் இருந்தான். அவன் அதைக் கண்காணித்துப் பாதுகாக்க வேண்டியவனாய் இருந்தான். ஆனால் ஆதாம் அதைச் செய்யத் தவறினான். மனுக்குலத்தின் முதல் மனுஷனாகிய அவன் விழுந்து போனான். உண்மையில், முதல் வீழ்ச்சி, முதல் மனுஷியால் நடந்தது என்று வேதவசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் முதல் மனுஷன்தான் தன்னுடைய கடமையில் தவறிய குற்றம் இழைத்தான். அவன் எங்கு



You Matter to God(Tamil)-2018.indd 23 5/22/2018 6:18:05 PM

இருக்க வேண்டுமோ, அங்கு இருக்க வேண்டிய விஷயத்தில் அவன் தவறினான்.

பாருங்கள், தங்களுடைய கடமையிலிருந்து தவறுகிற ஆண்கள்தான் இன்றைய கலாச்சாரத்தின் பிரச்சனையாயிருக்கிறார்கள். ஆண்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்து தங்களை தவிர்த்துக் கொள்கிறார்கள். ஆண்கள் விட்டுச் செல்கிற வெற்றிடத்தை நிரப்பும்படி, பெரும்பாலும், தவிர்க்க முடியாத காரணத்தினால்தான் பெண்கள் அங்கே நுழைய வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அது ஒருபோதும் தேவனுடைய திட்டமாகாது. தேவன் ஒரே ஒரு திட்டத்தைத்தான் வைத்திருக்கிறார். அது வேலை செய்கிறது.

## பெண்களுக்கிருக்கும் தனித்துவம் வாய்ந்த பொறுப்பு

தேவனுடைய மனுஷியாய் வாழ்வதைக் குறித்த தலைப்பில், என் மனைவி ரூத் அடிக்கடி பிரசங்கிப்பார். பின் வரும் வரிகளை நான் அவரிடமிருந்து திருடுவதுண்டு. அவர் எப்பொழுதும் என்னை மன்னிக்கிறவர் என்பதை நான் அறிவேன். ரூத் சொல்வார், ‘‘தனக்கு ஏற்ற துணை இல்லை என்பதை மனுஷன் கண்டுபிடிக்கும்வரைக்கும், முழு சிருஷ்டிப்பிலும், நல்லதல்ல என்று சொல்லக்கூடிய விஷயம் எதுவுமில்லை.’’ தேவனும் அப்பொழுதுதான் முதல் முறையாக, ஒன்றைக் குறித்து நல்லதல்ல என்று சொன்னார். மனுஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று தேவன் சொன்னார். அதுவரைக்கும் தேவன் சிருஷ்டித்திருந்த ஒவ்வொன்றுமே நல்லதாகத்தான் இருந்தது. ஆகையால் பெண்ணுக்கென்று ஒரு விசேஷமான இடம் இருந்தது. பெண் இல்லாமல், ஒரு ஆண், அவன் இருக்க வேண்டிய விதமாய் இருக்க முடியாது.

> ஆதியாகமம் **2:19-22** வசனங்களில் நிகழ்ந்த சம்பவம் இதுதான்:
>
> *தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி, அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ, அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவித காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை (அல்லது அவனை முழுமையடையச் செய்யும் துணை) இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த எலும்பை மனுஷியாக உருவாக்கி (எபிரெயத்தில், அவர் கட்டியெழுப்பினார் என்று வருகின்றது), அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்.*



You Matter to God(Tamil)-2018.indd 24 5/22/2018 6:18:05 PM

தேவன் எவ்வாறு ஒரு விலா எலும்பை எடுத்து, அதை ஒரு பெண்ணாக கட்டியெழுப்பினார்? அதற்கான விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. வேதவசனத்தின் சத்தியங்களெல்லாம் பெரும்பாலும் விளக்கிக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த இடத்தில் வேதாகமம் அமைதியாக இருக்கிறது. பிறகு தேவன் அந்த மனுஷியை அவனிடம் கூட்டிக் கொண்டு வருகிறார். அப்பொழுது ஆதாம் இவ்வாறு சொல்கிறான், ‘‘இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமும் இருக்கிறாள். இவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டபடியினால், மனுஷி என்னப்படுவாள்’’ (23-ம் வசனம்). எபிரெய மொழியில், மனுஷன் என்றால், ‘ஐய்ஷ்’ என்ற வார்த்தையும், மனுஷி என்றால் ‘ஐய்ஷ்ஷா’ என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வார்த்தைகளுக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு இருக்கிறது. ‘‘அவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டபடியால், புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்’’ (23-24 வசனங்கள்).

## தேவனுடைய வார்த்தையின் மீது எழுந்த கேள்வி

ஏவாள் எதிர்கொண்ட சோதனையின் மீது இப்பொழுது கவனம் செலுத்துவோம். ஆதாமின் பாதுகாப்பு இல்லாத நிலையில் ஏவாள் அங்கு இருந்தாள். அது அவனுடைய தவறு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சர்ப்பம் அந்தத் தோட்டத்திற்குள் நுழையும்படி அவன் அனுமதித்து விட்டான்.

> *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி, ‘‘நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ?’’ என்றது.*
>
> ஆதியாகமம் 3:1

எடுத்த உடனேயே தேவனுடைய வார்த்தையை சர்ப்பம் மறுத்து விடவில்லை. அவன் அதன் மீது கேள்வியெழுப்பினான். ஏவாள் அவனுடைய கேள்விக்கு இடமளித்த அக்கணத்திலேயே விழுந்து போனாள். அதேபோல தேவனுடைய வார்த்தையின் மீது கேள்வியெழுப்பும்படி நாம் இடம் கொடுப்போம் என்றால், நாமும் வீழ்ச்சியை நோக்கித்தான் செல்வோம்.

கடந்த நூறு வருடங்களின் வரலாற்றை நாம் திரும்பிப் பார்ப்போம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இறையியல் வல்லுநர்கள் ஜெர்மனியில் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை ஆரம்பித்தனர். இந்த ஆராய்ச்சியாளர்கள் வேதாகமத்தின் நம்பகத்தன்மையைக் குறித்து கேள்வி எழுப்பினார்கள். இது மெய்யாகவே



You Matter to God(Tamil)-2018.indd 25 5/22/2018 6:18:05 PM

தேவனுடைய அகத்தூண்டுதலால் எழுதப்பட்ட வேதவார்த்தையா அல்லது வெறும் ஆவணங்களின் தொகுப்பா? இந்த இயக்கம், முதலில் நார்வே, பிறகு பிரிட்டன், கடைசியில் அமெரிக்கா என மற்ற தேசங்களுக்கும் பரவியது. ஆனால் இந்த இயக்கம் ஜெர்மனியில்தான் ஆரம்பிக்கப்பட்டது. மனுஷ வரலாற்றில், வேறு எந்த ஒரு தனிநபரும் செய்திராத அளவிற்கு மகா பயங்கரமான கொடூரங்களை மனுஷ இனத்திற்குச் செய்த இரண்டு ஜெர்மானியர்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தனர். முதலில், கார்ல் மார்க்ஸ். இரண்டாவதாக, அடால்ப் ஹிட்லர். இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த ஒன்றாக நான் பார்க்கவில்லை. என்னுடைய தனிப்பட்ட கருத்து இதுதான். அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் குறித்து கேள்வியெழுப்பிய ஒரு இயக்கத்தின் நேரடியான பொல்லாத, தீய விளைவாக இருக்கிறார்கள். சாத்தானுடைய கேள்விகளுக்கு நாம் இடமளிக்கும்போது, அவனுடைய ஆளுகைக்கு நாம் வழியைத் திறந்து விடுகிறோம்.

இப்படிப்பட்ட ஒரு இடத்திற்குள் ஏவாள் தன்னையே புகுத்திக் கொண்டாள். ஆகையால் சாத்தான் இன்னும் அதிகமாய் தன்னுடைய பிடியை இறுக்கினான்.

> *“நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ?” (என்று சாத்தான் கேட்டான்). ஸ்தீரீ சர்ப்பத்தைப் பார்த்து, “நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். (அங்கே எல்லைகளும் கட்டுப்பாடுகளும் உண்டு என்பதை அரவள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.) ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன், ‘நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம்,’ என்று சொன்னார்,” என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்தீரியை நோக்கி, “நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்,” என்றது.*
>
> ஆதியாகமம் **3:1-5**

வேதவசனங்களின் உண்மைத்தன்மையைக் குறித்து சந்தேகமெழுப்பும் பிசாசின் கேள்விகளுக்கு நாம் ஒருக்காலும் இடமளிக்கவே முடியாது. அப்படிச் செய்வது, அறிவுப்பூர்வமாக விசாரித்து அறிவதைப்போல தெரியலாம். அது இன்னும் அறிவுப்பூர்வமான விதத்தில் நேர்மையாகச் செய்வதைப் போலக்கூடத் தெரியலாம். ஆனால் அது நிச்சயம் பேரழிவுக்கு இட்டுச் செல்லும் வழியாக இருக்கிறது.

அதைத் தொடர்ந்து நிகழ்ந்த சோகமான காட்சியை நம்மில் எல்லோருமே பெரும்பாலும் அறிந்திருப்போம். நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை ஏவாள் சாப்பிட்டாள். பிறகு அவள் அந்தக்



You Matter to God(Tamil)-2018.indd 26 5/22/2018 6:18:06 PM

கனியை தன் கணவனிடத்திலும் கொடுத்தாள். அவர்கள் இருவரும் சாப்பிட்டார்கள். அதன் விளைவாக, அவர்களுடைய கண்கள் திறந்தன. அப்பொழுது அவர்களுக்கு உண்டான முதல் அறிவு என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? தாங்கள் நிர்வாணிகளாய் இருக்கிறோம் என்பதுதான் அது. உடனடியாய் அவர்கள் அந்தத் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

## இவ்வளவு நடந்த பிறகும்.......

ஆனால் இது இந்தச் சம்பவத்தின் முடிவாய் அமைந்து விடவில்லை. தேவனுடைய இரக்கங்களுக்கு முடிவே இல்லை. எனவே அவர் மனுக்குலத்தை அப்படியே விட்டு விடவில்லை. அவரிடத்தில் ஒரு திட்டமிருந்தது. அதை நிறைவேற்றுவதில் அவர் உறுதியாயிருந்தார். யாக்கோபு நிருபத்தில் எழுதப்பட்ட ஒரு வசனம் இதை அழகாக நம் முன் காட்சிப்படுத்துகிறது. ஆங்கிலத்தில் பல மொழிபெயர்ப்புகள் இருக்கிற காரணத்தினால், இவ்வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு பல்வேறுபட்ட வழிகள் இருக்கின்றன. ஆனால் எது சரியானது என்று நான் விசுவாசிக்கிறேனோ, அதை நான் உங்களுக்குத் தருகிறேன். நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் மொழிபெயர்ப்பிலிருந்து இவ்வசனத்தை நான் இங்கு மேற்கோள் காண்பிக்கின்றேன். இது அர்த்தமுள்ள ஒன்றாக இருக்கிறது. யாக்கோபு **4:5** சொல்கிறது, ‘‘நமக்குள் வாசம் பண்ணும்படி தேவன் தந்த ஆவியானவரைக் குறித்து அவர் வைராக்கிய வாஞ்சையாய் இருக்கிறார் என்று வேதவாக்கியம் எந்த நோக்கமுமில்லாமல் பேசுகிறது என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்?’’

நம்மில் வாசம் பண்ணும்படி தேவன் தந்த ஆவியானவரைக் குறித்து அவரே வைராக்கிய வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். தேவன் தன் ஜீவசுவாசத்தை மனுஷனுக்குள் ஊதினபோது, அவர் அங்கே ஒரு அன்பின் உறவை ஏற்படுத்தினார். அவர் அதை ஒருபோதும் நீக்கவோ அல்லது திரும்பப் பெறவோ விரும்பவில்லை. நாம் எல்லா விதமான அக்கிரமங்களைச் செய்திருந்தபோதிலும், பாவம் நம் மீது எல்லா விதமான பேரழிவுகளையும், அவலம் மற்றும் துன்பங்களையும் கொண்டு வந்த போதிலும், நமக்குள் வாசம் பண்ணும்படி தேவன் தந்த ஆவியானவரைக் குறித்து அவர் வைராக்கிய வாஞ்சையுள்ளவராக இருக்கிறார்.

தேவன் பொறாமையுள்ள தேவன் என்ற வார்த்தைகளை சிலர் விரும்புவதில்லை. உங்களையும் என்னையும் போன்ற நபர்களைக் குறித்து வைராக்கிய வாஞ்சையுள்ளவராய் இருப்பதில் தேவன் பிரியமாயிருக்கிறார். நம்மைப் போன்ற அற்பமான மனுஷர்கள் மீது தேவன் எந்த அளவிற்கு அன்புள்ளவராய் இருக்கிறார் என்பதற்கு இதுவே நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு எடுத்துக்காட்டாய் இருக்கிறது. தேவன் நம்முடைய அன்பை மிகவும் விரும்புகிறார். அவரைக்



You Matter to God(Tamil)-2018.indd 27 5/22/2018 6:18:06 PM

காட்டிலும் வேறொன்றை நாம் அதிகமாய் நேசிக்கிறோம் என்றால், அவர் பொறாமையுள்ளவராகி விடுகிறார் என்று இது சொல்கிறது. ஆக, காலப்போக்கில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, மனுஷனை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ளும்படி தேவன் திட்டம் தீட்டியிருந்தார் என்று நாம் பார்க்கிறோம். இயேசுவே அந்தத் திட்டமாயிருந்தார்.

## தேவனுடைய இருதயத்திலிருந்த மீட்பின் திட்டம்

எனக்கு மிகவும் பிடித்த வேதப்பகுதிகளில் ஒன்று, சகேயுவினுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவத்தைக் குறித்ததுதான். இது தேவனுடைய மீட்பின் திட்டம் எவ்வாறு நிறைவேறுகிறது என்பதை எடுத்துக் காண்பிக்கிறது. இந்தச் சம்பவம் இவ்வாறு ஆரம்பிக்கிறது: ''இயேசு எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்து போகையில், ஆயக்காரருக்குத் தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன் அங்கே இருந்தான்,'' (லூக்கா 19:1-2).

சகேயு ஐசுவரியவானாக இருந்தது மட்டுமல்ல. எல்லோராலும் வெறுக்கப்பட்ட ஒரு நபராகவும் அவன் இருந்தான். ரோம அரசாங்கத்தின் சார்பில், அவன் யூதர்களிடம் வரி வசூல் செய்தான். சகேயு போன்ற இப்படிப்பட்ட நபர்களை யூதர்கள் வெறுத்தனர். வழக்கமாக, சகேயு போன்றவர்கள் நேர்மையற்ற வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்கள் சட்டத்திற்குப் புறம்பான வழியில் தங்களுக்கு லாபம் சம்பாதித்துக் கொண்டார்கள்.

இயேசு அந்த வழியாகக் கடந்து செல்கிறார் என்பதை சகேயு கேள்விப்பட்டபோது, அவன் அவரைப் பார்க்க விரும்பினான். ''அவன் குள்ளமானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்'' (3-4 வசனங்கள்).

நீங்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு சுற்றுப்பிரயாணம் செய்கிறீர்கள் என்றால், எரிகோவில் உள்ள காட்டத்தி மரத்தைக் காண்பிக்கும்படி, சுற்றுலா வழிகாட்டிகள் நிச்சயம் உங்களைக் கூட்டிச் செல்வார்கள். காட்டத்தி மரம், மென்மையான மரப்பட்டையை உடையதாக இருக்கிறது. அதன் கிளைகள் மரத்தண்டின் மேலே உயரத்தில் ஆரம்பிக்கின்றது. ஆக வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒரு காட்டத்தி மரத்தில் ஏறுவதென்பது சுலபமான ஒரு வேலையல்ல. அந்த மரத்தின் கிளைகளை எட்டிப் பிடிக்கும்படி சகேயு என்ன செய்தான் என்பது எனக்குத் தெரியாது. கீழ்மட்ட கிளையை எட்டிப் பிடிக்கும்படி, அவன் ஒருவேளை எம்பிக் குதித்திருப்பான். எப்படியோ, அவனுடைய பங்கில் நிறைய முயற்சிகள் தேவைப்பட்டிருக்கும்.

வழக்கமாக, ஒரு ஐசுவரியவான் மரமெல்லாம் ஏற மாட்டான்! ஆனால் அவன் ஏறினான். இதன் மூலம், அவன் தன் ஸ்தானத்திற்கு



You Matter to God(Tamil)-2018.indd 28 5/22/2018 6:18:06 PM

கொஞ்சமும் பொருத்தமற்ற ஒரு நிலைக்கு தன்னை தள்ளிக் கொண்டான். ஆனாலும் அவன் அதைத்தான் செய்தான். அவன் இயேசுவை ஒரு கணப்பொழுதாவது பார்க்க விரும்பினான். மரத்தின் மேலே இருந்து பார்த்தால், அந்தத் திரளான ஜனக்கூட்டத்தின் மத்தியிலும் இயேசு பார்த்து விட முடியும் என்று அவன் நினைத்தான். இதுதான் அவனுடைய எதிர்பார்ப்பாயிருந்தது. ஆனாலும் சகேயு நினைத்திராத ஒரு காரியம் திடீரென்று அங்கே நிகழ்ந்தது. மரக்கிளையின் மேல் சகேயு ஏறியிருந்த இடத்திற்கு இயேசு வந்தபோது, அவர் நின்றார். இயேசு மேலே நோக்கி, அவனைப் பார்த்து, ''சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா. இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டும்,'' என்றார் (5-ம் வசனம்).

ஒருவரையும் இயேசுவினிடத்தில் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை வேதவசனத்தில் நான் கவனித்திருக்கிறேன். ''இவர்தான் சகேயு. வரி வசூலிப்பவர்,'' என்று ஒருவரும் அவரிடம் சொல்லவில்லை. ''இன்று இரவு உன் வீட்டில் நான் தங்க வேண்டும்,'' என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை சகேயு ஒருவேளை அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலும் இருக்கலாம். இதைக் கேட்ட உடனே, அவன் மரத்திலிருந்து இறங்கினான், இயேசுவுடன் தன் வீட்டிற்குச் சென்றான். இதைப் பார்த்தவர்களில் பலர் இயேசுவின் முடிவை கடுமையாக விமர்சித்து இவ்வாறு பேசினார்கள்: ''அநியாயமாய் வரி வசூலிக்கிறவனுடைய வீட்டிற்கு இவர் விருந்தாளியாய் செல்கிறார்.'' ஆனால் சகேயுவின் வாழ்க்கையே அங்கு உருமாற்றப்பட்டது.

> *சகேயு நின்று, கர்த்தரை நோக்கி, ''ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாய் திரும்பச் செலுத்துகிறேன்,'' என்றான். இயேசு அவனை நோக்கி, ''இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது,'' என்றார்.*
>
> லூக்கா 19:8-9

நம்முடைய பணத்தைக் கொண்டு, நாம் என்ன செய்கிறோம் என்பதை இரட்சிப்பு நிச்சயமாய் பாதிக்கிறது. இரட்சிப்பைக் குறித்து கூடுதலாக நான் கவனித்த ஒரு விஷயம் இதுதான். ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டதாக சொல்லிக் கொண்டு, அவர் இன்னும் தன்னுடைய பணத்தைக் கையாளும் விஷயத்தில் தன்னை மாற்றிக் கொண்டிருக்கவில்லை என்றால், அவர் இரட்சிக்கப்பட்டார் என்ற விஷயத்தையே நான் சந்தேகிக்கிறேன். தேவனுடைய மீட்பின் திட்டத்தைப் பார்க்கும்படி, சகேயுவின் கண்கள் திறந்திருந்தன. அவன் இரட்சிப்பை அனுபவப்பூர்வமாக பெற்றுக் கொண்டான்.



You Matter to God(Tamil)-2018.indd 29 5/22/2018 6:18:06 PM

## தேவன் ஒருபோதும் தம் திட்டத்தைக் கைவிடவில்லை

களி மண்ணினால் செய்யப்பட்ட சரீரத்திற்குள் தேவன் ஊதின ஜீவசுவாசத்தை, அவர் ஒருபோதும் கைவிடவில்லை என்ற சத்தியத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. உண்மையைச் சொன்னால், முடிவில், அவர் இயேசுவை அனுப்பி, அதைத் தம்மோடு திரும்பவும் சேர்த்துக் கொண்டார். சகேயுவின் வீட்டில், இயேசு இதைத்தான் அறிவித்தார்: ''இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' (லூக்கா 19:10). ஆம், அதற்காகத்தான் இயேசு வந்தார். முரட்டாட்டம் மற்றும் தற்பெருமையின் பாவங்களில் விழுந்துபோன, பிதாவாகிய தேவனோடுள்ள உறவிலிருந்து துண்டிக்கப்பட்ட ஆதாமின் சந்ததியார்களுக்காகத்தான் அவர் வந்தார். அவர் இல்லையென்றால், நாம் சென்றடைய வேண்டிய இடத்தை அடைவதற்கான எந்த நம்பிக்கையும் நமக்குள் இருக்காது.

தேவன் தம்முடைய ஜீவசுவாசத்தையே ஆதாமின் சந்ததியாருக்குள் ஊதினார். அந்த ஆதாமின் சந்ததியாராகிய நம்மை இரட்சிக்கும்படியே இயேசு வந்தார். தேவனுடைய பார்வையில், நாம் அவ்வளவு விலையேறப்பெற்றவர்களாக இருக்கிறோம்.

You Matter to God(Tamil)-2018.indd 30 5/22/2018 6:18:06 PM

# 3

# தேவனுடைய கண்ணாடியில் உங்களைப் பாருங்கள்

*என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.*

சங்கீதம் 66:20

ஒருமுறை என்னுடைய பிரசங்கத்திற்கு ‘‘நான் யார்?’’ என்ற தலைப்பைக் கொடுத்திருந்தேன். அதில் ‘தேவனுடைய கண்ணாடியில் உங்களைப் பாருங்கள்’ என்ற துணைத் தலைப்பிலும் ஒரு செய்தியை பிரசங்கித்திருந்தேன். இது நம்முடைய அடையாளம் என்ன என்பதையும், நாம் எவ்வளவு விலையேறப்பெற்றவர்கள் என்பதையும் புரிந்து கொள்ளும்படி நமக்கு உதவுகிறது. உங்களை நீங்களே பார்க்கத்தக்க விதத்தில் ஒரு கண்ணாடியை உயர்த்திப் பிடிப்பதுதான் இந்த அத்தியாயத்தின் நோக்கமாயிருக்கிறது. இந்தக் கண்ணாடியில் உங்களுடைய புறத்தோற்றத்தை நீங்கள் பார்க்க மாட்டீர்கள். வேறு எந்தக் கண்ணாடியிலும் பார்க்க முடியாத ஒன்றைத்தான் இக்கண்ணாடியில் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். உங்களுக்குள் மெய்யாகவே நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைத்தான் நீங்கள் இதில் பார்ப்பீர்கள்.

## பதிலைத் தேடுங்கள்

இந்த அத்தியாயத்திற்குள் செல்வதற்கு முன், என்னுடைய தனிப்பட்ட பின்னணியைக் குறித்து நான் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். காரணம், அது இந்த அத்தியாயத்தோடு தொடர்புடையதாயிருக்கிறது. ஒரு நாள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட விதத்தில் என் இரட்சகராக அறிந்து கொண்டேன். 1941-ம் வருடம், ஜூலை மாதம், பிரிட்டிஷ் ராணுவ வீரர்கள் தங்கும் அறையில், ஒரு நள்ளிரவில் நான்



You Matter to God(Tamil)-2018.indd 31 5/22/2018 6:18:06 PM

அவரை சந்தித்தேன். அந்தத் தருணத்திலிருந்து, இரண்டு சத்தியங்களை நான் ஒருபோதும் சந்தேகித்ததே இல்லை. முதல் சத்தியம், இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதாகும். இரண்டாம் சத்தியம், வேதாகமம் மெய்யாகவே உண்மையானதாகும். நான் இரட்சிக்கப்பட்ட அந்த ஒரு இரவில், நான் இந்த இரண்டு முடிவுகளுக்கும் வந்தேன்.

ஆனால் நான் எப்படி அவ்விரண்டு முடிவுகளையும் எடுத்தேன் என்று உங்களுக்குச் சொல்கிறேன். இராணுவ வீரர் தங்கும் அறையில், அந்த இரவில் எனக்கு இரட்சிப்பின் அனுபவம் உண்டாவதற்கு முன், நான் ஒரு தத்துவ அறிஞராக இருந்தேன். அதுதான் என் தொழில். நீங்கள் அப்படிப்பட்ட தொழில்ரீதியான தத்துவ அறிஞர்கள் பலரை சந்திக்கிறதில்லை என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. உண்மையில் நிறைய பேர் அப்படி இருப்பதில்லை. அது ஒரு நல்ல விஷயம்தான்! நான் ஒரு தொழில்ரீதியான தத்துவ அறிஞர் என்று சொல்லும்போது, அதன் மூலம்தான் என்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்தேன் என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். அது நிறைய வருமானமாக இருக்கவில்லை என்றாலும், அது ஏதோ என் பிழைப்புக்குப் போதுமானதாக இருந்தது.

தீவிரமான வாஞ்சையோடு ஒரு பதிலைத் தேடிக் கொண்டிருந்தபடியால், நான் ஒரு தத்துவ அறிஞராகவே மாறி விட்டேன். பிறக்கும்போதே உள்ளே நிறைய கேள்விகளோடு பிறந்த பலரில் நானும் ஒருவன் என்றுதான் நான் நம்புகிறேன். எனக்குள் இருந்த கேள்விகள் இவை: என்னுடைய வாழ்க்கையின் நோக்கமென்ன? நாம் இங்கு என்ன நோக்கத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக்கூடாது?

பிரிட்டனில் பெயரளவில் செயல்படுகிற ஒரு சபையில்தான் நான் வளர்ந்தேன். அங்கே ஒரு பதில் எனக்குக் கிடைக்கும் என்று நான் நினைத்ததில்லை. பதினெட்டாம் வயதில், கேம்ப்ரிட்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரிக்குச் சென்றேன். தத்துவப் படிப்பில் எப்படியாவது பதிலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

தத்துவம் என்றால், ''உலக ஞானத்தை தீவிர வாஞ்சையோடு நாடித் தேடுதல்,'' என்று அர்த்தமாகும். வெறுமையான கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களை மட்டுமே சௌகரியமாக சார்ந்து கொள்ளும் ஒரு மனநிலையை உடையவனாக நான் இருந்தேன். வாழ்க்கையின் யதார்த்தமான காரியங்களின் மீது, அதாவது மெய்யாகவே எது தேவையோ அதன் மீது நான் கவனம் செலுத்த விரும்பவில்லை. எடுத்துக்காட்டிற்கு, ஒரு காரைக் குறித்து இரண்டு காரியங்கள் மட்டுமே எனக்குத் தெரியும். ஒன்று, அது ஓடும். இன்னொன்று, அது நிற்கும். கார்களைக் குறித்து என்னுடைய இலக்கு என்னவாக இருந்ததென்றால்,



You Matter to God(Tamil)-2018.indd 32 5/22/2018 6:18:06 PM

என்னை விட அவைகளை யார் அதிகமாக அறிந்திருக்கிறாரோ, அவரை அறிந்து கொள்வதுதான்!

ஏழு ஆண்டுகள், கேம்ப்ரிட்ஜில், ஒரு மாணவனாக, பிறகு கல்லூரியில் ஒரு ஆராய்ச்சியாளனாக இருந்து, தத்துவவியல் படிப்பை தீவிரமாக பெருமுயற்சி எடுத்து தொடர்ந்து படித்தேன். என்னுடைய படிப்பில் நான் வெற்றியாளனாக இருந்தேன் என்பதை என்னால் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆனால் நான் தேடிக் கொண்டிருந்த பதிலைத்தான் என்னால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை.

## என்னைப் பெரிதும் குழப்பிய புத்தகம்

அப்பொழுது இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்தது. நான் இருந்த இடத்திலிருந்து, தூக்கி எறியப்பட்டேன் (ஆனால் உண்மையில் அது ஒரு நல்ல விஷயம் என்பதை பிறகுதான் உணர்ந்தேன்). நான் இராணுவத்தில் சேர்க்கப்பட்டேன். அப்பொழுது எனக்கிருந்த பெரிய பிரச்சனை, வாசிக்கும்படி எந்தப் புத்தகத்தை என்னோடு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான். நிச்சயமாக, இராணுவத்தில் ஒரு நூலகத்தை நீங்கள் சுமந்து செல்ல முடியாது. என்னிடமிருந்த புத்தகங்களெல்லாம் கனமானவைகளாய் இருந்தன. நீங்கள்தான் அவற்றைச் சுமந்து செல்ல வேண்டும். ஆகையால் நான் எனக்குள் இவ்வாறு சிந்தித்தேன்: ‘‘ஒரு தத்துவப் புத்தகம் இருக்கிறது. உண்மையில், இவ்வுலகத்தில் மிகவும் அதிகமான நபர்களால் வாசிக்கப்பட்ட புத்தகம் இதுதான். மனுஷ வரலாற்றில் பெரிய அளவில் ஒரு பாதிப்பை உண்டாக்கின புத்தகமும் இதுதான். ஆனாலும் நான் இதை அவ்வளவாக வாசித்ததில்லையே.’’

வேதாகமத்தைக் குறித்துதான் நான் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தேன். தத்துவ அறிஞனாக இதை வாசிக்க வேண்டியது என் கடமை என்று நான் தீர்மானித்தேன். ஆகையால் எனக்கென்று ஒரு நல்ல, புத்தம் புதிய, அழகான கறுப்பு வேதாகமத்தை நான் வாங்கினேன் (கறுப்பைத் தவிர, வேறு எந்த ஒரு நிறத்தையும் வேதாகமத்தோடு என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை). இராணுவத்திற்குச் சென்றபோது, என்னோடு வேதாகமத்தை எடுத்துச் சென்றேன், அதை வாசிக்க ஆரம்பித்தேன்.

ஆதியாகமத்திலிருந்து ஆரம்பித்தேன். வேதாகமத்தின் முதல் புத்தகம், மெய்யாகவே என்னைக் குழப்பியது. அதில் எனக்கு தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை. அதன் ஆரம்பத்தையும், முடிவையும் என்னால் இணைக்க முடியவில்லை. அந்தப் புத்தகம், எனக்குள் எந்த சுவாரசியத்தையும் உருவாக்கவில்லை. அது சலிப்பூட்டுகிற புத்தகம் என்பதைத் தவிர, வேறு எவ்விதத்திலும் என்னால் அதை



You Matter to God(Tamil)-2018.indd 33 5/22/2018 6:18:06 PM

வகைப்படுத்த முடியவில்லை. ஆனால் எந்த ஒரு புத்தகமும் வாசிக்க முடியாதபடி, என்னைத் தோற்கடிப்பதற்கு நான் இடம் கொடுக்க மாட்டேன் என்பதில் நான் உறுதியாயிருந்தேன். ஆரம்பம் முதல் முடிவு வரை அதை வாசிக்கும்படி, என் கண்களை அதற்கு நேராகத் திருப்பினேன். வேதாகமத்தோடு ஒன்பது மாதங்கள் போராடினேன். அதன் முடிவில், ஓர் இரவில், இதை எழுதியவரை நான் சந்தித்தேன். அதற்கு அடுத்த நாளே, இந்தப் புத்தகம் அவ்வளவு அர்த்தம் செறிந்த ஒன்றாக எனக்குத் தெரிந்தது. ஆனால் இந்த மாற்றம் ஏதோ படிப்படியாக நிகழ்ந்த ஒன்றல்ல. மாறாக, ஒரு நாளிலிருந்து அடுத்த நாள் என உடனடியாக, விரைவாக நிகழ்ந்த ஒரு மாற்றமாக அது இருந்தது.

1941-ம் வருடத்திலிருந்து நான் இந்த வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் நான் வேதவசனத்தை வாசிக்கின்றேன். ஒவ்வொரு நாளும், முந்தின நாளைக் காட்டிலும், இன்னும் அதிக அர்த்தச் செறிவு கொண்ட ஒன்றாக, இன்னும் அதிக உற்சாகமூட்டக்கூடிய ஒன்றாக, இன்னும் அதிக வெளிச்சம் கொடுக்கக்கூடிய ஒன்றாக நான் இதைப் பார்க்கிறேன். நான் இதை அதிகமாய் வாசிக்க வாசிக்க, இதிலிருந்து இன்னும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறேன்.

என்னுடைய பின்னணியைக் குறித்த இன்னும் ஒரு விஷயத்தை கடைசிக் குறிப்பாய் சொல்லி விடுகிறேன். 1944-ம் வருடம், பாலஸ்தீனத்தில், பிரிட்டிஷ் இராணுவத்தில் நான் இருந்த சமயத்தில், வேதவசனங்களைப் போதிக்கும் ஒரு போதகனாய் ஊழியம் செய்யும்படி தேவன் என்னை அழைத்தார். தேவன் மிகவும் குறிப்பாக, நேரடியாக இதைக் குறித்து என்னிடம் பேசினார். இவ்வளவு தெளிவும், துல்லியமுமான வேறொரு விஷயம் அதற்கு முன்பு என் வாழ்க்கையில் நிகழ்ந்ததில்லை. அந்தத் தருணத்திலிருந்து, இதைச் செய்யும்படி வாஞ்சையாய் நான் நாடுகிறேன். பல்வேறு தேசங்களுக்குப் பிரயாணம் செய்து, அங்கு வாழ்கின்ற பல்வேறு சபைப்பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு, பல்வேறு கலாச்சாரப் பின்னணிகளை உடைய கிறிஸ்தவர்களுக்கு நான் இந்த ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கிறேன். இதை பல வருடங்களாக நான் செய்து வருகின்றேன்.

## ஒரு திடமான அஸ்திபாரம் நமக்குத் தேவை

வாழ்க்கையைக் குறித்த என்னுடைய தேடுதல் மற்றும் நான் கண்டடைந்த பதிலை நீங்கள் புரிந்து கொள்ளும்படி, நான் இந்த உவமையைச் சொல்கிறேன். பல வருடங்களாக, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு எனக்கு ஐக்கியம் இருக்கிறது. நான் தேவனுடைய ஜனங்களை நேசிக்கிறேன். அவர்கள் மூலம், இந்தப் பூமியிலே தேவன் செய்து வருகின்ற நற்கிரியைகளுக்காக நான் அவருக்கு நன்றி சொல்கிறேன். ஆனால் ஒரு வேதபோதகனாய் எனக்குள் ஆழமான ஒரு கவலை உண்டு.



You Matter to God(Tamil)-2018.indd 34 5/22/2018 6:18:06 PM

தேவனுடைய ஜனங்களில் பெரும்பாலானோருக்குள் ஒரு உறுதியான, திடமான வேதாகம அறிவு அஸ்திபாரமாக இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் பெரிய நற்செய்தி கூட்டங்களுக்குச் செல்கின்றார்கள்; அவர்கள் பெரிய கருத்தரங்குகளுக்கெல்லாம் செல்கின்றனர். அவர்கள் வேதாகமப் பள்ளிகளில் கூட சேர்ந்து கற்றுக் கொள்கின்றனர். அங்கே அவர்கள் பல்வேறு தகவல்களைப் பெறுகின்றனர். ஆனால் அந்தத் தகவல்களை ஒன்று சேர்ப்பதற்கான கட்டமைப்பு, ஒரு அஸ்திபாரம் அவர்களிடம் இல்லை.

இது குறித்து, தேவன் என் மனதில் ஒரு படத்தைக் கொடுத்தார். ஒரு வீட்டைக் கட்டும்படி, ஒரு நபர் ஒரு நிலத்தை வாங்குகிறார். ஒரு வீட்டைக் கட்டுவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் இந்த நபர் சேகரிக்கின்றார். ஆனால் இவர் இன்னும் அஸ்திபாரத்தைப் போடவில்லை. அல்லது இவர் அஸ்திபாரத்தைப் போட்டிருந்தாலும், அதைத் தாங்குவதற்கான சுவற்றை இவர் இன்னும் கட்டியெழுப்பவில்லை. இவர் எல்லாப் பொருட்களையும் சேகரித்து வைத்திருந்தார். ஆனால் அவற்றைக் கொண்டு இவர் மெய்யாகவே ஒன்றும் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

இந்த நபர் ஒரு பெரிய நற்செய்தி கூட்டத்திற்குச் செல்கிறார், திரும்பி வருகிறார். இவர் தன் நண்பரைப் பார்த்து, ''பளிங்கு கல்லால் ஆன இந்த குளியல் தொட்டியை நான் வாங்கினேன். பார், இது ரொம்ப அழகாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்கிறார். நல்லது, இது ரொம்ப அழகான குளியல் தொட்டிதான். ஆனால் உங்களிடத்தில் அதற்குத் தேவையான குழாய் இணைப்பு இல்லையென்றால், நீங்கள் அந்தக் குளியல் தொட்டியை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் அதைப் பார்த்து அசந்து, வியந்து போகலாம். ஆனால் அதை எப்படி பயன்படுத்தப் போகிறீர்கள்? அதுதான் கடினம்.

இப்பொழுது அவர் இன்னொரு வேதாகம கருத்தரங்கிற்குச் செல்கிறார், திரும்பி வருகிறார். ''ஓக் மரத்தினால் செய்யப்பட்ட அழகான இந்தக் கதவை நான் வாங்கியிருக்கிறேன். எப்படியிருக்கிறது என்று பாருங்கள்,'' என்று அவர் கேட்கிறார். ஆனால் அவர் அந்தக் கதவைப் பொருத்தும்படி ஒரு சுவரை எழுப்பியிருக்கவில்லை. இந்த நிலையில் அவரால் ஒன்றும் செய்ய முடியாது.

இது மனுஷனுடைய சுபாவத்தைக் குறித்த மிகப் பெரிய ஒரு ஆய்வுப்பொருளுக்குள் நம்மைக் கொண்டு வருகின்றது. இது உளவியல், உடலியல், இன்னும் பல இயல்களை உள்ளடக்கியதாயிருக்கிறது. இவற்றையெல்லாம் போதிக்குமளவிற்கு நான் தேர்ந்தவன் அல்ல. ஆனால் இதுவரை நீங்கள் சேகரித்து கற்றுக் கொண்ட காரியங்களையெல்லாம் ஒன்றாய் சேர்த்து பொருத்திப் பார்க்கக்கூடிய ஒரு கட்டமைப்பை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 35 5/22/2018 6:18:06 PM

எடுத்துக்காட்டிற்கு, ஒரு ஆலோசகராய் பணிபுரியும்படி, அதற்குரிய படிப்பை நீங்கள் படிக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் படிப்பில், உளவியல் குறித்த பல முக்கியமான விஷயங்களைக் குறித்து பாடங்களிலும், செயல்முறை பயிற்சிகள் வழியாகவும் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். இப்பொழுது ஆபத்து என்னவென்றால், வேதாகமச் சத்தியத்தை முற்றிலுமாய் தவிர்த்து விட்டு, இந்தப் பாடங்களை மட்டும் கற்றுக் கொள்வதுதான். இதுதான் பிரச்சனை. இது ஒரு பிரச்சனையின் ஒரு பக்கத்தை மட்டுமே சார்ந்து கொள்வதாகும். இந்தத் தவறு சுலபமாக நடந்து விடுகிறது. இந்த நிலையில், ஜனங்களுக்கு உதவி செய்வதால் எந்தப் பலனும் உண்டாகப் போவதில்லை. இது எந்த ஒரு வேலைக்கும், தொழிலுக்கும், சபை ஊழியத்திற்கும் பொருந்தும். அடிப்படையில், தேவனுடைய வார்த்தையின் சத்தியமே, எல்லோருக்கும் தேவைப்படுகிறது. வேறு எதுவும் அதன் இடத்தை நிரப்ப முடியாது.

ஆகையால் ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு தருணத்திலும் என்னுடைய பிரதானமான நோக்கம், ஒரு அஸ்திபாரத்தைப் போட வேண்டும் என்பதுதான். அது வேதாகமத்தின் அடிப்படையிலான, எளிமையான, அன்றாட நடைமுறைக்கு உகந்த, சிக்கல்களில்லாத ஒன்றாக இருக்கும். இப்பொழுது இந்த அஸ்திபாரத்தின் மேல், அவர்கள் ஏற்கனவே சேகரித்த அல்லது இனிமேல் அவர்கள் சேகரிக்கப் போகிற ஆச்சரியமான சத்தியங்களைக் கொண்டு கட்டியெழுப்பலாம். ஆகையால்தான், 'அஸ்திபாரத் தொடர்' என்று அறியப்படுகிற புத்தகங்களின் தொகுப்பை நான் எழுதினேன். இப்பொழுது அதற்கு 'கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரச் சத்தியங்கள்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையான மகத்தான சத்தியங்களை தெளிவாகவும், எளிமையாகவும் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய இலக்காயிருந்தது. ஆகையால்தான் என்னுடைய அடையாளத்தைக் குறித்த ''நான் யார்?'' என்ற கேள்வி மிக முக்கியமானது.

## மெய்யான பிம்பத்தை நோக்கிப் பாருங்கள்

ஒரு விசேஷமான கண்ணாடியில் நம்மையே நாம் பார்க்க வேண்டும் என்பதுதான் இங்கு அடிப்படையான ஒரு விஷயமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தைதான், நம்மையே நாம் பார்க்கத்தக்க கண்ணாடி என்பதை இந்நேரம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

முதலில், கண்ணாடி என்ற வார்த்தையின் பயன்பாட்டை நியாயப்படுத்தும்படி, யாக்கோபு நிருபத்தின் முதல் அதிகாரத்திற்குச் செல்வோம். தேவனுடைய வார்த்தையினால் உங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைக் குறித்து அவர் இங்கு பேசுகிறார். அது ஒரு கண்ணாடியைப் போன்றது என்று அவர் சொல்கிறார். ஆனால்,



You Matter to God(Tamil)-2018.indd 36 5/22/2018 6:18:06 PM

‘‘இந்தக் கண்ணாடியை சரியான விதத்தில் பயன்படுத்துவதென்பது உங்களுடைய பொறுப்பாயிருக்கிறது,’’ என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

அவருடைய வார்த்தைகளை வாசிப்போம்:

*அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத்தானே பார்த்து அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான். சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்.*

யாக்கோபு **1:22-25**

யாக்கோபு இங்கு என்ன சொல்கின்றார்**?** ‘‘நீங்கள் ஒரு கண்ணாடியில் உங்களுடைய தோற்றத்தைப் பார்க்கின்றீர்கள். உங்களுடைய முகம் சோர்வாயிருக்கிறது. உங்களுடைய உடைகள் கசங்கியிருக்கின்றன, கறைபடிந்தவைகளாயிருக்கின்றன. உங்களுடைய தலைமுடி கலைந்திருக்கிறது. இப்பொழுது இதையெல்லாம் மறந்து விட்டு, இதைக் குறித்து ஒன்றும் செய்யாமல், நீங்கள் வெளியே செல்வீர்கள் என்றால், என்ன பிரயோஜனம்**?**’’

யாக்கோபு இதே வாதத்தை ஆவிக்குரிய விஷயத்திலும் பயன்படுத்துகிறார். தேவனுயை வார்த்தையாகிய கண்ணாடியில் நாம் பார்க்கும்போது, நம்முடைய உள்ளான சுபாவத்தைப் பார்க்கிறோம். இதை வேறு எங்கும் பார்க்க முடியாது. நாம் அதை தேவனுடைய கண்ணாடியில் பார்க்கும்போது, நாம் என்ன பார்க்கிறோமோ, அதன் அடிப்படையில் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்று யாக்கோபு சொல்கிறார். நம்முடைய தலைமுடி கலைந்திருந்தால், அதை ஒழுங்காக சீவி வார வேண்டியவர்களாய் இருக்கிறோம். நம் முகம் சோர்வாயிருந்தால், அதைக் கழுவி, புத்துணர்ச்சி ஊட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நம் உடைகள் அழுக்கானவைகளாய், கிழிந்து போயிருந்தால், நாம் அவைகளை துவைத்து சுத்தம் செய்ய வேண்டும், தைத்து சீர் செய்ய வேண்டும். நாம் என்ன பார்க்கிறோமோ, அதன்படி செயல்பட வேண்டும்.

## மனுக்குலத்தின் முரண்பட்ட நிலை

மனுக்குலத்தின் மெய்யான சுபாவத்தைப் புரிந்துகொள்ளும்படி, மனுக்குலத்தின் சில முரண்பட்ட கூறுகளை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியதாயிருக்கிறது. குறிப்பாக, இவ்வளவு வெறுமையான



You Matter to God(Tamil)-2018.indd 37 5/22/2018 6:18:06 PM

மனுஷனால், தேவனுடைய அளவிட முடியாத மதிப்பும், முக்கியத்துவமும் உடைய திட்டத்தில் எவ்வாறு பங்கு பெற முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த முரண்பாட்டின் வெளிச்சத்தில்தான், சங்கீதக்காரனாகிய தாவீது, நம்முடைய மதிப்பு மற்றும் அடையாளத்தைக் குறித்த கேள்வியை எழுப்புகிறான். ''கர்த்தாவே, நீர் நினைக்குமளவிற்கு மனுஷன் முக்கியத்துவம் உடையவனா? அவன் யார்?'' என்று அவன் கேட்கிறான். 8-ம் சங்கீதத்திற்குச் செல்வோம். தாவீது கவனமாய் சிந்தித்துப் பேசுகிற வசனங்களை வாசிப்போம்.

*உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும், அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.*

சங்கீதம் 8:3-8

இந்த வசனங்களில், மனுஷனைக் குறித்து இரண்டு முரண்பாடுகளை நாம் பார்க்கின்றோம். ஒன்று, மனுஷன் தாழ்மையான ஆரம்பத்தை உடைய ஒரு சிருஷ்டிப்பாய் இருக்கிறான். இன்னொன்று, அவன் அளப்பறிய ஆற்றலையும், உன்னதமான இலக்கையும் உடையவனாக இருக்கிறான். இவைதான் ஒன்றுக்கொன்று முரண்படுகிற விஷயங்களாயிருக்கிறது. முதலில், தேவனுடைய இந்த பிரமாண்டமான பிரபஞ்சத்தில், மனுஷன் மிகச் சிறிய ஒரு துரும்பாக இருக்கின்றான். இன்றைய இயற்பியல் விஞ்ஞானத்தின் அடிப்படையில், அளவிட முடியாத பிரமாண்டமான இந்தப் பிரபஞ்சத்தின் பின்னணியில் பார்க்கும்போது, ''மனுஷன் யார்?'' என்ற தாவீதின் கேள்வியைத்தான் நாமும் எதிரொலிப்போம்.

மனுஷர்கள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள் என்று ஏசாயா 40:22-ல் எழுதப்பட்டிருக்கிறது. மனுஷனை மட்டுப்படுத்தும் நோக்கில், வேதாகமம் இதை எழுதவில்லை. இந்த பிரபஞ்சத்தின் விஸ்தாரமான அளவுகளோடு ஒப்பிடுகையில், இது துல்லியமான ஒரு உண்மையாக இருக்கிறது. இந்தப் பரந்து விரிந்த பிரபஞ்சத்தில், மனுஷன் ஒரு சிறிய துரும்பாக மட்டுமே இருக்கிறான். அவனால் அதை ஒருபோதும் முழுமையாக ஆராய்ந்து அறிந்து விட முடியாது. அவனால் அதை கட்டுப்படுத்தவும் முடியாது. இருந்தபோதிலும், தேவன் அவனைக் குறித்து அதிக அக்கறையுள்ளவராக இருக்கிறார்.



You Matter to God(Tamil)-2018.indd 38 5/22/2018 6:18:06 PM

தேவனைக் காட்டிலும் சற்று சிறியவனாக மனுஷன் உருவாக்கப்பட்டான் என்ற உண்மை, இங்கு காணப்படுகிற இரண்டாவது முரண்பாடாக இருக்கிறது. அவனை ஆளுகை செய்கிறவனாக உருவாக்க வேண்டும் என்பதுதான் இதற்கான நோக்கமாகும். ஆதியாகமத்தில் இதைக் குறித்து வாசிப்போம்:

*பின்பு, தேவன், ''நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும் பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள்,'' என்றார்.*

ஆதியாகமம் **1:26**

பூமியிலுள்ள சகலமும், மனுஷன் மற்றும் மனுஷியின் காலின் கீழ், அவர்கள் ஆளுகை செய்யும்படி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோக்கம், இன்றைக்கும் மனுஷனுக்குள் இருப்பதை நாம் பார்க்க முடியும். ஆளுகை செய்ய வேண்டும் என்ற இச்சையும், ஏக்கமும், உள்ளுணர்வும் எல்லோருக்குள்ளும் காணப்படுகிறது. ஆனாலும் நம்மையே நாம் ஆளுகை செய்ய முடியாது என்பதுதான் இங்கு ஒரு முரண்பாடான புதிராயிருக்கிறது. காரணம், நாம் பாவச் சோதனையில் விழுந்து, நாம் சென்றடைய வேண்டிய இலக்கைத் தவற விட்டு விட்டோம். ஆகையால்தான் எல்லா விதமான தனிப்பட்ட பிரச்சனைகளினாலும், பெலவீனங்களினாலும் நாம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறோம். நம் சக மனுஷர்களோடு நிறைய பிரச்சனைகள் நமக்கு உண்டாயிருக்கிறது. இந்தப் பூமியே பகைவைராக்கியத்தினாலும், வன்முறைகளினாலும், நம்பிக்கைத் துரோகங்களினாலும், யுத்தங்களினாலும் நிரம்பியிருக்கிறது. ஆனாலும் ஆளுகை செய்யும்படி நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உள்ளுணர்வு நமக்குள் இருக்கிறது.

இப்பொழுது மூன்றாவது முரண்பாடான புதிரையும் நாம் பார்க்க முடியும். இது சற்று மேலே ஆதியாகமத்திலிருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்ட வசனத்தில் வெளிப்படுகிறது. தேவன் தம்மைக் குறித்து பன்மையின் வடிவத்தில் பேசுவதை நாம் இங்கு பார்க்க முடியும். ''நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உருவாக்குவோம்,'' என்று அவர் சொல்கிறார். தேவன் ஒருவரே. ஆனாலும் அவர் ஒன்றுக்கும் மேற்பட்டவராக இருக்கிறார்.

பன்மையில் ஒருமை என்பது தேவனுடைய சுபாவத்திலேயே இருக்கிறது. இதை வேதாகமத்தின் ஆரம்ப வசனத்திலேயே நாம் பார்க்க முடியும்: ''ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்.'' தேவன் என்பதற்கு எபிரெய வார்த்தை, 'ஏலோஹிம்' என்பதாகும். இது பன்மை வடிவ வார்த்தையாகும். ஆனால் 'சிருஷ்டித்தார்' என்பதற்கான எபிரெய வார்த்தை, ஒருமையில் எழுதப்பட்ட வார்த்தையாகும். ஆகையால், ஆதியில் அல்லது தொடக்கத்தில், பன்மை தேவன், ஒருமையில்



You Matter to God(Tamil)-2018.indd 39 5/22/2018 6:18:06 PM

சிருஷ்டித்தார் என்றுதான் சொல்ல வேண்டும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என ஒரே தேவனுக்குள் இருக்கும் மூன்று நபர்களை வேதாகமம் படிப்படியாக வெளிப்படுத்துகிறது. ஒரே தேவன், ஆனால் மூன்று நபர்களாய் இருக்கிறார். இதுதான் தேவனுடைய திரித்துவமாக இருக்கிறது.

இங்கே நாம் மூன்றாவது முரண்பாட்டைப் பார்க்கிறோம். அடுத்த பகுதியில், உற்சாகமூட்டக்கூடிய ஒரு வெளிப்பாட்டைக் குறித்து நாம் ஆராய்ந்து அறியப் போகிறோம். அது என்ன? தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனும், மனுஷியும் திரித்துவ நபர்களாக இருக்கின்றனர் என்பதுதான். இவர்கள் ஒரே ஆளுமையை உடையவர்களாய் இருந்தாலும், இவர்களுக்குள்ளும் மூன்று கூறுகள் காணப்படுகின்றன.

ஆக, மனுஷனைக் குறித்த முரண்பாடான புதிர்களை நாம் பார்த்தோம். முதல் புதிர்: இந்தப் பிரமாண்டமான பிரபஞ்சத்தில், நாம் சிறிய துரும்புகளாக இருக்கிறோம். ஆனாலும் தேவனால் மிகவும் அக்கறையாய் பராமரிக்கப்படுகிறோம். இரண்டாவது புதிர்: ஆளுகை செய்யும்படி நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மைக்கும், பெலவீனங்களால் ஆட்கொள்ளப்பட்ட நம்முடைய நிலைக்கும் இடையே ஒரு முரண்பாட்டை நாம் பார்க்கின்றோம். மூன்றாவது புதிர்: திரித்துவ தேவனுடைய சாயலைப்போலவே, மனுஷனுடைய ஆளுமையும் திரித்துவம் உடையதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடைசி முரண்பாடுதான், ஏன் தேவன் நமக்கு உள்ளான சுபாவத்தைத் தந்தார், பாவத்தில் விழுந்தபோது அதற்கு என்ன நடந்தது, அது மறுபிறப்படையும்படி அவர் என்ன செய்திருக்கிறார் என்பதை நாம் தொடர்ந்து கற்றுக் கொள்வதற்கு ஒரு அடிப்படையாக இருக்கும்.

### எக்ஸ்-ரே பார்வையோடு பார்ப்போம்

மனுஷனுடைய ஆளுமையைக் குறித்த ஒரு படத்தை, ஒரு வெளிப்பாட்டை, 1 தெசலோனிக்கேயர் 5:23-ல், வேதாகமம் நமக்குக் கொடுக்கிறது. இது நம்முடைய சுபாவத்தின் மூன்று கூறுகளாகும். விசுவாசிகளுக்காக ஜெபிக்கும்போது, பவுல் இதை அவர்களுக்கு எழுதுகிறார்:

> *சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

'முற்றிலும்' மற்றும் 'முழுவதும்' என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். தனி மனுஷனுடைய ஆளுமையைக் குறித்து சொல்லும்போது, பவுல் அதை மூன்று கூறுகளாக எடுத்துக் காண்பிக்கிறார். ''உங்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் காக்கப்படுவதாக,'' என்று அவர்



You Matter to God(Tamil)-2018.indd 40 5/22/2018 6:18:06 PM

சொல்கிறார். மனுஷனைக் குறித்த வேதாகமத்தின் முழுமையான வெளிப்பாடு இதுதான்: ஆவி (தேவனோடு நேரடித் தொடர்பில் இருக்கிறது), ஆத்துமா (தீர்மானம் எடுக்கிற ஒன்றாக இருக்கிறது), சரீரம் (வெளியே நம் கண்களுக்குத் தெரியக்கூடிய ஒன்றாக இருக்கிறது).

நம்முடைய உள்ளான ஆளுமையைக் குறித்து தேவனுடைய வார்த்தை தெளிவாகப் பேசுகிறது. மெய்யாகவே உள்ளே நாம் எப்படி இருக்கிறோம் என்பதை அது நமக்குக் காண்பிக்கிறது. வேறு எந்த ஒரு கண்ணாடியும் அதை நமக்குக் காண்பிக்க முடியாது. தேவனுடைய வார்த்தை, நம்மை எக்ஸ்-ரே படம் எடுத்துக் காண்பிக்கிறது என்று கூட ஒரு விதத்தில், நாம் சொல்ல முடியும். நம்முடைய கண்களால் பார்க்க முடியாத விஷயங்களை அது வெளிப்படுத்துகிறது. இந்தச் சத்தியம் எபிரெய நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

> *தேவனுடைய வார்த்தையானது, ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*
>
> எபிரெயர் **4:12-13**

தேவனுடைய எக்ஸ்-ரே கண்ணாடி, அறுவைசிகிச்சை மருத்துவ நிபுணருடைய கையிலிருக்கும் கத்தியைப்போல வேலை செய்கிறது. இது ஆவி மற்றும் ஆத்துமாவை உடையவனாய் உருவாக்கப்பட்ட மனுஷனுடைய மிகவும் உள்ளான, கண்களுக்குத் தெரியாத பகுதிகளை ஊடுருவுகிறது.

உண்மையில், தேவனுடைய வார்த்தையாகிய இந்தக் கண்ணாடி இல்லாமல், தன்னுடைய உள்ளான சுபாவம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது, ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை ஒரு மனுஷனும் அறிந்து கொள்ள முடியாது. வேதாகமத்தின் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாமல், ஆவி மற்றும் ஆத்துமாவின் சுபாவத்தை ஒருவரும் புரிந்து கொள்ள முடியாது; சரீரத்தோடு அவை எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ள முடியாது. இந்தக் கூறுகளை வேதாகமத்தினால் மட்டுமே பிரித்துப் பார்க்க முடியும். அந்த அளவிற்கு, இவை அவ்வளவு நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. வேதாகமம் மட்டுமே அங்கே என்ன இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.



You Matter to God(Tamil)-2018.indd 41 5/22/2018 6:18:06 PM

மனுஷனுடைய ஆளுமையை உருவாக்குகிற இந்த மூன்று கூறுகளைக் குறித்து இப்புத்தகத்தின் அடுத்த அத்தியாயங்களில் முழுமையாக கற்றுக் கொள்வோம். இதைக் கற்றுக் கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் நமக்கிருக்கும் ஒரே துல்லியமான ஆதாரம், வேதாகமம் மட்டுமே. வேறு கேள்வியே இல்லை. நாம் யார், நாம் ஏன் இங்கு இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளும்படி, மனுஷனுடைய மெய்யான சுபாவத்தை தெளிவாய் பிரித்தறியும்படி மனுஷன் எடுத்த பல முயற்சிகளை நான் கவனமாய் வாசித்திருக்கிறேன். என்னை நம்புங்கள், அவற்றில் எதுவும் ஒரு திருப்திகரமான பதிலைக் கொடுக்கவில்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும். மனுஷனுடைய ஞானம், நம்மை குழப்பத்திற்குள்தான் ஆழ்த்துகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியை விசுவாசத்தோடு நாம் பார்க்கும்போது, அவ்வாறு பார்க்கும்போது மட்டுமே, நம்முடைய உள்ளானவைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

நம்முடைய மதிப்பு என்ன ? நம்முடைய உண்மையான அடையாளம் என்ன ? இந்தப் புத்தகத்தின் தொடர்ச்சியான அத்தியாயங்களில், என்னால் இயன்ற சிறந்த அளவிற்கு இந்தக் கண்ணாடியை நான் உயர்த்திப் பிடிக்கிறேன். நீங்கள் அதில் பார்க்கும்படி உங்களை அழைக்கிறேன். நீங்கள் ஏன் தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அப்பொழுது உங்களால் இன்னும் அதிக தெளிவோடு பார்க்க முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 42 5/22/2018 6:18:06 PM

# 4

# ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம்

*ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார். உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். கர்த்தர் நீதி செய்கிற தேவன். அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.*

ஏசாயா **30:18**

மனித ஆளுமை என்ற தலைப்பு, எப்பொழுதாவது அரிதாகத்தான் பேசப்படுகிறது. மனுஷனுடைய முக்கியமான மூன்று கூறுகளாகிய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்திற்கிடையே உள்ள தொடர்பைக் குறித்து இந்த அத்தியாயத்தில் நாம் ஆராய்ந்து அறிவோம். நம்முடைய திரித்துவத்தின் கூறுகளாகிய ஆவி, ஆத்துமா, சரீரத்தின் பிரதானமான பங்கு என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றுக்கிடையே எப்படிப்பட்ட உறவு இருக்க வேண்டும், அதற்கேற்ற விதத்தில் அவை எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து தேவன் திட்டமிட்டிருக்கிறார். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவபக்திக்கேதுவான எந்தக் கிரியைகளில் இம்மூன்றும் ஈடுபட வேண்டும், எந்தப் பொல்லாத கிரியைகளை நாம் தவிர்க்க வேண்டும் என்பதை இனம் கண்டறிய இது நமக்கு உதவி செய்யும்.

மனுஷன் பாவத்தில் விழுந்தபோது, தேவனுக்கு எதிராக நாம் செய்த முரட்டாட்டத்தின் விளைவாக, இந்த மூன்று கூறுகளின் மீதும் உண்டான மகா மோசமான, பேரழிவிற்கு ஏதுவான விளைவுகளைக்



You Matter to God(Tamil)-2018.indd 43 5/22/2018 6:18:06 PM

குறித்து இனி வரும் அத்தியாயங்களில் நாம் கற்றுக் கொள்வோம். பிறகு ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தை எவ்வாறு உயிர்ப்பிக்க வேண்டும் என்பதைக் குறித்த தேவனுடைய திட்டத்தைப் பற்றி இன்னும் அதிகமாய் கற்றுக் கொள்வோம். காரணம், தேவன் தம்முடைய சிருஷ்டிப்பை எப்பொழுதுமே நேசித்தார். கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை உடையவர்களாய் நாம் மறுபடியும் பிறந்தாலும், நாம் முரட்டாட்டம் செய்வோம், ஆவி - ஆத்துமா - சரீரத்தைக் குறித்த தேவனுடைய திட்டம் மற்றும் கிரியைக்கு இடையூறாய் இருப்போம் என்பதையும் அறிந்து கொள்வோம். கடைசியில், கிறிஸ்து தம் ஜனங்களுக்காக வருகிறபோது, மனுஷனுடைய ஒட்டுமொத்த ஆளுமையிலும் உண்டாகப் போகிற இன்ப அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய மாற்றங்களைக் குறித்தும் நாம் அறிந்து கொள்வோம்.

ஆனால் நாம் தேவனுக்கு எவ்வளவு அதிக முக்கியத்துவம் உடையவர்களாய் இருக்கிறோம் என்ற கேள்வியை இன்னும் ஆழமாய் நாம் குடைந்து செல்லும்போதுதான் இவற்றையெல்லாம் அறிந்து கொள்வோம். தேவனுடைய நல்ல திட்டத்தின்படி, எவ்வாறு ஆவி, ஆத்துமா, சரீரம் ஒன்றாய் இசைந்து வேலை செய்யும்படி உருவாக்கப்பட்டன என்பதை அறிந்து கொள்வதிலிருந்து ஆரம்பிப்போம்.

## மூன்று கூறுகளைக் குறித்த அறிமுகம்

நமக்கு ஒரு சரீரம் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதற்கு தத்துவ மேதைகளுக்குத்தான் பிரச்சனை இருக்கும். மற்றபடி, நம்மில் பெரும்பாலானோர் அதை ஏற்றுக் கொள்வோம். (நமக்கு மெய்யாகவே சரீரம் இருக்கிறதா, இல்லையா என்று ஒரு செமஸ்டர் முழுவதும் நான் படித்தேன்! இப்பொழுது அது என் நினைவுக்கு வருகின்றது.) நமக்கு ஒரு சரீரம் இருக்கின்றது என்பதை அடிப்படையில் நாம் எல்லோருமே ஒத்துக் கொள்வோம். நமக்கு ஒரு ஆத்துமா இருக்கிறது என்பதை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் நமக்கு ஒரு ஆவியும் இருக்கிறது என்பதை நிறைய கிறிஸ்தவர்கள் இன்னும் அறியாமலிருக்கிறார்கள். ஆவியும், ஆத்துமாவும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை, தனித்துவம் உடையவை என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. இன்றைக்கு மதத்தை நம்பாத உளவியலாளர்களில் பெரும்பாலானோர், ஆவி என்பது ஆத்துமாவிலிருந்து வேறுபட்டது, தனித்துவம் உடையது என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. உளவியலோடு சம்பந்தப்பட்ட எந்த ஒரு நபரும் இதை உறுதிப்படுத்துவார்.

மேற்கு கனடாவிலிருந்த ஒரு வேதாகமக் கல்லூரியில் ஒருமுறை நான் போதித்தேன். அங்கு ஒவ்வொரு பாடத்தின் பெயரும் 'இயல்' என்றுதான் முடியும். சபையைக் குறித்த படிப்பு, எக்லேசியாலஜி (ecclesiology) என்றும், இரட்சிப்பைக் குறித்த படிப்பு, சொட்டீரியாலஜி



You Matter to God(Tamil)-2018.indd 44 5/22/2018 6:18:06 PM

(soteriology) என்றும், பரிசுத்த ஆவியானவரைக் குறித்த படிப்பு, நுயுமெட்டாலஜி (pneumatology) என்றும் அழைக்கப்பட்டது. நான் கற்றுக் கொடுத்த பாடம், தியாலஜி ஆகும். இது ஆர்வத்தைத் தூண்டாத, மந்தமான ஒரு பாடமாகும்.

நான் குறிப்பிட்ட ஒரு புத்தகத்திலிருந்து பாடம் எடுக்க வேண்டியிருந்தது. அது ஒரு பெந்தேகோஸ்தே வேதாகமக் கல்லூரியாக இருந்தாலும், அந்தப் புத்தகம், பெந்தேகோஸ்தே பின்னணியைக் கொண்ட ஒருவரால் எழுதப்படவில்லை. அப்புத்தகம், ஆத்துமா மற்றும் சரீரத்தைக் குறித்து மட்டுமே பேசியது. ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே எந்த வித்தியாசத்தையும் அது பார்க்கவில்லை. இந்தப் புத்தகத்திலிருந்து போதிப்பதில், எனக்கு தொடர்ச்சியாக பிரச்சனைகள் இருந்தது. இந்த அனுபவம் ஒன்றை எனக்கு மிகவும் குறிப்பாக உணர்த்தியது. ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே உள்ள வித்தியாசங்களை நாம் பார்க்கத் தவறுகிறோம் என்றால், ஒரு மிக முக்கியமான சத்தியத்தையே பார்க்க முடியாதபடி குருடாயிருக்கிறோம் என்று அர்த்தம்.

மனுஷனுடைய ஆளுமையை உருவாக்கும் இந்த மூன்று கூறுகளைக் சுட்டிக் காண்பிக்கும்படி புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தைகளைக் குறித்து, சுவாரசியமான ஒன்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும். 'ஆவி' என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில், 'நியுமா (pneuma)' என்று வருகின்றது. இதற்கு 'காற்று' அல்லது 'சுவாசம்' என்றுகூட அர்த்தம். இதிலிருந்துதான், சுவாசம் அல்லது காற்றினால் இயங்குகிறவைகளைக் குறிக்கக்கூடிய 'நியுமேட்டிக் (pneumatic)' போன்ற ஆங்கில வார்த்தைகள் கிடைத்திருக்கின்றன. ஆத்துமா என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில், 'சைக் (psuche)' என்று வருகின்றது. 'சைக்காலஜி (psychology)' போன்ற பல ஆங்கில வார்த்தைகளை இது நமக்குக் கொடுக்கிறது. சரீரம் என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில், 'சோமா (soma)' என்று வருகின்றது. 'சைக்கோசோமேட்டிக் (psychosomatic)' என்ற ஆங்கில வார்த்தை மிகவும் அதிகமாய் பயன்படுத்தப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். ஆத்துமா என்பதற்கான கிரேக்க வார்த்தையும் (psuche), சரீரம் என்பதற்கான கிரேக்க வார்த்தையும் (soma) சேர்ந்துதான் இவ்வார்த்தை உருவாகியிருக்கிறது. இவ்வார்த்தை ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைச் சுட்டிக் காண்பிக்கிறது. இதற்கு ஒருவருடைய சரீரத்தை மட்டுமே அல்லது ஒருவருடைய ஆத்துமாவை மட்டுமே காரணமாகச் சொல்லக்கூடாது. காரணம், இப்பிரச்சனைக்கு இவ்விரண்டுமே மூல காரணமாக இருக்கின்றது என்பதுதான்.

ஆவியைக் குறிக்கும்படி 'நியுமா (pneuma)' என்று ஆரம்பிக்கும் வார்த்தைகள் ஆங்கிலத்திலும், இது போன்ற மற்ற மொழிகளிலும் மிகவும் குறைவாகத்தான் காணப்படுகின்றன. இந்த உண்மையைப்



You Matter to God(Tamil)-2018.indd 45 5/22/2018 6:18:06 PM

பார்க்கும்போது, ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. இதற்கு என்ன அர்த்தம்? பதில் எளிமையானதுதான். தங்களுக்குள் ஒரு ஆத்துமா இருக்கிறது என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் தங்களுக்குள் ஒரு ஆவி இருக்கிறது என்பதை பெரும்பாலும் எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை. அந்த அறிவு பெரும்பாலானோருக்குள் இருப்பதில்லை. ஒருவருடைய ஆவி என்பது, அவருடைய புரிந்துகொள்ளுதலையும் தாண்டி ஆழமாகச் செல்கின்றது. அவர் தானாகவே அதைத் தோண்டி எடுத்து அறிந்து கொள்ள முடியாது. தேவனிடமிருந்து கிடைக்கின்ற வெளிப்பாட்டின் மூலமாக மட்டுமே அவரால் அதை அறிந்து கொள்ள முடியும். ஆக, திரும்பவும் நாம் இங்கே ஒன்றைப் பார்க்கின்றோம். நம்மைக் குறித்த சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள விரும்பினால், அதற்கு தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியை மட்டுமே நாம் சார்ந்திருக்கிறோம்.

## அதிகாரச் சங்கிலி

சுருக்கமாகச் சொன்னால், ஆவி என்பது தேவனைக் குறித்த உணர்வுள்ளதாயும், ஆத்துமா என்பது நம் சுயத்தைக் குறித்த உணர்வுள்ளதாயும், சரீரம் என்பது இவ்வுலகச் சூழலைக் குறித்த உணர்வுள்ளதாயும் இருக்கிறது என்று சொல்லலாம். நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைத் தீர்மானிக்கின்ற முக்கியக் காரணிகளாக இவை இருக்கின்றன. ஒரு நபர், அவர் ஆணோ அல்லது பெண்ணோ, அவர் தன்னைக் குறித்த விஷயங்களில் மட்டும் தன்னை அடைத்துக் கொள்கிறார் என்றால், அவர் தன் ஆத்துமாவின் தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். மாறாக, ஆவியின் தளம் நம்மை சுயநலத்திலிருந்தும், நம் சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கைமுறையிலிருந்தும் விடுதலையாக்குகிறது.

## 1) தேவனைக் குறித்த உணர்வுள்ள ஆவி

தேவனோடு ஒன்றாய் இசைந்து, ஐக்கியம் கொள்வதுதான் ஆவியின் பிரதானமான நோக்கமாக இருக்கிறது. ஆவியானது, ஒருவருடைய ஆத்துமா மற்றும் சரீரத்தினால் கட்டுப்படுத்தப்படக் கூடாது, ஆதிக்கம் செலுத்தப்படக்கூடாது. அது உன்னதத்திலிருந்து வருகின்ற பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும். தேவனுடைய ஆவியானவரே, மனுஷனுடைய ஆவிக்குள் இறங்கினார். ஆகையால், மனுஷனுடைய ஆவிதான், இந்த மூன்று கூறுகளில் பிரதானமான ஒன்றாக இருக்கிறது.

1 கொரிந்தியர் 6-ம் அதிகாரத்தில், மிகவும் முக்கியமான விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் வேசித்தனத்திற்கு எதிராக பவுல் எச்சரிக்கின்றார். அவர் இவ்வாறு சொல்கிறார், ‘‘வேசியோடு



You Matter to God(Tamil)-2018.indd 46 5/22/2018 6:18:06 PM

இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான் என்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே'' (16-ம் வசனம்). பவுல் இதை இன்னும் தொடருகிறார், ''அப்படியே கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்'' (17-ம் வசனம்).

மாம்சத்தில் பாலியல் உறவு கொள்வதற்கும், தேவனோடு ஆவிக்குரிய உறவு கொள்வதற்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு இங்கு எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாகத்தான் நான் பார்க்கிறேன். உங்களுக்கு இடறலை உண்டாக்கும்படி நான் இதைச் சொல்லவில்லை. அது அவ்வளவு நிஜமாக இருக்கிறது என்பதுதான் உண்மை. ஒரு ஆணும் பெண்ணும் பாலியல் உறவில் ஒன்றாய் இணைவது எப்படியோ, அவ்வளவு நிச்சயமாய் ஒருவருடைய ஆவி தேவனோடு ஆவிக்குரிய விதத்தில் ஒன்றாய் இசைந்திருக்க முடியும்.

இது மிக முக்கியமான ஒரு எடுத்துக்காட்டாய் இருக்கிறது. இதில் நாம் ஆவியை ஆத்துமாவோடு சேர்த்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது. கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் என்று பவுல் சொல்கிறார். இந்த இசைவு ஒரே ஆத்துமாவை உண்டாக்குகிறது என்று சொன்னால், அது முற்றிலும் தவறானதாயிருக்கும். இது இயேசுவின் சிலுவை தியாக பலியின் மூலம், மனுஷனுடைய ஆவிக்குக் கிடைத்திருக்கிற விசேஷமான, முக்கியமான ஒரு சிலாக்கியமாக இருக்கிறது. தனிப்பட்ட விதத்தில் தேவனோடு நேரடி ஐக்கியம் கொள்வதுதான் இந்த விசேஷமான சிலாக்கியமாகும்.

மனுஷனுடைய ஆவி தேவனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு, ஐக்கியம் கொள்வதால், தேவனுடைய உணர்வுகளும், குணநலன்களும் நமக்குள் உருவாக்கப்படுகின்றன. இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். ஒன்றை இயேசுவின் வாழ்க்கையிலிருந்தும், இன்னொன்றை பவுலின் வாழ்க்கையிலிருந்தும் பார்ப்போம்.

பரிசுத்த ஆவியானவரோடு இயேசுவுக்கு இருந்த உறவைக் குறித்துச் சொல்லும்போது, பின்வரும் மூன்று விஷயங்களை நற்செய்தி நூல்கள் நமக்குச் சொல்கின்றன: இயேசு ஆவியில் பெருமூச்சு விட்டார்; அவர் ஆவியில் களிகூர்ந்தார்; அவர் ஆவியில் துயரப்பட்டார். 'ஆவியில்' என்று சொல்வதன் மூலம், வேதவசனம் மிகவும் கவனமாக ஆத்துமாவிலிருந்து வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறது. இந்த மூன்று சூழ்நிலைகளிலும் தேவனுடைய உணர்வையும், தேவனுடைய குணநலனையும் இயேசு வெளிப்படுத்தினார். இயேசுவின் பெருமூச்சு, ஒரு ''அடையாளத்தை'' நிர்ப்பந்திக்கிற, எதிர்பார்க்கிற ஒரு தலைமுறையினரைக் குறித்த தேவனுடைய பெருமூச்சாய் இருந்தது (மாற்கு 8:12). சுவிசேஷத்தை ஒரு குழந்தையைப்போல, எளிமையாய் விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜனங்களைக் குறித்து அவர் களிகூர்ந்தார் (லூக்கா 10:21). லாசருவின்



You Matter to God(Tamil)-2018.indd 47 5/22/2018 6:18:06 PM

மரணத்தைக் குறித்த ஆழ்ந்த வேதனையடைந்தவராய், அவர் தன் ஆவியில் கலங்கி துயரப்பட்டார் (யோவான் 11:33).

பவுலின் வாழ்க்கையிலும், ஆவியைக் குறித்து பல்வேறு இடங்களில் வேதவசனம் பேசுகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 19:21-ஐ வாசிப்போம்: ''இவைகள் முடிந்த பின்பு, பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிர்ணயம் பண்ணிக் கொண்டு, 'நான் அங்கே போன பின்பு, ரோமாபுரியையும் பார்க்க வேண்டும்,' என்று சொன்னான்.'' இதற்கு அர்த்தம், பவுலைக் குறித்த தேவனுடைய திட்டம், அவனுடைய ஆவியில் ஆழமாய் வேரூன்றி விட்டது என்பதுதான். அது அவனுடைய நோக்கமாகவும் மாறி விட்டது.

இயேசுவின் சீஷர்களாகிய நமக்கு இது எவ்வாறு பொருந்துகிறது? உங்களால் இதைப் பார்க்க முடிகின்றதா? ''நான் சில விஷயங்களைத் தீர்மானிக்கும்போது, நான் அவற்றை என் ஆவியில் தீர்மானிக்கிறேனா அல்லது என் மாம்சத்தில் தீர்மானிக்கிறேனா?'' என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். பவுல் இங்கு என்ன சொல்கிறார்? ''நான் மாற மாட்டேன். என்னை எதுவும் மாற்ற முடியாது. தேவனுடைய நோக்கத்தை நான் அறிந்து கொண்ட பிறகு, அதுதான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. அவ்வளவுதான். காரணம், நான் அதை என் ஆவியில் நிர்ணயம் செய்து விடுகிறேன், தீர்மானித்து விடுகிறேன்,'' என்ற அர்த்தத்தில்தான் பவுல் இங்கு பேசுகிறார்.

அடுத்த அத்தியாயத்தில், பவுல் என்ன சொல்கிறார் என்பதையும் நாம் வாசிக்கின்றோம்:

> *இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணம்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.*
>
> அப்போஸ்தலர் நடபடிகள் 20:22-24

அவர் தேவனுடைய சித்தத்தை தன் ஆவியில் உறுதியாய் நிர்ணயம் செய்து கொண்டபடியால், அவர் சிறையிருப்புக்குள் தள்ளப்படுவதற்கு முன்பே, அவர் கட்டுண்டவரானார் (கட்டப்பட்டவரானார்). அவர் சிறையிருப்புக்குள் தள்ளப்பட வேண்டும் என்ற தேவனுடைய சித்தம் ஏற்கனவே அவருடைய ஆவியில் உறுதியாய் பதிக்கப்பட்டபடியால்,



You Matter to God(Tamil)-2018.indd 48 5/22/2018 6:18:06 PM

அவர் சரீரப்பிரகாரமாக கட்டப்படுவதற்கு முன்பே, கட்டுண்டவராக மாறினார்.

இன்றைக்கு நிறைய பேர் தங்களுடைய ஆவியில் அல்ல, தங்களுடைய ஆத்துமாவில்தான் தேவனுக்கு ஊழியம் செய்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அதைக் குறித்துதான் நாம் அடுத்ததாகப் பார்க்கப் போகிறோம்.

## 2) நம் சுயத்தைக் குறித்த உணர்வுள்ள ஆத்துமா

ஒரு விதத்தில், ஆத்துமா, தன்னையே இழுத்து மூடிப் போர்த்திக் கொண்டுள்ளது. தத்துவ ஞானியான டெஸ்கார்ட்டெஸ் ஒருமுறை இவ்வாறு சொன்னார், ''நான் இருக்கிறேன் என்று நினைக்கிறபடியால் நான் இருக்கிறேன்.'' தான் இருப்பதாக, தனக்குத்தானே நிரூபித்துக் கொள்கிற குணம், ஒரு தத்துவ ஞானியின் இயல்பான குணமாக இருக்கின்றது. பாருங்கள், அவர் இங்கு தன் ஆத்துமாவைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார். சிந்திக்கிற திறன் அவருக்குள் இருக்கிற படியால், தன் ஆத்துமா எவ்வளவு நிஜமானது என்பதை அவர் அறிந்திருந்தார்.

ஆத்துமாவை நீங்கள் ஈகோ என நினைக்கலாம். 'நான்' என்பதற்கான லத்தீன் வார்த்தைதான் ஈகோ ஆகும். ஆத்துமா தீர்மானங்களை எடுக்கின்றது. ஒரு சுவிசேஷக் கூட்டத்தில், கிறிஸ்துவுக்காக நீங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது, எது அந்த ஒவ்வொரு தீர்மானத்தையும் எடுக்கின்றது என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய ஆத்துமாதான். ஆத்துமாதான் இரட்சிக்கப்படுகிறது. ''இயேசுவை நான் ஏற்றுக் கொள்கிறேன்,'' என்று ஆத்துமா சொல்கிறது. அப்பொழுது இரட்சிப்பு உண்டாகிறது. ''எனக்கு அது வேண்டாம்!'' என்று ஆத்துமா சொன்னால், அது இரட்சிப்பை இழந்து விடும். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ஒவ்வொரு மனுஷனும், எந்த இலக்கும் இல்லாமல் அலைந்து திரிகின்ற, இரட்சிக்கப்படாத ஒரு முரட்டாட்ட மனுஷனாய் இருப்பான். சிருஷ்டிகராகிய தேவனுக்கு தான் எவ்வளவு விலையேறப்பெற்றவன், முக்கியமானவன் என்ற உண்மையை அறியாமலே போய் விடுகிறான்.

மனம் அல்லது அறிவுக்கூர்மை, சித்தம் மற்றும் உணர்வுகள் என்ற மூன்று பகுதிகளை உடையதாய் ஆத்துமா இருக்கிறது. ''நான் என்ன நினைக்கிறேன் என்றால்,''; ''நான் இதை இப்படிப் பார்க்கிறேன்''; ''நான் இதை இவ்வாறு புரிந்து கொள்கிறேன்'' என்று மனம் சொல்கிறது. சிந்தனையோடு சம்பந்தப்பட்ட இன்னும் பல காரியங்களை அது செய்கிறது. ''எனக்கு இது வேண்டும்,'' என்று சித்தம் சொல்கிறது. சிறுபிள்ளைகள் கற்றுக் கொள்கிற முதல் வார்த்தைகளில் இதுவும்



You Matter to God(Tamil)-2018.indd 49 5/22/2018 6:18:06 PM

ஒன்றாயிருக்கிறது. ''நான் இப்படித்தான் உணருகிறேன்,'' என்று உணர்வுகளின் பகுதி சொல்கின்றது.

*நான் இப்படித்தான் நினைக்கிறேன், எனக்கு இது வேண்டும், நான் இப்படித்தான் உணருகிறேன்* என்ற மூன்று வாக்கியங்களால்தான், மறுபடியும் பிறந்து இன்னும் இரட்சிக்கப்படாத ஒரு மனுஷன் கட்டுப்படுத்தப்படுகிறான். இதுதான் அவனைச் செயல்பட வைக்கின்றது. ''எனக்கு இது வேண்டும்'' என்ற வார்த்தைகளால்தான் சிலர் அதிகமாக உந்தப்படுகிறார்கள். ''நான் என்ன நினைக்கிறேன் என்றால்,'' என்ற வார்த்தைகளால் வேறு சிலரும், ''நான் என்ன உணருகிறேன் என்றால்,'' என்ற வார்த்தைகளால் மற்றவர்களும் உந்தப்படுகிறார்கள். ஆனால் அது ஆத்துமாவின் சுபாவமாக இருக்கிறது.

ஆத்துமாவோடு தொடர்புடைய முக்கியமான ஒரு நிபந்தனையை மத்தேயு 16:24-25 வசனங்கள் வெளிப்படுத்துகின்றன:

> *அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை (ஆத்துமாவை) இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமாக தன் ஜீவனை (ஆத்துமாவை) இழந்து போகிற வன் அதைக் கண்டடைவான்.*

'ஆத்துமா (psuche)' என்ற வார்த்தைதான், இங்கு ஜீவன் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இயேசுவைப் பின்பற்றும்படி நீங்கள் செய்ய வேண்டிய மூன்று காரியங்களைக் குறித்து இவ்வசனங்கள் நமக்குச் சொல்கின்றன: நீங்கள் உங்களுடைய சுயத்திற்கு (உங்களுடைய ஆத்துமாவிற்கு) மறுப்பு தெரிவிக்க வேண்டும்; உங்களுடைய சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும்; பிறகு அவரைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் உங்களுடைய சுயத்திற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால், நீங்கள் உங்களுடைய சிலுவையைச் சுமக்கவில்லை என்றால், உங்களால் அவரைப் பின்பற்ற முடியாது. அது கூடாத காரியம். நித்தியத்தில் உங்களுக்கு என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த வாழ்க்கையில், நீங்கள் அந்த முதல் இரண்டு அடிகளை எடுத்து வைக்கவில்லை என்றால், உங்களால் இயேசுவைப் பின்பற்ற முடியாது.

மறுப்பு தெரிவிப்பதென்றால், என்ன அர்த்தம்? 'முடியாது' என்று சொல்வதாகும். அப்படியென்றால், உங்களுடைய ஆத்துமாவிற்கு எப்படி மறுப்பு தெரிவிப்பீர்கள்? 'முடியாது' என்று உங்களுடைய ஆத்துமாவிடம் சொல்வதாகும். அதாவது, ''நான் என்ன நினைக்கிறேன் என்றால்,'' என்று உங்களுடைய ஆத்துமா சொல்லும்போது, ''நீ என்ன நினைக்கிறாய் என்பது முக்கியமே இல்லை. தேவனுடைய வார்த்தை



You Matter to God(Tamil)-2018.indd 50 5/22/2018 6:18:06 PM

என்ன சொல்கிறதோ, அதுதான் எனக்கு முக்கியம்,'' என்று நீங்கள் சொல்ல வேண்டும். ''எனக்கு இது வேண்டும்,'' என்று உங்களுடைய ஆத்துமா சொல்லும்போது, ''உனக்கு என்ன வேண்டும் என்பது முக்கியமல்ல. தேவனுடைய சித்தம்தான் எனக்கு முக்கியம்,'' என்று நீங்கள் சொல்ல வேண்டும். ''நான் என்ன உணருகிறேன் என்றால்,'' என்று உங்களுடைய ஆத்துமா சொல்லும்போது, ''நீ என்ன உணருகிறாய் என்பது முக்கியமே அல்ல. பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதல்தான் எனக்கு முக்கியம்,'' என்று நீங்கள் சொல்ல வேண்டும்.

இயேசுவை பின்பற்ற வேண்டுமென்றால், ''நான் என்ன நினைக்கிறேன் என்றால்''; ''எனக்கு இது வேண்டும்''; ''நான் என்ன உணருகிறேன் என்றால்'' என்ற சுய நிர்ப்பந்தங்களுக்கு நாம் மறுப்பு தெரிவிக்க வேண்டும். பெருந்திரளானவர்கள் இயேசுவைப் பின்பற்றும்படி உண்மையாகவே முயற்சிக்கின்றார்கள். ஆனால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. காரணம், தங்களுடைய ஆத்துமாவிடம் மறுப்பு தெரிவிப்பதற்கு அவர்கள் ஒருபோதும் கற்றுக் கொண்டதில்லை. அவர்கள் வாழ்கின்ற விதத்தை, இப்பொழுதும் அவர்களுடைய ஆத்துமாதான் கட்டுப்படுத்துகிறது. நீங்கள் உங்களுடைய ஆத்துமாவிற்காக வாழ்வீர்கள் என்றால், உங்களால் கிறிஸ்துவுக்காக வாழ முடியாது. இது ஒரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையின் மிக முக்கியமான, அடிப்படை விஷயமாயிருக்கிறது. ஆகையால்தான் நீங்கள் உங்களுடைய ஆத்துமாவிற்கு மறுப்பு தெரிவிக்கும்போது, மிகவும் விலையுயர்ந்த மதிப்பு கொண்ட ஒன்றை கண்டுபிடிப்பீர்கள் என்று இயேசு சொன்னார்.

### 3) சரீரம் - இவ்வுலகச் சூழலைக் குறித்த உணர்வுள்ளது

இப்பொழுது நாம் சரீரத்தைக் குறித்துப் பார்க்கப் போகிறோம். நம் சரீரம், தன் ஐம்புலன்கள் மூலம், இவ்வுலகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது, இவ்வுலகச் சூழலைக் குறித்த உணர்வுள்ளதாயிருக்கிறது. இப்பொழுது நாம் வாழ்கின்ற இவ்வுலகத்தில், ஆவியினால் சரீரத்திற்கு வழி காண்பிக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது மிக முக்கியமான ஒரு விஷயமாகும். ஆவியினால், ஆத்துமாவிற்கு ஆலோசனைகளைக் கொடுக்க முடியும். ஆனால் ஆத்துமாதான் எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கின்றது. அது தான் எடுத்த தீர்மானங்களை சரீரத்திற்கு தெரியப்படுத்துகிறது. பிறகு சரீரம் அவற்றைச் செயல்படுத்துகிறது.

சங்கீதம் 103:1-2 வசனங்கள், இவற்றுக்கிடையே உள்ள உறவை நேரடியாக நமக்கு எடுத்துக் காண்பிக்கின்றன. இது நம் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட தாவீதின் சங்கீதமாகும். அவன் சொல்கிறான், ''என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி. என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி!'' இவ்வார்த்தைகளில், தாவீதின் ஆத்துமாவோடு எது பேசிக் கொண்டிருக்கிறது என்பதை



You Matter to God(Tamil)-2018.indd 51 5/22/2018 6:18:06 PM

உங்களால் ஊகிக்க முடிகின்றதா? அவனுடைய ஆவிதான். பாருங்கள், மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் மூலம், தாவீதின் ஆவி திரும்பவும் தேவனோடு ஐக்கியம் கொண்டது. அவனுடைய பழைய ஆவி மீட்கப்பட்டது. அது திரும்பவும் சிருஷ்டிக்கப்படவில்லை. காரணம், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் நிகழாதவரை, ஆவி புதிதாய் சிருஷ்டிக்கப்படுவதென்பது நடக்காது, நடக்க முடியாது. இதைத்தான் புதுப் பிறப்பு, புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பு என்று நாம் அழைக்கின்றோம். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், தீர்க்கதரிசிகளும் விசுவாசத்தின் மூலம், திரும்பவும் ஒரு உறவிற்குள் வந்தனர். அந்த உறவில், அவர்களுடைய பழைய ஆவி உயிர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் திரும்பவும் தேவனோடு ஜீவனுள்ள ஒரு உறவிற்குள் வந்தனர்.

இங்கே 103-ம் சங்கீதத்தில், கர்த்தரை துதிக்க வேண்டும் என்று தாவீது விரும்பினான். உண்மையில், அவனுடைய ஆவிதான் கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்று விரும்பியது. ஆனால் அவனுடைய ஆவியினால் அதைச் செய்ய முடியவில்லை. ஆவி, ஆத்துமாவின் மூலமாக அதை நடப்பிக்க வேண்டியிருந்தது. ஆகையால் ஆவி இவ்வாறு சொன்னது, ‘‘என் ஆத்துமாவே, வா, எழுந்திரு! மந்தமாக, சோம்பலாக இருக்காதே. இது கர்த்தரைத் துதிக்க வேண்டிய நேரம்.’’ அவனுடைய ஆத்துமாவும் அதற்கு இணங்கி வந்தது. அது சரீரத்தை முடுக்கி விட்டது, உந்தித் தள்ளியது. அதன் விளைவாக, தாவீதின் வாய், துதியின் வார்த்தைகளைச் சத்தமாய் பேசியது.

ஆத்துமா மற்றும் ஆவியின் நடத்துதலின்படி, சரீரம் செயல்பட்ட இன்னொரு எடுத்துக்காட்டை எபிரெயர் 10:5-ல் நாம் வாசிக்க முடியும். மெசியாவைக் குறித்து தீர்க்கதரிசனமாக எழுதப்பட்ட 40-ம் சங்கீதத்திலிருந்து இங்கு மேற்கோள் காண்பிக்கப்பட்டிருக்கிறது: ‘‘பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்.’’ தேவன் எதற்காக ஒரு சரீரத்தை மெசியாவிற்காக ஆயத்தம் பண்ணினார்? 7-ம் வசனம் பதில் தருகின்றது: ‘‘அப்பொழுது நான், ‘தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது,’ என்று சொன்னேன்.’’ தம்முடைய ஆவி மற்றும் ஆத்துமாவின் நடத்துதலின்படி, தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக, மெசியா ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆவியினால் சரீரத்தை நேரடியாக இயக்க முடியாது என்ற இந்த உண்மை, ஆவிக்கிருக்கும் ஒரு வகையான கட்டுப்பாட்டை எடுத்துக் காண்பிக்கிறது. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். அந்நிய பாஷைகளில் பேசுதல்தான் அது. அதற்காக ஆத்துமாவை தவிர்த்து விட்டு இந்த அனுபவம் நிகழாது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். காரணம், ‘‘ஓகே, செய்யலாம்,’’



You Matter to God(Tamil)-2018.indd 52 5/22/2018 6:18:06 PM

என்று ஆத்துமாதான் சொல்ல வேண்டும். மாறாக, ''இல்லை, நான் இதைச் செய்ய மாட்டேன்,'' என்று ஆத்துமா சொன்னால், அது நிகழாது. ஆனால், ''ஓகே, செய்யலாம்,'' என்று ஆத்துமா சொல்லி விட்டது என்றால், அவ்வளவுதான், ஆத்துமா உட்கார்ந்து விடும், ஆவி நேரடியாக நாவைக் கட்டுப்படுத்தி நடத்தும். நாவு என்ன செய்ய வேண்டும் என்று ஆவி விரும்புகிறதோ, அதை அப்படியே நாவு செய்யும்.

நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசும்போது, ஒருபோதும் ஒரு தவறான வார்த்தையையும் நீங்கள் பேச மாட்டீர்கள். நிச்சயமாக, அப்படிச் செய்ய மாட்டீர்கள். அதாவது தேவனை மகிமைப்படுத்தாத ஒன்றையும் ஒருபோதும் நீங்கள் சொல்ல மாட்டீர்கள். ''என் மகிமை களிகூர்ந்தது,'' என்று தாவீது சங்கீதம் 16:9-ல் சொல்கிறான். அதே வசனம், ''என் நாவு களிகூர்ந்தது,'' என்று அப்போஸ்தலர் நடபடிகள் 2:26-ல் மேற்கோள் காண்பிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்திற்காகத்தான், நாவு உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய ஆவியைக் கட்டுப்படுத்தும்போது, உங்களுடைய ஆவி, உங்களுடைய நாவைக் கட்டுப்படுத்துகிறது. அப்பொழுது, எதைச் செய்யும்படி உங்களுடைய நாவு சிருஷ்டிக்கப்பட்டதோ, அதையே அது எப்பொழுதும் செய்யும்.

ஆகையால்தான் அந்நிய பாஷைகளில் பேசுகிற அனுபவம், வியக்கத்தக்க முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை, இப்பொழுது இந்த ஒரு அனுபவத்தின் மூலமாகத்தான், உங்களுடைய ஆவி உங்களுடைய சரீரத்தை நேரடியாகக் கட்டுப்படுத்துகிறது என்று விசுவாசிக்கிறேன். நிச்சயமாக, இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட மற்ற அனுபவங்களும் மற்றவர்களுக்கு உண்டாகிறது என்பது உண்மைதான். ஆனால் இது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் கிடைக்கக்கூடிய ஒரு அனுபவமாக இருக்கிறது.

முதல்முறையாக, அந்நிய பாஷைகளில் நான் பேசிய அனுபவம் இப்பொழுது என் நினைவுக்கு வருகின்றது. அதற்கு முன், என்னை திருப்திப்படுத்தக்கூடிய ஒன்றை நான் தேடிக் கொண்டிருந்தேன், தேடிக் கொண்டே இருந்தேன், தேடிக் கொண்டே...... இருந்தேன். நாட்டிய நாடகம், இசை நாடகம், பிரயாணம் என இன்னும் உயர்வான அறிவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் நான் தேடினேன். தரங்குறைந்த காரியங்களிலும் நான் தேடினேன். அதற்காக எவ்வளவு கீழே இறங்கினேன் என்று நான் உங்களுக்குச் சொல்ல மாட்டேன். எல்லாவற்றையும் நான் முயற்சித்தேன். நான் எவ்வளவு அதிகமாக முயற்சித்தேனோ, அவ்வளவு அதிக தாகம் எனக்குள் உண்டாகிக் கொண்டே இருந்தது. எது எனக்கு வேண்டும், எதைக் குறித்த தாகம் எனக்குள் இருக்கிறது என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனால்



You Matter to God(Tamil)-2018.indd 53 5/22/2018 6:18:06 PM

பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வந்த அந்தக் கணமே, ‘‘இதுதான்! இதேதான்!’’ என்று நான் சொன்னேன். அதற்கு முன்பு அவ்வளவு வருடங்களும் நான் சபைக்குச் சென்றிருக்கிறேன். இதைக் குறித்து ஒருவரும் எனக்குச் சொன்னதில்லை. ஏன் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அதற்கான காரணத்தை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்நிய பாஷைகளில் பேசும் வரத்திற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். என் முதல் மனைவியாகிய லிடியா மரித்து, இப்பொழுது கர்த்தருடன் இருக்கிறார். அவர் மெய்யாகவே கர்த்தருடைய வீராங்கனையாய் வாழ்ந்தார். டென்மார்க்கில் இருந்தபோது, அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார். அப்பொழுது அது அவ்வளவாக அறியப்படாத ஒன்றாக, பயன்படுத்தப்படாத ஒன்றாக இருந்தது. டேனிஷ் அரசாங்கப் பள்ளியில், ஒரு ஆசிரியையாக அவர் பணியாற்றி வந்தார். அவருடைய அனுபவம், அசாதாரணமான ஒன்றாக அமைந்து விட்டது. அவரைக் குறித்து டேனிஷ் பார்லிமெண்ட் வரை பேசப்பட்டது. அந்நிய பாஷைகளில் பேசுகிற ஒரு ஆசிரியை அரசாங்கப் பள்ளியில் தொடர்ந்து பணிபுரியும்படி அனுமதிக்கப்படலாமா, வேண்டாமா என்று அங்கே விவாதம் செய்யப்பட்டது. நல்லவேளையாக, ஆம் என்பதே பதிலானது. தேவனுக்கு நன்றி. ஆனாலும் லிடியா தன் வேலையை ராஜினாமா செய்தார். தொடர்ந்து டேனிஷ் பள்ளியில் வேலை பார்ப்பதற்குப் பதிலாக, அவர் எருசலேம் சென்றார்.

லிடியாவின் அனுபவத்தை நான் இங்கே குறிப்பிடுவதற்கு முக்கியமான காரணம் இதுதான்: அவர் நீண்ட வருடங்கள் வாழ்ந்தார். ‘‘தேவனே, அந்நிய பாஷைகளைப் பேசும் வரத்திற்காக உமக்கு நன்றி,’’ என்று அவர் ஒவ்வொரு நாளும் சொன்னார் என்பதுதான் உண்மை. அவர் தன் வாழ்க்கையின் கடைசி நாள் வரை அதை அனுபவித்தார். தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் மிகவும் உயரிய, விசேஷமான ஒரு சிலாக்கியமாக அவர் அதை நினைத்தார். ஆகையால் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள் என்று நான் உங்களுக்கு அறிவுரை சொல்கிறேன். அதற்கு ஒருபோதும் பொதுவான ஒரு இடத்தைக் கொடுத்து விடாதீர்கள். காரணம், அது தனித்தன்மை உடையதாயிருக்கிறது.

## இவற்றுக்கிடையே உள்ள உறவை எடுத்துக் காண்பிக்கும் ஒரு மாதிரி அல்லது எடுத்துக்காட்டு

ஆவி-ஆத்துமா-சரீரம் என்ற இந்த மூன்று கூறுகளுக்கு இடையேயான உறவை வெளிப்படுத்தக்கூடிய தெளிவான ஒரு படத்தை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். இதற்காக ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை எடுத்துக்காட்டாய் வைத்து, அதில் கவனம் செலுத்த விரும்புகிறேன். மனுஷனுடைய ஆளுமையின் ஒவ்வொரு கூறும், அதாவது



You Matter to God(Tamil)-2018.indd 54 5/22/2018 6:18:06 PM

ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் எவ்வாறு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன என்பதை இந்த எடுத்துக்காட்டு நமக்கு காண்பிக்கிறது. இந்த எடுத்துக்காட்டைக் குறித்து பேசும்போது, நான் சில குறிப்பிட்ட வார்த்தைகளை குறிப்பிட்ட விதத்தில் பயன்படுத்துவேன். நீங்களும் அதைப் பார்ப்பீர்கள்.

சரீரத்தைப் பொறுத்தமட்டில், சரீர இன்பம் அல்லது சரீர வலியின் அனுபவத்தை எடுத்துக்காட்டாக வைத்துக் கொள்வோம். ஆத்துமாவைப் பொறுத்தமட்டில், அதோடு தொடர்புடைய அனுபவமாக மகிழ்ச்சி அல்லது துக்கத்தைப் பார்ப்போம். ஆவியைப் பொறுத்தமட்டில், அதோடு தொடர்புடைய அனுபவமாக, களிகூருதலைப் பார்ப்போம்.

நாம் ஆத்துமாவில் என்ன உணருகிறோம், நாம் ஆவியில் என்ன உணருகிறோம் என்பதை வேறுபிரித்துப் பார்ப்பதற்கு இது நமக்கு உதவுகிறது. பாருங்கள், மகிழ்ச்சி என்பது சூழ்நிலைகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகையால் அது மாறக்கூடியது. ஆனால் களிகூருதல் என்பது தேவனை மட்டுமே சார்ந்திருக்கிறது. ஆகையால் அது ஒருபோதும் மாறாது. நாம் துக்கமாய் இருந்தாலும், கர்த்தருக்குள் நாம் களிகூர்ந்திருக்க முடியும். இது சரீரத்திற்கும் பொருந்தும். நன்மையோ, தீமையோ நம் அனுபவமாக இருந்தாலும், நம்முடைய ஆவியில் இருக்கும் களிகூருதலை எதுவும் மாற்ற முடியாது.

பல்வேறு சூழ்நிலைகளின் மத்தியில், மனுஷனுடைய ஆளுமையின் மூன்று கூறுகள் வெளிப்படுத்தும் இந்த உணர்வுகளை நான் இவ்விதமாய் படம் பிடித்துக் காண்பிக்க விரும்புகிறேன்: ஒரு வாலிபன் தன் காதலியுடன் தனக்குச் சொந்தமான விரைவேகக் காரில் வேகமாகச் செல்கின்றான். அது நல்ல குளிர்ச்சியான, இனிமையான ஒரு நாளாக இருக்கின்றது. அவனருகில் அவள் அமர்ந்திருக்கிறாள். சூரியனின் இதமான வெப்பம் அவனுடைய முகத்தில் படுகின்றது. காற்றில் அவளுடைய கூந்தல் பறக்கின்றது. இந்த உலகமே தனக்குச் சொந்தமாகி விட்டதைப்போல அவன் உணர்கின்றான். அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆனால் ஆறு மாதங்கள் கழித்து, அது மழைக்காலமானது. மழை பெய்து கொண்டிருந்தது. அவனுடைய காதலி அவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள். அவனுடைய கார் ஓடவில்லை, ரிப்பேராகி விட்டது. அவன் மனம் உடைந்து போனான், தன் மகிழ்ச்சியை இழந்தான்.

இதுதான் மகிழ்ச்சியாகும். இது சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடுகிறது. உங்களுடைய உடல் ஆரோக்கியம், பண விஷயத்தில் உங்களுடைய நிலை, உங்களுடைய கணவர் அல்லது உங்களுடைய மனைவி உங்களை நடத்தும் விதத்தைப் பொறுத்து இது மாறுபடுகிறது. இந்தச் சூழ்நிலைகளின் நிமித்தம், மகிழ்ச்சியானது ஏறி இறங்குகிறது. மகிழ்ச்சி என்ற விஷயத்தில் எந்தப் பிரச்சனையும்



You Matter to God(Tamil)-2018.indd 55 5/22/2018 6:18:06 PM

இல்லை. மகிழ்ச்சியாயிருப்பது எனக்கு பிடிக்கும். ஆனால் எந்நேரமும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது.

களிகூருதல் என்பது வித்தியாசமானது. களிகூருதல், ஆவியின் காரியமாயிருக்கிறது. இது தேவனை மட்டுமே சார்ந்திருக்கிறது. சங்கீதம் 43:4-ல் தாவீது சொல்கிறான், ''அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும், எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன். தேவனே, என் தேவனே, உம்மை சுரமண்டலத்தால் துதிப்பேன்.'' இந்த சங்கீதம் எழுதப்பட்ட சூழ்நிலையை எண்ணிப் பாருங்கள். தாவீது கலங்கி, ஒடுங்கிப் போன நிலையில் இருந்தான். அவன் மனச்சோர்வுக்குள்ளாகியிருந்தான். சூழ்நிலைகளெல்லாம் அவனுக்கு எதிராக இருந்தன. அவன் துக்கமாயிருந்தான். ஆனால் துக்கத்திற்கான தீர்வை அவன் அறிந்திருந்தான். தன் ஆவியின் மூலம், தேவனோடு திரும்பவும் ஐக்கியத்திற்குள் வருவதுதான் அந்தத் தீர்வாயிருந்தது. தேவன் மாறுவதில்லை. சூழ்நிலைகளைப் பொறுத்து தேவன் மாறுபடுகிறதில்லை. தேவன் ஒருபோதும் மாறாதவர். அவர் எப்பொழுதும் ஒரே சீரான நிலையில்தான் இருக்கிறார். நாம் நித்தியத்திற்கும் அவருக்குள் களிகூர்ந்திருக்க முடியும். அவர் ஒருவரே அதற்கு ஆதாரமாக இருக்கிறார்.

புதிய ஏற்பாட்டில், பவுல் இதை உறுதிப்படுத்துகிறார்: ''அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்'' (ரோமர் 5:11). ஆங்கிலத்தில், ''தேவனுக்குள் களிகூருகின்றோம்,'' என்று வருகின்றது.

'தேவனுக்குள் களிகூருதல்' தான், கிறிஸ்தவ ஜீவியத்தின் ஒரே அனுபவமாய் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். தேவனோடு இவ்விதத்தில் தொடர்பு கொண்டிருக்கிற ஆவிதான், நம் முழுமையையும் ஆளுகை செய்ய வேண்டும். சூழ்நிலைகள் நமக்கு எதிராக இருந்தாலும், ஆவியானவருக்குள் இப்பொழுதும் நம்மால் களிகூர முடியும். ஒருபோதும் மாறாத தேவனுடன், ஒருபோதும் மாறாத உறவின் ஐக்கியத்தைக் கொண்டிருப்பதன் மூலம், இது சாத்தியமாகிறது. களிகூருதல் இல்லாமல் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை ஒருபோதும் வராது.

இதற்கு என்ன அர்த்தம்? மனுஷனுடைய ஆளுமையின் ஒவ்வொரு பகுதியிலும், தேவனால் நியமிக்கப்பட்ட ஒழுங்கு கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதுதான் இதற்கு அர்த்தம். அப்படித்தான் நான் விசுவாசிக்கிறேன். முதலில், நம் ஆவியானது பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவனுடன் எப்பொழுதும் ஐக்கிய உறவில் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, நம் ஆத்துமா, ஆவியிடம் அர்ப்பணித்த நிலையில் எப்பொழுதும் வாழ வேண்டும். அது எப்பொழுதும் நம் சுயத்திற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும். ''ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்களுடைய



You Matter to God(Tamil)-2018.indd 56 5/22/2018 6:18:06 PM

சுயத்திற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும்,'' என்று இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவுகூருங்கள். எனவே ஒவ்வொரு நாளும் நம் ஆத்துமா இவ்வாறு சொல்ல வேண்டும்: ‘‘இல்லை. நான் என் சுயத்தைக் குறித்து மேன்மைபாராட்ட மாட்டேன். நான் ஆவியானவருடைய நடத்துதலுக்குக் கீழ்ப்படிவேன்.''

மூன்றாவதாக, நம் சரீரம், தேவனுடைய ஆலயமாக வேறுபிரிக்கப்பட வேண்டும். அதன் அவயங்கள் ஒவ்வொன்றும் பரிசுத்த ஆவியானவரின் பணிக்கென்று இணங்கி ஒப்புக்கொடுக்கப்பட்டவைகளாக மாற வேண்டும். தேவனுடைய ஆலயமாய் இருக்க வேண்டிய நம் சரீரத்தைக் குறித்து இனி வரப்போகிற அத்தியாயங்களில் நாம் பேசுவோம்.

## கொடுத்தலும், பெற்றுக் கொள்ளுதலும்

தேவன் இதை நிர்ணயித்தபிரகாரம், இதன் முழுமையான படத்தைப் பார்ப்போம். தேவனுடைய நித்திய ஜீவசுவாசமாயிருக்கிற ஆவியானவர், களிமண் சரீரத்திற்குள் ஊதினார். அப்பொழுது தேவனை மட்டுமே சார்ந்து வாழக்கூடிய விதத்தில், ஜீவாத்துமா சிருஷ்டிக்கப்பட்டது. ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி மட்டுமல்ல, ஜீவனை தக்க வைத்துக் கொள்ளும்படியாகவும் இவ்வாறு உருவாக்கப்பட்டது.

இந்தச் சத்தியம் மிகவும் அழகாக பவுலினால் எழுதப்பட்டிருக்கிறது: ‘‘தனக்கு பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும், அவர் மூலமாயும், அவருக்காகவும் இருக்கிறது'' (ரோமர் 11:35-36). சகலமும் தேவனிடமிருந்துதான் வருகின்றது. சகலமும் தேவனால் காக்கப்படுகின்றது. சகலமும் தேவனிடம் திரும்பிச் செல்கிறது.

இது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. இது ஒரு குறைவும் இல்லாத, பரிபூரணமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் நம்மை உருவாக்கின, நம்மை தாங்கி, நம்மை நேசித்த தேவனை விட்டு விலகி வாழ வேண்டும் என்ற விஷயத்தில் நாம் உறுதியாயிருந்தோம், மாறாதிருந்தோம். ஆகையால்தான் மனுஷர்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களுக்கு முடிவே இல்லாமல் போகின்றது. நம்முடைய முரட்டாட்டத்தினால், நம்முடைய ஆளுமையின் மூன்று பகுதிகளிலும் உண்டான மகா மோசமான மாற்றங்களைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் கற்றுக் கொள்வோம்.



You Matter to God(Tamil)-2018.indd 57 5/22/2018 6:18:06 PM

# 5
# முரட்டாட்டம் - ஒரு அடிப்படை பிரச்சனை

*''உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன்,'' என்று நான் மனக்கலக்கத்தில் சொன்னேன்.*

சங்கீதம் 31:22

மனுஷர்கள் எல்லோருக்குமே ஒரு அடிப்படைப் பிரச்சனை இருக்கிறது. நாம் சுயசித்தத்தை உடையவர்களாய் வாழ்கின்றோம் என்பதுதான் அது. ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை கவனிப்போம்: ''நாம் எல்லோரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் (முரட்டாட்டத்தையும்) அவர் மேல் விழப் பண்ணினார் (இது இயேசுவைக் குறித்த தீர்க்கதரிசன படமாயிருக்கிறது)'' (ஏசாயா 53:6).

தேவனுக்கு விரோதமாகச் செய்த முரட்டாட்டம்தான், மனுஷர் களுடைய எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரே வேர்க் காரணமாக இருக்கிறது. சுயசித்தம் என்ற வார்த்தை, இந்தப் பிரச்சனை ஆரம்பிக்கின்ற இடத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஆத்துமாவில்தான் அது மையங்கொண்டிருக்கிறது. ஆத்துமா என்ற, சுயம் என்ற, ஈகோ தான், மனுஷ ஆளுமையின் தீர்மானம் எடுக்கின்ற வேலையைச் செய்கின்றது. இதை நாம் கற்றுக் கொண்டோம். ஆக, சுயசித்தம்



You Matter to God(Tamil)-2018.indd 58 5/22/2018 6:18:06 PM

அல்லது முரட்டாட்டம், ஆவியில் அல்ல, சரீரத்திலும் அல்ல, ஆத்துமாவில் ஆரம்பிக்கிறது என்பதைத்தான் இது நமக்குச் சொல்கிறது.

இந்த மூன்று கூறுகளும் என்ன செய்ய வேண்டும் என்பதை தேவன் முன் குறித்திருக்கிறார். இதையும் நாம் அறிந்து கொண்டோம். ஆனால் பாவத்தில் விழுந்தபோது, நிகழ்ந்த சோகமான விஷயத்தைக் குறித்து ஆதியாகமம் 3-ல் எழுதப்பட்டிருக்கிறது. முரட்டாட்டம் செய்து பாவத்தில் விழுந்தபோது, ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் மோசமான விளைவுகள் உண்டானது. அதை நாம் அறிந்து கொள்வோம். நாம் ஏன் சோதனையில் எளிதில் விழுந்து போகக்கூடியவர்களாய் இருக்கிறோம் என்பதையும் குறித்து கற்றுக் கொள்வோம்.

## மூன்றிலும் விழுந்து போனோம்

பிசாசு உங்களிடம் ஒரு கேள்வியை எழுப்பிகிறான் என்றால், முதலில், எச்சரிக்கையாயிருங்கள்.

> *தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்தீரியை நோக்கி, ''நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?'' என்றது.*
>
> ஆதியாகமம் 3:1

ஆதியாகமம் 2:16-18 வசனங்களை வாசிப்பீர்கள் என்றால், மரங்களைக் குறித்த தம்முடைய கட்டளைகளை தேவன் மனுஷனிடத்தில்தான் கொடுத்தார் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். தேவன் மனுஷியினிடத்தில் கொடுக்கவில்லை. யார் இந்தப் பெண்ணிடம் சொன்னார்? மனுஷன்தான் சொன்னான். அது அவனுடைய வேலை. தேவன் ஆதாமிடம், ''நீ அந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே, நிச்சயமாய் சாவாய்,'' என்று சொல்லியிருந்தார்.

ஏவாள் ஞானமில்லாமல் நடந்து கொண்டாள். அவள் அந்த சர்ப்பத்திடம் பதில் சொல்லியிருக்கக் கூடாது. பிரசங்கியாராய் ஊழியம் செய்கிற என் நண்பர் ஒருவர், அந்த நேரத்தில் ஏவாள் என்ன சொல்லியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து இவ்வாறு சொன்னார், ''என் கணவர் இல்லாமல், விசித்திரமான பாம்புகளுடன் நான் பேசவே மாட்டேன்!'' அவள் அந்த உரையாடலுக்குள் நுழையாமல் இருந்திருந்தால், வரலாறே வித்தியாசமானதாக இருந்திருக்கும்! ஆனால் அவள் உரையாடினாள். ஆதியாகமம் 3:2-4 வசனங்களை நாம் திரும்பவும் வாசிப்போம்:

> *ஸ்தீரி சர்ப்பத்தைப் பார்த்து, ''நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், 'நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும்,*



You Matter to God(Tamil)-2018.indd 59 5/22/2018 6:18:06 PM

*அதைத் தொடவும் வேண்டாம்,' என்று சொன்னார்,'' என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்தீரியை நோக்கி, ''நீங்கள் சாகவே சாவதில்லை,'' என்றது.*

சாத்தானுடைய தந்திரத்தைக் கவனியுங்கள். அவனுடைய தந்திரம் ஒருபோதும் மாறுவதில்லை. அது இன்றும் வேலை செய்வதால், அவன் அதை மாற்றுவதில்லை. அவன் செய்ய முயற்சிக்கின்ற ஒரு காரியம் இதுதான். அதாவது, தேவனுடைய வார்த்தையின் மீது நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை உடைப்பதுதான் அவனுடைய வேலையாயிருக்கிறது. அவன் நேரடித் தாக்குதலில் இறங்குவதில்லை. அவன் ஒரு கேள்வியோடு ஆரம்பிக்கின்றான். அவனுடைய கேள்விக்குப் பதிலளிக்கும் முட்டாள்தனமான வேலையில் இறங்குவோம் என்றால், பிறகு அவன் மூன்று நோக்கங்களோடு பலமாய் உள்ளே நுழைகின்றான்.

முதல் நோக்கம், அவன் நம்மை சந்தேகங்கொள்ள வைக்கின்றான். இரண்டாவதாக, அவன் நம்மை அவிசுவாசிக்கச் செய்கிறான். மூன்றாவதாக, கீழ்ப்படியாமைக்குள் நடத்துகிறான். நீங்கள் மனந்திரும்பவில்லை என்றால், நீங்கள் அவிசுவாசிக்கிறீர்கள் என்றால், நீங்கள் நிச்சயம் கீழ்ப்படியாமைக்குள் செல்வீர்கள். இது நிச்சயமாய் நடக்கும். ஒவ்வொரு முறையும் சாத்தான் வரும்போதும், அவன் அதே தந்திரங்களுடன்தான் செயல்படுகின்றான். அந்த மூன்று அடிகளை எடுக்க வைப்பதன் மூலம், இலட்சக்கணக்கானோருடைய வாழ்க்கையை அவன் வேரோடு அசைத்து, அழித்துப் போட்டிருக்கிறான்.

ஏவாளின் பதிலுக்கு பிசாசு என்ன மறுமொழி கொடுத்தான்? ''நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்,'' என்று சொன்னான். தொடர்ந்து **6**-ம் வசனம் இவ்வாறு சொல்கிறது, ''அப்பொழுது ஸ்தீரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டாள்.''

'கண்டாள்' என்ற வார்த்தையில்தான் வீழ்ச்சி ஆரம்பித்தது. இதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. விசுவாசத்திலிருந்து, ஐம்புலன் உணர்வுகளுக்குள் ஏவாள் சென்றாள். அவள் தேவனுடைய வார்த்தையைக் காட்டிலும், தன் ஐம்புலன் உணர்வுகளை நம்பினாள்.

*''அப்பொழுது ஸ்தீரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிற தற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்.''*

ஆதியாகமம் **3:6**



You Matter to God(Tamil)-2018.indd 60 5/22/2018 6:18:06 PM

இந்தப் பாவச் சோதனையின் மூன்று அடிப்படை வடிவங்களுக்கு ஏவாள் எவ்வாறு இணங்கி விழுந்து போனாள் என்பதைக் குறித்து யோவான் தனது முதல் நிருபத்தில் எழுதியிருக்கிறார். நாம் இதை ஒப்பிட்டுப் பார்ப்போம். **1** யோவான் **2:16**-ஐ வாசித்துப் பாருங்கள். ''புசிப்புக்கு நல்லது என்று அவள் கண்டதை'' மாம்சத்தின் இச்சையோடு ஒப்பிட்டு எழுதுகிறார். ''பார்வைக்கு இன்பம் என்று அவள் கண்டதை'' கண்களின் இச்சையோடு ஒப்பிடுகிறார். ''அது என்னை ஞானமுள்ளவளாக்கும்,'' என்று அவள் நினைத்தாள். அதை ஜீவனத்தின் பெருமையோடு ஒப்பிடுகிறார். நான் தேவனைப்போல ஞானமுள்ளவளாய் இருக்கப் போகிறேன் என்றுதான் அவள் நினைத்தாள்.

இந்த நோக்கத்தில் எந்தத் தீமையுமில்லை என்பதை நான் சுட்டிக் காண்பிக்கிறேன். தேவனைப்போல வாழ வேண்டும் என்று விரும்புவது நல்லதுதான். நன்மை எது, தீமை எது என்று அறிந்து கொள்வதும் நல்லதுதான். அப்படியென்றால், இங்கு என்ன தீமை இருக்கிறது? இது மிகவும் முக்கியம். தேவனை முழுவதுமாய் தவிர்த்து விட்டு, தனித்து சுதந்திரமாய் வாழ வேண்டும் என்ற விருப்பத்தில்தான் தீமை இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், பாவத்தின் அடிப்படை, தீமையைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில் இல்லை. மாறாக, தேவனை ஒதுக்கி விட்டு, சுதந்திரமாய் வாழ வேண்டும் என்ற விருப்பத்தில்தான் தீமை இருக்கிறது.

கடைசியில், இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவரும், ஒன்றும் தேவனைத் தவிர்த்து விட்டு, சுதந்திரமாய் வாழப் போவதில்லை. தேவன் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார். அவர் ஒரு கிருபையின் காலத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் ஒரு நாள் நிச்சயமாய் வரும். அப்பொழுது தேவனுடைய ஆளுகைக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தாத எதுவும், எவரும் இந்தப் பரலோகம் மற்றும் பூமியிலிருந்து வெளியே தள்ளப்படுவார்கள். ''அந்தகார இருள்'' என்று இயேசு அழைத்த ஒரு இடத்திற்குள் அனுப்பப்படுவார்கள்.

எனவே தவறான விஷயங்களைச் செய்வதை நிறுத்தினாலே போதும் என்று நினைத்து விடக்கூடாது. காரணம், அது இந்த அடிப்படைப் பிரச்சனையைத் தீர்த்து விடாது. ஆதாமின் விழுந்துபோன சந்ததியில் பிறந்த ஒவ்வொருவரும், தேவனைச் சார்ந்து வாழ வேண்டும் என்று விரும்புவதில்லை. எனக்கு மட்டும் இல்லை, நம் எல்லோருக்குமே இந்தப் பிரச்சனை இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் கிட்டத்தட்ட ஐம்பது வருடங்கள் வாழ்ந்த பிறகும், ஒரு பிரச்சனையை எதிர்கொள்ளும்போது, இப்பொழுதும் எனக்குள் வருகிற கேள்வி இதுதான்: ''இதை நான் எப்படி சமாளிக்கப் போகிறேன்?'' தேவனுக்கு நன்றி சொல்கிறேன். காரணம், நின்று நிதானித்து, ''தேவனே, இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று ஜெபிக்கக்கூடிய ஒரு இடத்திற்கு நான் வந்திருக்கிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 61 5/22/2018 6:18:06 PM

ஆதாமிடமும், அவன் வழி வந்த விழுந்துபோன சந்ததியாரிடமும் ஒரு குணம் நிச்சயமாக இருக்கிறது. நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? நீங்களும், நானும் முரட்டாட்டக்காரர்கள் என்பதுதான் அது. பவுல் இந்தக் குணத்தை ''பழைய மனுஷன்'' என்று அழைக்கின்றார் (எபேசியர் 4:22). இதில் ஒரு சுவாரசியமான விஷயம் இருக்கிறது. பழைய மனுஷனைக் குறித்து பவுல் பேசும்போது, அவர் பழைய யூத மனுஷனைக் குறித்தோ அல்லது பழைய புறஜாதி மனுஷனைக் குறித்தோ அல்லது பழைய வேறு ஏதாவது வகை மனுஷனைக் குறித்தோ அவர் ஒருபோதும் பேசியதில்லை. இன்றைக்கு நிறைய தேசியங்களும், கலாச்சாரங்களும் வளர்ந்திருக்கலாம். ஆனால் அடிப்படையில், முரட்டாட்டக்காரன் நம் எல்லோருக்குள்ளும் அதே ஆளாகத்தான் இருக்கின்றான்.

## ஆவி: தேவனோடிருந்த ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டது

பாவத்தில் விழுந்தபோது, ஆவி மரித்தது என்றுதான் நான் இதைப் புரிந்து கொள்கிறேன். கீழ் நிலை கூறுகளாகிய ஆத்துமாவையும், சரீரத்தையும் ஆளுகை செய்யும்படி தேவனால் கொடுக்கப்பட்ட ஆவியானது, தேவரகமான ஜீவனுக்கு ஒரே ஆதாரமாயிருக்கிற தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டது.

ஆதாம் தொள்ளாயிரம் வருடங்களுக்கும் அதிகமாக உயிர் வாழ்ந்தான் என்று வேதவசனம் சொல்கிறது. ஆனால் அவன் கீழ்ப்படியாமல் போன அந்தக் கணமே ஆவிக்குரிய விதத்தில் மரித்துப் போனான். அதற்குப் பிறகு, மின் இணைப்பிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு மின்சாரக் கருவிபோல அவன் ஆகி விட்டான். இப்பொழுது அவன் ஒரு பேட்டரியின் வல்லமையில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறான். அது தொடர்ந்து இயங்கலாம். ஆனாலும் காலப்போக்கில், அதன் ஆற்றல் குறைந்து கொண்டே போகிறது என்பதுதான் உண்மை.

பவுல் இதை இவ்வாறு விளக்கிச் சொல்கிறார்: ''தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்'' (எபேசியர் 2:4-5). சரீரப்பிரகாரமாக அல்ல, ஆவிக்குரிய விதத்தில் நாம் மரித்துப் போயிருந்தோம் என்பதைத்தான் அவர் இங்கு சுட்டிக் காண்பிக்கிறார். அவர் இதே குறிப்பை தெளிவான வார்த்தைகளைக் கொண்டு, எபேசியர் 4:18-ம் வசனத்திலும் திரும்ப எழுதுகின்றார். ஒரே மெய்த்தேவனை அறியாத புறஜாதி அவிசுவாசிகளைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார்: ''அவர்கள் (புறஜாதியார் - ஒரே மெய்த்தேவனை அறியாதவர்கள்) புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கிறார்கள்.''



You Matter to God(Tamil)-2018.indd 62 5/22/2018 6:18:06 PM

மனுஷன் முரட்டாட்டம் செய்யும்போது, அவனுடைய நிலை என்ன வாயிருக்கிறது என்பதை இவ்வசனத்தில் எழுதப்பட்டிருக்கிற நான்கு வார்த்தைகள் விவரிக்கின்றன: அந்தகாரப்பட்டிருக்கிறான், தேவனுடைய ஜீவனுக்கு அந்நியனாயிருக்கிறான், அறியாமையிலிருக்கிறான், இருதயக் கடினமுள்ளவனாயிருக்கிறான். ஆவி துண்டிக்கப்பட்ட நிலையில், நாம் ஆவிக்குரிய விதத்தில் மரித்தவர்களாயிருக்கிறோம். நம் அக்கிரமங்கள் மற்றும் பாவங்களில் மரித்துக் கிடந்தோம். முரட்டாட்டம் அல்லது கீழ்ப்படியாமையின் விளைவாக, நாம் மரித்திருந்தோம்.

## ஆத்துமா: தாக்குதலின் மையம்

மனுஷனுடைய வீழ்ச்சியைக் குறித்து ஆதியாகமத்திலிருந்து நாம் அறிந்து கொண்டோம். நம்முடைய எதிரி, சர்ப்பத்தின் உருவில் வந்தபோது, அவன் தன் பாவ சோதனைகளைக் கொண்டு ஆவியைத் தாக்கவில்லை. அவன் ஆத்துமாவைத்தான் தாக்கினான். என்னுடைய புரிதலின்படி, கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு பெரிய பிரச்சனையும், போராட்டமும் ஆத்துமா எனும் யுத்தகளத்தில்தான் யுத்தம் செய்யப்படுகிறது. அதற்காக நாம் குற்ற உணர்வுக்கு ஆளாக வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய ஒவ்வொரு பரிசுத்தவானும் இதே போன்ற யுத்தங்களைத்தான் செய்திருக்கிறார்கள். இது வீழ்ச்சியினால் உண்டான ஒரு விளைவாயிருக்கிறது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், பிசாசின் தந்திரங்களை அறிந்து கொண்டு, அவைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்று கற்றுக் கொள்வதுதான்.

ஆத்துமா சோதனையில் விழுகின்றபோது, எதிர்மறையான ஒன்று நிகழ்கின்றது. தேவனோடு நமக்கிருக்கும் நேரடித் தொடர்பை சாத்தான் துண்டித்து விடுகிறான். அவன் அதில் வெற்றி பெறுகிறான். இதுதான் வீழ்ச்சியினால் உண்டான மோசமான விளைவாகும். இந்த எண்ணத்தின் ஒரு தொடர்ச்சியாகத்தான், பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ‘‘அவைகளில் (அதாவது அக்கிரமங்களிலும், பாவங்களிலும்) நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்’’ (எபேசியர் 2:2). கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்த ஆவி யார்? சாத்தான். அவன் எவ்வாறு கிரியை செய்கிறான் என்பதை உங்களால் பார்க்க முடிகின்றதா? ஒரு ஆவியாய் ஆத்துமாவின் பகுதியில் அவன் வேலை செய்கிறான்.

3-ம் வசனத்திலும் இது தொடருகிறது: ‘‘அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.’’



You Matter to God(Tamil)-2018.indd 63 5/22/2018 6:18:06 PM

இதற்கு விதிவிலக்கு இல்லை. இவ்வசனத்தின்படி, நாம் எல்லோருமே ஒரே நிலையில்தான் இருந்தோம். ஏன் நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்? கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாய் நாம் வாழ்ந்ததே அதற்குக் காரணம்.

மனுஷன் பாவம் செய்து விழுந்தபோது, அவனுடைய ஆத்துமாவில் முரட்டாட்டம் எனும் நோய் தொற்றிக் கொண்டது. இதன் விளைவாக, தொடர்ந்து பிறந்த சந்ததியாரையும் இந்தத் தொற்றுநோய் பாதித்தது. இனி நாம் வெளியே இருந்து சோதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. காரணம், நம்முடைய ஆத்துமாவிற்குள் முரட்டாட்டம் எனும் சக்தி மறைந்திருக்கிறது.

பவுலின் விளக்கத்தை இவ்வசனத்தில் நாம் திரும்பவும் பார்ப்போம்: ''அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்'' (எபேசியர் 2:3). 'இச்சை' என்ற வார்த்தை, முரட்டாட்டமான அல்லது முறைகேடான, சீர்கெட்ட விருப்பங்களை சுட்டிக் காண்பிக்கிறது. மனுஷன் முரட்டாட்டம் செய்து, தேவனுக்கு விரோதமாக எழும்பியபோது, இச்சையும், முறைகேடான விருப்பங்களும் அவனுடைய ஆத்துமாவில் தங்கி விட்டது. சோதனை நமக்குள்ளே இருந்தும் வர முடியும்: ''அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' (யாக்கோபு 1:14).

## சரீரம்: சீர்கேட்டிற்குள் விழுந்து போனது

விழுகையின் விளைவாக, சரீரம் சீர்கேட்டிற்குள் விழுந்து போனது. பவுல் அதை இவ்விதத்தில் சொல்கிறார்: ''மரணத்தின் கூர் பாவம்'' (1 கொரிந்தியர் 15:56). மரண விஷம், மனுஷனுடைய சரீரத்திற்குள் அவனுடைய பாவத்தின் மூலமாக உட்செலுத்தப்பட்டது.

''மோசம் போக்கும் பொல்லாங்கான இச்சைகளாலே நம் நடத்தை கெட்டுப் போகின்றது,'' என்று எபேசியர் 4:22-ல் வாசிக்கின்றோம். விழுந்துபோன மனுஷனுடைய சரீரத்தின் நிலையை விவரிக்கக்கூடிய ஒரு முக்கியமான வார்த்தை, 'சீர்கேடு' என்ற வார்த்தையாகும். அவன் எல்லா வகையான சீர்கேடுகளுக்கும், படிப்படியாக சிதைந்து அழிந்து போகிற ஒரு நிலைக்கும், வியாதிகளுக்கும், இதற்கெல்லாம் உச்சபட்சமாக தவிர்க்க முடியாத விதத்தில் சரீர மரணத்திற்கும் ஆளாகின்றான். ''மோசம் போக்கும் இச்சைகள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இணையான கிரேக்க வார்த்தையின் அர்த்தம், ''தோல்விக்கு நேராக நடத்தும் இச்சைகள்,'' என்பதாகும். சாத்தான் நம்மை ஏமாற்றுவதன் மூலம், நாமே நம்முடைய வீழ்ச்சியை, நம்முடைய தோல்வியை அடையும்படி செய்து விடுகிறான்.



You Matter to God(Tamil)-2018.indd 64 5/22/2018 6:18:06 PM

## எங்கும் பரவி வியாபித்திருக்கும் சீர்கேடுகள்

தேவனுக்கு விரோதமாக கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் செய்ததால் மனுஷனுடைய ஆளுமையில் உண்டான பொல்லாத விளைவுகள் என்ன ? நான் அதை இவ்வாறு தொகுத்துச் சொல்கிறேன்: ஆவியானது ஆத்துமாவை ஆளுகை செய்யும்படியாகவும், ஆத்துமா சரீரத்தை ஆளுகை செய்யும்படியாகவும் தேவன் நியமித்திருந்தார். ஆனால் சாத்தானுடைய பாவச்சோதனையில் விழுந்து போனதால், ஆத்துமாவும் சரீரமும் ஒன்றாய் சேர்ந்து, ஆவியின் ஆளுகைக்கு எதிர்த்து நிற்கின்றன. மனுஷனுடைய ஆளுமையில், தேவனால் நியமிக்கப்பட்ட ஆளுகையின் இடத்திலிருந்து ஆவி கீழே இறக்கப்பட்டது.

ஆத்துமாவும், சரீரமும் சேர்ந்து வெளிப்படுத்துகிற முரட்டாட்டத்தை சுட்டிக் காண்பிக்கும்படி, புதிய ஏற்பாட்டில் *மாம்சம், சரீரம், பாவச்சரீரம்* போன்ற பல வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகளை வாசிக்கும்போது, இவை மாம்ச சரீரத்தை மட்டும் குறிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆத்துமாவும், சரீரமும் ஒன்றாய் இணைந்து தேவனுக்கு விரோதமாகச் செய்கிற முரட்டாட்டத்தைத்தான் இவ்வார்த்தைகள் சுட்டிக் காண்பிக்கின்றன. ஆக, மாம்சம் என்பது விழுந்து போன சுபாவத்தைக் குறிக்கின்றது. மனுஷர்களாய் பிறக்கின்ற ஒவ்வொருவரும் இந்த சுபாவத்தோடுதான் பிறக்கின்றார்கள்.

மாம்சம் அல்லது விழுந்து போன சுபாவத்தைக் குறிக்கின்ற இன்னொரு வார்த்தை, 'சீர்கேடு' என்ற வார்த்தையாகும். மனுஷன் தனக்குள் ஒழுக்கரீதியாக சீர்கெட்டுப் போயிருக்கிறான். வெளியே பார்த்தால், அவன் சரீரப்பிரகாரமாகவும் சீர்கெட்டுப் போயிருக்கிறான். சீர்கேடானது அந்த அளவிற்கு வளர்ந்து பெருகிப் போயிருக்கிறது. பல வருடங்கள் கடந்து விட்டது. ஆத்துமா மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சீர்கேடுகள் பெருகிப் போயிருப்பதை இன்னும் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இதன் பெருக்கத்தை நாம் தடுத்து நிறுத்தவில்லை என்றால், மனுஷனுடைய ஆளுமை படிப்படியாக சீர்கேடு அடைவதால் உண்டாகிற வேதனைகளை நாம் அனுபவித்தே ஆக வேண்டும்.



You Matter to God(Tamil)-2018.indd 65 5/22/2018 6:18:06 PM

# 6

# தீர்வு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

*இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப் பண்ணும்.*

சங்கீதம் 17:7

படிப்படியாக சீர்கேடுகளுக்குள் சிக்கி அழிந்து போகின்ற இந்த மோசமான நிலையில் நாம் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே நாம் தேவனுக்கு நன்றியுணர்வுள்ளவர்களாய் வாழ வேண்டும். காரணம், தேவன் உங்களையும் என்னையும் குறித்து அதிக அக்கறையுள்ளவராய் இருக்கிறார். தேவன் கவனமாய் ஒரு திட்டம் தீட்டி, நேர்த்தியாய் அதைச் செயல்படுத்தி, ஒரு அற்புதத்தைச் செய்து, மரித்துக் கிடந்த மனுஷனுடைய ஆவியை தமக்குள் உயிர்ப்பித்தார்.

உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுகிற முக்கியமான அதிகாரம், 1 கொரிந்தியர் 15-ம் அதிகாரமாகும். அது நமக்கு இந்த ஆச்சரியமான வெளிப்பாட்டைக் கொடுக்கிறது:

*அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமா ஆனான் என்று எழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன், வானத்திலிருந்து வந்த கர்த்தர்.*

45, 47 வசனங்கள்



You Matter to God(Tamil)-2018.indd 66 5/22/2018 6:18:06 PM

‘பூமி’ என்று அர்த்தங்கொள்ளும் ‘அடாமா (adamah)’ என்ற எபிரெய வார்த்தைதான் ‘ஆதாம்’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அவன் பூமியிலிருந்து எடுக்கப்பட்டான் என்பதைத்தான் அவனுடைய பெயர் சுட்டிக் காண்பிக்கிறது. பூமியிலிருந்து எடுக்கப்பட்ட ‘‘முதல் மனுஷனாகிய’’ ஆதாம் ஜீவாத்துமா ஆனான்.

இங்கு இன்னொரு ‘‘ஆதாமுடைய’’ பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய காலம் நிறைவேறினபோது, நம்மை இரட்சிக்கும்படி வந்த நசரேயனாகிய இயேசுவைத்தான் இது குறிக்கின்றது. இவரே பரலோகத்திலிருந்து வந்த கர்த்தர்.

இவ்வசனத்தில் இயேசுவுக்கு இரண்டு வித்தியாசமான பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை சரியான அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். நிறைய பேர் இதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். முதல் பெயர், அவர் ‘‘பிந்தின அல்லது கடைசி ஆதாம்’’ என்றழைக்கப்படுகிறார். இரண்டாம் ஆதாம் என்று சொல்லப்படவில்லை. மாறாக, கடைசி ஆதாம் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரலாற்றின் தொடர்ச்சியாகப் பார்க்கும்போது, அவர் கடைசியில் வந்தவர் என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. மாறாக, விழுந்துபோன ஆதாமின் சந்ததியில் வந்த கடைசி நபர் என்ற அர்த்தத்தில், ‘கடைசி அல்லது பிந்தின ஆதாம்’’ என்றழைக்கப்படுகிறார். இயேசு சிலுவையில் தொங்கியபோது, ஒவ்வொரு அக்கிரமத்திற்காகவும், கீழ்ப்படியாமைக்காகவும், ஒவ்வொரு பாவம் மற்றும் முரட்டாட்டத்திற்காகவும் தண்டனையை மொத்தமாக அவர் ஏற்றுக் கொண்டார். அவர் மரித்தபோது, அந்தத் தீய விளைவுகளும் மரித்தன. அவர் அடக்கம் பண்ணப்பட்டபோது, அதுவும் அடக்கம் செய்யப்பட்டது. அவர் தன்னையே தியாகபலியாய் ஒப்புக்கொடுத்து, கடைசி ஆதாமாய் மரித்ததன் மூலம், பாவத்தை அகற்றியிருக்கிறார்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் உயிரோடு எழும்பியபோது, அவர் ‘‘இரண்டாம் மனுஷனாய்’’ எழுந்தார். ஒரு புதிய வகை மனுஷனாய், இதற்கு முன் ஒருபோதும் இருந்திராத முற்றிலும் ஒரு புதிய இனத்தின் தலையாக அவர் எழுந்தார். இது தேவன்-மனுஷன் இனமாய் இருக்கிறது. அதாவது தேவனும், மனுஷனும் ஒரு சுபாவத்தில் ஒன்றாய் இணைக்கப்பட்ட இனமாய் இருக்கிறது. இதை நாம் இம்மானுவேல் இனம் என்று அழைக்கலாம்.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம், நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். பாவத்தை விட்டும், மரணத்தை விட்டும் வெளியே வந்து, இயேசுவே தலையாயிருக்கிற ஒரு புதிய இனத்திற்குள் நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். இயேசுவே தலையாயிருக்கிறார்; நாம் அவருடைய சரீரமாயிருக்கிறோம் என்று கொலோசெயர் **1:18** சொல்கிறது. பிறப்பில், முதலில் தலை தான் வருகின்றது, பிறகு



You Matter to God(Tamil)-2018.indd 67 5/22/2018 6:18:06 PM

சரீரம் அதைத் தொடர்ந்து வருகின்றது என்பது நமக்குத் தெரியும். இயேசு தலையாய், மரித்தோரிலிருந்து மறுபடியும் பிறந்தார். நாம் அவருடைய சரீரத்தின் அங்கமாக இருக்கின்றோம். அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வழியாக, நாம் இந்தப் புதிய இனத்தின் அங்கமாகியிருக்கிறோம்.

விசுவாசத்தின் மூலம், இதற்குள்தான் நாம் பிறந்திருக்கிறோம். இயேசுவின் கிருபாதார பலி மரணத்தையும், ஜெயமாய் அவர் உயிர்த்தெழுந்ததையும் நாம் விசுவாசிக்கும்போது, நாம் புது சிருஷ்டிகளாகின்றோம். இதில் தேவனும், மனுஷனும் ஒன்றாய் இணைந்து ஒரே நபராகியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இதுதான் உண்டாகியிருக்கிறது.

விசுவாசிகளிடத்தில் பேசும்போது, பேதுரு இதைக் குறித்துப் பேசுகிறார்: ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்’’ **(1 பேதுரு 1:3-4).** இந்தப் புதிய சிருஷ்டிப்பில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பு, இந்தப் பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மனுஷனுக்கும் உண்டாயிருக்கிறது.

உயிர்த்தெழுந்த ஞாயிறன்று மாலையில், உயிர்த்தெழுந்த இயேசு, பயத்தில் தங்களை ஒரு அறைக்குள் அடைத்துக் கொண்ட சீஷர்களிடம் தோன்றினார். ‘‘பரிசுத்த சுவாசத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்,’’ அல்லது ‘‘பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுங்கள்,’’ என்று சொல்லி, இயேசு அவர்கள் மீது ஊதினார். ஒரு விதத்தில், அந்தக் கணத்தில், ஆதி சிருஷ்டிப்பில் என்ன செய்யப்பட்டதோ, அது அப்படியே புதிய சிருஷ்டிப்பிலும் செய்யப்பட்டது. தோட்டத்தில், களிமண் சரீரத்திற்குள் ஜீவ சுவாசத்தை ஊதிய அதே தேவன், முற்றிலும் புதிய வகையான ஜீவனை அந்த சீஷர்களுக்குள்ளும் ஊதினார். அந்த ஜீவன், பாவத்தையும், மரணத்தையும், நரகத்தையும், கல்லறையையும், சாத்தானையும் ஜெயமாய் வென்றெடுத்த ஜீவனாய் இருந்தது. அவர்கள் மறுபடியும் பிறந்தார்கள். அவர்கள் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டார்கள்.

இயேசு கிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் இதற்கு ஒத்த அனுபவத்தைப் பெறுகின்றார்கள். ஒரு சபையில் சேருவதாலோ, கிறிஸ்தவ பெயர் வைத்திருப்பதினாலோ, ஞானஸ்நானம் பெற்றதினாலோ நீங்கள் ஒரு கிறிஸ்தவராகி விட முடியாது. இயேசுவை தனிப்பட்ட விதத்தில் சந்திப்பதன் மூலமாக மட்டுமே நீங்கள் ஒரு கிறிஸ்தவராக முடியும்.



You Matter to God(Tamil)-2018.indd 68 5/22/2018 6:18:07 PM

“நானே வாசல். என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்,” என்று இயேசு சொன்னார் (யோவான் 10:9). நீங்கள் அவரை சந்திப்பதென்றால், சரீரப்பிரகாரமாக சந்திப்பதல்ல. மாறாக, பரிசுத்த ஆவியானவர் வழியாக, அவரைச் சந்திப்பதாகும். மேல் வீட்டறையில், அவர் தன் சீஷர்களிடம் எவ்வகையான ஜீவனை ஊதினாரோ, அதே வகையான ஜீவனை உங்களுக்குள்ளும் ஊதுகிறார். அந்தச் செயலின் மூலம், நீங்கள் மறுபடியும் பிறக்கின்றீர்கள். உங்களுடைய ஆவியானது திரும்பவும் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கொண்டு வரப்படுகிறது.

## மறுபிறப்பின் அதிசயம்

முரட்டாட்டமான வாழ்க்கைமுறை நம்மை தோல்வியிலும், பரிதபிக்கத்தக்க நிலையிலும், ஆபத்தான நிலையிலும் விட்டு விட்டது. ஆனால் தேவன் நம்மை மிகுதியாய் நேசித்தபடியால், நித்திய தேவ ஜீவனை உடையவர்களாய் நாம் மாற முடியும். இந்த ஜீவன், என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய, எதினாலும் அழிக்க முடியாத, எதினாலும் தோற்கடிக்க முடியாத ஜீவனாய் இருக்கிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருக்கின்றீர்கள் என்றால், இந்த வகையான ஜீவன் தான் உங்களுக்குள் இருக்கின்றது. தேவனுக்கு நீங்கள் ஏன் அவ்வளவு முக்கியமானவர்களாய் இருக்கின்றீர்கள் என்பதை இப்பொழுது உங்களால் பார்க்க முடிகின்றதா?

இந்த மறுபிறப்பின் அதிசயத்தைக் குறித்து, இயேசுதான் முதலில் பேசினார். எளிமையான வார்த்தைகளில் அவர் இதை விளக்கினார். நம்முடைய முரட்டாட்டத்தினால் உண்டான பொல்லாங்கான விளைவுகளிலிருந்து நாம் விடுதலையாக வேண்டுமென்றால், எல்லாவற்றையும் சீரமைக்க வேண்டுமென்றால், மறுபிறப்பைத் தவிர அதற்கு வேறு ஒரு வழியும் இல்லை என்று அவர் சொன்னார்.

பரிசேயனாகிய நிக்கொதேமுவுடன் அவர் உரையாடியபோது, இந்தக் குறிப்பை தெளிவாக வெளிப்படுத்தினார்:

> *இயேசு அவனுக்கு (நிக்கொதேமு) பிரதியுத்தரமாக, “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்,” என்றார். அதற்கு நிக்கொதேமு, “ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ,” என்றான். இயேசு பிரதியுத்தரமாக, “ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க*



You Matter to God(Tamil)-2018.indd 69 5/22/2018 6:18:07 PM

*வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்,'' என்றார்.*

யோவான் **3:3-7**

பாருங்கள், இந்த அனுபவம் அத்தியாவசியமாய் ஒவ்வொருவரும் பெற வேண்டிய ஒன்றாயிருக்கிறது. இதற்குப் பதிலாக வேறு ஒன்று இல்லை. இதற்கு மாற்று வழியும் இல்லை.

நிக்கொதேமு ஒரு நல்ல மனுஷனாய் வாழ்ந்தான், வேதப் பிரமாணங்களை ஒழுங்காக கடைபிடித்து வந்தான் என்பதை தெளிவாகப் பார்க்க முடிகிறது. இரண்டாம் சரீரப்பிரகாரமான பிறப்பைக் குறித்து இயேசு பேசுகின்றார் என்று அவன் ஒருவேளை நினைத்திருக்கலாம். சரீரப் பிறப்பைக் குறிப்பிடவில்லை, மாறாக, ஆவிக்குரிய மறுபிறப்பைக் குறிப்பிட்டுப் பேசுகிறேன் என்று இயேசு சுட்டிக் காண்பித்தார். தேவனுடைய ஆவியானவரால் மறுபடியும் பிறக்கின்ற அனுபவமாய் இது இருக்கின்றது. இந்த அனுபவத்தின் மூலம், தேவனுடைய ஜீவன், மனுஷனுடைய மரித்துப்போன ஆவியை உயிர்ப்பித்தது.

இந்த வேதப்பகுதியை, எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் எழுதிய வார்த்தைகளோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்:

*தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த (நாம் ஆவிக்குரிய விதத்தில் மரித்துக் கிடந்தோம் என்பதைத்தான் இது சொல்கிறது) நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் (தேவன் நம்மை திரும்பவும் கிறிஸ்துவோடுகூட ஆவிக்குரிய விதத்தில் உயிர்ப்பித்திருக்கிறார்). கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்.*

எபேசியர் **2:4-5**

அக்கிரமங்களினால் ஆவிக்குரிய விதத்தில் மரித்துக் கிடக்கிற ஒரு நபருக்கு, எந்தப் பிரமாணமும், எந்த மதமும், அது எவ்வளவு நல்லதாக இருந்தாலும், எவ்வளவு ஆழமானதாக, வலிமையானதாக இருந்தாலும், அதினால் ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்க முடியாது. இது நாம் புரிந்து கொள்ள வேண்டிய பிரதானமான உண்மையாயிருக்கிறது.

பவுல் இந்த உண்மையை தெளிவாக வெளியே கொண்டு வருகிறார். கலாத்தியர் **3:21**-ஐ வாசிப்போம்: ''உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே (ஜீவனைக் கொடுக்கும் நோக்கத்தில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தால், நீதியானது நிச்சயமாக நியாயப்பிரமாணத்தினால் உண்டாகியிருக்குமே).'' பாருங்கள், மரித்துப் போன ஒரு மனுஷனுக்கு அத்தியாவசியமாக ஒரு விஷயம்தான் தேவைப்படும். அவனுக்கு ஜீவன் தான் தேவை. பிரமாணங்களும், மதங்களும் தேவையில்லை. மாறாக, ஆவிக்குரிய



You Matter to God(Tamil)-2018.indd 70 5/22/2018 6:18:07 PM

ஜீவனே தேவை. அதை விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது.

### விதை எவ்வாறு வளருகின்றது?

எவ்வாறு புதுப்பிறப்பு நடக்கின்றது? அதன் செயல்முறை என்ன? நான் அதை சுருக்கமாகவும், எளிமையாகவும் எடுத்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

முதலில், புதிய ஜீவன், ஒரு விதையிலிருந்துதான் வெளிப்படுகிறது. அந்த விதை, தேவனுடைய வார்த்தையாகும். வேதவசனம் இவ்வாறு சொல்கிறது, ''அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (மறுபடியும் பிறந்திருக்கிறீர்களே)'' (1 பேதுரு 1:23). இயேசுவும் இதைத் தெளிவுபடுத்துகிறார்: ''விதை, தேவனுடைய வசனம்'' (லூக்கா 8:11).

விசுவாசத்தினால் நம்முடைய இருதயத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்படுகிற தேவனுடைய வார்த்தை, விதையைப்போல இருக்கிறது. இந்த விதைக்குள் தேவனுடைய ஜீவனும், வல்லமையும் இருக்கின்றது. விதையின் தன்மை எப்படியோ, அப்படியே அந்த விதையிலிருந்து வெளிப்படும் ஜீவனின் தன்மையும் இருக்கும். இந்த விதை தேவனுடையதாய் இருக்கிறபடியால், இதன் ஜீவன் தேவரகமான, தெய்வீகத் தன்மை கொண்டதாய் இருக்கும். இந்த விதை, நித்தியமானதாய் இருக்கிறபடியால், இதன் ஜீவனும் நித்திய தன்மை கொண்டதாய் இருக்கும். இந்த விதை, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடியதாய் இருக்கிறபடியால், இதிலிருந்து வெளிப்படும் ஜீவனின் தன்மையும் அப்படிப்பட்டதாகவே இருக்கும். இது அழியாத தன்மை கொண்டதாயிருக்கும். பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட கிரியைதான், இந்த விதையை முளைவிடச் செய்கிறது, இதற்குள் மறைந்திருக்கும் ஜீவனை வெளிக்கொண்டு வருகின்றது.

ஆகையால்தான் இயேசு இவ்வாறு சொல்கிறார், ''ஆவியானவரால் (of the Spirit) பிறப்பது ஆவியாயிருக்கும்(spirit)'' (யோவான் 3:6).

ஆவியானவரின் கிரியையினால், இந்த விதை முளைவிட்டு வளரும்போது, அதிலிருந்து ஜீவன் வெளிப்படுகிறது. அந்த ஜீவன் இயேசுவின் சுபாவத்தையே நமக்குள் உருவாக்குகின்றது. தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும்போது, பரிசுத்த ஆவியானவர் அதை ஜீவனுள்ள வார்த்தையாய் வெளிப்படச் செய்கிறார். அது முளைவிடும்படி கிரியை செய்கிறார். அப்பொழுது இயேசுவே அங்கு ஜீவ வார்த்தையாய் நமக்குள் வருகின்றார். இந்தப் புதிய ஜீவனை, இந்தப் புதிய சுபாவத்தைப் பார்க்க வேண்டியது மிகவும் முக்கியம். மறுபிறப்பில் பிறக்கின்ற இந்தப் புதிய ஆவிக்குரிய மனுஷன், இயேசுவின் சுபாவத்தை உடையவனாக



You Matter to God(Tamil)-2018.indd 71 5/22/2018 6:18:07 PM

இருக்கின்றான். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின் மூலம், தேவனுடைய வார்த்தையாகவே இயேசு அங்கு வெளிப்படுகிறார், நமக்குள் வருகின்றார்.

பவுல் இதைச் சொல்கிறார்:

*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் (அதாவது, பழைய முரட்டாட்ட குணத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாயிராமல்), ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

ரோமர் **8:9**

பாருங்கள், மறுபிறப்பில், கிறிஸ்துவின் ஆவியானவரே நமக்குள் வந்திருக்கிறார். கிறிஸ்துவின் ஆவியானவர் நமக்குள் இல்லையென்றால், நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்பதுதான் உண்மை. நாம் ஒரு சபையைச் சேர்ந்தவர்களாய் இருக்கலாம். ஆனால் நமக்குள் கிறிஸ்துவின் ஜீவன் இருக்காது. பவுல் தொடர்ந்து எழுதுகிறார்: ‘‘மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தால், சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்’’ **(10-ம் வசனம்).**

சரீரம் இன்னும் மரண தண்டனையின் கீழ்தான் இருக்கிறது. சரீர உயிர்த்தெழுதல் நடக்கும்வரை, அதுதான் சரீரத்தின் நிலையாய் இருக்கிறது. ஆனால் விசுவாசத்தின் மூலம், இயேசு கிறிஸ்துவின் நீதியே நமக்கு அருளப்பட்டிருக்கிறபடியால், அந்த சரீரத்திற்குள் இருக்கின்ற ஆவியானது உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆக, பிரசங்கிக்கப்பட்ட வார்த்தையிலிருந்து, பரிசுத்த ஆவியான வர் புதிய ஜீவன் எனும் ஒரு பெரிய அற்புதத்தை நிகழ்த்துகிறார் என்று நாம் பார்க்கின்றோம். இந்தப் புதிய ஜீவன், கிறிஸ்துவின் ஜீவனாக இருக்கின்றது. தேவனுடைய வார்த்தையிலிருந்து இந்த ஜீவன் வெளிப்படுகின்றது.

மெய்யாகவே மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தங்களுக்குள் தேவன் என்ன வைத்திருக்கிறார் என்பதை முழுமையாக புரிந்து கொண்டிருப்பதில்லை, அதன் மதிப்பை அவ்வளவாக உணர்ந்திருப்பதில்லை என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். அதற்கு ஒரு காரணம், இந்தப் புதிய உள்ளான சுபாவம் அல்லது ஆளுமை பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது என்று தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நீண்ட நேரம் செலவிட்டு அவர்கள் பார்ப்பதில்லை.



You Matter to God(Tamil)-2018.indd 72 5/22/2018 6:18:07 PM

தேவனுடைய வார்த்தை நமக்குள் செய்யும் அற்புதம் இதுதான். நாம் அதைப் பார்க்கும்போது, அது முதலில், நம்முடைய பழைய, பாவ நிலையை, சீர்கேடு அடைந்திருந்த நிலையை நமக்குக் காண்பிக்கிறது. ஆனால் அதற்கு தேவன் தரும் சீர்திருத்தத்தை நாம் ஏற்றுக் கொண்டு, திரும்பவும் அதைப் பார்க்க ஆரம்பிப்போம் என்றால், மறுபிறப்பின் மூலம் தேவன் நமக்குள் கொண்டு வந்திருக்கிற புதிய ஆளுமையின் சுபாவத்தை அது நமக்குக் காண்பிக்கும்.

## எந்த சுபாவத்தை நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம்?

தேவனால் பிறந்தவர்களைக் குறித்து, மறுபிறப்படைந்து இரட்சிக்கப் பட்டவர்களைக் குறித்து பேசும்போது, யோவான் அழுத்தமான, ஆணித்தரமான ஒன்றை எழுதுகிறார்: "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவம் செய்ய மாட்டான்" (1 யோவான் 3:9).

இங்கே ஒன்றை உடனடியாக நான் சொல்லி விடுகிறேன். மறுபடியும் பிறந்த விசுவாசி பாவம் செய்ய மாட்டார் என்ற அர்த்தத்தில் இவ்வசனம் பேசுகிறது என்று நான் விசுவாசிக்கவில்லை. யோவான் என்ன சொல்கிறார் என்பதை நான் இவ்வாறு புரிந்துகொள்கிறேன்: மறுபடியும் பிறந்த விசுவாசிக்குள், ஒரு புதிய சுபாவம் உண்டாயிருக்கிறது. புதிய ஜீவன் அவருக்குள் இருக்கிறது. அது அழிவில்லாததும், என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய ஜீவனாயிருக்கிறது. இந்த வித்து அழிவில்லாதது. இந்த ஜீவன் அழிவில்லாதது. இந்தப் புதிய சுபாவத்தினால், பாவம் செய்ய இயலாது. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்ய மாட்டான். ஏன்? தேவனுடைய வித்து, அழிவில்லாத வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. இந்த வித்திலிருந்து வெளிப்படும் ஜீவன் ஒருபோதும் சீர்கெட்டுப் போகாது, அழிந்து போகாது. இது அழிவில்லாததாய், என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடியதாய் இருக்கிறது.

யோவான் இன்னும் தொடர்ந்து எழுதுகிறார்: "இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும். நீதியைச் செய்யாமலும், தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவன் அல்ல" (1 யோவான் 3:10). இரண்டு வகையான பிள்ளைகள் இருக்கின்றனர். இரண்டு வகையான சந்ததியார் இருக்கின்றனர். தேவனால் பிறந்த பிள்ளைகளும் இருக்கின்றனர். பிசாசினால் பிறந்தவர்களும் இருக்கின்றனர். அவர் களுடைய நடத்தையே, அவர்கள் யாருடைய பிள்ளைகள் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது என்று யோவான் சொல்கிறார்.



You Matter to God(Tamil)-2018.indd 73 5/22/2018 6:18:07 PM

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மறுபடியும் பிறந்தவராய் இருக்கின்றீர்கள் என்றால், எதினாலும் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உண்மையில், அந்த ஜீவன் தான், இவ்வுலகத்தைத் தோற்கடிக்கும். யோவான் இன்னொன்றையும் சொல்கிறார், ''தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' **(1** யோவான் **5:4).** தேவனால் பிறந்த எவரும், எதையும் மேற்கொண்டு ஜெயிக்கும்படியே பிறந்திருக்கிறார்கள்.

ஆனால் நாம் இதை விசுவாசித்து வாழும்போது மட்டுமே, இது சாத்தியமாகிறது. இது பலன் கொடுக்கிறது. ''நம்முடைய விசுவாசமே இவ்வுலகத்தை ஜெயிக்கிற ஜெயமாய் இருக்கிறது.'' புதுப் பிறப்பில், வெற்றிக்கான சாத்தியம் உண்டாகிறது. ஆனால் நம் விசுவாசம்தான், அந்த வெற்றியை மெய்யான ஒன்றாய் வெளிப்படச் செய்கிறது.

நமக்குள் பிறந்திருக்கிற இந்தப் புதிய ஜீவனின் இன்னொரு அம்சம், பிசாசினால் இதைத் தொட முடியாது என்பதுதான். வேதாகமம் சொல்கிறது, ''தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் என்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் (பிசாசு) அவனைத் தொடான்'' **(1** யோவான் **5:18).**

மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், நம் மூத்த சகோதரனுமாகிய இயேசுவினால் நாம் காக்கப்படுகிறோம் **(**ரோமர் **8:29).** பொல்லாங்கனாகிய சாத்தானால் இந்தப் புதிய ஜீவனைத் தொட முடியாது. அவன் அடையக் கூடிய எல்லைக்கு வெளியே அது இருக்கிறது. அவனால் ஒரு மனுஷனின் ஆத்துமாவைத் தொட முடியும். அவனால் ஒரு மனுஷனின் சரீரத்தையும் தொட முடியும். ஆனால் அவனால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியைத் தொட முடியாது. இந்த ஜீவனை எதினாலும் தோற்கடிக்க முடியாது. இந்த சுபாவத்தை எதினாலும் தோற்கடிக்க முடியாது.

இந்தப் புதிய ஜீவனுக்குத் தேவையான ஒவ்வொன்றையும் தேவன் பூரணமாய் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்:

> *தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் (தீய விருப்பங்களால்) உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*
>
> **2** பேதுரு **1:3-4**



You Matter to God(Tamil)-2018.indd 74 5/22/2018 6:18:07 PM

பாருங்கள், தேவனுடைய வார்த்தை எனும் அழிவில்லாத வித்திலிருந்து இந்தப் புதிய ஜீவன் பிறந்தது. அது மட்டுமல்ல, அழிவில்லாத தேவனுடைய வார்த்தையிலிருந்துதான் இது ஊட்டத்தைப் பெற்றுக் கொள்கிறது. தேவனுடைய வார்த்தையிலிருந்து இது ஊட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய சுபாவத்திற்குப் பங்குள்ள ஒன்றாக மேலும் மேலும் இது மாறிக் கொண்டே போகிறது. தேவனுடைய சுபாவத்திற்குப் பங்குள்ள ஒன்றாக இது எவ்வளவாய் மாறுகின்றதோ, அவ்வளவாய், தீய இச்சையின் மூலம் இவ்வுலகத்தில் உண்டான சீர்கேட்டிலிருந்து இது விடுவிக்கப்படுகிறது.

ஆக, ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்ட இரண்டு சுபாவங்கள் நமக்குள் இருக்கின்றன. ஒன்று, பழைய, விழுந்துபோன மாம்ச சுபாவம். இது அழியக்கூடியது. இன்னொன்று, நமக்குள் பிறந்திருக்கிற தேவ சுபாவம். இது அழியாத ஒன்றாயிருக்கிறது. இவ்விரண்டு சுபாவத்தையும் மாற்ற முடியாது. அதாவது, தேவ சுபாவம் அழியக்கூடியதாய் ஒருபோதும் மாறாது. பழைய சுபாவம், அழியாத ஒன்றாய் ஒருபோதும் மாறாது. இதில் எந்த சுபாவம் நம்மைக் கட்டுப்படுத்துகிறதோ, அதன் அடிப்படையில்தான் நாம் வாழ்கின்ற விதமும் அமைந்திருக்கும்.

## உடைக்கப்பட முடியாத சங்கிலி

இந்தப் புதிய சுபாவத்தின்படி வாழ்வதைக் குறித்து, பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் எழுதுகிறார். இது நமக்கு உதவியாயிருக்கும்: ‘‘கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்’’ (கலாத்தியர் 2:20).

பவுல் இங்கு என்ன சொல்கிறார்? ‘‘நான் இயேசுகிறிஸ்துவிடம் மனந்திரும்பி, என் வாழ்க்கையை அவரிடம் அர்ப்பணித்தபோது, என் பழைய வாழ்க்கை மரித்துப் போனது. சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின் மரணம், என்னுடைய பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால் இப்பொழுது புதிய ஜீவன் எனக்குள் வந்திருக்கிறது. இப்பொழுது கிறிஸ்துவே எனக்குள் வாழ்கின்றார்.’’

விசுவாசத்தின் தேவையை பவுல் எப்பொழுதுமே வலியுறுத்திப் பேசுகிறார். இதை நாம் கவனிக்க வேண்டும். புதுப் பிறப்பில், ஏராளமான ஆற்றலும், நன்மைகளும் நமக்குக் கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றன. ஆனால் விசுவாசத்தை எவ்வளவாய் நம் செயல்களின் மூலம் தொடர்ந்து வெளிப்படுத்துகிறோமோ, அதைப் பொறுத்துதான் அந்த சாத்தியம் நிஜமாகின்றது. அதைத்தான் பவுல் சொல்கிறார்: ‘‘கிறிஸ்துவே



You Matter to God(Tamil)-2018.indd 75 5/22/2018 6:18:07 PM

எனக்குள் ஜீவிக்கின்றார். இந்த சரீரத்தில் நான் வாழ்கின்ற வாழ்க்கையை, தேவனுடைய குமாரனின் மீது வைக்கும் விசுவாசத்தினால் நான் வாழ்கின்றேன்.'' இவ்விதத்தில் தேவனுடைய நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. அநேக சகோதரருக்குள் இயேசு முதற்பிறந்தவரானார். நம்முடைய மறுபிறப்பின் மூலம், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இயேசுகிறிஸ்துவின் இளைய சகோதரர்களாய் மாறியிருக்கிறோம்.

இது ஒரு வகையான உடைக்கப்பட முடியாத சங்கிலிக்கு ஒத்திருக்கின்றது. பிதாவாகிய தேவன் இயேசுவை அனுப்பினார். இயேசு தம்முடைய அன்றாட வாழ்க்கைக்காக பிதாவாகிய தேவனைச் சார்ந்திருந்தார். இப்பொழுது இயேசு சொல்கிறார்: ''நான் என் பிதாவாகிய தேவனைச் சார்ந்திருக்கிறதுபோல, என்னை விசுவாசிக்கிற ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் தங்களுடைய அன்றாட ஆவிக்குரிய வாழ்க்கைக்காக என்னைச் சார்ந்திருக்கப் போகிறார்கள்.''

மறுபிறப்பிற்குப் பிறகு, ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் எவ்வாறு ஒருங்கே இணைந்து செயல்பட வேண்டும் என்பதன் மீது அடுத்த இரண்டு அத்தியாயங்களில் நாம் கவனம் செலுத்தப் போகிறோம். அதற்கு இந்தச் சங்கிலி உடைக்கப்படாத நிலையில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம். ஒருவருடைய ஆத்துமா பின் வாங்கினால் என்ன நிகழும் என்பதைக் குறித்து, 9-ம் அத்தியாயத்தில் பார்ப்போம்.



You Matter to God(Tamil)-2018.indd 76 5/22/2018 6:18:07 PM

# 7

# எவ்வாறு எல்லாம் ஒன்றாய் சேருகின்றன

*“இதோ, தேவனே என் இரட்சிப்பு. நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தராகிய யேகோவா என் பெலனும் என் கீதமுமானவர். அவரே எனக்கு இரட்சிப்புமான வர். நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள்.”*

ஏசாயா **12:2-3**

மனுஷனுக்குள் இருக்கும் உயரிய, முக்கியமான ஒரு கூறாக, அவனுடைய ஆவி இருக்கிறது. உங்களுடைய ஆவியானது திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனோடு ஒன்றாய் இணைக்கப்பட்டதுதான், உங்களுடைய மறுபிறப்பில் நடந்த முக்கியமான, விசேஷமான ஒரு நிகழ்வாய் இருக்கிறது. ஆவிக்குரிய ஜீவனுக்கு தேவன் ஒருவரே ஆதாரமாய் இருக்கிறார். அந்த ஆவிக்குரிய ஜீவனை மனுஷனுடைய ஆவி பெற்றுக் கொள்கிறது.

விசுவாசத்தின் மூலம், நம்முடைய ஆவி தேவனோடு ஒன்றாய் இசைந்த நிகழ்வைக் குறித்து பவுல் இவ்வாறு எழுதுகிறார்: “கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்” **(1 கொரிந்தியர் 6:17).** திரும்பவும் சொல்கிறேன், இப்படிப்பட்ட விஷயங்களில், ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாயிருக்கிறது. ஆத்துமா அல்ல, ஆவியே தேவனோடு ஒன்றாய் இசைந்திருக்கும்படி



You Matter to God(Tamil)-2018.indd 77 5/22/2018 6:18:07 PM

சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தேவனோடு ஒன்றாய் இசைந்திருக்கிற ஐக்கியம் இல்லாமல், ஆவியினால் உயிர் வாழ முடியாது.

மறுபிறப்பிற்குப் பிறகு, ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தின் நோக்கம் என்னவாக மாறியிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## ஆவியைக் குறித்த தேவனுடைய நோக்கம்

வேதாகமத்தின் காலங்களில், ஒரு விளக்கு எரிவதற்கான எரிபொருளாக ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு விளக்காக, நம் உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியை நாம் பார்க்கலாம். அந்த நேரம் வரை, நம் ஆவியானது தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தது. இப்பொழுது ஒலிவ எண்ணையாக பரிசுத்த ஆவியானவர் வந்து, நம் உள்ளான சுபாவத்தை பிரகாசமாய் எரியச் செய்து, வெளிச்சம் கொடுக்கச் செய்கிறார். நீதிமொழிகள் 20:27 இவ்வாறு சொல்கிறது: ‘‘மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்.’’

அதோடுகூட, பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகத்திற்குள் ஜீவ நதியாய் வழிந்தோடக்கூடிய ஒரு வாய்க்காலாக நம் மறுபடியும் பிறந்த ஆவி மாறுகின்றது. இயேசு இவ்வாறு சொன்னார்:

> *வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற (பரிசுத்த) ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை.*
>
> யோவான் 7:38-39

பெந்தேகோஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்ட பிறகு, திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்டு, மறுபடியும் பிறக்கின்ற மனுஷனுடைய ஆவி ஒரு ஆற்றுப்படுகையாய், ஒரு வாய்க்காலாய் மாறியது. இதன் மூலம், ஆவிக்குரிய ஜீவ நதிகள் பாய்ந்தோடுகின்றன. இது ஒரு ஆச்சரியமான உருமாற்றமாய் இருக்கிறது. காரணம், அதற்கு சற்று முன்புதான், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார், ‘‘தாகமுள்ளவன் எவனோ, அவன் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்.’’

இந்த உருமாற்றத்தின் மூலம், தாகமுள்ளவன் எவனோ, தனக்கே போதுமான அளவு இல்லாதவன் எவனோ, அவன் ஒரு வாய்க்காலாக மாறியிருக்கிறான். அந்த வாய்க்காலின் மூலம், தேவைகள் நிறைந்த இவ்வுலகத்திற்குள் ஆவிக்குரிய ஜீவ நதிகள் பாய்ந்தோடுகின்றன.



You Matter to God(Tamil)-2018.indd 78 5/22/2018 6:18:07 PM

## ஆராதனை - உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் முதல் வேலை

உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் மூன்று தனித்தன்மை வாய்ந்த வேலைகளை இங்கு முக்கியமாக எடுத்துக் காண்பிக்க நான் விரும்புகிறேன். இன்னும் அநேகமானவைகளும் இருக்கலாம். முதல் வேலை, ஆராதனையாய் இருக்கிறது. யோவான் 4:23-24 வசனங்களில், இயேசு இதைச் சொல்கிறார்:

> *உண்மையாய் தொழுதுகொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.*
>
> யோவான் 4:23-24

ஆராதனை என்பது உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் ஒரு வேலையாய் இருக்கிறது. தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைந்தவுடனே, ஆவி வெளிப்படுத்தும் ஒரு உணர்வாக இது இருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியிலும், உண்மையிலும் தொழுதுகொள்ள வேண்டும் என்றுதான் தேவன் விரும்புகிறார்.

ஆகையால் நம்முடைய ஆவி இன்னும் உயிர்ப்பிக்கப்படாதவரை, ஆராதனை என்றால் என்ன என்பதே நமக்குத் தெரியாது என்பதுதான் உண்மை. ஆராதனை என்பது ஜீவ தேவனோடு மிகவும் நெருக்கமாகவும், மிகவும் அழகான விதத்திலும், தேவபயமும் பக்தியும் நிறைந்த சிந்தையோடு கொள்கின்ற ஒரு ஐக்கியமாக இருக்கிறது. தேவனோடு ஒன்றாய் இசைந்திருப்பதிலும், அவரை அறிந்து கொள்வதிலும் நமக்கு உண்டாயிருக்கிற விசேஷமான சிலாக்கியத்திற்கு நாம் வெளிப்படுத்தும் உணர்வாக இது இருக்கின்றது.

## ஐக்கியம்-உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் 2-வது வேலை

உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் இரண்டாவது வேலை, தேவனோடு ஐக்கியம் கொள்வதும், பகிர்ந்து கொள்வதும் ஆகும். குறிப்பாக, தேவனுடைய இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். இது எனக்கு மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றாக இருக்கிறது. உயிர்ப்பிக்கப்பட்ட விசுவாசி, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறார். ஆவியானவர் கொடுக்கின்ற அறியாத அந்நிய மொழியில், ஆராதனையின் மூலம், தேவனுடைய இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி அவருக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. பெந்தேகோஸ்தே நாளில் இது முதல்முறையாக நிகழ்ந்தது. பிறகு அது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலம் முழுவதும் தொடர்ந்தது. இந்த ஒரு விஷயத்தில்தான், மனுஷனுடைய ஆவியானது, (ஆத்துமாவின் அனுமதி தேவைப்பட்டாலும்) ஆத்துமாவைக் கடந்து



You Matter to God(Tamil)-2018.indd 79 5/22/2018 6:18:07 PM

சென்று, சரீரத்தை நேரடியாக நடத்துகிறது, பயன்படுத்திக் கொள்கிறது. இதை நாம் ஏற்கனவே பார்த்தோம்.

அந்நிய பாஷையின் மூலம் ஆவியானது தேவனோடு தொடர்பு கொள்ளும்போது நடக்கின்ற விஷயங்களைக் குறித்து பவுல் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அவர் சொல்கிறார், ''ஏனெனில் அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்'' (1 கொரிந்தியர் 14:2).

என்ன அழகான ஒரு சத்தியம்! நம் மனம் இங்கு ஒன்றும் செய்யவில்லை என்றாலும், நம் ஆவியானது தேவனோடு ஒன்றாய் இசைந்திருக்கும் இந்த ஆசீர்வாதமான ஐக்கியத்தில் தேவனுடைய இரகசியங்களை பகிர்ந்து கொண்டிருக்கிறது, பேசிக் கொண்டிருக்கிறது.

ஒரு மனுஷன் தன் இரகசியங்களை தன் எதிரிகளுடன் ஒருபோதும் பகிர்ந்து கொள்ள மாட்டான். மாறாக, தனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களுடன்தான் பகிர்ந்து கொள்வான். இது உளவியலின் ஒரு அழகான உண்மையாயிருக்கிறது. ஆக, அந்நிய பாஷைகளைப் பேசுவதன் மூலம், தேவனோடு இவ்விதமான ஐக்கியம் கொண்டு, தேவனுடைய இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும்போது, தேவனோடு நமக்கு உண்டாயிருக்கிற நட்புறவின் ஐக்கியத்தை நாம் முழுமையாக அனுபவிக்கிறோம்.

தொடர்ந்து 14-ம் வசனத்தில், பவுல் இதைக் குறித்து இவ்வாறு எழுதுகிறார்: ''என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும் (என் மனம் எதுவும் செய்யாமல் சும்மா இருக்கும்).''

திரும்பவும் சொல்கிறேன், ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். இங்கு மனம் என்பது ஆத்துமாவைக் குறிக்கின்ற சொல்லாக இருக்கின்றது. நம் ஆவி தேவனோடு நேரடியாக ஜீவனுள்ள ஐக்கியம் கொண்டிருக்கும்போது, நம் மனம் எதுவும் செய்யாமல் சும்மா இருக்கின்ற நேரங்களும் உண்டு. நம் ஆவி ஜெபிக்கும்போது இது நடக்கின்றது. ஆனால் நம் மனம் ஜெபிக்கவில்லை, சும்மா இருக்கின்றது. உண்மையில், எப்பொழுதும் நாம் அவ்விதத்திலேயே ஜெபிப்பதில்லை. பல நேரங்களில், நம்முடைய மனதிலிருந்தும் நாம் ஜெபிக்கின்றோம்.



You Matter to God(Tamil)-2018.indd 80 5/22/2018 6:18:07 PM

## ஆவியின் மூன்றாவது வேலை, வெளிப்பாடு

உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியின் மூன்றாவது தனித்துவம் வாய்ந்த வேலை, தேவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெறுவதாகும். திரும்பவும், பவுலின் வார்த்தைகளுக்கே செல்வோம்:

> *எழுதியிருக்கிறபடி, "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." நமக்கோ தேவன் அவைகளை தமது ஆவியானவராலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். மனுஷனில் உள்ள ஆவியே அன்றி, மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியே அன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியானவரையே பெற்றோம்.*
>
> 1 கொரிந்தியர் 2:9-12

பாருங்கள், நமக்கென்று தேவன் என்ன ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் என்ற வெளிப்பாட்டை நம் மனதின் மூலமாகவோ அல்லது நம் ஐம்புலன் உணர்வுகள் மூலமாகவோ நாம் பெற்றுக் கொள்ள முடியாது. நம் ஆவியின் மூலமாக மட்டுமே நாம் அதைப் பெற்றுக் கொள்ள முடியும். நம்முடைய ஆழமான, உள்ளான, இரகசிய பகுதியாகிய ஆவியுடன், தேவனுடைய ஆவியானவர் நேரடியாகத் தொடர்பு கொண்டு, நமக்கு வெளிப்பாட்டைக் கொடுக்கிறார். வேதாகமச் சத்தியங்களைப் புரிந்து கொள்கிற ஒரு தளத்திற்குள் நாம் பிரவேசிக்கின்றோம். வேறு எவ்விதத்திலும் இந்தச் சத்தியங்களை நாம் விளங்கிக் கொள்ளவே முடியாது.

## ஆத்துமாவைக் குறித்த தேவனுடைய நோக்கம்

ஆவியின் மூன்று முக்கியமான வேலைகள் - ஆராதனை, ஐக்கியம் கொள்ளுதல், வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதலாகும். இம்மூன்றும் தேவனோடு சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. பெரும்பாலான வேதவல்லுநர்கள் சொல்வதன் அடிப்படையில் பார்க்கும்போது, ஆத்துமாவிற்கும் மூன்று முக்கியமான வேலைகள் இருக்கின்றன. இவற்றைக் குறித்து நாம் ஏற்கனவே பார்த்தோம். இவை அனைத்தும் நம் சுயத்தை மையமாகக் கொண்டவை என்ற உண்மையையும் புரிந்து கொண்டோம். மனம் அல்லது அறிவாற்றல், சித்தம் கொள்ளுதல், உணர்வுகள் என்பவைதான் ஆத்துமாவின் இந்த முக்கியமான வேலைகளாய் இருக்கின்றன. திரும்பவும், இவற்றைக் குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.



You Matter to God(Tamil)-2018.indd 81 5/22/2018 6:18:07 PM

## மனம், சிந்திக்கின்ற வேலையைச் செய்கிறது

மனம் அல்லது அறிவாற்றலின் பகுதியில் ஆத்துமா செய்கிற வேலையை எளிமையாக இவ்வாறு சொல்லலாம்: ‘‘நான் இதைக் குறித்து இப்படித்தான் நினைக்கிறேன்.’’ ஆத்துமாவிற்கும் ஆவிக்கும் இடையே இரண்டு தன்மைகள் இவ்விஷயத்தில் ஒன்றுபோலவே இருக்கின்றன. ஆனால் அவை முற்றிலும் வித்தியாசமானவை.

ஆவியிடம் நேரடியான வெளிப்பாட்டின் அறிவு இருக்கின்றது. பெரும்பாலும் இயற்கைக்கு அப்பாற்ப்பட்டவிதத்தில், அது தேவனிடமிருந்து சத்தியத்தை பெற்றுக் கொள்கின்றது. ஆவி இவ்வாறு சொல்கிறது: ‘‘எனக்குத் தெரியும்’’; ‘‘நான் தேவனை அறிந்திருக்கிறேன்’’; ‘‘எனக்கு நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறது என்பது எனக்குத் தெரியும்’’; ‘‘என்னுடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும்.’’

ஆத்துமாவின் ஒரு வேலையாகிய சிந்தித்தல், மனதில்தான் நடக்கின்றது. மனம், பிரச்சனைகளையும், காரண காரியங்களையும், கோட்பாடுகளையும், கருத்துக்களையும், சிந்தித்தலோடு சம்பந்தப்பட்ட மற்ற வேலைகளையும் செய்கின்றது.

ஆனால் வெளிப்பாடு என்பது ஆவியின் தளத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இறையியல் என்பது மனதின் தளத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆவி தீர்க்கமாக, நிச்சயமாக அறிந்து கொள்கிறது. ஆனால் மனமோ பலவிதமான கோட்பாடுகளையும், கருத்துங்களையும் அலசி ஆராய்கின்றது. சில விஷயங்களை அது திரும்பத் திரும்ப மாற்றி மாற்றி சிந்தித்துப் பார்க்கின்றது. ஒரு விதத்தில் சொல்லப் போனால், பல்வேறு தரவுகளை, தகவல்களை அலசி ஆராய்கின்ற ஒரு கம்ப்பியூட்டரைபோல மனம் செயல்படுகின்றது.

## சித்தங்கொள்ளுதல்: “எனக்கு வேண்டும்” என்று சொல்கிறது

ஒரு தனிநபருடைய ஆத்துமா தன்னுடைய சித்தங்கொள்கிற பகுதியின் மூலம், ‘‘எனக்கு இது வேண்டும்’’ என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு விதத்தில், ஒருவருடைய சித்தம் எதை வெளிப்படுத்துகிறதோ, அதுதான் அந்த நபருடைய வாழ்க்கையின் திசையைத் தீர்மானிக்கிறது. ‘‘நான் விசுவாசிக்கிறேன்’’ என்றோ அல்லது ‘‘நான் விசுவாசிக்க மாட்டேன்’’ என்றோ ஒரு நபர், அவர் ஆணோ அல்லது பெண்ணோ இவ்வாறு சொல்ல முடியும். ‘‘நான் என்னை தேவனுக்கு அர்ப்பணிக்கிறேன்’’ என்றோ அல்லது ‘‘நான் என்னை தேவனுக்கு அர்ப்பணிக்க மாட்டேன்’’ என்றோ ஒரு நபர் சொல்ல முடியும். ‘‘நான் என் அண்டை வீட்டாரை நேசிக்கிறேன்’’ என்றோ அல்லது ‘‘நான் என் அண்டை வீட்டாரை நேசிக்க மாட்டேன்’’ என்றோ ஒரு நபர் சொல்ல முடியும்.



You Matter to God(Tamil)-2018.indd 82 5/22/2018 6:18:07 PM

இந்த விஷயத்திலும், நம் ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நம்மால் தெளிவாகப் பார்க்க முடியும். ஆவி, தன் சுயத்தைக் குறித்து வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. அது தேவனை மட்டுமே வெளிப்படுத்துகிறது. மாறாக, நம் ஆத்துமா தன் சுயத்தை வெளிப்படுத்துவதில் மட்டுமே ஆர்வம் காட்டுகிறது.

## உணர்வுகள்: "நான் இப்படி உணருகிறேன்"

'உணர்வுகள்' என்பது நம் ஆத்துமாவின் மூன்றாவது பகுதியாக இருக்கின்றது. ''நான் இப்படி உணருகிறேன்'' என்ற வார்த்தைகளின் மூலம் அது தன்னை வெளிப்படுத்துகிறது. ஆத்துமாவின் மற்ற பகுதிகளிலிருந்தும், சரீரத்திலிருந்து வருகிற அழுத்தங்களுக்கும் உணர்வுகள் எதிர்வினையாற்றுகின்றன. ஆகையால் உணர்வுகள் பெரும்பாலான சூழ்நிலைகளில் நிலையற்றவையாய், உறுதியற்றவையாய் இருக்கின்றன. உணர்வுகள், ஒரு தருணத்தில் உச்சத்திலும், அடுத்த தருணத்தில் கீழே விழுந்தும், ஒரு தருணத்தில் சந்தோஷமாகவும், அடுத்த தருணத்தில் துக்கமாகவும் வெளிப்படுகின்றன.

திரும்பவும், நாம் இங்கே ஒரு வித்தியாசத்தைப் பார்க்கின்றோம். ஆவி, ஒருபோதும் மாறாத தேவனுக்கு இணங்கி நடக்கின்றது. ஆனால் ஆத்துமா, நிலையற்றதாய், எப்பொழுதும் எந்நேரமும் மாறிக் கொண்டே இருக்கிற இவ்வுலகத்திற்கு ஏற்ற விதத்தில் இணங்கி நடக்கின்றது. சரீரத்திலிருந்தும், இவ்வுலகத்திலிருந்தும் வருகின்ற அழுத்தங்களுக்கும் ஏற்றபடி ஆத்துமா செயல்படுகிறபடியால், அது எப்பொழுதும் மாற்றத்திற்கு உட்பட்டதாயிருக்கிறது. ஒன்று, ஆத்துமா ஆவிக்கு இணங்கி செயல்படலாம் அல்லது ஆவியை எதிர்த்து நிற்கலாம்.

## ஆத்துமாவின் நோக்கம்: அர்ப்பணிப்பு

ஆவி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும், ஆத்துமா எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, இரண்டு முக்கியமான வார்த்தைகளின் மூலம் நாம் பார்க்க முடியும்.

ஆவியானது ***உயிர்ப்பிக்கப்பட வேண்டும்.*** தேவனிடமிருந்து மட்டுமே வரக்கூடிய ஒரு குறிப்பிட்ட வகையான ஜீவனை உடையதாய் ஆவி இருக்க வேண்டும். ''நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்,'' என்று இயேசு சொன்னபோது, அவர் ஒரு ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்துப் பேசினார். காரணம், ''ஆவியானவரால் பிறப்பது ஆவியாயிருக்கும்,'' என்று அவர் உடனே தொடர்ந்து சொல்கிறார். இவ்வாறு சொல்வதன் மூலம், சரீரப் பிறப்பிலிருந்து அவர் இதை தெளிவாக வேறுபடுத்துகிறார். மறுபிறப்பு என்பது, பிரதானமாக மனுஷனுடைய ஆவியைப் பாதிக்கிற ஒன்றாயிருக்கிறது.



You Matter to God(Tamil)-2018.indd 83 5/22/2018 6:18:07 PM

அப்படியே நேரெதிராக, ஆத்துமா எப்படியிருக்க வேண்டும் என்று பார்த்தால், அது இரட்சிக்கப்பட வேண்டும் என்பதுதான் அதன் நிலையாய் இருக்கிறது. ஆத்துமாதான், குற்றம் செய்திருக்கிறது. ஆத்துமாதான், முரட்டாட்டம் செய்திருக்கிறது. தேவனை எதிர்த்து கீழ்ப்படியாமல் போனதற்கு ஆத்துமாதான் காரணமாக இருந்திருக்கிறது. ஆகையால் ஆத்துமா செய்த முரட்டாட்டத்தின் அடிப்படையில்தான், தேவன் அதைக் கையாளுகின்றார். ஒரு விதத்தில், தேவன் சொல்கிறார்: "உன்னுடைய பாவம் மற்றும் உன்னுடைய முரட்டாட்டத்திற்கான தண்டனையை இயேசுகிறிஸ்து சிலுவையில் ஏற்றுக் கொண்டார். அவருடைய மரணத்தின் மூலம், அவற்றிற்கான விலைக்கிரயம் செலுத்தி தீர்க்கப்பட்டிருக்கிறது. நான் உனக்கு மன்னிப்பையும், சமாதானத்தையும், என்னோடு ஒப்புரவாகுதலையும் கொடுக்கின்றேன். ஆனால் அதைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. உன்னுடைய முரட்டாட்டத்தை விட்டு விட்டு, நீ சரணடைய வேண்டும்."

ஆக, ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், முதலில், அது விசுவாசிக்க வேண்டும். பிறகு அது சரணடைய வேண்டும். அறிவுப்பூர்வமாக விசுவாசித்து விட்டு, சரணடையவில்லை என்றால், ஆத்துமாவிற்குத் தேவைப்படுகிற முக்கியமான மாற்றத்தை அது பெற்றுக் கொள்ளாது. இதைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். இன்றைக்கு நிறைய பேர்களிடத்தில், அறிவுப்பூர்வமான விசுவாசம் மட்டுமே இருக்கின்றது. சுவிசேஷத்தின் சத்தியத்தை அவர்கள் உண்மையாக, தங்களுடைய மூளையறிவின் அளவிலேயே ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் தேவனோடு ஒப்புரவாகவில்லை. தேவனுக்கு எதிரிகளாகவே இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை. அவர்கள் தேவனிடம் சரணடைவதன் மூலமாக மட்டுமே, அவர்களால் தேவனோடு ஒப்புரவாக்கப்பட முடியும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, ஜெர்மனி நாஸிகளின் கூட்டுப்படையினர் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில், அவர்கள் சரணடைகின்றபோது, நேச நாடுகளின் கூட்டுப்படையினரிடம் சமாதானத்திற்கான நிபந்தனைகளைக் குறித்துக் கேட்டனர். அதற்கு நேச நாடுகளின் கூட்டுப்படையினர் சொன்ன பதில் இதுதான்: "நாங்கள் எந்த நிபந்தனையையும் விதிக்க மாட்டோம். நிபந்தனையற்ற விதத்தில் நீங்கள் சரணடைய வேண்டும் என்பதுதான் எங்களுக்கு வேண்டும்." தேவனிடத்தில் சமாதானத்தை விரும்புகிற மனுஷனுடைய ஆத்துமாவினிடத்தில் இதே பதிலைத்தான் தேவனும் சொல்கிறார். தேவன் சொல்கிறார், "நான் எந்த நிபந்தனையையும் விதிக்கப் போவதில்லை. நிபந்தனையற்ற சரணடைதல்தான் எனக்கு வேண்டும்." நிபந்தனையற்ற சரணடைதல் மூலமாக மட்டுமே, ஆத்துமா



You Matter to God(Tamil)-2018.indd 84 5/22/2018 6:18:07 PM

தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறது. அப்பொழுதுதான் மெய்யான சமாதானமும், இரட்சிப்பும் அதற்கு உண்டாகிறது.

## நம் சரீரத்தைக் குறித்த தேவனுடைய நோக்கம்

மனுஷனுடைய ஆளுமையின் மூன்றாவது பகுதியாகிய சரீரத்தைக் குறித்த தேவனுடைய திட்டம் என்ன என்று இப்பொழுது நாம் பார்க்கப் போகிறோம். அப்படிச் செய்யும்போது, உடனடியாக ஒரு உண்மையை நாம் சந்திக்கின்றோம். இது சபை வரலாற்றிலும், இறையியலிலும் எங்கும் பரவி மேலோங்கிக் காணப்படுகிறது. கிறிஸ்தவர்கள் வேதாகமத்திற்கு முரண்பட்ட ஒன்றை இறுகப் பற்றிப் பிடித்திருக்கிறார்கள். அதாவது ஒரு விசுவாசியினுடைய சரீரத்தைக் குறித்து தேவன் வைத்திருக்கிற திட்டத்தின் முக்கியத்துவத்தை, அதன் மகிமையை, அழகை, தனித்தன்மையை இவர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள். சரீரம் வழக்கமாக, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத ஒன்றாக, தீமையான ஒன்றாக ஒதுக்கி வைக்கப்படுகிறது, தள்ளுபடி செய்யப்படுகிறது.

நம் சரீரத்தைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டும், நமக்கு ஒரு சரீரம் இருக்கின்றது என்பதையே பொருட்படுத்தாமல் வாழும் நிலைக்கு வரும்படி நாம் முயற்சிக்க வேண்டும் என்ற பொதுவான கருத்துதான் எங்கும் காணப்படுகிறது. இந்த சிந்தை ஓரளவிற்கு, அஸ்ஸெட்டிஸம் (asceticism) என்றழைக்கப்படுகிற ஒரு தத்துவத்தோடு அல்லது பார்வையோடு உடன்படுகிறது. அஸ்ஸெட்டிக்ஸ் (ascetics) எல்லோருமே இந்தப் பார்வையை உடையவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும் அப்படிப்பட்ட ஒரு பார்வை, மனுஷனுடைய சரீரத்தைக் குறித்து வேதவசனம் என்ன சொல்கிறதோ, அதைத் துல்லியமாக சித்தரிக்கவில்லை.

## தேவன் தான் நம் சரீரத்தை உருவாக்கினார்

முதலில், **139**-ம் சங்கீதத்திற்குச் செல்வோம். இந்த சங்கீதத்தில், தாவீது கர்த்தரிடம் பேசுகின்றான். தன்னுடைய சரீரத்தின் பல ஆச்சரியமான விஷயங்களைக் குறித்து, தன்னை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்கின்ற பல அம்சங்களைக் குறித்து அவன் பேசுகின்றான். அதற்காக அவன் தேவனைத் துதிக்கிறான்.

> *நீர் என் உள்ளிந்திரியங்களை (என் உள்ளான அவயங்களை) கைக்கொண்டிருக்கிறீர் (சிருஷ்டித்தீர்). என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர் (ஒன்றாய் இணைத்து உருவாக்கினீர்). நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள் (குறிப்பாக, என் சரீரம் அதிசயமானது). அது என் ஆத்துமாவுக்கு நன்றாய் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு*



You Matter to God(Tamil)-2018.indd 85 5/22/2018 6:18:07 PM

*மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டன. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே, அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.*

சங்கீதம் **139:13-16**

'பிரமிக்கத்தக்க அதிசயமாய்' என்ற வார்த்தைகள் மிகவும் அழகானவை. மனுஷனுடைய சரீரத்தை தேவன் சிருஷ்டித்த விதம், நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தக்கூடியது, நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடியது, ஆச்சரியங்கள் நிறைந்தது.

நம்முடைய சரீரத்தை கட்டமைத்து, உருவாக்கும்படி தேவனிடம் ஒரு இரகசியமான இடம் இருந்தது என்பதை சிந்திக்கும்போது, அது எனக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. அவரே அதை வெளிப்படுத்தும்வரை, அவர் அதை மறைத்து வைத்திருந்தார். அப்படிப்பட்ட ஒரு இரகசியமாக அது இருந்தது. அதோடு கூட, வெவ்வேறு நிறமுள்ள தனித்தனி நூல்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டு ஒரு துணியாய் நெய்யப்படுவதுபோல, பூமியின் ஆழங்களில் தேவன் தன் சரீரத்தை உருவாக்கினார் என்றும் தாவீது சொல்கிறான். இந்த எண்ணம் நம்மை தடுமாறச் செய்கிறது. நம் சரீரத்திற்கு இவ்வளவு முக்கியத்துவமா என்று நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சிருஷ்டிப்பில், தேவன் பூமியின் மண்ணிலிருந்து அல்லது களிமண்ணிலிருந்து மனுஷனை உருவாக்கினார் என்று நாம் ஆதியாகமத்தில் வாசிக்கிறோம். ஆனால் இங்கே தாவீதின் வார்த்தைகளிலிருந்து ஒன்றை நான் புரிந்து கொள்கிறேன். மனுஷனுடைய சரீரத்தை உருவாக்குவதற்கு என்ன மூலப்பொருட்கள் எல்லாம் தேவையோ, அதெல்லாம் பூமியின் மண்ணில் இருக்கும்படி தேவன் அதை மிகவும் கவனமாய் ஆயத்தம் பண்ணினார். அந்த அர்த்தத்தில்தான் தாவீது இங்கே பேசுகிறான்.

ஆக, மனுஷனுடைய சரீரத்தைக் குறித்து தேவனிடம் ஒரு திட்டம் இருந்தது. அது நித்தியத்தில் ஆரம்பித்தது. அதன் உட்கூறுகள் ஒவ்வொன்றையும் அவர் மிகவும் கவனமாய் ஆயத்தம் செய்திருந்தார். அவை எவ்வாறு ஒன்றொடொன்று இணைந்திருக்க வேண்டும் என்பதையும் அவர் மிகவும் கவனமாய் திட்டமிட்டிருந்தார். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நாளைக் குறித்தும் அவரிடம் ஒரு திட்டம் இருக்கிறது. இது நமக்குள் ஆழமான, அழுத்தமான ஒரு தாக்கத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சிந்தையாய் இருக்கிறது. அப்படித்தானே? நம்முடைய சரீரங்கள் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதைக் குறித்த முற்றிலும் வித்தியாசமான ஒரு எண்ணத்தை இது நமக்குக் கொடுக்கிறது.



You Matter to God(Tamil)-2018.indd 86 5/22/2018 6:18:07 PM

## நம் சரீரத்தின் பிரதானமான, உயரிய ஒரு நோக்கம்

தேவன் நம்முடைய சரீரத்தை ஒரு உயரிய, உன்னதமான நோக்கத்திற்காக உருவாக்கினார். நாம் இதைப் பார்க்கத் தவறுகிறோம் என்றால், நாம் எல்லாவற்றையும் தவற விட்டு விடுவோம். மறுபடியும் பிறந்த விசுவாசியினுடைய சரீரம், தேவனுடைய வாசஸ்தலமாக, தேவனுடைய ஆலயமாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அங்குதான் தேவன் வாழ்கின்றார். பவுல் இதை கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

> *உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியான வருடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*
>
> 1 கொரிந்தியர் 6:19-20

இயேசு சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி நம்மை விலைக்கிரயம் செலுத்தி வாங்கியிருக்கிறார் என்றால், ஏதோ நம்மில் ஒரு பகுதியை மட்டும் அவர் வாங்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியமானது. அவர் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் வாங்கியிருக்கிறார். அவர் நம்முடைய முழுமையையும் மீட்டிருக்கிறார். அவர் நம்மை முழுமையாய் மீட்கும்படி, தம்மையே முழுமையாய் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

ஆகையால் மீட்பில் நம்முடைய சரீரமும் உள்ளடங்கியிருக்கிறது. அது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மீட்கப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய ஆலயமாக, பரிசுத்த ஆவியானவர் தங்கும் விசேஷமான வாசஸ்தலமாக இருக்க வேண்டும் என்பதுதான் அந்த நோக்கம். சர்வ வல்ல தேவன், ஒரே மெய்யான தேவன், பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வேறுபிரிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாழ்கின்றார்.

இந்த சத்தியத்தின் இன்னொரு முக்கியமான அம்சத்தைக் குறித்து வேதவசனம் நம்மிடம் பேசுகிறது. ஸ்தேவான் தன்னை குற்ற ஞ்சாட்டின யூத ஆலோசனை சங்கத்தாரிடம் இவ்வாறு பேசினான்: ‘‘உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்’’ (அப்போஸ்தலர் நடபடிகள் 7:48).

தேவன் எந்த ஒரு ஆலயக் கட்டிடத்திலும் வாழ்வதில்லை. அவர் ஒரு ஜெப ஆலயத்திலோ, ஒரு சபையிலோ, ஒரு சிற்றாலயத்திலோ அல்லது ஒரு பேராலயத்திலோ வாழ்வதில்லை. அவருடைய ஜனங்கள் அங்கே கூடி வரும்போது, அவர் அங்கே வருகின்றார். ஆனால் மீட்கப்பட்ட ஒரு விசுவாசியின்



You Matter to God(Tamil)-2018.indd 87 5/22/2018 6:18:07 PM

சரீரம்தான், அவருடைய வாசஸ்தலமாக இருக்கின்றது. தம்முடைய ஆவியானவர் வாசம் பண்ணும்படி, சரீரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தை தேவன் வேறுபிரித்திருக்கிறார். வேதவசனத்தில் அது 'மிகவும் உள்ளான ஒரு பகுதி (the innermost part)' என்று அழைக்கப்படுகிறது.

குறிப்பாக, தேவன் வாசம் பண்ணுகிற சரீரத்தின் மிகவும் உள்ளான பகுதியைக் குறித்துப் பேசுகிற இரண்டு வேதவசனங்களை உங்களுக்குக் கொடுக்கிறேன். முதலில், நீதிமொழிகள் 20:27-ஐ பார்ப்போம்: ''மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்.''

ஆவியானது ஒருவருடைய மிகவும் ஆழமான, உள்ளான பகுதியில் இருக்கின்றது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம். 'மிகவும் உள்ளான பகுதியிலிருக்கும் அறைகள்' என்று எபிரெய மொழியில் வருகின்றது. ஆனால் யோவான் சுவிசேஷத்தில், இயேசு இதை இன்னும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்: ''வேதவாக்கியம் சொல்கிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார் (இயேசு). தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியானவரைக் குறித்து இப்படிச் சொன்னார்'' (யோவான் 7:38-39).

விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் எங்கே வாசம் பண்ணுவார் என்பதைக் குறித்து இயேசு இங்கு பேசிக் கொண்டிருக்கிறார். 'அவன் உள்ளத்திலிருந்து' என்று இங்கு எழுதப்பட்டிருக்கிறது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில், மூல மொழியில் எழுதப்பட்ட வார்த்தைக்கு இன்னும் நெருக்கமாக வந்திருக்கிறது. 'அவனுடைய அடிவயிற்றிலிருந்து' என்று இது சொல்கிறது. அடிவயிறு என்பது கொச்சையான ஒரு வார்த்தை. இது நாகரீகமான வார்த்தையல்ல. எனவே பரிசுத்தமான காரியங்களைக் குறித்து பேசும்போது இவ்வார்த்தையை நாம் பயன்படுத்தக்கூடாது என்று சிலர் நினைக்கலாம். இதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

கிரேக்க மொழியில் இது சுவாரசியமான ஒரு விஷயமாயிருக்கிறது. இங்கே 'அடிவயிறு' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற அதே கிரேக்க வார்த்தையிலிருந்துதான், 'பரலோகம்' என்ற வார்த்தையும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு பள்ளமான, குழியான ஒரு இடம் என்று அர்த்தம். பரலோகம், குழிவான ஒரு இடமாக இருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் அங்கேதான் தேவன் வாசம் பண்ணுகிறார். பரலோகம், அங்கே தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கின்றது. ஆனால் மனுஷனுடைய மிகவும் உள்ளான பகுதியில், அடிவயிறு என்றழைக்கப்படுகிற குழிவான ஒரு இடத்தில் தேவனுடைய ஆவியானவர் வாசம் பண்ணுகிறார். ஆவியானவரின் வல்லமையை அனுபவித்திருக்கிற எந்த ஒரு நபரும், தன்னுடைய மிகவும் உள்ளான



You Matter to God(Tamil)-2018.indd 88 5/22/2018 6:18:07 PM

பகுதியிலிருந்து ஆவியானவரின் அசைவாடுதல் எவ்வாறு ஆரம்பிக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்.

## சரீரம் நீதியான வாழ்க்கையை வாழ வேண்டும்

நம் சரீரத்தைக் குறித்த இன்னொரு தேவனுடைய நோக்கத்தை நாம் பார்ப்போம். நம்முடைய சரீரத்தின் அவயங்கள், தேவனுடைய நீதியின் அடிமைகளாக அல்லது கருவிகளாக மாற வேண்டும். முதலில், பரிசுத்த ஆவியானவர் நம் சரீரத்தை தம்முடைய வாசஸ்தலமாக எடுத்துக் கொள்கிறார். பிறகு நம்முடைய சரீரங்கள் அவருடைய கருவிகளாக மாறுகின்றன. பவுல் சொல்கிறார்:

> *உங்கள் மாம்ச பலவீனத்தின் நிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை (உங்களுடைய சரீர உறுப்புகளை) நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.*
>
> ரோமர் **6:19**

நம்முடைய சரீர அவயங்களைக் குறித்த தேவனுடைய திட்டம், நாம் அவற்றை அவருக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதுதான். அவருடைய சித்தத்தைச் செய்யும்படி அர்ப்பணிக்க வேண்டும். "கருவிகளாய்" நாம் அவற்றை தேவனிடம் கொடுக்க வேண்டும் என்று கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு சொல்கிறது. இவ்விதத்தில் தேவனிடம் அர்ப்பணிக்கப்படும்போது, அவை தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டவைகளாய் மாறுகின்றன. எவ்விதத்திலும் நம்முடைய நோக்கங்களுக்கென்று ஒதுக்கிக் கொள்ளாமல், முழுமையாய் நம் சரீரத்தை தேவனிடம் ஒப்புக்கொடுக்கும்போது, நம்முடைய சரீரங்கள் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டவைகளாய் மாறுகின்றன. பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணத் தகுதியான ஆலயங்களாய் அவை மாறுகின்றன.

## நம் சரீரம் தேவனுடைய பொறுப்பின் கீழ் வர வேண்டும்

மறுபடியும் பிறந்த விசுவாசியினுடைய சரீரம், தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்பதைக் குறித்த இன்னொரு மிகவும் முக்கியமான, இன்றியமையாத உண்மையை உங்களிடம் சொல்கிறேன். அதை நான் எளிமையாக, சுருக்கமாக இவ்வாறு சொல்கிறேன்: தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயமாகிய நம் சரீரத்தின் பராமரிப்பிற்கான பொறுப்பை தேவன் ஏற்றுக் கொள்கிறார்.

தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் ஆலயமாக, நாம் நம்முடைய சரீரங்களை முழுமையாய் தேவனிடம் ஒப்புக்கொடுக்கும்



You Matter to God(Tamil)-2018.indd 89 5/22/2018 6:18:07 PM

போது, அவர் முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி அடிமைகளாய் அல்லது கருவிகளாய், நம் சரீரத்தின் உறுப்புகளை முழுமையாய் தேவனுக்கு இணங்கிக் கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் சொல்கிறார், ''நல்லது, இப்பொழுது உன் சரீரம், என்னுடையது. இந்த வாழ்க்கையிலும், இனி வரும் நித்தியத்திலும் அதை நல்ல ஆரோக்கியத்தோடு பராமரிக்க வேண்டிய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

ரோமருக்கு எழுதிய தன் கடிதத்தில் பவுல் என்ன சொல்கிறார் என்று கவனிப்போம்:

> *அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின வருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (கவனியுங்கள், பரிசுத்த ஆவியானவர் நமக்குள், அதாவது நம்முடைய மாம்ச சரீரங்களுக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதுதான் இங்கு அடிப்படையான விஷயமாயிருக்கிறது).*
>
> ரோமர் **8:11**

நம்முடைய சாவுக்கேதுவான, உருவழிந்து போகக்கூடிய சரீரங்களைக் குறித்து பவுல் இங்கு பேசுகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். உயிர்த்தெழுதலுக்குப் பிறகு நமக்கு உண்டாகப் போகிற சரீரங்களைக் குறித்து மட்டும் அல்ல, இந்த வாழ்க்கையில் நமக்கு உண்டாயிருக்கிற சரீரங்களைக் குறித்தும் அவர் பேசுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் ஆலயங்களாய் நம்முடைய சரீரங்கள் மாறியிருக்கிறபடியால், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார். கல்லறையிலிருந்து இயேசுவின் மரித்துப்போன சரீரத்தை உயிரோடு எழுப்பின அதே வல்லமை, இப்பொழுது நம்முடைய சரீரத்திற்குள் இருக்கின்றது. இந்த வல்லமை நமக்கு ஜீவனைக் கொடுக்கும் என்று தேவன் சொல்கிறார். அது நம்முடைய மாம்ச சரீரங்களுக்கு பெலத்தையும், ஆற்றலையும், பூரண ஆரோக்கியத்தையும், வலிமையையும், சுறுசுறுப்பையும், புத்துணர்வையும், உற்சாகத்தையும் கொடுக்கின்றது.

இந்தப் புத்தகத்தில், பின் வரும் **11** முதல் **13** வரையுள்ள அத்தியாயங்களில், வரப் போகும் அடுத்த உலகத்தில், நம்முடைய சரீரங்கள் எப்படியிருக்கப் போகின்றன என்பதைக் குறித்துப் பார்ப்போம். ஆனால் இப்பொழுது ஒரு சிறிய முன்னோட்டத்தை இங்கே நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். கர்த்தராகிய இயேசுவின் வருகையில், நம்முடைய சரீரங்களில் நடக்கப் போகிற கடைசி உருமாற்றத்தைக் குறித்து பிலிப்பியர் **3**-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.



You Matter to God(Tamil)-2018.indd 90 5/22/2018 6:18:07 PM

*நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*

பிலிப்பியர் **3:20-21**

மீட்கப்பட்ட விசுவாசியின் சரீரத்தைக் குறித்த தேவனுடைய திட்டத்தின் உச்சகட்டம் இதுதான். இப்பொழுது நமக்கு ஒரு குறைவுபட்ட, பலவீனமான சரீரம்தான் இருக்கின்றது. ஆனால் இயேசு வரும்போது, நாம் மெய்யாகவே அவருக்குச் சொந்தமானவர்களாய் இருக்கிறோம் என்றால், அவர் நம்முடைய குறைவுபட்ட, பலவீனமான இந்தச் சரீரத்தை, தம்முடைய சொந்த மகிமையான சரீரத்திற்கு ஒப்பான மகிமையின் சரீரமாக உருமாற்றுவார்.



You Matter to God(Tamil)-2018.indd 91 5/22/2018 6:18:07 PM

# 8
# தேவனுடைய திட்டத்தின் ஒழுங்கு

*அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.*

யோவான் **1:4**

முந்தின அத்தியாயங்களில், நம்மை உருவாக்கின தேவனுடைய கண்களுக்கு முன்பாக நாம் எவ்வளவு விலையேறப் பெற்றவர்களாய் இருக்கிறோம் என்பதைப் பார்க்கும்படி, நம்முடைய மெய்யான உள்ளான சுபாவத்தைக் கண்டறியும்படி, தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியைப் பார்த்தோம். இதுவரை நாம் பார்த்த காரியங்களை சுருக்கமாக இந்த இடத்தில் தொகுத்துச் சொல்கிறேன்.

முதலில், திரியேக தேவனுடைய சாயலில் திரியேக நபராக ஒரு மனுஷன் உருவாக்கப்பட்டான். தேவன், பிதாவாக, குமாரனாக, ஆவியானவராக, மூன்று நபர்களாக வெளிப்பட்டாலும், ஒரே தேவனாக இருக்கிறார். மனுஷன், ஆவி-ஆத்துமா-சரீரம் என்ற மூன்று கூறுகளை உடையவனாக இருந்தாலும், ஒரே ஆளுமையாக வெளிப்படுகிறான்.

இரண்டாவதாக, தேவனுக்கு விரோதமாக மனுஷன் எழுந்து கீழ்ப்படியாமல் போனதினால், அவனுடைய ஆளுமையின் ஒவ்வொரு பகுதியிலும் காணப்பட்ட ஒழுங்கு, சீர்குலைந்து போனது. அவை செயல்பட வேண்டிய விதத்தில், ஒரு பிசகு உண்டாகி விட்டது.

மூன்றாவதாக, மறுபிறப்பு எனும் அற்புதத்தின் மூலம், மனுஷனுடைய ஆளுமையின் ஒவ்வொரு பகுதியிலும் அவன் மீட்கப்படும்படி தேவன் வாய்ப்புகளை உருவாக்கி வைத்திருந்தார். மீட்கப்பட்ட மனுஷனுடைய ஆளுமையின் ஒவ்வொரு பகுதியைக் குறித்தும், அதாவது ஆவி,



You Matter to God(Tamil)-2018.indd 92 5/22/2018 6:18:07 PM

ஆத்துமா மற்றும் சரீரத்தைக் குறித்தும் தேவனிடம் ஒரு திட்டம் இருந்தது.

நான்காவதாக, மறுபடியும் பிறந்த ஆவியின் மூன்று முக்கியமான வேலைகள் ஒவ்வொன்றும் தேவனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்த்தோம். அவை ஆராதனை, ஐக்கியம் மற்றும் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். ஆத்துமாவின் மூன்று வேலைகளும் சுயத்தை மையமாகக் கொண்டவை. அவை சிந்திக்கின்ற மனம், சித்தங்கொள்ளுதல் மற்றும் உணர்வுகள் ஆகும். மறுபடியும் பிறந்த விசுவாசியினுடைய சரீரம், தேவனுடைய ஆலயமாய், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் வாசம் பண்ணும் இடமாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் நம் சரீரத்தை தம்முடைய வாசஸ்தலமாக, ஆலயமாக எடுத்துக் கொள்ளும்போது, நம்முடைய சரீரத்தின் அவயங்களை தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றும் அடிமைகளாக அல்லது கருவிகளாக கர்த்தரிடம் அர்ப்பணிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நம் சரீரத்தை பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்புக்கொடுக்கும்போது, அது தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட, பரிசுத்தமான சரீரமாய் மாறுகின்றது.

## மறுபடியும் பிறந்த விசுவாசியைக் குறித்த தேவனுடைய திட்டம்

இந்த அத்தியாயத்தில், மறுபடியும் பிறந்த விசுவாசியை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வரும்படி தேவன் வைத்திருக்கிற திட்டத்தின் மீது நான் அதிக கவனம் செலுத்த விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாயிருக்கிறது. ஏன்? நாம் மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் மறுபடியும் பிறந்த பிறகு எப்படி வாழ வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றால், நம்மைக் குறித்து தேவன் வைத்திருக்கிற நோக்கத்தைத் தவற விட்டு விடுவோம். நமக்கென்று தேவன் வைத்திருக்கிற பல ஆசீர்வாதங்களையும் நாம் தவற விட்டு விடுவோம்.

ஒன்றைச் சொல்லி, நான் இதை ஆரம்பிக்கின்றேன். தேவனுடைய திட்டத்தில், மனுஷனுடைய ஆளுமை, ஜனநாயகத்தின் அடிப்படையில் இயங்க முடியாது. ஜனநாயகம் என்ற வார்த்தையை நாம் அடிக்கடி கேட்கின்றோம், எங்கும் கேட்கின்றோம். எனவே சகலமும் அந்த அடிப்படையில் இயங்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் ஜனநாயகத்தின் அடிப்படையில் நிச்சயம் தேவன் செயல்படுவதில்லை. மறுபடியும் பிறந்த விசுவாசியின் ஆளுமையும் அந்த அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமல்ல.

தேவன் மனுஷனை, அவனுடைய உயரிய கூறாகிய ஆவியின் மூலம் ஆளுகை செய்கிறார். மறுபடியும் பிறந்த மனுஷனுடைய ஆவி, நேரடியாக தேவனோடு தொடர்பு கொண்டிருக்கிறது. திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்ட



You Matter to God(Tamil)-2018.indd 93 5/22/2018 6:18:07 PM

அந்த ஆவியானது கர்த்தரோடு ஒன்றாய் இசைந்திருக்கிறது. அந்த ஆவியின் மூலம், தேவனோடு உண்டாயிருக்கிற அந்தத் தொடர்பின் மூலம், தேவன் ஒவ்வொரு விசுவாசியையும் ஆளுகை செய்கிறார், வழிநடத்துகிறார். ஆகையால் மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்ட நம்முடைய வாழ்க்கையில், நம்முடைய ஆவி எந்த அளவிற்கு தேவனோடு தொடர்பில் இருக்கிறதோ, தேவனுக்கு இணங்கி கீழ்ப்படிகிறதோ, அந்த அளவிற்குத்தான் நம்முடைய ஆளுமையின் மற்ற கூறுகளும் தேவனுடைய வழிநடத்துதலுக்கு இணங்கி கீழ்ப்படிந்திருக்கும். அந்த அளவிற்குத்தான் நம்முடைய வாழ்க்கை வெற்றிகரமாக இருக்கும்.

இதுதான் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. எந்த அளவிற்கு அவருடைய நோக்கமும், திட்டமும் நிறைவேறுகின்றதோ, அந்த அளவிற்குத்தான் நம்முடைய வெற்றியும் இருக்கும்.

## இது எப்படி வேலை செய்கிறது?

இந்தச் சத்தியத்தை இன்னும் அதிகமாய் அறிந்து கொள்ளும்படி, தாவீதின் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். அவன் தன் ஆவியின் மூலம், தன் ஆத்துமாவிற்கு புத்தி சொல்கிறான், ஒன்றை வலியுறுத்தி, அறிவுறுத்திப் பேசுகிறான். அவன் அப்படிச் செய்வதைக் குறித்து 42-ம் சங்கீதத்தில் நாம் வாசிக்கின்றோம். இங்கு தாவீது தன் ஆத்துமாவோடு பேசிக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் பார்க்க முடியும். அவனுடைய ஆத்துமா இங்கு பேசிக் கொண்டிருக்கவில்லை. அவனுடைய ஆவி தான், அவனுடைய ஆத்துமாவோடு பேசிக் கொண்டிருக்கிறது. அவனுக்குள் தேவனோடு தொடர்பு கொண்டிருந்த அந்தப் பகுதி தான், அவனுக்குள் சுயநலமாய் இயங்கிக் கொண்டிருந்த இன்னொரு பகுதியுடன் பேசிக் கொண்டிருக்கிறது.

> *என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய் (குழம்பிப் போயிருக்கிறாய்)? தேவனை நோக்கிக் காத்திரு (தேவன் மீது நம்பிக்கை கொண்டிரு). என் முகத்திற்கு இரட்சிப்பும், என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.*
>
> சங்கீதம் 42:11

நம் ஆத்துமா, நம் சூழ்நிலைகளைச் சார்ந்த மனநிலையைக் கொண்டிருக்கிறது என்று இதிலிருந்து நாம் பார்க்கின்றோம். இது மாறக்கூடியது. காரணம், இது தன் சுயத்தோடும், புற உலகத்தோடும் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால் தேவனோடு ஐக்கிய உறவு கொண்டிருக்கிற நம் ஆவி, நம் சூழ்நிலைகளைச் சார்ந்த மனநிலையைக் கொண்டிருப்பதில்லை. அது எதினாலும் மாற்றப்பட முடியாததாய் இருக்கிறது. தாவீது விரக்தியான மனநிலையில் இருந்தான். கலங்கி, குழம்பிப் போன நிலையில் அவன் இருந்தான். ஆனால் அதன் மத்தியில், அவனுடைய ஆவி, அவனுடைய ஆத்துமாவிடம் இவ்வாறு



You Matter to God(Tamil)-2018.indd 94 5/22/2018 6:18:07 PM

சொல்கிறது: ''தூசியை உதறி விட்டு எழுந்திரு. இது கர்த்தரைத் துதிக்க வேண்டிய நேரம். விரக்தி மற்றும் தோல்வியின் மனநிலைக்கு இடம் கொடுக்காதே.''

**103**-ம் சங்கீதத்திலும், இதே விஷயத்தைத்தான் நாம் பார்க்கின்றோம். தாவீது சொல்கிறான்:

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி. என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.*

சங்கீதம் **103:1-5**

தேவனுடைய ஆசீர்வாதங்களெல்லாம் ஆத்துமாவின் மூலம், சரீரத்திற்குக் கிடைக்கின்றன என்பதை இங்கு கவனியுங்கள். நம்முடைய வியாதிகளிலிருந்து சுகம் உண்டாவதைக் குறித்தும், நீடிய ஆயுளைக் குறித்தும், நம் வயது திரும்ப வாலவயதாய் ஆவதைக் குறித்தும் தாவீது இங்கு பேசுகிறான். இப்படித்தான் மறுபடியும் பிறந்த விசுவாசியினுடைய வாழ்க்கை இருக்க வேண்டும். இதுதான் தேவனுடைய நோக்கமாகவும் இருக்கிறது. ஒரு விசுவாசியினுடைய ஆவி தேவனோடு தொடர்பு கொண்டிருக்கிறது. பிறகு அந்த விசுவாசியினுடைய ஆவி, ஆத்துமா விற்கு வழி காட்டுகிறது. பிறகு அந்த ஆத்துமாவின் மூலம், தேவனுடைய ஆசீர்வாதங்களும், தேவனுடைய ஜீவனும், தேவனுடைய வழிகாட்டுதலும் சரீரத்திற்குக் கிடைக்கின்றன.

தேவனுடைய இந்தக் கட்டமைப்பில், மனுஷனுடைய ஆளுமையின் ஆவி-ஆத்துமா-சரீரம் என்ற இந்த மூன்றிற்கும் இருக்கும் விசேஷமான பொறுப்புகளை உங்களால் பார்க்க முடிகின்றதா? முதலில், தேவனை ஆராதிக்க வேண்டும்; தேவனுடன் உடைந்து போகாத ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும் என்பது நம் ஆவியின் பொறுப்பாயிருக்கிறது. நம்முடைய ஆவிக்கும், தேவனுக்கும் இடையே பிரிவினை வரும்போதெல்லாம், அங்கே பிரச்சனை உள்ளே நுழைகின்றது. ஆகையால் ஆவியின் வேலை, எப்பொழுதும் தேவனை ஆராதிக்க வேண்டும்; உடைந்து போகாத ஒரு ஐக்கியத்தை தேவனுடன் எப்பொழுதும் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான்.

ஆத்துமாவின் வேலை, தேவனுக்கு தன்னை அர்ப்பணிப்பதும், தன் சுயத்திற்கு மறுப்பு தெரிவிப்பதுமாகும். ஆத்துமாவில்தான் தேவனுக்கு விரோதமான முரட்டாட்டம் ஆரம்பித்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தப் பிரச்சனையினால்தான், ஆத்துமாவில்



You Matter to God(Tamil)-2018.indd 95 5/22/2018 6:18:07 PM

சுயநலம் எனும் வியாதியும், தன் சுய உரிமைகளை வலியுறுத்திப் போராடுகிற துணிகரம் எனும் நோயும் தொற்றிக் கொண்டது. ''எனக்கு இது வேண்டும்'', ''நான் இப்படி உணருகிறேன்'', ''நான் இப்படி நினைக்கிறேன்'', ''நான் தான் இங்கு முக்கியமானவன்'', ''என் தேவைகளை பூர்த்தி செய்'', ''எனக்கு வேலை செய்'' என்று இது தன்னையே முன்னிலைப்படுத்திப் பேசுகிறது. தேவன் நினைத்த விதத்தில் நாம் வாழ வேண்டுமென்றால், முதலில் இந்த மனநிலை மாறியாக வேண்டும். நம் ஆத்துமா சரணடைய வேண்டும். ''அன்றாடம் உன்னுடைய சுயத்தை மறுதலிக்க வேண்டும்,'' என்று இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவுகூருங்கள். ஆகையால், ''இல்லை, நான் என் உரிமையைக் குறித்தே வலியுறுத்திப் பேச மாட்டேன். நான் என்னை முன்னிலைப்படுத்த மாட்டேன். நான் ஆவியானவருக்கு இணங்கி நடப்பேன்,'' என்று ஒவ்வொரு நாளும் நம் ஆத்துமா பேச வேண்டும்.

## சுயத்தை மறுதலிக்கின்ற இடம்

தேவனுடைய திட்டத்தின் ஒழுங்கின்படி, மறுபடியும் பிறந்த ஆவிதான் ஆத்துமாவை சுயமறுப்பிற்கு நேராக நடத்துகிறது. இது எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இயேசுவின் வார்த்தைகள் நமக்கு உதவுகின்றன: ''அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, 'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்,' என்றார்'' (மத்தேயு 16:24).

நாம் இயேசுவை எவ்வாறு பின்பற்றுகிறோம்? நம்மையே, நம் சுயத்தையே மறுதலிப்பதன் மூலம் அதைச் செய்கிறோம். அப்படியென்றால் என்ன அர்த்தம்? முன்பே நாம் இதைக் குறித்துப் பார்த்தோம். நம்முடைய ஆத்துமாவின் சுயநல விருப்பங்களுக்கு நாம் 'முடியாது' என்று சொல்ல வேண்டும். அதுதான் அர்த்தம். நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவி தான் இதைச் செய்கிறது என்பதை இப்பொழுது நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

''எனக்கு இது வேண்டும்,'' என்று என் ஆத்துமா சொல்கிறது. ஆனால், ''இல்லை. நீ என்ன விரும்புகிறாய் என்பது முக்கியமல்ல. உன்னுடைய விருப்பத்தைக் காட்டிலும், தேவனுடைய விருப்பத்திற்குத்தான் பிரதான மான முதலிடம் கொடுப்பேன்,'' என்று என் ஆவி பதிலளிக்கிறது.

''நான் என்ன நினைக்கிறேன் என்றால்...'' என்று என் ஆத்துமா சொல்கிறது. ஆனால், ''நீ என்ன நினைக்கிறாய் என்பது முக்கியமல்ல. நீ என்ன நினைக்கிறாய் என்பதைக் காட்டிலும், தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதுதான் முக்கியம்,'' என்று என் ஆவி பதிலளிக்கின்றது.



You Matter to God(Tamil)-2018.indd 96 5/22/2018 6:18:07 PM

‘‘நான் எப்படி உணருகிறேன் என்றால்...’’ என்று என் ஆத்துமா சொல்கிறது. ஆனால், ‘‘நீ என்ன உணருகிறாய் என்பது முக்கியமல்ல. தேவன் தரும் வெளிப்பாடுதான் உண்மையானது. உன்னுடைய உணர்வுகள் மாறிக் கொண்டே இருக்கும். அவற்றைச் சார்ந்து கொள்ள முடியாது. ஆகையால்தான் நீ எப்பொழுதும் சோர்வாக இருக்கிறாய். முதலில் அதை விட்டு வெளியே வா! நீ என்ன விரும்புகிறாய் என்பது முக்கியமல்ல. நீ என்ன நினைக்கிறாய் என்பதும் முக்கியமல்ல. நீ என்ன உணருகிறாய் என்பது முக்கியமல்ல. நான் என் சுயத்தை மறுக்கின்றேன்,’’ என்று என் ஆவி, என் ஆத்துமாவிடம் பதிலளிக்கின்றது.

இந்தச் சத்தியத்தை இயேசு தொடர்ந்து விவரித்துப் பேசுகிறார்: ‘‘தன் ஜீவனை (ஆத்துமாவை) இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என் நிமித்தமாக தன் ஜீவனை (ஆத்துமாவை) இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்’’ (25-ம் வசனம்).

உங்களுடைய ஆத்துமாவை இழப்பதன் மூலம், எவ்வாறு அதைக் கண்டடைவீர்கள்? நான் இதை இவ்வாறு புரிந்து கொள்கிறேன். ஆத்துமாவிலிருக்கும் முரட்டாட்டமான தற்பெருமையை நீங்கள் பலிபீடத்தில் வைத்திடுங்கள். ஆத்துமாவிலிருக்கும் இந்த சுயநலமான வாழ்க்கையை நீங்கள் உதறித் தள்ள வேண்டும், நிராகரிக்க வேண்டும். இந்தச் செயலின் மூலம், உங்களுடைய ஆத்துமா, மரணத்தை விரும்பி ஏற்றுக் கொள்கிறது. அது சிலுவையின் இடத்திற்கு வருகிறது. தன் ஜீவனை பலியாகக் கொடுக்கின்றது. அப்பொழுது முற்றிலும் புதிய ஜீவன் ஆத்துமாவிற்குள் நுழைகின்றது. ஆவியானவர் மூலமாய், தேவனுடைய ஜீவன் உள்ளே பாய்ந்தோடுகின்றது.

## தேவன் விரும்பி வாசம் பண்ணுகிற இடம்

இந்தத் தொடர்பில், சரீரத்தினுடைய வேலை என்ன என்பதை நாம் மேலும் பார்ப்போம். நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி, மறுபடியும் பிறந்த விசுவாசியினுடைய சரீரம், பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணக்கூடிய பரிசுத்தமான ஒரு ஆலயமாக இருக்க வேண்டும். உங்களுடைய சரீரம், தன்னுடைய அவயங்களை தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி அடிமைகளாக பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

தேவனுடைய இந்த நிபந்தனையின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமைப் பொறுப்பு இருக்கிறது என்றுதான் நான் விசுவாசிக்கின்றேன். உங்களுடைய சரீரத்தை எவ்வளவு சிறந்த நிலையில் வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு சிறந்த நிலையில் வைத்துக் கொள்வதுதான் அந்தப் பொறுப்பாயிருக்கிறது. அப்படியென்றால், உங்களுடைய சரீரத்தை தேவனுடைய ஆலயமாகத்தான் நீங்கள் எப்பொழுதும் பார்க்க வேண்டும் என்று அர்த்தம். உங்களுடைய சரீர அவயங்களை தேவனுடைய நீதியின் ஆயுதங்களாக, கருவிகளாக



You Matter to God(Tamil)-2018.indd 97 5/22/2018 6:18:07 PM

நீங்கள் பார்க்க வேண்டும். மனுஷனுக்குள் வாசம் பண்ணுகிற விஷயத்தில், தேவன் தம்மை முற்றிலும் அர்ப்பணித்திருக்கிறார் என்பது தெளிவாயிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, இது வேதாகமத்தின் ஆச்சரியமான உண்மைகளில் ஒன்றாயிருக்கிறது. இது நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்கின்றது. அதாவது சர்வ வல்ல தேவன், நம் சிருஷ்டிகராகிய தேவன், மனுஷர்களாகிய நமக்குள் வாசம் பண்ண விரும்புகிறார் என்ற உண்மைதான் அது.

வேதாகமம் முழுவதிலும் தேவன் அதற்காக திட்டமிட்டிருக்கிறார், முன் ஆயத்தமும் செய்திருக்கிறார். புதிய ஏற்பாட்டின் கிரேக்க மூல மொழியில், ஒரு குறிப்பிட்ட வார்த்தை எழுதப்பட்டிருக்கிறது. இது பிரதானமாக, தேவனுடைய வாசஸ்தலத்தைக் குறிக்கின்றது. புதிய ஏற்பாட்டிற்குள் இன்னும் நாம் செல்லச் செல்ல, இந்த வார்த்தை, இன்னும் இன்னும் அதிகமாய் எழுதப்பட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். ‘ஆலயம்’ என்பதுதான் இந்த வார்த்தையாகும்.

தேவனுக்கு தற்காலிகமாக பல்வேறு வாசஸ்தலங்கள் இருந்தன: மோசேயின் ஆசரிப்புக் கூடாரம், சாலமோனின் தேவாலயம் (மனுஷனுடைய வரலாற்றில் இவ்வளவு அழகான, இவ்வளவு மகிமையான, இவ்வளவு பிரமாண்டமான, விலையுயர்ந்த ஒரு கட்டிடம் வேறு எதுவும் எழுப்பப்பட்டதில்லை). அது அவ்வளவு அழகாக இருந்தாலும், ஒரு சில வருடங்கள்தான் நிலைத்து நின்றது. பிறகு ஜனங்களுடைய பாவத்தினால், அது அழிக்கப்பட்டது.

புதிய ஏற்பாட்டில், தேவன் ஜீவ கற்களைக் கொண்டு ஒரு ஆலயத்தை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார் என்பதுதான் வெளிப்பாடாயிருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் அந்த ஆலயத்தில் ஒரு கல்லாய் இருக்கிறார். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாய் எல்லோருக்குள்ளும் கூட்டாக அந்த ஆலயத்தில் வாசம் பண்ணுகிறார். அதே நேரத்தில், ஒவ்வொரு விசுவாசியின் சரீரமாகிய தனிப்பட்ட ஆலயத்திற்குள்ளும் அவர் வாசம் பண்ண விரும்புகிறார்.

**1** கொரிந்தியர் **6:19**-ல், பவுல் ஒரு கேள்வியைக் கேட்கிறார்: “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?” ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், நமக்கு ஏன் ஒரு சரீரம் இருக்கிறது என்பதற்கான காரணம் இதுதான்.

இதற்கான எல்லா திட்டமிடுதலையும், நம் சரீரமாகிய ஆலயத்திற்கு தேவையான எல்லா முன்னேற்பாட்டையும் தேவன் காலத்திற்கு முன்பே, நித்தியத்திலேயே செய்து முடித்து விட்டார். எளிமையாகச் சொன்னால், இந்த முன்னேற்பாட்டின் மூலம் இரண்டு நன்மைகள் நமக்கு



You Matter to God(Tamil)-2018.indd 98 5/22/2018 6:18:07 PM

உண்டாகிறது. அழிந்துபோகக்கூடிய, சாவுக்கேதுவான நம் சரீரங்களில் வாசம் பண்ணுகிற அவருடைய ஆவியானவர், அவற்றிற்கு தம் ஜீவனைக் கொடுக்கிறார் (ரோமர் 8:11). கல்லறையிலிருந்து, இயேசுவின் மரித்துப் போன சரீரத்தை உயிரோடு எழுப்பிய அதே வல்லமை, இப்பொழுது நம் சரீரங்களில் வாசம் செய்கிறது.

அவர் முன்னேற்பாடு செய்திருக்கிற இரண்டாவது நன்மை, அவருடைய வார்த்தையாகும். தேவன் தமது வார்த்தையை அனுப்பி, தம் ஜனங்களை சுகமாக்குகிறார் என்று சங்கீதம் 107:20 சொல்கிறது. அவருடைய வார்த்தைகள், அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு ஜீவனும், அவர்களுடைய சரீரத்திற்கெல்லாம் ஆரோக்கியமாகவும் இருக்கிறது. வார்த்தையையும், ஆவியானவரையும் சேர்த்துப் பார்ப்போம் என்றால், தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமையைக் குறித்த ஒரு முழுமையான படத்தை நம்மால் பார்க்க முடியும். சங்கீதம் 33:6-ம் வசனம், இதற்கு ஆதாரமாக இருக்கின்றது: ''கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் (ஆவியானவரால்) அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.''

தேவனுடைய வார்த்தையும், தேவனுடைய ஆவியானவரும் சேர்ந்துதான் இந்த முழுப் பிரபஞ்சத்தையும் உண்டாக்கினர். இப்பொழுது அதே சிருஷ்டிப்பின் வல்லமை நமக்குக் கிடைத்திருக்கிறது. காரணம், அவருடைய வார்த்தையும், அவருடைய ஆவியானவரும் நமக்குள் வாசம் பண்ணுகிறார்கள்.

## நம் சரீரங்களைக் குறித்த ஐந்து பொறுப்புகள்

நம்முடைய சரீரங்கள், தேவனுடைய ஆச்சரியமான சிருஷ்டிப்புகளாய் இருக்கின்றன. இப்பொழுது நாம் எப்படி அதை கையாளப் போகின்றோம்? விசுவாசிகளாகிய நம்முடைய பொறுப்புகள் என்ன? முக்கியமாக, ஐந்து பொறுப்புகளை நம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

முதல் பொறுப்பு, தேவனுடைய பலிபீடத்தில் நம்முடைய சரீரங்களை ஜீவ பலியாக, தேவனுடைய பணிக்கென்று நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

இரண்டாவது பொறுப்பு, நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும்படி, நம் சரீரங்களை தனிப்பட்ட விதத்தில் கர்த்தரிடம் அர்ப்பணிக்க வேண்டும். (சபையாகிய சரீரத்தில் ஏற்கனவே அவர் வாசம் பண்ணுகிறார். ஆனாலும் தனிப்பட்ட விதத்தில், நம் சரீரம் கர்த்தருடைய ஆலயமாய் இருக்கும்படி, அவரிடம் அர்ப்பணிக்க வேண்டிய ஒரு பொறுப்பு நமக்கு இருக்கிறது.)

மூன்றாவது பொறுப்பு, தேவனுடைய நீதியின் கருவிகளாய் பயன்படுத்தப்படும்படி, நாம் நம்முடைய சரீரத்தின் அவயங்களை ஒப்புக்



You Matter to God(Tamil)-2018.indd 99 5/22/2018 6:18:07 PM

கொடுக்க வேண்டும். 'கருவிகள்' என்ற அர்த்தத்தில், ஆங்கிலத்தில் வருகின்றது. ஆனால் கிரேக்க மூல மொழியில், 'ஆயுதங்கள்' என்ற அர்த்தத்தில் வருகின்றது. இது இன்னும் அதிக அர்த்தச் செறிவுள்ளதாய் இருக்கிறது. பாவத்திற்கும், சாத்தானிற்கும் விரோதமான யுத்தத்தில் பயன்படுத்தும்படி, உங்களுடைய சரீரத்தின் அவயங்களை நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

நான்காவது பொறுப்பு, இந்த ஆலயத்தை பரிசுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரணத்தினால்தான், தவறான பாலியல் உற வுக்கும், ஒழுக்கச் சீர்கேடுகளுக்கும் எதிராக வேதாகமம் நம்மை மிகவும் குறிப்பாக எச்சரிக்கின்றது. தவறான பாலியல் உறவில், ஒழுக்கக்கேட்டில் ஈடுபடுகிறவன், தன் சொந்த சரீரத்தையே காயப்படுத்துகிறான் என்று தேவனுடைய வார்த்தை நமக்குச் சொல்கிறது.

ஐந்தாவது பொறுப்பு, நம் சரீரத்தை நல்ல ஆரோக்கியமான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் அடிக்கடி இதைச் சொல்வதுண்டு. இன்றைக்கு பல கிறிஸ்தவர்கள் தங்களுடைய சரீரங்களைக் காட்டிலும் தங்களுடைய கார்களைத்தான் அதிக அக்கறையோடு பராமரிக்கின்றனர்.

இந்தத் தலைப்பில், நான் அடிக்கடி போதித்திருக்கிறேன். அந்த நேரங்களில், நானும் ரூத்தும் எங்களுடைய சரீரங்களைக் குறித்த ஒரு அறிக்கையைச் செய்வதுண்டு. நாங்கள் அதன் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் உணர்ந்தவர்களாய் செய்வோம். இதை ஏதோ ஒரு மதச்சடங்குபோல வழக்கமான ஒன்றாக நாங்கள் செய்வதில்லை. இந்த அறிக்கைக்கு வல்லமையான ஆவிக்குரிய முக்கியத்துவம் இருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். நீங்கள் இந்த அறிக்கையைச் செய்யும்போது, கண்களால் காண முடியாத உலகத்தில் மிகவும் முக்கியமான ஒன்றைச் செய்து முடிக்கின்றீர்கள். எனவே பின்வரும் அறிக்கையை நீங்களும் செய்யும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இதன் வார்த்தைகள் ஒவ்வொன்றையும், அதன் வல்லமையையும் உணர்ந்தவர்களாய், விசுவாசத்தோடு இந்த அறிக்கையைச் செய்யுங்கள். நீங்கள் ஆயத்தமா ?

*என் சரீரம், இயேசுவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிற ஆலயமாய் இருக்கிறது. என் சரீரத்தின் அவயங்களை தேவனுடைய பணிக்கென்று, அவருடைய நீதியின் ஆயுதங்களாக அவரிடம் அர்ப்பணிக்கின்றேன். அவரிடம் இணங்கச் செய்து, ஒப்புக்கொடுக்கிறேன். பிசாசுக்கு என் சரீரத்தில் இம்மையளவும் இடமில்லை. அவனுக்கு என் மீது எந்த அதிகாரமும், வல்லமையும் இல்லை. எனக்கு விரோதமாக அவன் எவ்விதத்திலும், எந்த விஷயத்திலும் உரிமைபாராட்ட முடியாது. இயேசுவின் இரத்தத்தினால்*



You Matter to God(Tamil)-2018.indd 100 5/22/2018 6:18:07 PM

*எல்லாம் தீர்க்கப்பட்டிருக்கின்றன. மரணமே நேரிடுகிற தாயிருந்தாலும், நான் என் வாழ்க்கையையும் பெரிதாக நேசிக்க மாட்டேன். ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும், என் சாட்சியின் அறிக்கையினாலும் சாத்தானை நான் ஜெயிக்கிறேன். என் சரீரம் கர்த்தருக்குரியது. கர்த்தருக்கே என் சரீரம் சொந்தம்.*

நீங்கள் இதை மெய்யாகவே விசுவாசிக்கிறீர்கள் என்றால், நீங்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். வேறொன்றும் உங்களால் செய்ய முடியாது. ஆகையால் உங்களுடைய சரீரத்தைக் குறித்த இந்தச் சத்தியத்திற்காக இப்பொழுதே நீங்கள் ஏன் நேரம் செலவிட்டு, அவருக்கு நன்றி சொல்லக்கூடாது?

இதுவரை நான் எடுத்துக் காண்பித்த சத்தியங்களின் வெளிச்சத்தில், 1 தெசலோனிக்கேயர் 5:23-ம் வசனத்தில் பவுல் எழுதிய ஜெபத்தைக் கவனிப்போம். மனுஷனுடைய திரித்துவத்தைக் குறித்து நாம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தபோது, நாம் இந்த ஜெபத்தைப் பார்த்தோம். நம்முடைய ஆளுமை முழுமையாக, நிறைவாக செயல்பட வேண்டுமென்றால், இதைத் திரும்பத் திரும்பக் கவனிக்க வேண்டியது அத்தியாவசியமான தாயிருக்கிறது. இந்த ஜெபம், ஒவ்வொரு மனுஷனையும் குறித்த தேவனுடைய சித்தத்தின் உச்சகட்டமாயிருக்கிறது. பவுல் என்ன எழுதினார் என்று பார்ப்போம்.

*சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்த மாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்ற மற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

1 தெசலோனிக்கேயர் 5:23

நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, முழுமையாய் எவ்விதக் குற்றமும் குறைகளும் இல்லாததாய் காக்கப்பட வேண்டும்.

'முற்றிலும்'; 'முழுவதும்' என்ற இரண்டு வார்த்தைகளை முந்தின அத்தியாயங்களில் நான் குறிப்பிட்டேன். ஆவி, ஆத்துமா, சரீரம் என மூன்று கூறுகளாக நம்முடைய ஆளுமையைக் குறித்து நாம் பார்த்தாலும், இவ்விரண்டு வார்த்தைகளும் மனுஷனுடைய ஆளுமையை முழுமையாகச் சுட்டிக் காண்பிக்கின்றன. மனுஷனுடைய ஒவ்வொரு கூறும், அவனுடைய முழு ஆளுமையும் முழுமையாய் பரிசுத்தமாக்கப்படும்படி, குற்றமற்றதாய் காக்கப்படும்படி தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்.

உங்களை உற்சாகமூட்டும் ஒரு வேதவசனத்தைச் சொல்லி, இந்த அத்தியாயத்தை நான் முடிக்கின்றேன். அடுத்த வசனத்தில் பவுல் அதை எழுதுகிறார்: "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்" (24-ம் வசனம்). முழுமையான பரிசுத்தத்தைக் குறித்து தேவன் செய்து வைத்திருக்கிற இந்த



You Matter to God(Tamil)-2018.indd 101 5/22/2018 6:18:07 PM

முன்னேற்பாட்டோடு தொடர்புடைய விதத்தில் பவுல் இதைச் சொல்கிறார்: ‘‘உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் நிச்சயம் இதை நிறைவேற்றுவார்.’’

நீங்கள் உங்களுடைய பங்கைச் செய்வீர்கள் என்றால், தேவன் நிச்சயம் தம்முடைய பங்கைச் செய்வார். இதில் நீங்கள் உறுதியாய் இருக்க முடியும்.



You Matter to God(Tamil)-2018.indd 102 5/22/2018 6:18:07 PM

# 9

# ஆவியிலிருந்து ஆத்துமாவை நோக்கிய வீழ்ச்சி

*அவர்கள் தங்கள் தேவனிடத்துக்குத் திரும்புவதற்கு தங்கள் கிரியைகளைச் சீர்திருத்த மாட்டார்கள் (அவர்களுடைய கிரியைகள், அவர்களுடைய தேவனிடம் திரும்புவதற்கு அவர்களை அனுமதிப்பதில்லை).*

ஓசியா 5:4

சர்ப்பமாகிய பிசாசு எவ்வாறு உள்ளே நுழைந்தான் என்பதைக் குறித்து ஆரம்பத்தில் நாம் என்ன பேசினோம் என்பதை திரும்பவும் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வாருங்கள். என்ன நடந்தது என்பது உங்கள் நினைவிலிருக்கிறதா? சர்ப்பம் மூலமாக பிசாசு நுழைந்தான். அவன் ஆத்துமாவைத் தாக்கினான். தேவனுடைய ஆவியிடமிருந்து மனுஷனுடைய ஆவியின் ஐக்கியத்தை அவன் துண்டித்தான். தேவன் நல்லவர். புதுப் பிறப்பு, ஆத்துமாவின் மீது உண்டாயிருந்த பிசாசின் தாக்கத்தை துண்டித்தது. அது தேவனுடைய ஆவியானவருடன் மனுஷனுடைய ஆவிக்கிருந்த ஐக்கியத்தை மீண்டும் உயிர்ப்பித்தது.

மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி, தேவனுடைய ஆவியான வருடன் உண்டாயிருக்கிற ஐக்கியத்தில் வாழவில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆத்துமா, மனந்திரும்புவதற்குப் பதிலாக, திரும்பவும், முரட்டாட்டத்தில் ஈடுபடுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஆத்துமா, சாத்தானுக்கு இணங்கிக் கீழ்ப்படிகிறது என்று வைத்துக் கொள்வோம். முதல்முறை தன்னுடைய தந்திரங்கள் செயல்படவில்லை என்றால், அவன்



You Matter to God(Tamil)-2018.indd 103 5/22/2018 6:18:07 PM

உடனே தளர்ந்து போக மாட்டான். அவன் தன் முயற்சிகளை நிறுத்தி விட மாட்டான் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவன் ரொம்பத் தொலைவாய் சென்று விட மாட்டான். உங்களுடைய ஆத்துமாவிற்குள் வேறு ஏதாவது ஒரு தீமையைச் செலுத்தும்படி, அடுத்த வாய்ப்பிற்காக அவன் அங்கே காத்துக் கொண்டிருப்பான்.

மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்ட ஒரு நபர், திரும்பவும் தேவனை விட்டு விலகி வாழத் தீர்மானிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் தன் சுய சித்தத்திலும், முரட்டாட்டத்திலும் வாழத் தீர்மானித்து விட்டார். அப்படியெல்லாம் நடக்க முடியுமா? எப்பொழுதாவது அது நடந்திருக்கிறதா? நிச்சயமாய், அப்படி நடக்க முடியும். அது நடக்கும்போது, அந்த நபர் தன் ஆத்துமாவை மட்டுமே சார்ந்து வாழ்கின்ற, விழுந்துபோன சுபாவமுடையவராகி (soulish) விடுகிறார்.

ஆங்கில அகராதியில் இப்படியொரு வார்த்தை (soulish) இல்லை. இந்த வார்த்தை நமக்குக் கிடைக்கவில்லை என்பது வருத்தமான ஒரு விஷயம்தான். புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்க மொழி, இரண்டு முக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது. இந்த வார்த்தைகள் வழக்கமாக, அதன் மெய்யான அர்த்தத்தோடு மொழிபெயர்க்கப்படுவதில்லை. நான் நேரமெடுத்து இந்த வார்த்தைகளை விளக்கிக் காண்பிக்க விரும்புகிறேன். காரணம், மிகவும் முக்கியமான ஒரு சத்தியத்தைப் புரிந்து கொள்வதற்கு, இவை ஒரு திறவுகோலாய் நமக்கு இருக்கின்றன.

ஆவி (spirit) என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை நியுமா (pneuma) என்பதாகும். இதன் தன்மையை விவரிக்கக்கூடிய பெயரெச்சம் (adjective), 'ஆவிக்குரிய (spiritual)' என்ற வார்த்தையாகும். அது கிரேக்க மொழியில் நியுமேட்டிக்கோஸ் (pneumatikos) என்று வருகின்றது. ஆத்துமா (soul) என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை, சைக் (psuche) என்பதாகும். இதன் தன்மையை விவரிக்கக்கூடிய கிரேக்க பெயரெச்சம் (adjective), சைக்கோஸ் (psuchekos) என்ற வார்த்தையாகும். இதன் சரியான மொழிபெயர்ப்பு, சோல்லிஷ் (soulish) என்பதாகத்தான் இருக்க வேண்டும். வட ஐரோப்பிய நாடுகளின் மொழிகளாகிய டேனிஷ், ஸ்விடீஷ், நார்வேயினரின் மொழிகளில், நமக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற சோல்லிஷ் (soulish) என்ற வார்த்தை இருக்கின்றது. ஆனால் ஆங்கிலத்தில் இந்த வார்த்தை சோல்லிஷ் (soulish) உருவாக்கப்படாததால், இதை நாமே உருவாக்கிக் கொண்டோம். நான் இதை அடிக்கடி பயன்படுத்துகிறேன். ஆனாலும் இதை விளக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறதாக நான் உணருகிறேன்.

வேதாகமத்தின் பல்வேறு மொழிபெயர்ப்புகளில் சைக்கோஸ் (psuchekos) என்ற வார்த்தை எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது



You Matter to God(Tamil)-2018.indd 104 5/22/2018 6:18:07 PM

என்பதைப் பார்ப்போம்: ‘‘ஜென்ம சுபாவம் (natural)’’; ‘‘ஐம்புலன் உணர்வுகளுக்கு ஆட்பட்ட நிலை (sensual)’’; ‘‘மாம்ச சிந்தை (carnal)’’; ‘‘உலகப்பிரகாரமான (worldly)’’. ஆனால் மூல மொழியில், அதே வார்த்தைதான் வெவ்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை அந்த மொழிபெயர்ப்புகள் தெளிவற்றதாக்கி விடுகின்றன, ஒதுக்கி வைத்து விடுகின்றன. உண்மையான பிரச்சனை, ஆத்துமாவில்தான் இருக்கிறது என்ற உண்மையையும் அவை மறைத்து விடுகின்றன.

இந்த அத்தியாயத்தில், ஆத்துமாவின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்கின்ற நபர்களைக் குறித்துப் பேசப் போகின்றோம். இப்படிப்பட்ட நபருடைய ஆவியானது, தேவனுடைய ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் ஆவிக்குரிய எல்லா ‘‘பேச்சுகளையும்’’ அவர் பேசலாம். அவருடைய பெயர், சபை விசுவாசிகளின் வருகைப் பதிவேட்டில் இருக்கலாம். ஆனால் அவருடைய ஆத்துமா பின்வாங்கியிருக்கிறது என்பதுதான் உண்மை.

## ஆத்துமாவிற்கு நேராக கீழ்நோக்கிய வீழ்ச்சி

புதிய ஏற்பாட்டில், சைக்கோஸ் (psuchekos) என்ற வார்த்தை வருகின்ற நான்கு பகுதிகளிலிருந்து நான் ஆரம்பிக்கின்றேன். எந்த ஒத்த வேத அகராதியிலும் நீங்கள் இவற்றைக் கண்டுபிடிக்க முடியாது என்பது சுவாரசியமான ஒரு விஷயம்தான். காரணம், ஒத்த வேத அகராதிகள் (concordances) உங்களை அங்கே கொண்டு செல்லாது. வேத ஆராய்ச்சிக்குப் பயன்படும் மற்ற நூல்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும் என்றால், அந்த மொழிபெயர்ப்பிற்குப் பின்னால் சென்று, மூல வார்த்தையைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அது சிக்கலானது, குழப்பமானது. சைக்கோஸ் (psuchekos) என்ற வார்த்தையை நீங்கள் இந்த மற்ற புத்தகங்களில் தேடிப் பார்க்கலாம். ‘‘ஜென்ம சுபாவம் (natural)’’; ‘‘ஐம்புலன் உணர்வுகளுக்கு ஆட்பட்ட நிலை (sensual)’’; ‘‘உலகப்பிரகாரமான (worldly)’’; இன்னும் இது போன்ற பல வார்த்தைகளாக இது மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால் மெய்யாகவே அது என்ன என்பதை இவை உங்களுக்குச் சொல்லவில்லை என்பதுதான் உண்மை.

### “ஜென்ம சரீரம்”

1 கொரிந்தியர் 15:44-ம் வசனத்தை நான் முதலாவதாக எடுத்துக் காண்பிக்க விரும்புகிறேன். இது கொஞ்சம் குழப்பத்தை உண்டுபண்ணுகிற வசனம்தான். உயிர்த்தெழுதலில் நமக்குக் கிடைக்கப் போகிற சரீரத்தைக் குறித்து இது பேசுகிறது. இது நமக்கு நடக்கப் போகிற ஒரு உருமாற்றத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது. இது சொல்கிறது: ‘‘ஜென்ம சரீரம் விதைக்கப்படும் (அடக்கம் செய்யப்படும்). ஆவிக்குரிய



You Matter to God(Tamil)-2018.indd 105 5/22/2018 6:18:07 PM

சரீரம் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமும் உண்டு. ஆவிக்குரிய சரீரமும் உண்டு.''

''ஜென்ம சரீரம்'' என்ற வார்த்தைக்கு, கிரேக்க மொழியில் என்ன வார்த்தை எழுதப்பட்டிருக்கும் என்பதை உங்களால் யூகிக்க முடிகிறதா? சைக்கோஸ் (psuchekos) என்ற வார்த்தையை யூகித்திருந்தீர்கள் என்றால், அது சரியான ஒன்றுதான். அது விழுந்துபோன சரீரமாய் (soulish body) விதைக்கப்படுகிறது. அது ஆவிக்குரிய சரீரமாய் எழுப்பப்படுகிறது. இந்த வசனத்தைக் குறித்த என்னுடைய புரிதலை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இப்பொழுது நம்மிடமிருக்கும் சரீரங்களை, ஆவியினால் நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன். ஆவியானது, ஆத்துமாவின் வழியாகத்தான் அதைச் செய்ய வேண்டும். ஆக, உங்களுக்கும், எனக்கும் விழுந்துபோன ஒரு சரீரம்தான் (soulish body) இப்பொழுது இருக்கிறது. ஆனால் நாம் உயிர்ப்பிக்கப்படும்போது (இது உற்சாகமாக இருக்கின்றது), ஆவிக்குரிய சரீரத்தை உடையவர்களாய் நாம் இருப்போம். அப்பொழுது நம்முடைய சரீரம் என்ன செய்ய வேண்டும் என்று நம்முடைய ஆவி, நம் சரீரத்திற்குச் சொல்லும். நாமும் அதைச் செய்வோம். இது ஆச்சரியமானது. நீங்களும் நானும் கதவின் வழியாகச் செல்வோம், மேலும் கீழும் செல்வோம். அதெல்லாம் ஒரு பிரச்சனையாக இருக்காது. காரணம், நமக்கு ஆவிக்குரிய சரீரம் உண்டாகியிருக்கும்.

### "ஜென்ம சுபாவ மனுஷன்"

இரண்டாவதாக, 1 கொரிந்தியர் 2:11-14 வசனங்களை பார்ப்போம். மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கின்ற ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு இவை முக்கியமான வசனங்களாயிருக்கின்றன. பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ''மனுஷனிலுள்ள ஆவியே அன்றி, மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியே அன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான் (1 கொரிந்தியர் 2:11).

தேவனுடைய ஆவியானவரிடமிருந்துதான் தேவனுடைய காரியங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். அந்த அறிவு, உங்களுடைய ஆவியின் மூலமாகத்தான் இறங்கி வருகின்றது. பவுல் தொடருகிறார்: ''நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியானவரையே பெற்றோம்'' (12-ம் வசனம்). இந்தக் காரியங்களையெல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். இது வெளிப்பாட்டின் அறிவாக இருக்கிறது. ''அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே



You Matter to God(Tamil)-2018.indd 106 5/22/2018 6:18:07 PM

பேசாமல், பரிசுத்த ஆவியானவர் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்'' (13-ம் வசனம்).

இன்னொரு மொழிபெயர்ப்பு, இவ்வசனத்தின் கடைசி வார்த்தைகளை இவ்வாறு சொல்கிறது, ''ஆவிக்குரிய சத்தியங்களை ஆவிக்குரிய நபர்களுக்கு வெளிப்படுத்துகிறோம்.'' வேறு வார்த்தைகளில், வேதாகம சத்தியத்தை உலகப்பிரகாரமான மொழியில் உங்களால் விளக்கிச் சொல்ல முடியாது. உளவியலோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி, ஆவிக்குரிய சத்தியத்தை தெளிவாக உங்களால் போதிக்க முடியாது. நீங்கள் வேதாகம வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். ஆகையால்தான் இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொள்கிற இந்தச் சத்தியங்கள் மிகவும் முக்கியமானவையாய் இருக்கின்றன. காரணம், சரியான வார்த்தைகளைப் பயன்படுத்தும்படி நீங்கள் கற்றுக் கொள்ளாதவரை, இந்தச் சத்தியங்களை உங்களால் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியாது. அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளவும் முடியாது.

பவுல் தொடர்ந்து எழுதுகிறார்:

> *ஜென்ம சுபாவமான மனுஷனோ* **(soulish man)** *தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.*
>
> 1 கொரிந்தியர் 2:14-15

ஜென்ம சுபாவமான மனுஷன் (soulish man) என்ற வார்த்தையை நாம் இங்கு பார்க்கின்றோம். தன் ஆத்துமாவின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்கின்ற, ஆவியிலிருந்து துண்டிக்கப்பட்ட, ஜென்ம சுபாவமுள்ள இந்த நபரால் தேவனுடைய காரியங்களை அறிந்து கொள்ள முடியாது. உண்மையில், அவை இந்த நபருக்கு முட்டாள்தனமாகத் தெரியும். தேவனே நியமித்த விஷயங்களாகிய அந்நிய பாஷைகளில் பேசுதலைக் குறித்தும், சுகமளிக்கும் வரங்களைக் குறித்தும் சிலர் ஏன் கேலியும் கிண்டலும் செய்கிறார்கள் என்பதை இப்பொழுது உங்களால் அறிந்து கொள்ள முடியும். அவர்களுடைய பிரச்சனையை உங்களால் புரிந்து கொள்ள முடியும். அவர்களுக்கு இவை முட்டாள்தனமாகத் தெரிகின்றன.

### *"லௌகீக ஞானம்"*

மூன்றாவதாக, யாக்கோபு நிருபத்தில் எழுதப்பட்ட இதே போன்றதொரு வேதப்பகுதியைப் பார்ப்போம்:



You Matter to God(Tamil)-2018.indd 107 5/22/2018 6:18:07 PM

*உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.*

யாக்கோபு **3:14-15**

இங்கு ''லௌகீக ஞானம்'' என்ற வார்த்தை, விழுந்து போன சுபாவத்தைக் குறிக்கின்ற வார்த்தையாகத்தான் (soulish) இருக்கிறது.

இரண்டு வகையான ஞானம் இருக்கிறது என்பதை இந்த வேதப்பகுதியிலிருந்து நாம் பார்க்கின்றோம். ஒன்று, மேலே பரத்திலிருந்து வருகிற ஞானமாகும். இது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து, மனுஷனுடைய ஆவியின் மூலமாய் ஆத்துமாவிற்கு வருகின்றது. இது தூய்மையான ஞானமாகும். இது தேவ ஞானமாயிருக்கிறது.

ஆனால் இன்னொரு வகையான ஞானமும் இருக்கின்றது. மனுஷனுடைய ஆத்துமா, மனுஷனுடைய ஆவிக்கு தன்னை ஒப்புக்கொடுக்காதபோது, இந்த ஞானம் கிரியை செய்கின்றது. இந்த ஞானம், உலக சம்பந்தமானது. இது விழுந்துபோன ஜென்ம சுபாவத்துக் குரியது. இது பேய்த்தனத்திற்கு அடுத்ததாயிருக்கிறது. லௌகீக அல்லது உலக சம்பந்தமானது என்றால், அது சீர்கேடுகளுக்கு நேராக நடத்துகிற ஞானம் என்று அர்த்தமாகும். தேவனோடு நேரடி ஐக்கியம் கொண்டிருக்கிற தளத்திலிருந்து கீழே மிகவும் மோசமாக விழுந்து போன நிலையில் உண்டான ஞானமாக இது இருக்கிறது.

அது படிப்படியாக மேலும் மேலும் மோசமடைகின்றது. தேவனிடமிருந்து வராத ஞானத்தினுடைய வீழ்ச்சியின் கீழ்நோக்கிய படிகளை இந்த வேதவசனம் நம் முன் வைக்கின்றது. முதலில், இது உலக அல்லது லௌகீக சம்பந்தமானது. அடுத்ததாக, இது விழுந்துபோன ஜென்ம சுபாவத்திற்குரியது. கடைசியில், இது பேய்த்தனத்திற்கு அடுத்ததாயிருக்கிறது.

''கிறிஸ்தவர்கள் எப்படி பிசாசின் பிடியில் சிக்கிக் கொள்கிறார்கள் ?'' என்று பலரும் கேட்கின்றனர். இவ்வசனம் அதற்கான பதிலைக் கொடுக்கின்றது. தேவனோடு இருக்க வேண்டிய ஆவிக்குரிய உறவிலிருந்து வெளியே வந்து, உங்களுடைய ஆத்துமாவின் ஐக்கியத்திற்குள் நீங்கள் திரும்பிச் செல்வீர்கள் என்றால், உங்களுடைய வாழ்க்கை, உலக சம்பந்தமானதாகவும், விழுந்துபோன நிலைக்கும் சென்று விடும். உங்களுடைய ஆத்துமா, பிசாசின் பிடியில் சிக்கிக் கொள்ளும். இந்தச் சாத்தியத்தை உங்களால் பார்க்க முடிகின்றதா ? எங்கெல்லாம் பகைவைராக்கியமும், சண்டையும், பிரிவினையும் இருக்கிறதோ, அங்கெல்லாம் லௌகீக சம்பந்தமான காரியங்கள்தான்



You Matter to God(Tamil)-2018.indd 108 5/22/2018 6:18:07 PM

மையங்கொண்டிருக்கும், விழுந்துபோன நிலையும், பிசாசின் ஆதிக்கமும் காணப்படும். சபைகளில் இப்படிப்பட்ட சூழ்நிலை காண்ப்படுகிறதா ?

விழுந்துபோன சுபாவத்திற்குள் நாம் செல்லும்போது, நம் ஆத்துமா தன்னை ஆவிக்கு ஒப்புக்கொடுக்காதபோது, அது தற்பெருமையிலும், அகங்காரத்திலும், முரட்டாட்டத்திலும், தன் சுய உரிமையை நிலைநாட்டுவதிலும் செயல்படும்போது, அது நம்மை பிசாசினுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகின்றது. அதன் விளைவாக உண்டாகிற ஞானம், சுத்தமானதல்ல. அது பரிசுத்தமானதல்ல. அது பொல்லாததாயிருக்கிறது.

### *“ஜென்ம சுபாவத்தார்”*

யூதா நிருபத்திலிருந்து நான்காவது வேதப்பகுதியைப் பார்ப்போம். ஒரு சபையின் சூழலில் இருப்பவர்களைக் குறித்துதான் இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

> *இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள் (வேறு வார்த்தைகளில் சொன்னால், இவர்கள் தங்களுடைய ஆத்துமாவிற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்). இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும். தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள். (ஆனால்) நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள். கடைசி காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. இவர்கள் பிரிந்து போகிறவர்களும், ஜென்ம சுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே.*
>
> யூதா **16-19**

திரும்பவும் கேட்கிறேன். ஜென்ம சுபாவத்தார் என்றால் என்ன என்பதை உங்களால் யூகிக்க முடிகின்றதா ? இது திரும்பவும் விழுந்துபோன சுபாவத்தைக் குறிக்கின்ற வார்த்தையாக (soulish) இருக்கிறது. இது பிசாசுத்தனத்தைக் குறிக்கின்றது. சபையில் யார் பிரிவினையை உண்டாக்குகிறார்கள் ? பிசாசின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்கின்ற, பிசாசின் சுபாவத்தை உடைய இவர்கள்தான் சபையில் பிரிவினையை உண்டாக்குகிறார்கள். கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரிவினைக்கான ஆரம்பம், ஆத்துமாவின் மண்டலத்தில்தான் நடக்கின்றது என்பதை இவ்வேதப்பகுதியில் நாம் பார்க்கின்றோம்.

ஆத்துமாவின் தளத்தில், பிசாசினுடைய ஆதிக்கத்தின் கீழ் ஒரு மனுஷன் வாழும்போது, தன்னுடைய ஆவிக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் அவன் தன்னை ஒப்புக்கொடுக்காதபோது, அங்கே பிரிவினையும், சண்டைகளும், பகைவைராக்கியங்களும், வேதாகமப்



You Matter to God(Tamil)-2018.indd 109 5/22/2018 6:18:07 PM

புரட்டுகளும், எல்லா வகையான தீமைகளும் உள்ளே நுழைகின்றன. ஆவிக்கு தன்னைக் கீழ்ப்படுத்தாத ஆத்துமா, மூடப்படாத, பாதுகாக்கப்படாத நிலையில் இருக்கின்றது. அது மாம்சீகமான, பிசாசுத்தனத்திற்கடுத்த எல்லா வகையான தீமைகளினுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றது.

இவற்றுக்கிடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறியக் கூடியவர்களாய் நாம் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! ஆவிக்குரியவர்களாய் வாழ்வதற்கும், ஆத்துமாவிற்குரியவர்களாய் வாழ்வதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறியக்கூடியவர்களாய் நாம் இருக்க வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் நான் கவனித்து அறிந்த விஷயத்தை நேர்மையாய் இங்கு சொல்கிறேன். நான் சந்தித்தவர்களில் பெரும்பாலானோர் இதை அறிய முடியாத நிலையில்தான் வாழ்கின்றனர். ஆவிக்குரிய விஷயம்போல தோற்ற மளிக்கிற ஆத்துமாவிற்குரிய ஒன்றினால் அவர்கள் எப்பொழுதும் முட்டாள்களாக்கப்படுகின்றனர். மெய்யான விஷயத்திற்கு மாற்றாக, போலியாக ஒன்றை உருவாக்குவதுதான் ஆத்துமாவின் முக்கியமான வேலையாக இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

## வித்தியாசத்தைக் கண்டறிய வேண்டும்

மறுபடியும் பிறந்த மனுஷனுடைய ஆவியின் மூன்று முக்கியமான பணிகளைக் குறித்து 7-ம் அத்தியாயத்தில் நாம் பார்த்தோம். ஆராதனை, ஐக்கியம் மற்றும் வெளிப்பாடு என்ற அந்த மூன்று பணிகளைக் குறித்து நாம் அறிந்து கொண்டோம். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் (spiritual), ஆத்துமாவுக்குரிய வாழ்க்கைக்கும் (soulish) இடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டறிய உங்களுக்கு உதவும்படி, அவற்றுள் இரண்டைக் குறித்து நாம் திரும்பவும் இங்கே பார்ப்போம். அவற்றைப் பின்பற்றுவோம். மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியின் வாழ்க்கையில், ஆத்துமா மற்றும் சரீரம் எந்த இடத்தில் இருக்க வேண்டும், அவற்றுக்கிடையே உள்ள தொடர்பு என்ன என்பதையும் அறிந்து கொள்வோம். பிறகு ஆத்துமாவுக்குரிய மாற்றுகள் அல்லது போலிகள், பார்ப்பதற்கு எவ்வாறு தோற்றமளிக்கின்றன என்பதற்கான எடுத்துக்காட்டுகளையும் நாம் பார்ப்போம்.

### ஆராதனை

ஆராதனையின் மூலம், மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி தேவனோடு ஒன்றாய் இசைந்திருக்கிறார். ஆகையால்தான் ஆராதனை என்பது ஒரு மனுஷனுடைய உயரிய ஒரு செயலாயிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். நீங்கள் ஆராதனையை அவ்விதத்தில் பார்க்கவில்லை என்றால், ஆராதனையைக் குறித்து உங்களால் சரியான



You Matter to God(Tamil)-2018.indd 110 5/22/2018 6:18:08 PM

விதத்தில் புரிந்து கொள்ள முடியாது. ஒன்றை உருவாக்கும் ஆற்றல் ஆராதனைக்கு இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். சரீர உறவு எப்படி ஒரு புதிய ஜீவனை உருவாக்குகிறதோ, அப்படியே ஆவிக்குரிய ஐக்கியத்திலும் நடக்கின்றது. சபை மெய்யான விதத்தில் தேவனை ஆராதிக்கவில்லை என்றால், சபையினால் ஒன்றையும் உருவாக்க முடியாது என்பதுதான் உண்மை. நான் அப்படித்தான் விசுவாசிக்கிறேன். ஆராதனையின் மூலம்தான், நாம் தேவனுடைய ஆவியானவருடன் ஒன்றாய் இசைந்திருக்கிறோம். இந்த ஆராதனையிலிருந்துதான், புதிதாய் ஒன்று பிறக்கின்றது. தம்மைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்புகிறார். இயேசு இதை யோவான் 4:23-24 வசனங்களில் சொல்கிறார்.

மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியின் ஆத்துமா, ஆராதனையின் நேரத்தில் என்ன செய்கின்றது? ஜெபம் என்று சிலர் பதிலளிக்கலாம். அது ஒரு நல்ல பதில்தான். ஆனால் ஜெபத்தில் எல்லாம் உள்ளடங்கியிருக்கிறது. துதி, மேலான ஒரு பதிலாக இருக்கிறது. கன்னி மரியாளின் வார்த்தைகளை நினைவுகூருங்கள்: ''என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது'' (லூக்கா 1:46-47). இந்த இரண்டையும் நீங்கள் கலந்து விட முடியாது. இவையிரண்டும் வித்தியாசமானவை.

ஆராதனையில், சரீரம் என்ன செய்கிறது? தலை வணங்குகிறது அல்லது முழங்கால்படியிடுகிறது என்று நான் சொல்வேன். நாம் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்து கொள்ளலாம், நம் கரங்களைத் தட்டலாம் அல்லது நம் கைகளை உயர்த்தலாம். நாம் முழு மனுஷர்களாய் இருக்கிறபடியால், நம்முடைய ஒவ்வொரு பகுதியும் ஆராதனையில் அதற்குத் தகுந்த விதத்தில் ஈடுபட வேண்டும்.

## வெளிப்பாடு

வெளிப்பாட்டைக் குறித்து பவுல் இவ்வாறு ஜெபிக்கிறார்: ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று ஜெபிக்கின்றேன்'' (எபேசியர் 1:17).

வெளிப்பாடு என்பது தேவனுடைய ஆவியானவரிடமிருந்து உங்களுடைய ஆவிக்குள் நேரடியாக இறங்கி வருகின்றது. அது உங்களுடைய ஆத்துமாவின் வழியாக வருவதில்லை.

வெளிப்பாடு உண்டாகும்போது, ஆத்துமாவில் என்ன வேலை நடக்கின்றது? போதித்தல் என்று நான் சொல்வேன். ஒரு இறையியல் கோட்பாடோ அல்லது ஒரு போதனையோ அங்கு போதிக்கப்படுகிறது.



You Matter to God(Tamil)-2018.indd 111 5/22/2018 6:18:08 PM

இது இவற்றையெல்லாம் ஆராய்ந்து அறிந்து கற்றுக் கொள்கிற ஒரு விஷயமாயிருக்கிறது. இறையியல் போதனைகள் இன்றைக்கு நிறையவே பெரும்பாலான சபைகளில் போதிக்கப்படுகின்றன. ஆனால் அங்கே வெளிப்பாடுதான் இல்லை. இது வருந்தத்தக்க ஒரு விஷயம்.

வெளிப்பாட்டைப் பெறும்போது, சரீரத்தில் என்ன நடக்கின்றது? உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டாகிறது என்பதுதான் என் பதில். உங்களுடைய உணர்வுகளைக் கொண்டு, இவ்வுலகத்தை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள்.

## ஆத்துமா உருவாக்கிய போலியான மாற்று வழிகள்

இந்த உண்மையான ஆவிக்குரிய செயல்களுக்கு மாற்றாக, பொய்யான வழிகளை ஆத்துமா உருவாக்கி வைத்திருக்கிறது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம். முற்றிலும் என் தனிப்பட்ட புரிதலில் இருந்து, இந்தப் பட்டியலைத் தருகின்றேன்.

முதலில், ஆராதனையை எடுத்துக் கொள்வோம். ஆராதனையின் இடத்தில், அதற்கு மாற்றான போலியாக, ஆத்துமாவுக்குரிய விழுந்துபோன தன்மை (soulish) எதை வைத்திருக்கிறது? ‘பொழுதுபோக்கு’ என்பதுதான் என் பதில். ஆராதனைக்குரிய இசைக்கும், பொழுதுபோக்குக்குரிய இசைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை பெரும்பாலான கிறிஸ்தவர்களால் வேறுபிரித்தறிய முடியவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். நாஷ்வில்லில் இருப்பவர்கள்தான் இதற்கு முக்கியக் காரணமாயிருக்கிறார்கள். நிறைய டாலர்களைச் சம்பாதிக்கும் நோக்கில், ஆராதனை இசையை அவர்கள் வணிகமயமாக்கி விட்டனர். கிறிஸ்தவர்கள் அதை பொழுதுபோக்கு இசையாக பார்க்கும் நிலைக்கு அவர்கள் கொண்டு சென்று விட்டனர். ஆனால் ஆராதனை என்பது பொழுதுபோக்கான ஒரு விஷயமல்ல. பொழுதுபோக்கு என்பது உங்களுடைய சந்தோஷத்திற்கென்று நீங்கள் செலவிடும் நேரமாகும். ஆனால் ஆராதனை என்பது தேவனுக்குப் பிரியமான விதத்தில் செலுத்துகிற ஜீவ பலியாயிருக்கிறது.

அடுத்ததாக, ‘வெளிப்பாட்டிற்கு’ மாற்றான போலி எது? என்னுடைய தனிப்பட்ட அனுபவங்களிலிருந்துதான் நான் இதைச் சொல்கிறேன். அதே அனுபவங்களின் வழியாக நீங்கள் கடந்து செல்லாமல் இருந்திருக்கலாம். ‘தந்திரமாய் மற்றவர்களை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் அல்லது ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ளுதல் (manipulation)’ தான் இங்கு மாற்றான போலியாக இருக்கின்றது. இப்படியொரு சூழ்நிலையை நான் நினைத்துப் பார்க்கிறேன். சபையில் நடக்கின்ற ஒரு கூட்டத்தில் நீங்களும் இருக்கின்றீர்கள். பிரசங்கியார் இவ்வாறு சொல்கிறார், ‘‘இப்பொழுது இங்கே இருக்கின்றவர்களில்



You Matter to God(Tamil)-2018.indd 112 5/22/2018 6:18:08 PM

பத்து பேர், ஒவ்வொருவரும் ஆயிரம் டாலர்களை காணிக்கையாகக் கொடுக்கப் போகிறார்கள்.'' இது ஒரு வெளிப்பாடா? இது ஒரு வெளிப்பாடாக இருக்கலாம். ஆனால் இது ஒரு வெளிப்பாடு அல்ல என்றால், இதை நீங்கள் என்னவென்று சொல்வீர்கள்? இப்படிச் சொல்வதன் மூலம், அந்தப் பிரசங்கியார் அந்தக் கூட்டத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றார்.

எனக்கு ஒரு சுவிஸ் நண்பர் இருக்கிறார். அவர் ஒரு தொழிலதிபர். இப்படிப்பட்ட ஒரு கூட்டத்திற்கு அவர் சென்றதைக் குறித்து, அவரே என்னிடம் சொன்னார். பிரசங்கியார் ஒரு தேவையை முன் வைத்திருக்கிறார். இவரும் ஆயிரம் டாலர்களைக் கொடுத்திருக்கிறார். வீட்டிற்குச் செல்லும் வழியில், தன் மீதே எரிச்சலடைந்தவராக அவர் சென்றிருக்கிறார். காரணம், தான் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது அவருக்குத் தெரியும். அவருடைய மனைவி அவரிடம், ''இதே காரியத்தை நான் செய்திருந்தால், நீங்கள் என்னிடம் கோபப்பட்டிருப்பீர்கள்,'' என்று சொல்லியிருக்கிறார்.

அதே வார்த்தைகள் இங்கு முக்கியமல்ல. ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், ஆத்துமாவிற்குரிய விழுந்துபோன வாழ்க்கைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நீங்கள் பார்க்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். நீங்கள் விழுந்து விடாமல், உறுதியாய் நிற்க வேண்டும் என்றால், நீங்கள் இதைப் பார்க்க வேண்டும். இவைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தைப் பார்க்கும்படி நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இது அத்தியாவசியமானது. நீங்கள் இந்தச் சத்தியத்தைப் புரிந்து கொள்ளும்போது, இந்த வித்தியாசத்தை மிகவும் எளிதாகப் பார்த்து விடுவீர்கள். உங்களால் அதைச் செய்ய முடியும்.

ஆவிக்குரிய விதத்தில் இந்தப் பிரித்தறிகிற திறனை (discernment) எடுத்துக் கொள்வோம். இதற்குப் போலியாக, ஆத்துமாவுக்குரிய சுபாவம் எதை உருவாக்கி வைத்திருக்கிறது? மற்றவர்கள் மீது குற்றங்குறை கண்டுபிடிக்கிற செயலாகும் (criticism). ஆத்துமாவுக்குரிய விழுந்துபோன சுபாவம் கொண்டவர்கள், எப்பொழுதும் மற்றவர்கள் மீது குற்றஞ்சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

'செய்த தவறைக் குறித்த உணர்த்துதலை (conviction)' எடுத்துக் கொள்வோம். இதற்கு போலியாக என்ன இருக்கிறது என்பது பெரும்பாலானோருக்குத் தெரியாது. குற்ற உணர்வை உண்டாக்குதல்தான் இது (guilty). எனக்கு எரிச்சலை உண்டுபண்ணுகிற விஷயங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் உங்களை குற்ற உணர்வுக்குள்ளாக்க மாட்டார் என்பதை நான் உறுதியாக விசுவாசிக்கிறேன். நீங்கள் செய்த பாவம் அல்லது தவறைக் குறித்து அவர் உங்களுக்கு உணர்த்துவார். நீங்கள் என்ன தவறு செய்திருக்கிறீர்கள் என்பதை அவர்கள் உங்களுக்குச் சொல்வார்.



You Matter to God(Tamil)-2018.indd 113 5/22/2018 6:18:08 PM

அதிலிருந்து மனந்திரும்பும்படி அவர் உங்களை அழைப்பார். நீங்கள் அதிலிருந்து மனந்திரும்பி விட்டீர்கள் என்றால், அதோடு அந்த விஷயம் முடிந்து விடுகிறது, அவ்வளவுதான்.

என்னை குற்ற உணர்வுக்குள்ளாக்குகிறவர்களின் நோக்கத்தை எப்பொழுதுமே நான் சந்தேகப்படுகிறேன். ஒருபோதும் அதில் நல்ல நோக்கங்கள் இருக்காது. வழக்கமாக, அவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் என்னை நடத்தும்படி முயற்சிக்கின்றார்கள். குற்ற உணர்வினால், ஒருபோதும் அந்தப் பிரச்சனை தீரப் போவதில்லை. ‘‘நான் சரியாகத்தான் செய்கிறேனா? நான் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமா? நான் என்ன சொன்னேன்? வேறு எதையாவது சொல்லியிருக்க வேண்டுமா?’’ இந்த எண்ணங்கள் முடிவே இல்லாமல் ஓடிக் கொண்டே இருக்கும்.

மனதுருக்கத்தைக் (compassion) குறித்து என்ன சொல்லப் போகிறோம்? பரிதாபம் (sympathy) கொள்வதை அதற்குப் போலியாக, ஆத்துமாவுக்குரிய சுபாவம் உருவாக்கி வைத்திருக்கிறது. நிறைய பேருக்கு இன்று மற்றவர்களுடைய பரிதாபம்தான் தேவையாயிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு மனதுருக்கம் தேவையில்லை. மனதுருக்கம் வல்லமையானது. அது மாற்றத்தை எதிர்பார்க்கிறது. ‘‘நீ மாற முடியும்,’’ என்று அது சொல்கிறது. ஆனால் பரிதாபம் சொல்கிறது, ‘‘உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. உன்னைப் பார்த்தாலே பரிதாபமாக இருக்கிறது. நானும் உன்னோடு கூட உட்கார்ந்து, உன் நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன். உன் சுய பரிதாப உணர்வை அதிகமாக்குகிறேன்.’’

## விசுவாசியின் யுத்தகளம்

எவ்வாறு ஆத்துமா, முக்கியமான பிரச்சனைக்குரிய ஒரு இடமாக எப்பொழுதுமே இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கிறீர்களா? மனுஷனுடைய எல்லாப் பிரச்சனைகளுக்கும் வேர்க்காரணம், ஆத்துமாவில் தேவனுக்கு விரோதமாக நடக்கும் முரட்டாட்டமே. எனவே இவ்விஷயத்தில் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாத நிலையில், நாம் நிற்க முடியாது. முன்னெச்சரிக்கையுடன் நாம் செயல்பட்டே ஆக வேண்டும். ஆத்துமா, சாத்தானின் இலக்காய் இருக்கிறபடியால், நிச்சயமாக, நீங்களும் நானும் இந்தப் பகுதியில் சோதிக்கப்படுவோம்.

நம் ஆத்துமாவில்தான், நாம் எப்பொழுதும் சோதிக்கப்படுகிறோம். காரணம், விழுந்துபோன, இன்னும் மறுபடியும் பிறக்காத மனுஷனுடைய ஆத்துமா, கீழ்ப்படியாமை எனும் வியாதியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் வெளியே இருந்து மட்டுமே சோதிக்கப்படுவோம் என்ற நிலை இல்லை. சோதிக்கப்படுதலின் ஆரம்பம், நம் ஒவ்வொருவருக்கும் உள்ளே தான் இருக்கிறது. அது வெளியே காணப்படும் தீமைகளுக்கு இணங்கி நடப்பதை மிகவும் எளிதாக்கி விடுகிறது. இது ஆத்துமாவின்



You Matter to God(Tamil)-2018.indd 114 5/22/2018 6:18:08 PM

மூன்று பகுதிகளாகிய, மனம், சித்தங்கொள்ளுதல் மற்றும் உணர்வுகளில் நடக்கின்றது. ஒரு கிறிஸ்தவராய் உங்களுடைய பிரச்சனைகளை நீங்கள் அலசி ஆராய்வீர்கள் என்றால், அவையெல்லாம் ஆத்துமாவில்தான் ஆரம்பிக்கின்றன என்பதை கண்டுபிடிப்பீர்கள்.

மேலேயிருந்து தேவனுடைய ஜீவசுவாசத்தினால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியும், கீழே பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட சரீரமும் ஒன்றாய் இணைந்ததன் மூலம் ஆத்துமா உருவாக்கப்பட்டபடியால், மனுஷர்களாகிய நமக்குள் இரு எதிரெதிர் பக்கங்களுக்கு நேராக இழுக்கப்படுகிற ஒரு நிலை காணப்படுகிறது. மேலேயிருந்து உண்டான ஒன்றும் நமக்குள் இருக்கின்றது, கீழே பூமியிலிருந்து உண்டான ஒன்றும் நமக்குள் இருக்கின்றது. இந்த இழுவையை நீங்கள் நிச்சயமாய் அனுபவித்திருப்பீர்கள். அதாவது உங்களில் ஒரு பகுதி மேல் நோக்கி இழுக்கும். இன்னொரு பகுதி, உங்களை கீழ் நோக்கி இழுக்கும். பிளேட்டோ என்ற தத்துவ ஞானி இதை இவ்வாறு சொன்னார்: ‘‘ஆத்துமா எனும் இரதத்தில் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று, வெள்ளைக் குதிரை. இன்னொன்று, கறுப்புக் குதிரை. வெள்ளைக் குதிரை முன்னோக்கிச் செல்ல விரும்புகிறது. கறுப்புக் குதிரை பின்னோக்கிச் செல்ல விரும்புகிறது.’’ இது ஒரு உருவகம் அல்லது பட விளக்கம். ஆனால் இது சத்தியம் என்று நான் விசுவாசிக்கிறேன்.

மெய்யாகவே, நம்முடைய ஆத்துமா தான், பயங்கரமான ஆவிக்குரிய சக்திகள் ஈடுபடுகின்ற ஒரு யுத்தகளமாக இருக்கின்றது. இந்தச் சத்தியத்தை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, நீங்கள் யுத்த களத்தில் நிற்கின்றீர்கள், ஒரு யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்ற உண்மை உங்களுக்கு அதிர்ச்சியாய் இருக்காது. உண்மையில், நாம் எல்லோருமே யுத்த களத்தில்தான் நிற்கின்றோம். ஆகையால் இந்த யுத்தத்தின் தன்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதோடு நின்று விடாமல், வெற்றிக்காக தேவன் என்ன முன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தேவனோடு ஒரு நிலையான ஐக்கிய உறவைக் கொண்டிருப்பதன் மூலம், வெற்றியும், பாதுகாப்பும் நமக்கு உண்டாகிறது. அழுத்தங்களையும், சோதனைகளையும் நிச்சயமாய் நாம் எதிர்கொள்கின்றோம். ஆனால் இந்த உறவை சரியான நிலையில் காத்துக் கொள்ளும்போது, நிச்சயமாகவே எப்பொழுதும் நமக்கு வெற்றியும் பாதுகாப்பும் உண்டாகும்.

ஆத்துமா தன் சுய சித்தத்திற்கும், முரட்டாட்டத்திற்கும் நேராக திரும்பும்போது, அது பாவம் மற்றும் சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடுகின்றது. அங்கே வீழ்ச்சி ஆரம்பிக்கிறது. நாம் என்ன நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டோமோ, அதற்காக வாழ விடாதபடி, பாவம் ஒரு தடையாய் இருக்கிறது. ஆனால் பாவத்திலிருந்து இரட்சிப்பு



You Matter to God(Tamil)-2018.indd 115 5/22/2018 6:18:08 PM

உண்டாகும்போது, அந்த நோக்கத்திற்காக வாழும்படி ஒரு வழியை அது திறந்து விடுகின்றது.

நான் இங்கு சொல்கின்ற விஷயத்தின் சாராம்சத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா? ஒரு மனுஷனுக்கு எங்கே மெய்யான பாதுகாப்பு உண்டாகிறது? முதலில், அவனுடைய ஆவி தேவனிடம் திரும்ப வேண்டும், அவரோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். அவனுடைய ஆத்துமா, தன் சுயத்தை மறுதலித்து, அவனுடைய ஆவிக்கு இணங்கிய நிலையில், எப்பொழுதும் தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும். அந்த நிலையில் மட்டுமே, அங்கு மட்டுமே பாதுகாப்பு கிடைக்கின்றது.

## விழுந்துபோன இந்த சுபாவத்தை கண்டறிவதற்கான சோதனை

எது உச்சகட்ட சோதனை? ஒருவர் ஆவிக்குரியவரா அல்லது ஆத்துமாவுக்குரியவரா என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? 'அவருடைய கனிகளால்' என்பதுதான் பதில்.

மலைப்பிரசங்கத்தின் முடிவில், இயேசு ஞானமாய் இந்த வார்த்தைகளைப் பேசுகிறார். மத்தேயு 7:15-16 வசனங்களை நாம் வாசிப்போம்: "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு, உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" என் நண்பரே, கனிகளை சோதித்துப் பாருங்கள். அவர் பேசுகிற வார்த்தைகளை மட்டும் கவனிக்காதீர்கள். விழுந்துபோன சுபாவத்தோடு வாழ்கின்றவர், தேவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் ஆவிக்குரிய நபரோ தேவனிடமிருந்து வெளிப்பாட்டை இயல்பாகப் பெற்றுக் கொள்வார்.

எபிரெயர் 4:12-13 வசனங்களை நாம் ஏற்கனவே வாசித்திருந்தோம். தேவனுடைய வார்த்தை மட்டுமே ஆவியையும், ஆத்துமாவையும் பிரிக்கக்கூடிய ஒரே விஷயமாய் இருக்கிறது என்பதை இவ்வசனங்கள் சொல்கின்றன. வேறு எதையாவது நாம் நாடுவோம் என்றால், நமக்கு ஒரு தீர்வும், பதிலும் கிடைக்காது. தேவனுடைய வார்த்தைக்குச் சென்று, அந்தக் கண்ணாடியில் பார்க்கிறவர்களால் மட்டுமே இந்தச் சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 116 5/22/2018 6:18:08 PM

# 10

# முழுமையாய் பரிசுத்தமாக்கப்படுதல்

*கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர். உத்தம நிதானிப்பையும், அறிவையும் எனக்குப் போதித்தருளும். உம்முடைய கற்பனைகளின்பேரில் விசுவாசமாயிருக்கிறேன்.*

சங்கீதம் 119:65-66

வேதாகமத்தைக் குறித்த என் புரிதல் இதுதான். நான் முன்பே இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது ஆதாமையும், அவனுடைய விழுந்துபோன சந்ததியாரையும் அக்கறையாய் விசாரிப்பதை தேவன் ஒருபோதும் நிறுத்தினதில்லை என்பதுதான் அது. இது வரலாற்றின் ஆச்சரியமான உண்மைகளில் ஒன்றாயிருக்கிறது. நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு நாம் எவ்வளவு முக்கியமானவர்களாய் இருக்கிறோம் என்பதற்கு இது ஆதாரமாக இருக்கிறது.

நாம் இதை இரண்டாம் அத்தியாயத்தில் பார்த்தோம். யாக்கோபு 4:5-ம் வசனத்தையும் அங்கே பார்த்தோம்: ''நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? (நமக்குள் வாசம் பண்ணும்படி தந்த ஆவியைக் குறித்து தேவன் வைராக்கிய வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார்)'' தேவன் தம்மில் ஒரு சிறிய பகுதியை நமக்குள் ஜீவசுவாசமாய் ஊதியிருக்கிறார். தேவன் ஒருபோதும் நம்மை கைவிரித்து விடுவதில்லை. ''அவ்வளவுதான். நான் உன்னை கைவிட்டேன்,'' என்று அவர் ஒருபோதும் சொல்லியதில்லை.



You Matter to God(Tamil)-2018.indd 117 5/22/2018 6:18:08 PM

அந்த ஆவியுடன் உறவு திரும்பவும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற வைராக்கிய வாஞ்சையோடு, ஏக்கத்தோடு ஆயிரக்கணக்கான வருடங்கள் அவர் காத்திருந்தார். அவர் இதை லூக்கா 19:10-ல் உறுதிப்படுத்துகிறார். ''இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே'' இயேசு வந்தார் என்று இது சொல்கிறது. மனுஷனுக்குள் தேவன் வைத்த ஆவி பிரிக்கப்பட்டது. தேவனுடனான ஐக்கியத்திலிருந்து அது துண்டிக்கப்பட்டது. கீழ்ப்படியாமை அல்லது முரட்டாட்டம் எனும் அலையில் அது அடித்துச் செல்லப்பட்டது.

யூதத் தலைவர்கள் இயேசுவைக் கொல்லும்படி ஆலோசனை செய்தபோது, அங்கிருந்த பிரதான ஆசாரியன் ஒருவன், இயேசுவைக் குறித்து, ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரு மனுஷன் மரிப்பது நலமாயிருக்கும் என்று சொன்னான். யோவான் 11:52-ஐ வாசித்துப் பாருங்கள். ''சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காக இயேசு மரிப்பார்'' என்று அந்தப் பிரதான ஆசாரியன் தீர்க்கதரிசனமாகச் சொன்னான் என்று யோவான் குறிப்பிடுகிறான். சிதறடிக்கப்பட்டு தொலைந்து போனவர்களை திரும்பவும் கூட்டிச் சேர்க்க வேண்டிய விஷயத்தில் தேவன் வைராக்கிய வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார் என்பதைத்தான் இவ்வசனம் சுட்டிக் காண்பிக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். அந்த நோக்கத்திற்காகத்தான் இயேசு வந்தார்.

## புதுச் சிருஷ்டி

ஒரு சில நிமிடங்களுக்கு இந்தப் புதிய சிருஷ்டிப்பைக் குறித்துப் பார்ப்போம். இது மிகவும் மகிமையான ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. பவுல் சொல்கிறார், ''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு, நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.''

புதுச் சிருஷ்டி என்பது முற்றிலும் தேவனால் உண்டான ஒரு காரியமாயிருக்கிறது. இது முழுவதும் புதிதான ஒரு விஷயமாயிருக்கிறது. தேவன் நம்மை ஒட்டுப் போட்டு சேர்க்கவில்லை. அவர் நம்மைப் பழுது பார்க்கவில்லை. அவர் நம்மைச் சீர்திருத்தி, இன்னும் கொஞ்சம் மேம்படச் செய்யவில்லை. அவர் கிறிஸ்துவுக்குள் நம்மை ஒரு புதிய சிருஷ்டிப்பாக உருவாக்கியிருக்கிறார். தேவனால் மட்டுமே அதைச் செய்ய முடியும். காரணம், அவர் ஒருவரே சிருஷ்டிகர்.

இது எவ்வாறு நிகழ்கின்றது என்பதைக் குறித்து யோவான் சுவிசேஷத்தில் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுந்த இயேசு தம் சீஷர்களுக்கு முன் தோன்றினார். மூடிய கதவுகளுக்குப்



You Matter to God(Tamil)-2018.indd 118 5/22/2018 6:18:08 PM

பின்னால் ஒளிந்து கொண்டிருந்த அவர்களுக்கு முன் இயேசு தோன்றினார்.

> *வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால், கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று, ''உங்களுக்குச் சமாதானம்,'' என்றார். அவர் இப்படிச் சொல்லி, தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி, ''உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக. பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்,'' என்று சொல்லி, அவர்கள் மேல் ஊதி, ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்,'' என்றார்.*
>
> யோவான் 20:19-22

இதற்கு இணையாக, கிரேக்க மூலமொழியில் எழுதப்பட்ட வார்த்தைகளை ''பரிசுத்த சுவாசத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்,'' என்றும் மொழிபெயர்க்கலாம். அவர் பரிசுத்த ஆவியானவர்தான். அவர் அவர்களுக்குள் ஜீவசுவாசமாக ஊதப்பட்டார்.

ஆதியில் சிருஷ்டிப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இங்கே இந்தப் புது சிருஷ்டிப்பிலும் அதே காரியம்தான் அப்படியே நடக்கின்றது. எல்லாவற்றையும் முற்றிலுமாய் ஜெயங்கொண்டு, உயிர்த்தெழுந்த இரட்சகராகிய கிறிஸ்து தம் சீஷர்களைச் சந்தித்தார். முற்றிலும் புது வகையான ஜீவனை அவர் அவர்களுக்குள் ஊதினார். அது பாவத்தையும், மரணத்தையும், நரகத்தையும், கல்லறையையும், சாத்தானையும் ஜெயமாய் வென்றெடுத்த ஜீவனாய் இருக்கிறது. அது எதினாலும் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு ஜீவனாய் இருக்கிறது. அந்த ஜீவனைத்தான் அவர் அவர்களுக்குள் ஊதினார். இதுதான் மறுபடியும் பிறக்கின்ற அனுபவமாக இருக்கின்றது. இதுதான் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாய் உருவாகின்ற அனுபவமாக இருக்கின்றது. இது உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்து, அவரிடமிருந்து உயிர்த்தெழுதலின் ஜீவனை, நித்திய ஜீவனை, தேவரகமான ஜீவனைப் பெற்றுக் கொள்கிற ஒரு அனுபவமாக இருக்கின்றது.

அந்தக் கணத்தில், சீஷர்கள், பழைய ஏற்பாட்டு இரட்சிப்பிலிருந்து கடந்து வந்து, புதிய ஏற்பாட்டு இரட்சிப்பிற்குள் நுழைந்தார்கள். பழைய ஏற்பாட்டு இரட்சிப்பு முன்னோக்கி பார்த்தது. புதிய ஏற்பாட்டு இரட்சிப்பு, நடந்து முடிந்த வரலாற்று உண்மையை நோக்கி, திரும்பிப் பார்க்கிறது. புதிய ஏற்பாட்டு இரட்சிப்பிற்குள் நுழைய வேண்டுமென்றால், நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும் என்று பவுல் சொல்கிறார்: ஒன்று, இயேசுவை நம் ஆண்டவராக அறிக்கை செய்ய வேண்டும். இரண்டாவது, தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என்று விசுவாசிக்க வேண்டும் (ரோமர் 10:9-ஐ வாசியுங்கள்).



You Matter to God(Tamil)-2018.indd 119 5/22/2018 6:18:08 PM

சீஷர்கள் ஏற்கனவே இயேசுவை தங்கள் ஆண்டவராக அறிக்கை செய்திருந்தனர். இந்தக் காட்சி, தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என்று அவர்கள் விசுவாசித்த முதல் தருணமாயிருந்தது. அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டார்கள் என்று பேதுரு எழுதுகிறார் (1 பேதுரு 1:3-ஐ வாசியுங்கள்). புதிய பிறப்பின் மூலம், அவர்கள் இரட்சிப்பிற்குள் நுழைந்தார்கள்.

## இதுவரை நாம் அறிந்து கொண்ட சத்தியங்கள்

மெய்யாகவே நம்முடைய மதிப்பு என்ன என்ற ஒரு அடிப்படைக் கேள்விக்கான பதிலைத்தான் இந்தப் புத்தகத்தில் நாம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம். நம் கவனத்தை அதன் மீது பதித்திருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கென்று அவர் முன் குறித்திருக்கிற வாழ்க்கையில் வளருவதற்கு எவ்வாறு இந்த அறிவு நமக்கு உதவுகிறது என்பதையும் நாம் கற்றுக் கொண்டு வருகின்றோம். இந்தக் கேள்வியைக் கேட்பதோடு நின்று விடாமல், இக்கேள்விக்கான பதிலை திருப்திகரமான விதத்தில் மிகச் சரியாகக் கொடுக்கின்ற ஒரே புத்தகம் வேதாகமம் மட்டுமே என்பதுதான் என் ஆழமான நம்பிக்கையாயிருக்கிறது. மனுஷனுடைய சுபாவத்தைக் குறித்து நாம் தொடர்ந்து ஆராயும்போது, நீங்கள் ஏன் தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்பது உங்களுக்கு இன்னும் இன்னும் அதிகத் தெளிவாக மாறிக் கொண்டே செல்லும் என்று நான் நம்புகிறேன்.

எது நம் அடையாளம்? இக்கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்கும் படியே, நாம் சத்தியங்களைக் கற்றுக் கொண்டு வருகின்றோம். ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தை உடையவர்களாய் உருவாக்கப்பட்ட நாம், தேவனோடு உள்ள உறவிலும், மற்றவர்களோடு இருக்கும் உறவிலும் எவ்வாறு செயல்படும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதை நாம் கற்றுக் கொள்கின்றோம். இது மறுபடியும் பிறந்த விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் மிகவும் அதிக முக்கியத்துவம் உடைய ஒரு விஷயமாயிருக்கிறது. இது நம்முடைய அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட முக்கியமான ஒரு விஷயமாயிருக்கிறது. இந்தப் புதிய வாழ்க்கையை தேவன் நியமித்த விதத்தில் எவ்வாறு நாம் வாழ வேண்டும் என்று இது நமக்கு வழிகாட்டுகிறது. நாம் யார் என்று அறிந்து செயல்படுவதற்கும் இது நமக்கு உதவுகிறது.

இதுவரை நாம் கற்றுக் கொண்ட காரியங்களை திரும்பவும் ஒருமுறை நோக்கிப் பார்ப்போம்.

வேதாகமம், நம்முடைய உள்ளான சுபாவத்தை எடுத்துக் காண்பிக்கிற ஒரு கண்ணாடியாய் இருக்கிறது என்பதைக் குறித்து முந்தின அத்தியாயங்களில் நான் விளக்கிச் சொன்னேன். நம்முடைய



You Matter to God(Tamil)-2018.indd 120 5/22/2018 6:18:08 PM

புறத்தோற்றத்தைப் பார்க்கும்படி, சாதாரணமான ஒரு கண்ணாடியை வழக்கமாக நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் வேதாகமம், விசேஷமான, ஆவிக்குரிய ஒரு கண்ணாடியாய் இருக்கிறது. திரியேக தேவனுடைய சாயலில், திரியேக மனுஷர்களாய் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்தக் கண்ணாடி நமக்கு வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில், தேவனை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என திரியேக தேவனாய் பார்க்கின்றோம். அவர் மூன்று நபர்களாய் இருந்தாலும், ஒரே தேவனாய் இருக்கிறார் என்ற வெளிப்பாட்டையும் பெற்றுக் கொண்டோம். அதோடு தேவன் தம்முடைய சாயலில் நம்மைச் சிருஷ்டித்திருக்கிறார் என்ற உண்மையையும் நாம் அறிந்து கொண்டோம். ஆகையால் தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில், மனுஷன், ஆவி-ஆத்துமா-சரீரம் என்ற மூன்று கூறுகளை உடையவனாய் தெரிகின்றான். இதெல்லாம் தேவனுடைய சிருஷ்டிப்பில் நிகழ்ந்தது. மேலேயிருந்து தேவனுடைய ஆவியானவர், கீழேயிருந்து எடுக்கப்பட்ட களிமண் சரீரத்திற்குள் ஜீவசுவாசமாக ஊதப்பட்டார். ஆவியும் களிமண்ணும் சேர்ந்து அல்லது ஆவியும் சரீரமும் சேர்ந்து, ஜீவாத்துமாவை உருவாக்கின.

பிரதானமாக, தேவன் நம்முடைய ஆவியின் மூலமாகத்தான் நம்மோடு தொடர்பு கொள்கின்றார். மனுஷனுடைய ஆளுமையில் அதிகாரச் சங்கிலி என்பது, தேவனிடமிருந்து ஆரம்பித்து, பரிசுத்த ஆவியானவர் மூலமாய் மனுஷனுடைய ஆவியினிடம் இறங்கி, பிறகு மனுஷனுடைய ஆத்துமாவுக்கு வந்து, கடைசியில் மனுஷனுடைய சரீரத்திடம் வந்து சேருகின்றது.

மனுஷனுடைய ஒவ்வொரு கூறும் செய்ய வேண்டிய முக்கியமான பணிகளைக் குறித்தும் நாம் பார்த்தோம். ஆவியின் பிரதானமான பொறுப்பு, தேவனோடு உடைந்து போகாத ஒரு ஐக்கிய உறவும், ஆராதனை உறவும் கொண்டிருக்க வேண்டும். ஆவியானது தேவனோடுள்ள உறவில் தொடர்ந்து நிலைத்திருக்கும்போது, நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருப்போம். ஆத்துமா, எப்பொழுதும் தேவனிடம் தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும், தன் சுயத்திற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும். சரீரத்தின் பணி, பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணக்கூடிய தூய்மையான ஆலயமாய் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்; தன் அவயங்களை தேவனிடம் இணங்கச் செய்து, கீழ்ப்படுத்தி, ஒப்புக்கொடுக்க வேண்டும்.

மனுஷன் தேவனுக்கு விரோதமாய் எழுந்து, கீழ்ப்படியாமல் போனதினால், அவனுடைய ஒவ்வொரு கூறிலும் உண்டான மகா பேரழிவிற்கு ஏதுவான விளைவுகளைக் குறித்தும் நாம் பார்த்தோம். முதலில், மனுஷனுடைய ஆவி மரித்துப் போனது. நாம் பாவத்திலும், ஆவிக்குரிய விதத்தில் மரித்துக் கிடந்தோம். தேவனுக்கு விரோதமான



You Matter to God(Tamil)-2018.indd 121 5/22/2018 6:18:08 PM

முரட்டாட்டம் எனும் வியாதி, நம் ஆத்துமாவைத் தொற்றிக் கொண்டது. நம்முடைய சரீரங்கள், சீர்கேடுகளுக்கும், சிதைவுகளுக்கும், வியாதிகளுக்கும், முதிர் வயதிற்கும், கடைசியில் மரணத்திற்கும் உள்ளானது.

நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தப் பயங்கரமான பிரச்சனைக்கு தேவன் ஒரு தீர்வை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்! உயிர்ப்பிக்கப்படுதல், அதாவது மறுபடியும் பிறத்தல் தான் தேவனுடைய தீர்வாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மீதும், அவருடைய சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மீதும் விசுவாசம் வைப்பதன் மூலம், நமக்கு இரட்சிப்பு உண்டாகிறது. இரட்சிப்பினால் பின் வரும் நான்கு பலன்கள் நமக்கு உண்டாகின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் புதுப் பிறப்பு உண்டாகிறது.

முதலில், புதுப் பிறப்பு, புதிய ஜீவனை ஆவிக்குக் கொடுக்கிறது. நாம் மறுபடியும் பிறக்கின்றோம். இனியும் நம்முடைய ஆவி, பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்த நிலையில் கிடப்பதில்லை.

இரண்டாவதாக, புதுப் பிறப்பு, தேவனுடனான ஆவியின் தொடர்பை புதுப்பிக்கிறது. நமக்கும் தேவனுக்கும் இடையே இருந்த பிளவு நீக்கப்படுகிறது.

மூன்றாவதாக, இது நம்முடைய ஆத்துமாவை சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்குகிறது. ஆத்துமாவின் மீதிருந்த சாத்தானின் ஆளுகை அகற்றப்படுகிறது.

நான்காவதாக, இது மேலேயிருந்து கீழேவரை சகலத்தையும் தேவனுடைய மீட்பின் திட்டத்திற்குள் கொண்டு வருகின்றது.

### உற்சாகமூட்டும் எதிர்காலம்

நாம் இதுவரை கற்றுக் கொண்ட காரியங்களின் மையக்கருத்து, தேவன் நம்மை எவ்வளவு விலையேறப்பெற்றவர்களாய் பார்க்கிறார், நாம் தேவனுக்கு எவ்வளவு விலைமதிக்க முடியாதவர்களாய் இருக்கின்றோம், நாம் அவருக்கு எவ்வளவு முக்கியமானவர்களாய் இருக்கின்றோம் என்பதுதான். தேவனுடைய பார்வையில், உங்களுடைய மெய்யான மதிப்பு மற்றும் அடையாளத்தை நீங்கள் கண்டடையும்படி, இதுவரை நாம் ஆராய்ந்து கற்றுக் கொண்ட சத்தியங்கள் உங்களுக்கு உதவி செய்யும் என்று நான் நம்புகிறேன்.

இவற்றையெல்லாம் நாம் கற்றுக் கொண்டிருந்தாலும், இன்னும் ஆராய்ந்து அறிய வேண்டிய விஷயங்கள் நிறையவே இருக்கின்றன என்பதுதான் உண்மை. வேதவசனம் சொல்கிறது: ‘‘தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய



You Matter to God(Tamil)-2018.indd 122 5/22/2018 6:18:08 PM

இருதயத்தில் தோன்றவுமில்லை'' (1 கொரிந்தியர் 2:9). வரப் போகிற கடைசி மூன்று அத்தியாயங்களில், கிறிஸ்துவின் மறுவருகையின் போது நமக்கு உண்டாகப் போகிற மாற்றங்களைக் குறித்து நாம் ஒன்றாய் சேர்ந்து கற்றுக் கொள்வோம்.



You Matter to God(Tamil)-2018.indd 123 5/22/2018 6:18:08 PM

# 11

# வாழ்க்கையின் உச்சகட்டம்

> உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத் திருப்பான்.
>
> 1 யோவான் 2:17

நாம் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைக் குறித்த நம்முடைய புரிதலின் பிரமாண்டமான உச்சகட்ட முடிவை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

''வாழ்க்கையின் உச்சகட்டம்'' என்ற இந்த அத்தியாயத்தின் தலைப்பைக் குறித்துச் சொல்லும்போது, ஏமாற்றம் தரக்கூடிய ஒரு துக்கமயமான உச்சகட்ட காட்சியாக தேவன் அதை அமைக்கப் போவதில்லை என்பதை முதலில் நான் சொல்ல விரும்புகிறேன். சிலர் நினைப்பதற்கு முரண்பட்ட விதத்தில், இந்த யுகம், விரக்தியான, சோகமான ஒரு முடிவை நோக்கிச் செல்லப் போவதில்லை. உற்சாகமூட்டக்கூடிய ஒரு திட்டம், தேவனிடம் இருக்கின்றது. நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடிய ஒரு நிகழ்வாக இது நடக்கப் போகிறது. இந்த நிகழ்வில், நம்முடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தின் மீட்பு முழுமையாய் நிறைவேறும். இந்தச் சம்பவம் எவ்வாறு நடக்கும் என்பதைக் குறித்து இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

ஈட்டன் மற்றும் கேம்ப்ரிட்ஜில் படித்த மாணவனாகிய எனக்கு, டி.எஸ்.எலியட் என்ற கவிஞரை மிகவும் பிடிக்கும். அவரைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். (அவருடைய வாழ்க்கையின் பின் பகுதியில்,



You Matter to God(Tamil)-2018.indd 124 5/22/2018 6:18:08 PM

அவர் ஒரு அர்ப்பணிப்புள்ள ஏஞ்சலிக்க சபை கிறிஸ்தவராகி விட்டார்.) அவருடைய கவிதைகளில் ஒன்றின் முன்னுரையில் பின் வரும் வரிகள் காணப்படுகின்றன.

*பழங்காலப் பெண்கள், ஒன்றுமில்லாத வெற்று நிலங்களில் எரிபொருளுக்கான விறகுகளைப் பொறுக்குவதைப்போல, இவ்வுலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது.*

இதை நான் எளிமையாகச் சொல்கிறேன். அப்படி நடக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை. எவ்வித சுவாரசியமும் இல்லாத ஒரு சோக முடிவை நோக்கி, இவ்வுலகம் மெதுவாக தள்ளாடிச் சென்று கொண்டிருக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது சுவாரசியங்களும், ஆச்சரியங்களும் நிறைந்த ஒரு உச்சகட்ட காட்சியாக இருக்கப் போகிறது.

வேதாகமம் எழுதப்பட்ட விதத்தைச் சிந்தித்துப் பாருங்கள். நம் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சுவாரசியமான நிகழ்வுகளை தேவன் அதில் அரங்கேற்றியிருக்கிறார். அதில் எழுதப்பட்ட சவாலான சம்பவங்களைக் குறித்து எண்ணிப் பாருங்கள். ''அக்கினியினால் பதில் சொல்கிற தேவனே தேவன்,'' என்று உரத்த சத்தமாய், பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக சவால் விட்ட எலியாவை சிந்தித்துப் பாருங்கள். அந்த நாள் முழுவதும், பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்களுடைய எல்லா பொய்யான வழிமுறைகளையும் பின்பற்றி முயற்சி எடுத்தனர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. பிறகு மாலை நேரத்தில், எலியா முன்னே வந்தான். அவன் பலிபீடத்தைச் செப்பனிட்டான். அவன் அதன் மீது மூன்று முறை தண்ணீரை ஊற்றினான். அப்படிச் செய்ததன் மூலம், அது எரிய முடியாது என்பதை அவன் அங்கே நிச்சயப்படுத்தினான். அப்பொழுது அக்கினி இறங்கியது. தேவனுடைய வல்லமை பயங்கரமான விதத்தில் வெளிப்பட்டபோது, அங்கிருந்த எல்லோரும் தங்கள் முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுது கொண்டனர். இது திடீர் திருப்பமாய் நிகழ்ந்த ஒன்றாகும். ஆனால் இது தோல்வியாய் முடியவில்லை.

இயேசுவின் ஊழியத்தில் நிகழ்ந்த சில விஷயங்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். லாசருவின் கல்லறைக்கு முன் அவர் நிற்கின்றார். நான்கு நாட்களுக்கு முன்பே மரித்துப்போன லாசருவின் சடலம் அங்கே உள்ளே இருந்தது. உரத்த சத்தமாய், ''லாசருவே, வெளியே வா!'' என்று இயேசு கட்டளை கொடுத்தார். அந்தக் கணமே, உள்ளே சடலமாய் கிடந்தவன், உயிரோடு எழுந்து வந்தான்! அவனுடைய முகமும், சரீரமும் துணிகளால் சுற்றப்பட்டிருந்த அந்த நிலையிலேயே அவன் வெளியே வந்தான்! இதைக் காட்டிலும் திடீர் திருப்பமாய் நிகழக்கூடிய ஒன்றை உங்களால் சிந்திக்க முடியுமா? எல்லாம் முடிந்தது, இனி வாய்ப்பில்லை என்ற சூழ்நிலையில், இயேசு அவனை உயிரோடு எழுப்பினார்!



You Matter to God(Tamil)-2018.indd 125 5/22/2018 6:18:08 PM

இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். பெண்கள் கல்லறைக்குச் சென்றனர். அது வெற்றிடமாக இருந்ததைக் கண்டனர். மரியாளைத் தவிர, எல்லோரும் சென்று விட்டனர். இந்த மரியாள்தான், கர்த்தரை ஆழமாக நேசித்திருக்க வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன். எனவே அவளால் அப்படிப் போய் விட முடியவில்லை. (இதைக் குறித்து நினைக்கும்போதெல்லாம், என்னால் அழாமல் இருக்க முடியாது.) அவள் திரும்புகிறாள். அங்கே ஒருவரைப் பார்க்கிறாள். அவள் அவரை தோட்டக்காரன் என்று நினைத்து விட்டாள். எனவே அவள் அவர் கிட்டே சென்று பார்க்கவில்லை. ''நீர் அவரை எடுத்துச் சென்றிருப்பீர் என்றால், அவரை எங்கே வைத்திருக்கிறீர் என்று எனக்குச் சொல்லும்,'' என்று அவள் அவரிடம் கேட்டாள். அப்பொழுது இயேசு, ''மரியாளே,'' என்று கூப்பிட்டார். ''ரபூணி (போதகரே)!'' என்று அவள் உடனே பெருமூச்சு விட்டாள். இயேசு அந்த நேரத்தில் பிதாவாகிய தேவனிடம் பரமேறிச் சென்றிருக்கவில்லை என்பதை அறிந்து கொள்வதென்பது எனக்கு எப்பொழுதுமே ஆசீர்வாதமாக இருக்கின்றது. அவளுடைய இருதயத்திலிருந்த ஆழமான வலிவேதனையை இயேசு நிச்சயம் அறிந்திருக்க வேண்டும். ஆகையால்தான் பிதாவாகிய தேவனிடம் பரமேறிச் செல்வதற்கு முன், அவளை ஆறுதல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் அங்கே இருந்தார்.

வேதாகமம், இப்படிப்பட்ட மயிர்கூச்செறியும் சம்பவங்களால் நிறைந்திருக்கிறது. என்னை நம்புங்கள், தேவன் இந்த தற்கால யுகத்தை நம்மை திகைப்பில் ஆழ்த்தக்கூடிய ஒரு முடிவுக்குக் கொண்டு வரப் போகிறார். இது சகலமும் ஒருங்கே இணைந்து செயல்படும்படி திட்டமிடப்பட்டிருக்கிறது. பரலோகம் மற்றும் பூமியில் உள்ளவைகள் அனைத்தும் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆட்டுக்குட்டியானவரின் திருமண இராவுணவு விருந்திற்கான நேரம் வரும்போது, பரலோகத்திலுள்ள ஒவ்வொருவரும், பூமியிலுள்ள ஒவ்வொருவரும் ''அல்லேலூயா!'' என்று பாடுவார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.

இந்த உற்சாகக் கிளர்ச்சியின் முன் நிழலை பல்வேறு சம்பவங்களில் நாம் பார்க்கின்றோம் என்று நீங்கள் சொல்லலாம். இதோ, என்னுடைய வாழ்க்கையிலிருந்து ஒரு தனிப்பட்ட எடுத்துக்காட்டு. ரூத்திற்கும் எனக்கும் நடந்த திருமண நிகழ்வு, உற்சாகமான ஒன்றாக இருந்தது. எங்களுடைய திருமண நிகழ்வை, மிகவும் எளிமையாக, நடத்தி விடலாம் என்றுதான் நாங்கள் திட்டமிட்டிருந்தோம். எங்களுடைய குடும்பத்தார், கிட்டத்தட்ட நாற்பது பேரை மட்டும் அழைக்கலாம் என்று நினைத்திருந்தோம். ஆனால் எல்லாம் கைமீறிச் சென்று விட்டது. எங்களால் மற்றவர்களைத் தவிர்க்க முடியவில்லை. திருமண பார்ட்டியில் மட்டும், நாற்பது பேர் பங்கெடுத்தனர்.



You Matter to God(Tamil)-2018.indd 126 5/22/2018 6:18:08 PM

திருமண நிகழ்வில், அறுநூறு பேர்களுக்கும் மேல் பங்கெடுத்தனர். யூத மற்றும் கிறிஸ்தவ முறைமைப்படி, அது சேர்ந்து நடந்தது. அதில் மட்டுமே உற்சாகமூட்டக்கூடிய விஷயங்கள் நிறைய நடந்தன. இதன் விவரங்கள் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் யூத முறைப்படியான திருமண நிகழ்வில், ஒன்றைச் செய்வார்கள். முதலில், மணமகன் திராட்சை ரசம் நிரம்பிய கோப்பையை எடுத்து, மணமகளிடம் கொடுப்பார். மீதமிருப்பதை அவரே குடித்து விடுவார். இருவரும் சேர்ந்து, அந்தக் கோப்பையிலிருப்பதை குடித்துத் தீர்ப்பார்கள். பிறகு மணமகன் அந்தக் கண்ணாடிக் கோப்பையை தன் காலின் கீழ் போட்டு மிதித்து, அதை நொறுக்கி விடுவார். எங்களுடைய திருமணத்தில் நான் அதைச் செய்தபோது, அந்த இடமே கொண்டாட்டத்திற்குள் சென்றது. எல்லோரும் உற்சாகமாய் கைதட்டினர். அது முற்றிலும் தன்னிச்சையாக நடந்தது.

தேவன் மந்தமானவர் அல்ல என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? ஒன்றும் செய்ய இயலாத நிலையில், அவர் முடங்கிப் போய் கிடக்கவில்லை. இந்த யுகம், எந்த சுவாரசியமும் இல்லாமல், மந்தமாய் முடியப் போகிறது என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால், உங்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது என்றுதான் நான் சொல்வேன்.

## பரலோகத்தைக் காட்டிலும் மேலான ஒன்றை நாடுங்கள்

இந்த யுகத்தை தேவன் ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்போது, மனுஷனுடைய இரட்சிப்பு முழுமையடைந்திருக்கும். மனுஷனுடைய ஆளுமையின் மூன்று கூறுகளும் நிறைவான ஒரு நிலையை அடைந்திருக்கும். நம்முடைய சரீரம் மீட்கப்படும்வரை, நம்முடைய இரட்சிப்பு முழுமையடையப் போவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பரலோகம் செல்வதுதான் கிறிஸ்தவ ஜீவியத்தின் முடிவு என்பது பெரும்பாலானோருடைய நம்பிக்கையாயிருக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்களுடைய சிந்தையை அங்கேயே நிறுத்தி விடுகிறார்கள். ஆனால் அதுவல்ல உண்மை. பரலோகம் என்பது இடையில் வருகின்ற ஒரு நிலையாகும். முற்றிலும் ஒரு புதிய சரீரத்தில், ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஒன்றாய் திரும்பவும் இணைக்கப்படுவதுதான் கிறிஸ்தவ ஜீவியத்தின் முடிவாயிருக்கிறது. அதுதான் முடிவு. அதை நோக்கித்தான் நாம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். பரலோகத்திற்கு செல்ல வேண்டும் என்பதை நோக்கித்தான் நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் இன்னும் பயணத்தின் முடிவைப் பார்க்கவில்லை என்று அர்த்தம்.

அப்போஸ்தலனாகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், எழுதிய அழகான வார்த்தைகளைப் பார்ப்போம். இவை புதிய ஏற்பாட்டில்



You Matter to God(Tamil)-2018.indd 127 5/22/2018 6:18:08 PM

எழுதப்பட்டிருக்கிற மிகவும் மகிமையான வசனங்களில் ஒன்றாய் இருக்கிறது என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். இந்த வார்த்தைகளை வாசிக்கும்போதெல்லாம், நான் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறேன், சவால் விடப்பட்டிருக்கிறேன்.

> *அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிற வனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன். நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.*
>
> பிலிப்பியர் **3:8-14**

எது பவுலின் இலக்காயிருந்தது? பரலோகத்திற்குச் செல்வதைக் குறித்த ஒரு வார்த்தையும் இந்த வேதப்பகுதியில் இல்லை. உங்களால் இதைப் புரிந்துகொள்ள முடிகிறதா? நீங்கள் மரிக்கும்போது, உங்களுடைய ஆவியும், உங்களுடைய ஆத்துமாவும் பரலோகத்திற்குச் செல்லும். ஆனால் உங்களுடைய சரீரம், ஒரு கல்லறையில் வைக்கப்பட்டிருக்கும். அது முடிவல்ல. உங்களுடைய சரீரத்தின் மீட்பு நிறைவடையும்போதுதான் முடிவு உண்டாகிறது. உங்களுடைய சரீரம், உங்களுடைய ஆவியோடும், உங்களுடைய ஆத்துமாவோடும் திரும்பவும் பூரணமாய் இணைக்கப்படும்போதுதான், முடிவு உண்டாகிறது. ஆகையால் பவுல் அதை நோக்கி முன்னேறுகிறார். ''நான் எப்படியாவது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை அடைய வேண்டும்,'' என்று அவர் சொல்கிறார் (**11**-ம் வசனம்). எது அவருடைய நோக்கம்? எது அவருடைய இலக்கு? பரலோகம் அல்ல, உயிர்த்தெழுதல். அதுதான் அவருடைய இலக்காயிருந்தது.



You Matter to God(Tamil)-2018.indd 128 5/22/2018 6:18:08 PM

இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற ஒரு வார்த்தை, முழு புதிய ஏற்பாட்டிலும் இந்த ஒரே ஒரு இடத்தில்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எக்ஸாநாஸ்டாஸிஸ் (exanastasis) என்ற வார்த்தைதான் அது. எக்ஸ் (ex) என்றால், ''ஒன்றிலிருந்து வெளியே எடுத்தல் (out of)'' என்று அர்த்தம். ஆக, இது மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதைக் குறிக்கிறது. ஆனால் இது மரித்துப்போன எல்லோரும் உயிர்த்தெழுவதைக் குறிக்கவில்லை. முன்னோட்டமாக நடக்கப் போகிற, உண்மையான விசுவாசிகளாகிய நீதிமான்களின் உயிர்த்தெழுதலை இது சுட்டிக் காண்பிக்கிறது. இதுதான் பவுலின் இலக்காக இருந்தது. இந்த உயிர்த்தெழுதலை அவர் அடைய வேண்டும் என்பதுதான் அவருடைய இலக்காக இருந்தது.

உயிர்த்தெழுதல்களைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற வேதப்பகுதிக்குச் செல்வோம். அதில் ஒரு உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்து விட்டது. இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் அது. இன்னும் இரண்டு உயிர்த்தெழுதல்கள் எஞ்சியிருக்கின்றன. ஒன்று, உண்மையான விசுவாசிகளின் உயிர்த்தெழுதல். அதற்குப் பிறகு, மரித்தவர்களில் எஞ்சியிருப்போரின் உயிர்த்தெழுதல் நடக்கும்.

> *மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் (அதாவது இந்த முதலாம் உயிர்த்தெழுதல், ஆயிரம் வருடங்களின் தொடக்கத்தில் நடக்கின்றது). முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.*
>
> வெளிப்படுத்தின விசேஷம் **20:5-6**

உண்மையான விசுவாசிகளாய் வாழ்ந்து மரித்த நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்கடைய வேண்டும் என்ற தன் இலக்கைக் குறித்து, பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் தெரிவிக்கிறார். இது மரித்துப்போன எல்லோரையும் குறிக்கவில்லை. மாறாக, உண்மையான விசுவாசிகளாய் வாழ்ந்து மரித்தவர்களின் உயிர்த்தெழுதலை இது குறிக்கின்றது.

ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், பரிசுத்தமானவர்களுமாகிய அந்தக் கூட்டத்தில் நீங்களும் ஒருவராய் இருக்க விரும்புகிறீர்களா?

உயிர்த்தெழுதலைக் குறித்த பல அழகான படங்களை வேதாகமம் நமக்குக் கொடுக்கின்றது. ஆனால் உச்சகட்ட உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய மிகவும் அழகான ஒரு படம், பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபத்தில் வரையப்பட்டிருக்கிறது



You Matter to God(Tamil)-2018.indd 129 5/22/2018 6:18:08 PM

என்று நான் நினைக்கிறேன். (உண்மையில், கர்த்தருடைய வருகை அல்லது உயிர்த்தெழுதலை மையமாகக் கொண்டுதான், பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் மற்றும் இரண்டாம் நிருபங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.)

தேவனுடைய ஆவியானவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில், தனக்குக் கொடுத்த வெளிப்பாட்டைக் குறித்து பவுல் இங்கே எழுதுகிறார். இதை மூளையறிவினால் அறிந்து கொள்ள முடியாது. பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை வாசித்து, ஆராய்வதால்கூட இதை அறிந்து கொள்ள முடியாது. பவுல் சொல்கிறார்:

> *கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு, நாங்கள் உங்களுக்குச் சொல்கிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. (கர்த்தருடைய வருகையைக் குறிக்கும்படி, பரோஷியா* **(parousia)** *என்ற கிரேக்க இலக்கண வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.)*
>
> 1 தெசலோனிக்கேயர் **4:15**

ஒன்று, கர்த்தருடைய வருகை மட்டும் நாம் உயிரோடிருப்போம். அல்லது அவருடைய வருகையில், உயிரோடெழுப்பப்படுவோம். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுதல், கர்த்தருடைய மறுவருகையின் போது நிகழும். கர்த்தரே உயிர்த்தெழுதலை நிகழச் செய்வார். ஆம், கர்த்தராகிய இயேசுவே உயிர்த்தெழுதலை நிச்சயமாய் நிகழச் செய்வார். அவரால் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

நமக்கு உற்சாகமூட்டி, நம்மை எழுச்சியடையச் செய்யக்கூடிய வார்த்தைகளை இப்பொழுது நாம் வாசிக்கப் போகிறோம். திரும்பவும், ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். இது ஒரு சோகமான, விரக்தியான நிகழ்வாக இருக்கப் போவதில்லை:

> *ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*
>
> 1 தெசலோனிக்கேயர் **4:16-18**

பரிசுத்த ஆவியானவரின் பெயர்களில் ஒன்றாகிய பாராக்ளீட் என்ற வார்த்தையைக் கொடுக்கிற அதே வார்த்தையிலிருந்துதான் 'தேற்றுங்கள்' என்ற வார்த்தையும் வந்திருக்கிறது. இவ்வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. 'தேற்றுங்கள்' என்ற வார்த்தை



You Matter to God(Tamil)-2018.indd 130 5/22/2018 6:18:08 PM

அதை முழுமையாக எடுத்துக் காண்பிக்கவில்லை. அதன் ஒரு அர்த்தத்தைத்தான் அது வெளிப்படுத்துகிறது. இன்னொன்றை அது வெளிப்படுத்தவில்லை. இவ்வார்த்தையின் இன்னொரு அர்த்தம், ''சந்தோஷத்தின் உச்சிக்கே கொண்டு செல்வதைக்'' குறிக்கிறது. ''கிளர்ந்தெழச் செய்தல்'' என்றும் சொல்லலாம். மனச்சோர்வுக்குள்ளாகி, சோகமாக இருப்பவர்களை, நீங்கள் உற்சாகமூட்டி, சந்தோஷப்படுத்தலாம். ஆனால் சோம்பலாய், பின் வாங்கின நிலையில் இருப்பவர்களை, நீங்கள் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும், அனல் மூட்டி எழுப்ப வேண்டும். இவ்விரண்டும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாக இருக்கின்றது. ஆக, இந்த வெளிப்பாட்டைக் கொண்டு, நாம் ஒருவரையொருவர் உற்சாகமூட்டி, சந்தோஷப்படுத்த வேண்டும், அனல் மூட்டி எழுப்ப வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது.

இன்னும் விவரமாய் இதைப் பார்ப்பதற்கு முன், நான் உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். உங்களுடைய சபையில் இந்தச் செய்தியைக் கேட்கும்போது, நீங்கள் மெய்யாகவே உற்சாகமூட்டப்படுகிறீர்களா அல்லது அனல் மூட்டி எழுப்பப்படுகிறீர்களா அல்லது சந்தோஷத்தின் உச்சிக்குச் செல்கிறீர்களா? பெரும்பாலான இடங்களில், நான் இந்தக் கேள்வியைக் கேட்பதுண்டு. வழக்கமாக, ஒருவரும் இதற்கு 'ஆம்' என்ற பதிலைச் சொல்ல மாட்டார்கள். இது இயேசு கிறிஸ்துவின் சபையாகிய நம்மிடம் காணப்படும் மிகப் பெரிய ஒரு குறைபாடு என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். அதைத்தான் இந்நிலை சுட்டிக் காண்பிக்கிறது. நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நம்மை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, முன்னேறிச் செல்ல வைக்கக்கூடிய மாபெரும் அளப்பறிய வல்லமை, இந்த சத்தியத்திற்கு இருக்கின்றது. ஆனால் பிரசங்கியார்களின் செய்திகளில் பெரும்பாலும் இது இருப்பதில்லை. இது சபைக்கு ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாயிருக்கிறது.

### நம்மை தூண்டி, எழுப்பக்கூடிய கூறு

பவுல் விவரிக்கின்ற நிகழ்வின் உற்சாகமூட்டக்கூடிய விவரங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம். முதல் விவரம், கர்த்தர் திரும்பி வருகின்றார். இது உங்களை ''ஆமென்'' சொல்ல வைக்கின்றதா? (ஆம் என்றால், அப்படியே சொல்லுங்கள்.) இயேசு ஒரு மனுஷனாய் திரும்பி வருகின்றார். யூத மார்க்கம் போதிப்பதுபோல, அது மெசியாவின் காலகட்டமாக இருக்கப் போவதில்லை. மெசியாவே வரப் போகின்றார்.

இந்த சத்தியத்தோடு தொடர்புடைய மூன்று வேதவசனங்களை நாம் பார்ப்போம். இம்மூன்றும் 1 தெசலோனிக்கேயர் 4-ம் அதிகாரத்தோடு தொடர்புடையதாயிருக்கிறது. ஆகையால் இதை மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். முதல் வசனம், யோவான் சுவிசேஷத்தில் இருக்கிறது. சீஷர்களிடமிருந்து விடைபெறும்போது, இயேசுதாமே இவ்வார்த்தைகளை



You Matter to God(Tamil)-2018.indd 131 5/22/2018 6:18:08 PM

அவர்களிடம் பேசுகிறார், ‘‘நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து, உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்’’ (யோவான் 14:3).

‘‘நான் திரும்பவும் வருவேன்,’’ என்ற வார்த்தைகளை ஒரு குழந்தையால் கூட புரிந்து கொள்ள முடியும். இது அவ்வளவு எளிமையானது. நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? நான் இதை விசுவாசிக்கிறேன்.

இரண்டாவது வேதவசனம், அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதப்பட்டிருக்கிறது. இவை தேவதூதர்கள் சாட்சியாய் சொன்ன வார்த்தைகளாய் இருக்கின்றன. இயேசு மேகங்களின் மேல் பரமேறிச் செல்கின்றார். அப்போஸ்தலர்கள் அங்கே நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய கழுத்து வலிக்க, வலிக்க, அவர்கள் கர்த்தரையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் தங்களுடைய தலைகளை உயர்த்தியபடி பார்த்துக் கொண்டிருந்தபோது, வெள்ளை ஆடை அணிந்திருந்த இரண்டு தேவதூதர்கள் அவர்களுக்கு முன் தோன்றினார்கள். அவர்கள் இவ்வாறு சொன்னார்கள், ‘‘வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டு, நேரத்தை வீணடிக்காதீர்கள். காரணம், அதினால் ஒரு பலனும் உண்டாகப் போவதில்லை.’’ அவர்கள் மேலும் தொடர்ந்து இவ்வாறு சொன்னார்கள், ‘‘கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்’’ (அப்போஸ்தலர் நடபடிகள் 1:11).

‘இந்த இயேசுவானவர்’ என்ற வார்த்தையைக் கவனியுங்கள். ‘அதே இயேசு’ என்ற அர்த்தத்தில் இது சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசு மனுஷனாய் திரும்பி வரப் போகிறார் என்ற உண்மைக்கு மிகவும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர் ஒரு மனுஷனாய் பரமேறிச் சென்றார். அவர் அதே மனுஷனாய் திரும்பி வரப் போகின்றார். இங்கு இரண்டு முக்கியமான அம்சங்களை நம்மால் பார்க்க முடியும் என்று நான் நினைக்கிறேன். முதல் அம்சம், அவர் மேகங்களின் மேல் பரமேறிச் சென்றார். அதேபோல அவர் மேகங்களின் மேல் இறங்கி, திரும்பி வரப் போகின்றார். இரண்டாவது அம்சம், அவர் ஒலிவ மலையிலிருந்து பரமேறிச் சென்றார். அவர் திரும்பவும் ஒலிவ மலைக்குத்தான் வருவார். பூமியில் அங்குதான் அவருடைய பாதங்கள் வந்து இறங்கப் போகின்றன.



You Matter to God(Tamil)-2018.indd 132 5/22/2018 6:18:08 PM

மூன்றாவது வேதவசனத்தைப் பார்க்கும்படி, 1 தெசலோனிக்கேயருக்குச் செல்வோம். கர்த்தர்தாமே இறங்கி வருவார் என்று 1 தெசலோனிக்கேயர் 4:16 சொல்கிறது.

இந்த மூன்று வேதவசனங்களிலும் காணப்படுகின்ற முக்கியத்துவத்தை உங்களால் பார்க்க முடிகிறதா? ''நான் மறுபடியும் வருவேன்,'' என்று இயேசு சொல்கிறார். ''இந்த இயேசுவானவர் (இதே இயேசு) திரும்ப வருவார்,'' என்று தேவதூதர்கள் சொல்கின்றனர். ''கர்த்தர்தாமே இறங்கி வருவார்,'' என்று பவுல் சொல்கிறார். இது ஒரு வித்தியாசமான காலகட்டமாக இருக்காது, மாறாக, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மகிமையோடும், வல்லமையோடும் ஒரு மனுஷனாய் திரும்பி வருகிற ஒரு நிகழ்வாக இருக்கும் என்பதை வேதாகமம் மிகவும் கவனமாக, எச்சரிக்கையோடு ஆணித்தரமாக வலியுறுத்திச் சொல்கிறது.

## ஆரவாரச் சத்தம் நிறைந்த நிகழ்வு

இந்தப் பரபரப்பான நிகழ்வில், மூன்று சத்தங்கள் எழுப்பப்படப் போகின்றன. 1 தெசலோனிக்கேயர் 4:16 சொல்கிறது: ''கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.''

முதலில், கர்த்தருடைய ஆரவாரச் சத்தம் வரும். தேவன் ஆரவாரச் சத்தம் எழுப்புவார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் எப்பொழுதும் மென்மையான சத்தத்தில் பேசுவதில்லை. கர்த்தர் கோபத்தோடு சத்தமாய் பேசுவதைக் குறித்து நிறைய வசனங்கள் ஏசாயாவில் எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக, பிரதான தூதனுடைய அறிவிப்பின் சத்தம் வரும். மூன்றாவதாக, எக்காளச் சத்தம் வரும்.

இந்த நிகழ்வில் இந்த சத்தங்கள் எழுப்பப்படும் என்பதை நிச்சயமாய் அறிந்தவர்களாய், இந்த மூன்று சத்தங்களையும் குறித்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## இயேசுவின் சத்தம்

இந்நிகழ்வைக் குறித்து இயேசு எப்படிச் சொல்கிறார் என்று கவனிப்போம்:

> *இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் (உண்மையில், மரித்து, கல்லறைகளில் புதைக்கப்பட்ட அனைவரும்) அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும் (அதாவது முதலாம் உயிர்த்தெழுதல்), தீமை*



You Matter to God(Tamil)-2018.indd 133 5/22/2018 6:18:08 PM

*செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் (தொடர்ந்து நிகழ்கின்ற இரண்டாம் உயிர்த்தெழுதல்) புறப்படுவார்கள்.*

யோவான் 5:28-29

மரித்து கல்லறைகளில் புதைக்கப்பட்டிருந்தவர்களை எது வெளியே கொண்டு வந்தது என்பதைக் கவனித்தீர்களா? கர்த்தருடைய சத்தம்தான் அதைச் செய்தது. அவர் ஒருவரால் மட்டுமே, மரித்து கல்லறைகளில் புதைக்கப்பட்டவர்களை வெளியே வரும்படி அழைக்க முடியும். இயேசு தம்முடைய ஊழியத்தில் மூன்று நபர்களை உயிரோடு எழுப்பினார். இந்த ஒவ்வொரு அற்புத நிகழ்விலும், தனிப்பட்ட விதத்தில், அந்த நபர்களை குறிப்பாக அழைத்தார். அதில் அவர் எச்சரிக்கையாய் செயல்பட்டார். ஏன்? அவர் அவ்வாறு பெயரைச் சொல்லி, அந்தக் குறிப்பிட்ட நபரை அழைத்திருக்கவில்லை என்றால், என்ன நடந்திருக்கும் என்று யாருக்குத் தெரியும்.

யவீருவின் சிறு மகளை அவர் உயிரோடு எழுப்பியபோது, ''சிறு பெண்ணே, நான் உன்னிடம் சொல்கிறேன். நீ எழுந்திரு,'' என்று சொன்னார் (மாற்கு 5:22-24 மற்றும் 35-43 வசனங்களை வாசித்துப் பாருங்கள்). உடனே அவள் எழுந்தாள். நயீன் பட்டணத்து விதவையை இயேசு சந்தித்தார். அவளுடைய ஒரே மகன் மரித்திருந்தான். அந்த சவ ஊர்வலத்தில், அவர் பாடையைத் தொட்டு, ''வாலிபனே, நான் உனக்குச் சொல்கிறேன். எழுந்திரு,'' என்றார் (லூக்கா 7:11-17). அவன் உடனே எழுந்தான். அடுத்த நிகழ்வில், அவர் லாசருவின் கல்லறைக்கு முன் நின்று, ''லாசருவே, வெளியே வா,'' என்று சத்தமாய் கூப்பிட்டார் (யோவான் 11:1-44). லாசருவே என்று இயேசு அவனுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டிருக்கவில்லை என்றால், மரித்துப் போன எல்லோரும் வெளியே வந்திருப்பார்கள்.

மரித்தோரை உயிரோடு எழுப்பக்கூடிய அதிகாரம் இயேசுவுக்கு மட்டுமே இருக்கிறது. அவருடைய சத்தத்தினால் மட்டுமே மரித்தவர்களை கல்லறையிலிருந்து வெளியே கொண்டு வர முடியும். அவர் திரும்பி வரும்போது, அவர் என்ன சொல்லப் போகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ''என்னை உண்மையாய் விசுவாசித்த விசுவாசிகளே, வெளியே வாருங்கள்,'' என்று சொல்வாரா? ''என்னால் மீட்கப்பட்ட ஜனங்களே, வெளியே வாருங்கள்,'' என்று சொல்வாரா? எனக்குத் தெரியாது. ஆனால் நாம் வெளியே வருவோம்.

## தேவதூதனும், எக்காளமும்

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற இன்னொரு சத்தம், பிரதான தூதனுடைய அறிவிப்பின் சத்தமாகும். வேதாகமத்தை வியாக்கியானம் செய்பவர்களில் பெரும்பாலானோர், இந்த பிரதான தூதன், காபிரியேல்



You Matter to God(Tamil)-2018.indd 134 5/22/2018 6:18:08 PM

என்று விசுவாசிக்கிறார்கள். மனுஷனுடைய வரலாற்றில் நடக்கப் போகிற தேவனுடைய தலையீடுகளை அறிவிக்க வேண்டியது அவனுடைய வேலையாய் இருக்கிறபடியால், அவர்கள் அவ்வாறு விசுவாசிக்கிறார்கள்.

கடைசியில் வரும் சத்தம், எக்காளச் சத்தமாகும். எக்காளத்தைக் குறித்து நினைக்கும்போதெல்லாம் எனக்கு நடுக்கம் வந்து விடும். என்னைப் பொறுத்தவரை, எக்காளம் என்பது மிகவும் விசேஷமான ஒரு கருவியாயிருக்கிறது. எக்காளச் சத்தம், உங்களுடைய தன்னிறைவின் மனநிலையிலிருந்து உங்களை வெளியே உந்தித் தள்ளுகிறது. இது இராணுவத்தில் பயன்படுத்தப்படும் ஒரு இசைக்கருவியாகும்.

பவுல் எக்காளத்தைக் குறித்தும் பேசுகிறார். 1 கொரிந்தியர் 15-ல், அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிப்போம். இந்த அதிகாரம், உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுகிறது. புதிய ஏற்பாட்டின் நீளமான அதிகாரங்களில் இதுவும் ஒன்றாயிருக்கிறது. 51-ம் வசனத்தில், பவுல் இவ்வாறு சொல்கிறார்: ''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் (இதுவரை மறைக்கப்பட்டிருந்த ஒரு இரகசியம் இப்பொழுது வெளிப்படுத்தப்படுகிறது). நாம் எல்லோரும் நித்திரை அடைவதில்லை (மரணமடைவதில்லை). ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்......''

பாருங்கள், ஒரு விசுவாசியின் மரணத்தை, நித்திரை என்று இவ்வசனம் சொல்கிறது. அதாவது அவன் நித்திரையாயிருக்கிறான் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், அவன் திரும்பவும் எழுந்திருக்கப் போகிறான். இது நிரந்தரமானதல்ல. அவிசுவாசிகளின் மரணத்தைக் குறிக்கும்படி இவ்வார்த்தை ஒருபோதும் பயன்படுத்தப்பட்டதில்லை. விசுவாசிகளின் மரணத்தைக் குறிக்கும்படியே இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பவுல் தொடர்ந்து எழுதுகிறார்: ''........ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்'' (51-ம் வசனம்).

இவ்வார்த்தைக்கு அர்த்தம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? ஒருமுறை கண்ணை மூடி திறக்கின்ற நேரத்திற்குள், இந்த உருமாற்றம் நடந்து விடும். நீங்கள் ஏன் கண் சிமிட்டப் போகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? காரணம், பிரகாசமான வெளிச்சம் உங்களுடைய கண்களின் மீது நேராகப் படப் போகின்றது. அப்பொழுது உங்களால் உங்களுடைய கண் இமைகளை திறந்து வைத்திருக்க முடியாது. அந்தக் கணத்தில், நீங்கள் திரும்பி, உங்களுக்கு அருகில் இருக்கின்ற நபரைப் பார்ப்பீர்கள். உங்களுக்கு அருகில் இருக்கும் அந்த நபர் முற்றிலும் வித்தியாசமானவராக இருப்பார். அந்தக் கணத்தில், ஒவ்வொரு விசுவாசியினுடைய மாம்ச சரீரத்திலும், முழுமையான ஒரு மாற்றம் உடனடியாக நிகழும்.



You Matter to God(Tamil)-2018.indd 135 5/22/2018 6:18:08 PM

பவுல் தொடர்ந்து சொல்கிறார்: ‘‘எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்’’ (52-ம் வசனம்). இது அப்படியே 1 தெசலோனிக்கேயர் 4-ம் அதிகாரத்தோடு ஒத்துப் போகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில், எக்காளங்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு சொல்லப்பட்டிருக்கிற எக்காளம்தான் கடைசி எக்காளம் என்று நான் நினைக்கிறேன். எக்காளங்களின் வரிசையில், இதைத் தொடர்ந்து வேறு எந்த ஒரு எக்காளத்தையும் என்னால் நினைக்க முடியவில்லை. நான் ஒருவேளை தவறாகச் சொல்லலாம். ஆனால் இதுதான் சரியானதாகத் தெரிகின்றது. இது சரி என்று உறுதியான காரணத்தோடு நான் விசுவாசிக்கிறேன்.

## இதுதான் இரகசிய வருகையா?

நாம் இங்கு பேசிக் கொண்டிருக்கிற இந்தப் பரபரப்பான, மயிர்கூச்செறியச் செய்யும் நிகழ்வு, பொதுவாக ‘இரகசிய வருகை’ என்று கருதப்படுகிறது. ரேப்ச்சர் (rapture) என்ற ஒரு வார்த்தையை, புதிய ஏற்பாட்டில் எங்கும் பார்க்க முடியாது என்று நிறைய புத்திசாலிகள் கிறிஸ்தவர்களிடம் சொல்லிக் கொண்டு வருகின்றனர். நான் அதை அறியாமையாகத்தான் பார்க்கின்றேன். காரணம், புதிய ஏற்பாடு ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை. உண்மையில், புதிய ஏற்பாட்டில், நீங்கள் எந்த ஆங்கில வார்த்தைகளையும் பார்க்க முடியாது. எந்த மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் கேள்வியே. நாம் இங்கு பேசிக் கொண்டிருக்கிற வார்த்தை, ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தையாகும். இவ்வார்த்தையின் அர்த்தம், ‘‘பிடித்து இழுத்தல், பறித்துக் கொள்ளுதல் (to snatch, to grab, to pull up),’’ என்பதாகும்.

இந்த வினைச்சொல்லில் இருந்து நேரடியாக ஒரு ஆங்கில வார்த்தையும் உருவாக்கப்படவில்லை. இதை மொழிபெயர்க்கும்படி, இலத்தீன் வினைச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரேப்பியோ (rapio) என்ற வார்த்தைதான் அது. இதன் அர்த்தமும், ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தையின் அர்த்தமும் ஒன்றுதான். இதிலிருந்து ஒரு பெயர்ச்சொல்லும், ஒரு வினைச்சொல்லும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் ரேப்ச்சர் (rapture) என்ற வார்த்தையாகும். பவுல் இங்கு என்ன பேசிக் கொண்டிருக்கிறாரோ, அதை இவ்வார்த்தை மிகச் சரியாக, மிகவும் துல்லியமாக எடுத்துக் காண்பிப்பதை நாம் இங்கு பார்க்க முடியும். இரகசிய வருகைக்கு (rapture) எதிராக சிலரிடம் தவறான எண்ணங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒன்று நிச்சயமாகவே நடக்கும் என்பதை அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை. ஆனால் நான் அதை நிச்சயமாய் விசுவாசிக்கிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 136 5/22/2018 6:18:08 PM

ஒன்றை இந்த இடத்தில் தெளிவுபடுத்தி விடுகிறேன். ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் கிட்டத்தட்ட 12 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது பயன்படுத்தப்பட்டிருக்கிற சில இடங்களை நான் உங்களிடம் காண்பிக்க விரும்புகிறேன். அப்பொழுது அவ்வார்த்தைக்கு மெய்யாகவே என்ன அர்த்தம் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

முதலில், விதைக்கிறவனைக் குறித்து இயேசு சொன்ன உவமைக்குச் செல்வோம். அதற்கு அவர் கொடுத்த விளக்கத்தைப் பார்ப்போம். வழியோரமாய் விதைக்கப்பட்ட விதையைக் குறித்து இயேசு இவ்வாறு சொல்கிறார்: ''ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்கிறான். அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.'' இங்கு 'பறித்துக் கொள்கிறான்' என்ற இடத்தில், ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தைதான் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

யோவான் சுவிசேஷத்தில், நல்ல மேய்ப்பனைக் குறித்து இயேசு சொன்ன உவமையை வாசிக்கின்றோம். யோவான் 10:12-ஐ கவனிப்போம்: ''மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள், ஓநாய் வருகிறதைக் கண்டு, ஆடுகளை விட்டு ஓடிப் போகிறான். அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும்'' (யோவான் 10:12). ஆடுகளைப் 'பீறி' என்று எழுதுகிற இடத்தில், அவர் ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தையைத்தான் அவர் பயன்படுத்துகிறார். அது மிகவும் வேகமாக நடக்கின்றது. இது பலவந்தமாய் நடக்கின்ற ஒரு விஷயமாகும். இது ஒட்டுமொத்த சூழ்நிலையையும் ஒரு கணப்பொழுதில் மாற்றி விடுகிறது.

இன்னும் சில வசனங்களைப் பார்ப்போம். 2 கொரிந்தியருக்குச் செல்வோம். இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட ஆச்சரியமான ஒரு அனுபவத்தைப் பெற்ற ஒரு குறிப்பிட்ட மனுஷனைக் குறித்து பவுல் இங்கு பேசிக் கொண்டிருக்கிறார்:

> *கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன். அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்கு புறம்பேயிருந்தானோ, அதை அறியேன். தேவன் அறிவார். அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷரால் பேசப்படாததும், வாக்குக்கு எட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.*
>
> 2 கொரிந்தியர் 12:2-3



You Matter to God(Tamil)-2018.indd 137 5/22/2018 6:18:08 PM

பரதீசுக்குள் 'எடுக்கப்பட்டு' என்ற இடத்தில் என்ன வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பதை உங்களால் யூகிக்க முடிகின்றதா ? ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தைதான் அது. இந்த அர்த்தம், எல்லா வசனங்களிலும் ஒன்றுபோலவே இசைந்து வருவதை உங்களால் மிகவும் எளிதாகப் பார்க்க முடியும்.

இன்னொரு வசனத்தையும் பார்ப்போம். யூதா 22-ஐ கவனிப்போம். இந்த வசனம் விசுவாசிகளைக் குறித்துப் பேசுகிறது. ஆனால் அவர்கள் மிகவும் ஆபத்தான ஆவிக்குரிய சூழலுக்குள் தங்களை கீழே இழுத்துக் கொண்டார்கள். ''சிலரை அக்கினியிலிருந்து இழுத்து விட்டு, பயத்தோடே இரட்சித்து,'' என்று இதன் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

'இழுத்து விட்டு' என்ற வார்த்தை எவ்வாறு எழுதப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள் ? ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தைதான் அங்கே எழுதப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு சீராக வந்திருக்கிறது என்று பாருங்கள். இதன் அர்த்தம், ஒன்றைப் பற்றிப் பிடித்து, அதை இழுத்து, உங்களுக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளுதலாகும். இது மிகவும் வேகமாய் நிகழ்கின்றது. இது திடீரென்று நடக்கின்றது. இது பலவந்தமாய் செய்யப்படுகிறது. இது சூழ்நிலையை ஒட்டுமொத்தமாக மாற்றி விடுகின்றது. இதுதான் இரகசிய வருகை (rapture) ஆகும்.

பிலிப்பு, எத்தியோப்பிய மந்திரிக்கு தண்ணீர் முழுக்கு ஞான ஸ்நானம் கொடுத்த பிறகு, இதே காரியம்தான் அவனுக்கும் நடக்கின்றது. அப்போஸ்தலர் நடபடிகள் 8:39-ஐ வாசிப்போம். ''அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரியும் அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.'' பிலிப்பைக் 'கொண்டு போய் விட்டார்' என்ற இடத்தில், ஹார்ப்பஸோ (harpazo) என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

## இன்றைக்கும் இது நடக்கின்றதா ?

ரேப்ச்சர் (rapture) என்ற வார்த்தை, ஆதித் திருச்சபையில் நிகழ்ந்த, சபையின் எதிர்காலத்தில் இனி நிகழப் போகின்றவைகளை மட்டுமே குறிக்கின்ற ஒரு வார்த்தையாக இருக்கிறதா ? இன்றைக்கு நம்முடைய அன்றாட வாழ்க்கையில், இவ்வார்த்தைக்கு ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா ?

எனக்குத் தெரிந்த இரண்டு சம்பவங்களை நான் சொல்கிறேன். டேவிட் டு ப்ளேசிஸ் என்ற சகோதரனுக்கு இது நிகழ்ந்தது. இவர் மரித்து கர்த்தரிடம் சென்று விட்டார். ஒருமுறை அவர் இவ்வாறு சொல்ல கேட்டிருக்கிறேன். தென் ஆப்பிரிக்காவின் ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் கூட்டத்தை முடித்து விட்டு, அவர் வெளியே வந்தார். அதே நேரத்தில், அந்தப் பட்டணத்தின் இன்னொரு பகுதியில்



You Matter to God(Tamil)-2018.indd 138 5/22/2018 6:18:08 PM

நடக்கவிருக்கின்ற இன்னொரு கூட்டத்தில் அவர் இருந்தாக வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். டேவிட் தன் கண்களை மூடி ஜெபித்தார். அவர் தன் கண்களைத் திறந்தபோது, அந்த இன்னொரு கூட்டம் நடக்கின்ற இடத்தின் வெளிப்பகுதியில் அவர் நின்று கொண்டிருந்தார்.

இன்னொரு சம்பவம், இன்னும் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. இது ஸாம்பியாவில் நிகழ்ந்தது. ரூத்திற்கும் எனக்கும் நன்கு தெரிந்த ஒரு மிஷனரி தம்பதியினருக்கு இது நடந்தது. அவர்கள் கர்த்தருக்கு உண்மையாகவே ஊழியம் செய்கிறவர்கள். கிறிஸ்துவின் நிமித்தம், அவர்கள் மெய்யாகவே தங்களுடைய எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து, மிகவும் கடினமான ஒரு ஊழியத்தைச் செய்து வருகின்றார்கள். ஒருமுறை ஸாம்பியாவின் தூசிபடிந்த, கரடுமுரடான சாலையில், இரவு நேரத்தில், ஒரு ட்ரெயிலரை இழுத்தவாறு ஒரு காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்கள் மிகவும் களைப்படைந்திருந்தனர். அப்பொழுது ஒரு குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்திருந்தனர். அந்த இடத்திலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு இன்னும் 25 மைல்கள் தூரம் இருந்தது. அந்த நேரத்தில், அவர்கள் தங்களுடைய கண்களை மூடினார்கள். சுருக்கமான ஜெபத்தைச் செய்தார்கள். அவர்கள் தங்கள் கண்களைத் திறந்தபோது, அவர்களும், காரும், ட்ரெயிலரும், அவர்கள் சென்றடைய வேண்டிய இடத்தில் இருந்தனர். என்ன ஒரு ஆச்சரியம்! தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இவர்கள் ‘‘கணப்பொழுதில் இடமாற்றம் செய்யக்கூடிய தேவனுடைய வல்லமையை’’ அற்புதமாய் அனுபவித்தனர்.

இதோ, ஒரு எடுத்துக்காட்டை இயற்கையிலிருந்து எடுத்துக் காட்டுகிறேன். இயற்கையின் விஞ்ஞானத்திலிருந்து ஒரு சுவாரசியமான உண்மையைச் சொல்கிறேன். இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு வாலிபப் பெண், எங்களுக்கு மிகவும் நெருக்கமான நண்பராக இருந்தார். அவர் ஐந்து வருடங்கள் எங்களுக்காக வேலை பார்த்தார். பறவைகளை கண்காணிக்கிற பழக்கம் அவருக்கு இருந்தது. அவர் அதை தொழில்ரீதியாக, மிகவும் நேர்த்தியாகச் செய்து வந்தார். அவர் எங்களிடம் சொன்னார், ‘‘ஒரு வருடத்தின் குறிப்பிட்ட பருவகாலங்களில், நிறைய எண்ணிக்கையிலான பறவைகள் இஸ்ரேலின் வழியாக இடம்பெயர்ந்து செல்கின்றன.’’

இஸ்ரேலில், பதினைந்து மில்லியன் பறவைகள் தெற்கிற்கும், வடக்கிற்கும் பறந்து செல்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? அவை ரஷ்யாவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும், மேற்கு ஐரோப்பாவிலிருந்தும் வருகின்றன. அவை தெற்கிற்கு இடம் பெயர்ந்து செல்லும்போது, அவற்றினால் ஆப்பிரிக்கா வரை செல்ல முடியவில்லை. ஆகையால் அவை ஏலாத் (Eilat) என்ற இடத்திற்கு அருகே வருகின்றன.



You Matter to God(Tamil)-2018.indd 139 5/22/2018 6:18:08 PM

பறவைகளைக் கண்காணிக்கிறவர்கள் அங்கே அவற்றைப் பிடித்து, அவற்றின் கால்களில் ஒரு பட்டையை அடையாளமாகக் கட்டுகிறார்கள். பிறகு அவர்கள் அவற்றை விட்டு விடுகிறார்கள். அப்பொழுது அவை எங்கே சென்று சேருகின்றன என்பதை அவர்களால் கண்டறிய முடியும்.

ஏலாத் என்ற இடத்தில் இறங்குகிற பறவைகளில் சில ரேப்ட்டர் (raptor) என்ற பறவை குடும்பத்தைச் சேர்ந்தவை என்று எங்களுடைய நண்பர் சொன்னார். ரேப்டர் பறவையைக் குறித்து உங்களுக்குத் தெரியுமா? அது மிகவும் வேகமாக கண்ணிமைக்கும் நேரத்தில் தரையிறங்கி, தன் இரையை தன் நகத்தால் அல்லது தன் அலகால் பற்றிப் பிடித்து, உடனே பறந்து விடும். இயற்கையில்கூட இந்தப் படம் எவ்வளவு துல்லியமாகப் பொருந்திப் போகிறது என்று பாருங்கள். ஆகையால் கடைசியில், சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறித்துச் சொல்வதற்கு, ரேப்ச்சர் (rapture) என்ற வார்த்தை தவறானது என்று சொன்னால், அது அறியாமையைத்தான் காண்பிக்கிறது. அதுதான் உண்மை. அதுதான் சரியாக இருக்கும்.

## முரண்படாமல், மாறாமல் வருகின்ற ஒரே அர்த்தம்

இந்த அத்தியாயத்தை முடிக்கின்ற நேரத்தில், வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து இன்னும் ஒரு எடுத்துக்காட்டை நான் கொடுக்க விரும்புகிறேன். வனாந்திரத்திற்கு ஓடிப்போன ஒரு பெண்ணைக் குறித்து இங்கு நாம் வாசிக்கின்றோம்: ''சகல ஜாதிகளையும் (தேசங்களையும்) இரும்புக் கோலால் ஆளுகை செய்யும் ஆண் பிள்ளையை அவள் பெற்றாள். அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது'' (வெளிப்படுத்தின விசேஷம் 12:5).

''எடுத்துக் கொள்ளப்பட்டது'' என்ற இடத்தில் என்ன வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பதை இப்பொழுது உங்களால் யூகிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

புதிய ஏற்பாடு முழுவதிலும் இவ்வார்த்தைக்கு ஒரே அர்த்தம், மாறுபடாத அர்த்தம் இருக்கிறது என்பதை என்னோடு சேர்ந்து நீங்களும் ஏற்றுக் கொள்கிறீர்களா? ஆகையால் ''நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம்,'' என்று பவுல் சொல்லும்போது, அதற்கு என்ன அர்த்தம் என்ற சந்தேகம் நமக்குள் எழ வேண்டிய அவசியமே இல்லை. இவ்வேத வசனத்தை நம்மால் மிகச் சரியாக புரிந்து கொள்ள முடியும்.

அது திடீரென்று நிகழும். அது மிகவும் துரிதமாக, கண்ணிமைக்கும் நேரத்தில் வேகமாக நிகழும். அது மிகவும் வல்லமையான ஒரு நிகழ்வாக இருக்கும். அது நம்முடைய சூழ்நிலையை முற்றிலுமாய் மாற்றியமைக்கும். இந்த அத்தியாயத்தை முடிக்கின்ற நேரத்தில், நிகழப்



You Matter to God(Tamil)-2018.indd 140 5/22/2018 6:18:08 PM

போகின்ற ரேப்ச்சர் நிகழ்விற்காக என்னோடு சேர்ந்து நீங்களும் தேவனுக்கு நன்றி சொல்வீர்களா? இந்த நிகழ்வு நடக்கும்போது, நாம் எவ்வளவு வித்தியாசமானவர்களாக இருப்போம் என்று இப்பொழுது பார்ப்போம்.



You Matter to God(Tamil)-2018.indd 141 5/22/2018 6:18:08 PM

# 12
# நாம் உருமாற்றப்படுவோம்

*இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்தரிக்கின்றோம் (உமக்கு நன்றி சொல்கின்றோம் )........தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும், உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் (நீர்) பலனளிக்கிறீர்.*

வெளிப்படுத்தின விசேஷம் **11:17-18**

நம்மை வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்லக்கூடிய, ஆச்சரியத்தில் நம் புருவங்களை உயர்த்தச் செய்யக்கூடிய ஒரு நிகழ்வை தேவன் நமக்காக ஆயத்தம் செய்திருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளும்போது, நாம் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள், விசேஷமானவர்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. நித்தியத்தில் அவரோடு கூட வாழும்படி, அவர் நம்மை ஆயத்தப்படுத்துகிறார். அந்த அளவிற்கு, நாம் கர்த்தருக்கு மிகவும் முக்கியமானவர்களாய் இருக்கின்றோம்.

முந்தின அத்தியாயத்தில், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் தேவன் தம்முடைய மீட்பை எவ்வாறு முடிக்கும்படி திட்டமிட்டிருக்கிறார் என்று நாம் பார்த்தோம். நம்முடைய முழு ஆளுமைக்குள் தேவன் கொண்டு வரப் போகிற மாற்றம் எவ்வளவாய் பரந்து விரிந்திருக்கப் போகிறது, அதன் நோக்கம் என்ன என்பதை இந்த அத்தியாயத்தில் நாம் பார்க்கப் போகிறோம்.

## நாம் அனுபவிக்கப் போகிற மாற்றம்

நமக்குள் உண்டாகப் போகிற மாற்றத்தைக் குறித்து இப்பகுதியில் பார்ப்போம். 1 கொரிந்தியர் 15:42 மற்றும் அதைத் தொடர்ந்த வசனங்களில், மரித்தோர் உயிர்த்தெழப் போவதைக் குறித்து பவுல்



You Matter to God(Tamil)-2018.indd 142 5/22/2018 6:18:08 PM

எழுதுகின்றார். எப்படிப்பட்ட ஒரு சரீரம் நமக்கு உண்டாகும் என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கின்றார்:

பவுல் சொல்கிறார்,

> *மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும். அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும். மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும். பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமும் உண்டு. ஆவிக்குரிய சரீரமும் உண்டு.*
>
> 1 கொரிந்தியர் 15:42-44

'ஜென்ம சரீரம்' என்ற வார்த்தையின் அர்த்தம் உங்களுடைய நினைவிலிருக்கிறதா? நம் ஆத்துமாவுக்குரிய பலவீனமான சரீரத்தை அவர் குறிப்பிடுகிறார். ஆத்துமாவுக்குரிய சரீரம் என்ற ஒன்று இருக்கிறது. ஆவிக்குரிய சரீரம் என்ற ஒன்றும் இருக்கிறது. அடுத்த வசனங்களில் அவர் தொடர்ந்து என்ன எழுதுகிறார் என்பதைக் கவனிப்போம்: ''சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது (அழியக்கூடியது), அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை'' (50-ம் வசனம்). அதாவது இப்பொழுது நமக்கிருக்கின்ற சரீரத்தைக் கொண்டு, நம்மால் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது.

இதைப் புரிந்து கொள்ளும்படி, தற்கால விஞ்ஞானத்திலிருந்து ஒரு நல்ல, அருமையான விளக்கத்தை நாம் பார்க்க முடியும். விண்வெளிக்கு நாம் மனுஷர்களை அனுப்புகின்றோம். பூமியின் வளிமண்டலச் சூழ்நிலையை தனக்குள் கொண்டிருக்கிற ஒரு விசேஷமான விண்வெளிக்கலத்தில் அவர்கள் பிரயாணிக்கவில்லை என்றால், அவர்களால் உயிர் பிழைத்திருக்க முடியாது. பூமியின் மேற்பரப்பிலிருந்து ஒரு சில மைல்கள் தூரம்கூட அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது. காரணம், மாம்ச சரீரம், அங்கே உயிர்பிழைத்திருக்க முடியாது. அதற்குரிய திறனற்றதாய் அது இருக்கிறது.

பரலோக ராஜ்யம் என்று வரும்போது, இது இன்னும் அதிக உண்மையாய் இருக்கிறது. விண்வெளிக் கலத்தைக் காட்டிலும் மேலான ஒன்று நமக்குத் தேவைப்படுகிறது. முற்றிலும் வித்தியாசமான ஒரு சரீரம் நமக்குத் தேவையாயிருக்கிறது. 51-ம் வசனத்தில், பவுல் இவ்வாறு சொல்கிறார்: ''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாம் எல்லோரும் நித்திரையடைவதில்லை (மரித்த நிலையிலேயே இருப்பதில்லை). ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்.''



You Matter to God(Tamil)-2018.indd 143 5/22/2018 6:18:08 PM

இந்த வார்த்தைகளை நாம் திரும்பவும் வாசிப்போம்: ‘‘நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்.’’ இதை உங்களுடைய அறிக்கையாகச் செய்யுங்கள்.

*கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது (அதாவது நம் சரீரம்) அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது (அதாவது நம் சரீரம்) சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, ‘மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது,’ என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.*

51-54 வசனங்கள்

மரணம், நம்முடைய கடைசி எதிரியாக இருக்கிறது என்று 1 கொரிந்தியர் 15:26 சொல்கிறது. மரணத்தின் கடைசி தோல்வி இனிமேல்தான் வரப் போகிறது. காரணம், மரணமானது அக்கினிக் கடலில் எறியப்படப் போகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 20:14).

மரணம் என்பது சாத்தானின் மிகப் பெரிய, உச்சகட்ட வெற்றி என்பதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? பூமியில் நிகழ்கின்ற ஒவ்வொரு மரணத்தையும் அவன் வெற்றியாய் கொண்டாடுகின்றான். அவன் அதை தன்னுடைய சாதனையாய் உயர்த்திப் பிடிக்கின்றான். ஆனால் அவனுடைய வெற்றி, தோல்வியாய் மாறப் போகின்றது என்பதை இவ்வேதப்பகுதி உறுதிப்படுத்துகிறது.

## நம்முடைய சரீரத்தில் உண்டாகும் ஐந்து மாற்றங்கள்

இங்கு பவுல் சுட்டிக் காண்பித்திருக்கிற ஐந்து மாற்றங்களை உங்கள் முன் முக்கியப்படுத்திக் காண்பிக்க விரும்புகிறேன். மேலே குறிப்பிட்டபடி, இவையெல்லாம் உங்களுடைய சரீரத்தில் நடக்கப் போகின்றன. அவற்றின் மீது நம் கவனத்தை எச்சரிக்கை உணர்வுடன் மதிப்போம். காரணம், இவை எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்வதென்பது எளிதான ஒரு விஷயமல்ல.

முதல் மாற்றம், அழியக்கூடிய சரீரம், அழியாத சரீரமாய் மாறி விடும். ‘அழியக்கூடிய சரீரம்’ என்றால், ‘சிதைவுக்கும், சீர்கேட்டுக்கும் உட்பட்ட சரீரம்’ என்று அர்த்தம். இது நம்முடைய இப்பொழுதைய சரீரத்தைக் குறிக்கின்றது. ஒருபோதும் நாம் வியாதிப்படவில்லை என்றாலும், நம் சரீரங்கள் படிப்படியாக சிதைந்து, உருவழிந்து கொண்டுதான் இருக்கின்றன. நீங்கள் முதிர்வயதடையும்போது, உங்களுடைய தோலில் சுருக்கங்கள் உண்டாகும். சில மாற்றங்களை நீங்கள் தவிர்க்க முடியாது.



You Matter to God(Tamil)-2018.indd 144 5/22/2018 6:18:08 PM

ஆனால் உங்களுடைய சிதைந்து, அழியக்கூடிய சரீரத்தை அழிவில்லாத சரீரமாய் மாற்ற வேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருக்கிறார்.

இரண்டாம் மாற்றத்தில், கனவீனமான சரீரம், மகிமை நிறைந்த சரீரமாய் மாறும்.

மூன்றாம் மாற்றத்தில், பலவீனமான சரீரம், வல்லமை நிறைந்த சரீரமாய் மாறும். உண்மையில், பலத்தைக் காட்டிலும், வல்லமை அதிக ஆற்றல் நிறைந்ததாய் இருக்கிறது. கனத்தைக் காட்டிலும், மகிமை என்பது அதிக உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது.

நான்காவது மாற்றத்தில், ஆத்துமாவுக்குரிய ஜென்ம சரீரம், ஆவிக்குரிய சரீரமாய் மாறும். முந்தின அத்தியாயங்களில், இதைக் குறித்து நாம் அதிக கவனம் செலுத்திக் கற்றுக் கொண்டோம். ஆத்துமாவுக்குரிய சரீரம் ஆவிக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தியிருக்க வேண்டும். ஆவியானது ஆத்துமாவின் மூலம், சரீரத்தை இயக்க வேண்டும். என் தனிப்பட்ட கருத்தும், என் நம்பிக்கையும் இதுதான். உயிர்த்தெழப் போகிற நம் சரீரத்தில், ஆவியானது நேரடியாக நம் சரீரத்தைக் கட்டுப்படுத்தி நடத்தும். ஆத்துமாவின் வழியாகச் செல்லாமலே, அது விரும்புகிற காரியத்தைச் செய்ய வைக்கும்.

ஆத்துமாவிற்கு என்ன நடக்கும் என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. அதற்கு சாத்தியமான ஒரு பதிலைக் கொடுக்கும்படி, சுவாரசியமான குறிப்பை நான் இங்கு கொடுக்கின்றேன். ''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கின்றது,'' என்று லேவியராகமம் **17:11** சொல்கிறது. இங்கு 'உயிர்' என்ற வார்த்தைக்கு, எபிரெய மொழியில் நெப்பீஷ் (nephesh) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு 'ஆத்துமா' என்று அர்த்தம். இரத்தமில்லா சரீரம் நமக்கு உண்டாயிருக்கும் என்று சிலர் விசுவாசிக்கிறார்கள். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தபோது, அவரிடம் மாம்சமும், எலும்பும் மட்டுமே இருந்தது. அவருடைய இரத்தத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை என்று அவர்கள் வாதாடுகிறார்கள். இது இவர்களுடைய யூகம் மட்டுமே. ஆனால் இதைக் கண்டுபிடிப்பது சுவாரசியமாக இருக்கும். அப்படித்தானே?

கடைசியாக நடக்கப் போகிற ஐந்தாவது மாற்றத்தில், சாவுக்கேதுவான சரீரம், சாவாமையுடையதாய் மாறும். இது உற்சாக மூட்டக்கூடியதாயிருக்கிறது!

இப்பொழுது நாம் ஏன் ஒரு சில விநாடிகள் நேரம் செலவிட்டு, இந்த மாற்றங்களை சத்தமாக அறிவிக்கக்கூடாது: சிதைந்து அழியக்கூடிய நம் சரீரம், அழியாமையுடையதாய் மாறும். கனவீனமான நம் சரீரம், மகிமை நிறைந்ததாய் மாறும். பலவீனமான நம் சரீரம், வல்லமையுடையதாய்



You Matter to God(Tamil)-2018.indd 145 5/22/2018 6:18:08 PM

மாறும். ஆத்துமாவுக்குரிய நம் ஜென்ம சரீரம், ஆவிக்குரியதாய் மாறும். சாவுக்கேதுவான நம் சரீரம், சாவாமையுடையதாய் மாறும்.

இதை நீங்கள் அறிக்கை செய்யும்போது, நீங்கள் நன்றாக உணருகிறீர்களா? இல்லையென்றால், நான் உங்களை நினைத்து வருத்தப்படுகிறேன். இந்த வார்த்தைகள், நமக்கு உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும், ஆசையாய் ஆர்வமாய் நம்முடைய ஓட்டத்தைத் தொடரச் செய்ய வேண்டும்.

நமக்கு உண்டாகப் போகிற இந்த மாற்றங்களெல்லாம் பிலிப்பியர் **3**-ம் அதிகாரத்தில் தொகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தின் ஒரு பகுதியிலிருந்துதான், நாம் முந்தின அத்தியாயத்தை ஆரம்பித்தோம். பவுல் இங்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> *நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*
>
> பிலிப்பியர் **3:20-21**

தற்காலிகமாக, நாம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அல்லது பிலிப்பைன்ஸின் அல்லது சீனாவின் அல்லது ஜப்பானின் அல்லது கனடாவின் அல்லது இந்தியாவின் குடிமகன்களாக இருக்கலாம். ஆனால் இது நம்முடைய நிரந்தரக் குடியுரிமை கிடையாது. நம்முடைய நிரந்தரக் குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. மெய்யாகவே அதுதான் நமக்குச் சொந்தமானதாய் இருக்கிறது. பரலோகத்திலிருந்து நம்முடைய இரட்சகர் வருவார் என்ற ஆர்வத்தோடு நாம் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று பவுல் இங்கு சொல்கிறார். நீங்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்றீர்களா? நீங்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்றீர்கள் என்று நான் நம்புகிறேன்.

## அற்பமான நிலையிலிருந்து மகிமையான நிலைக்கு

இயேசு வரும்போது, அவர் நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக உருமாற்றுவார் என்று பிலிப்பியர் நிருபத்தில் எழுதப்பட்ட இவ்வசனங்கள் சொல்கின்றன. கிரேக்க மூல மொழியில் இது இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: ''அவர் எல்லாவிதத்திலும் குறைவுபட்ட, நம்முடைய அற்பமான சரீரத்தை, அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மாற்றுவார்.''

குறைவுபட்ட, அற்பமான ஒரு சரீரத்தில் இப்பொழுது நாம் வாழ்கின்றோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதை நீங்கள் உணருகிறீர்களா? இந்த உண்மையைப் பார்க்கிறீர்களா?



You Matter to God(Tamil)-2018.indd 146 5/22/2018 6:18:08 PM

இது ஏன் உண்மையாய் இருக்க வேண்டும்? காரணம், தேவனுக்கு விரோதமாய் நாம் முரட்டாட்டம் செய்தோம். இதன் விளைவாக, நாம் குறைவுபட்டிருக்கிறோம் என்பதை எப்பொழுதும் நமக்கு நினைப்பூட்டும்படி, நாம் இந்த சரீரத்தில் வாழ வேண்டும் என்று தேவன் நிர்ணயித்திருக்கிறார்.

நம் அன்றாட வாழ்க்கையிலிருந்து ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். நீங்கள் ஒரு பெரிய பணக்காரராய் இருக்கலாம். ஆடம்பரமாய், நன்கு தயாரிக்கப்பட்ட உணவை நீங்கள் உண்ணலாம். நல்ல சத்தான பானங்களை நீங்கள் அருந்தலாம். அது ஒரு பொருட்டல்ல. குளியலறைக்கும், கழிவறைக்கும் நீங்கள் நிச்சயம் சென்றுதான் ஆக வேண்டும். இது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஒரு கேள்வியை நான் உங்களிடம் நேரடியாகக் கேட்கிறேன். குளியலறையிலும், கழிவறையிலும் யாராவது எப்பொழுதாவது கண்ணியமாக, மரியாதைக்குரியவர்களாக உணர்ந்திருக்கிறீர்களா? ஆகையால் ஒவ்வொருமுறையும் நீங்கள் கழிவறைக்குச் செல்லும்போது, குறைவுபட்ட அற்பமான ஒரு சரீரத்தில் நீங்கள் வாழ்கின்றீர்கள் என்ற உண்மை உங்களுக்கு நினைப்பூட்டப்படுகிறது.

இதே போன்ற இன்னொன்றையும் சிந்தித்துப் பார்ப்போம். மிகவும் அழகான உடைகளை நீங்கள் உடுத்தலாம். நல்ல விலையுயர்ந்த வாசனை திரவியங்களை நீங்கள் பயன்படுத்தியிருக்கலாம். உங்களுடைய தலைமுடியை நன்றாக சீவி வாரியிருக்கலாம். கொஞ்சம் காலதாமதம் ஆகின்றதே என்று, வெப்பமான காலநிலையில் நீங்கள் வேகமாக நடப்பீர்கள் என்றால், என்ன ஆகும்? நீங்கள் மதிப்பும் கண்ணியமும் மிக்க நபராய் இருந்தாலும், உங்களுக்கு வியர்க்க ஆரம்பிக்கும். நீங்கள் மிகவும் சாதாரண ஒரு நபராக இருந்தாலும், உங்களுக்கு வியர்க்கும். இது திரும்பவும், நீங்கள் குறைவுபட்ட ஒரு சரீரத்தில் வாழ்கின்றீர்கள் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறது.

இது நமக்கு நினைப்பூட்டப்படுவது நல்லதுதான். ஆனால் இன்றைய கலாச்சாரத்தில் காணப்படுகிற பல விஷயங்கள், இந்தப் பிரச்சனையைத் தவிர்க்கும்படி முயற்சிக்கின்றன என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். குறைவுபட்ட, அற்பமான சரீரத்தில் வாழ்கின்றோம் என்ற உண்மை நமக்கு நினைப்பூட்டப்படாதபடி, நம்மில் சிலர் நம் வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்கிறோம். ஆனால் நம்மால் அதைத் தவிர்க்க முடியாது. இருந்தாலும், நாம் மாற்றப்படுவோம் என்பதுதான் வேதவசனத்தின் நற்செய்தியாயிருக்கிறது. அவருடையதைப் போன்ற ஒரு சரீரத்தை நாம் பெறுவோம். அவர் ஒருவரால் மட்டுமே நம்மை மாற்ற முடியும்.

நாம் உருமாற்றப்படப் போகிற அந்தக் கணத்தைக் குறித்து **1** யோவான் **3**-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.



You Matter to God(Tamil)-2018.indd 147 5/22/2018 6:18:08 PM

*பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்.*

1 யோவான் 3:2

நாம் உருமாற்றப்படப் போகிற அந்தக் கணத்தைக் குறித்துதான் இது பேசுகிறது. நம்முடைய சொந்தக் கண்களால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் பார்க்கும்போது, அந்தக் கணப்பொழுதில் நாம் உருமாற்றப்படுவோம்.

## நமக்கு உத்வேகத்தைக் கொடுக்கும் உந்துசக்தி

கர்த்தருடைய மறுவருகையைக் குறித்த உற்சாகம் நிறைந்த எதிர்பார்ப்பு என்பது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் ஒரு இன்றியமையாத பங்காக இருக்கின்றது என்று நான் விசுவாசிக்கிறேன். கர்த்தராகிய இயேசு திரும்பி வர வேண்டும் என்பதைக் குறித்த உற்சாகமான ஒரு எதிர்பார்ப்பு நமக்குள் இருக்கவில்லை என்றால், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் புதிய ஏற்பாட்டுடன் ஒத்திசைந்து செல்லவில்லை என்று அர்த்தம்.

இந்த எதிர்பார்ப்பை முக்கியப்படுத்திப் பேசுகிற பவுலின் வார்த்தைகளில் சிலவற்றை நான் சீக்கிரமாய் எடுத்துக் காண்பிக்கிறேன். முதல் வேதவசனம், 1 கொரிந்தியர் 1:7-ஐ கவனிப்போம். கொரிந்து பட்டணத்து சபையாருக்கு பவுல் இதை ஒரு கடிதமாய் எழுதுகிறார். அதன் மத்தியில், அவர் இவ்வாறு சொல்கிறார்: ''அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் (ஆவியானவரின் வரங்களிலும்) குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.''

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையாய் வெளிப்படப் போகிற தருணத்திற்காக ஆர்வமாய் காத்திருங்கள் என்று பவுல் கொரிந்து சபையாரிடம் அறிவுறுத்துகிறார். அவர் அதை அவர்களிடம் எதிர்பார்க்கிறார். தேவன் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு இவ்வசனம் ஒரு நல்ல, உறுதியான ஆதாரமாய் இருக்கிறது. பவுல் இதைத்தான் சொல்கிறார்: ''கர்த்தராகிய இயேசுவின் வருகைக்காக நீங்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்ற நேரத்தில், பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் ஒன்றிலும் நீங்கள் குறைவுபடக்கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன்.''

தீத்து 2:11-12 வசனங்களில், பவுல் எழுதுகிறார்:

*ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும்,*



You Matter to God(Tamil)-2018.indd 148 5/22/2018 6:18:08 PM

*லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம் பண்ணி,*

நாம் ஏன் ஜாக்கிரதையாய், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் வாழ வேண்டும்? பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கான உந்துசக்தி என்ன? அடுத்த வசனம், நமக்குப் பதிலளிக்கிறது. மகத்தான தேவனும், நம் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையான பிரசன்னத்தை, நாம் நம்பியிருக்கிற அந்த ஆசீர்வாதமான நம்பிக்கையை எதிர்நோக்கி நாம் காத்திருக்க வேண்டும் என்று 13-ம் வசனம் சொல்கிறது. அவர் திரும்பி வரப் போகும் அந்த நாளுக்காக நாம் காத்துக் கொண்டிருக்கிறோம், அதை எதிர்நோக்கியிருக்கிறோம்.

இந்த வசனத்தில், இயேசுவை நம் இரட்சகராக மட்டும் சொல்லவில்லை. அவர் மகத்தான தேவன் என்றும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுவை தேவனாகப் பார்ப்பதில் உங்களுக்குள் ஏதேனும் தடை இருந்தால், அது உங்களுக்கு ஒரு பெரிய பிரச்சனை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இயேசுவே நம் மகத்தான தேவனும், நம் இரட்சகருமாயிருக்கிறார் என்று வேதவசனம் தெளிவாக நமக்குச் சொல்கிறது.

பிறகு 2 தீமோத்தேயு 4:7-8 வசனங்களில், பவுல் சொல்கிறார்:

*நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை (அவருடைய வருகையை) விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்* (**who have loved His appearing**).

இது ஒரு கிரீடம். ஆனால் இது ஒரு விசேஷமான கீரிடம். அவருடைய வருகையை விரும்புகிறவர்களுக்கென்று இந்த விசேஷமான கிரீடம் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. 'அகாபே (agape)' என்ற அதே கிரேக்க வார்த்தைதான், 'விரும்பும் (love)' என்ற வார்த்தை வருகின்ற இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது செயல் தீவிரம் கொண்ட, மிகவும் வலிமையான ஒரு வார்த்தையாயிருக்கிறது. நியு இன்டர்நேஷனல் வேதாகம மொழிபெயர்ப்பு இதை, 'அவருடைய வருகைக்காக வாஞ்சையோடு ஏங்குகிறவர்கள்' என்று சொல்கிறது. இயேசுவின் வருகைக்காக வாஞ்சையோடு ஏங்குகிறவர்கள் மீது தேவன் தம் கண்களை பதித்திருக்கிறார்.

எபிரெயர் 9:27-ஐ வாசிப்போம்: "ஒரு தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." தேவனால் நியமிக்கப்பட்ட இந்த இரண்டு விஷயங்களையும் நாம் தவிர்க்க முடியாது, இவற்றை நாம் தவற விட முடியாது. இந்த உலகத்தில் நியமிக்கப்பட்ட அநேக விஷயங்களை நாம் தவிர்க்கலாம், தவற



You Matter to God(Tamil)-2018.indd 149 5/22/2018 6:18:08 PM

விடலாம். ஆனால் நம் மரணத்திலும், தேவனுடைய நியாயத்தீர்ப்பிலும் நாம் நிச்சயமாகப் பங்கெடுப்போம்.

தொடர்ந்து எபிரெயர் **9:28**-ஐ வாசிப்போம்: ‘‘கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசன மாவார்.’’

அவர் யாருக்கு தரிசனமாவார்? அவருக்காக ஆர்வத்தோடு காத்திருக்கிறவர்களுக்கு அவர் தரிசனமாவார்.

ஒரு ஆலோசனையை நான் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். நீங்களும் இதை வேதாகமத்தில் சரிபார்த்துக் கொள்ளலாம். சில வசனங்களை நாம் பார்த்திருக்கிறோம். புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறபடி, கர்த்தருடைய வருகையைக் குறித்த உற்சாகம் நிறைந்த எதிர்பார்ப்புதான், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கான முக்கியமான உந்துசக்தியாயிருக்கிறது. அதை இவ்வசனங்களில் நீங்கள் பார்க்க முடியும். உண்மையைச் சொன்னால், பரிசுத்தத்தைக் குறித்து வேதவசனம் பேசுகிற ஒவ்வொரு இடத்திலும், அது கர்த்தருடைய மறுவருகையோடு தொடர்புபடுத்தப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இதிலிருந்து ஒரு முடிவுக்கு நான் வருகின்றேன். கர்த்தருடைய மறுவருகையைக் குறித்த சத்தியங்கள் சபையில் தொடர்ந்து ஒழுங்காகப் போதிக்கப்படவில்லை என்றால், சபையில் இருக்க வேண்டிய பரிசுத்தத்தின் அளவு நிச்சயமாகக் குறைந்து விடும். இது சரியான முடிவுதான். இதுதான் மெய்யான நிலை.

அன்பு நண்பரே, தேவனுடைய பரிசுத்தத்திற்கான அளவுகோலில் சபையானது எவ்வளவு கீழே சென்றிருக்கிறது என்பதைக் குறித்து எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறோமா என்று எனக்குத் தெரியவில்லை. ஜான் விம்பர் நடத்திய கூட்டங்களில் பங்கெடுத்த ஒருவருடைய அனுபவத்தைக் குறித்து நான் ஒருமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த நேரத்தில், அவர்கள் ஒருவர் மற்றவருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பெண் இப்படியொரு ஜெப விண்ணப்பத்தைக் கொடுத்தார்: ‘‘சபையைக் குறித்து இயேசு எவ்வாறு உணருகிறார் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.’’ அவர்களும் அவருடைய விண்ணப்பத்திற்காக ஜெபித்தார்கள். அப்பொழுது ஒவ்வொரு முறையும், சபை என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டபோது, அந்தப் பெண் சத்தமாய் கண்ணீர் விட்டு அழுதாள்.

நீங்கள் அவருக்காக ஆர்வமுடன் காத்திருக்கின்றீர்களா? ஆம் என்றால், தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.



You Matter to God(Tamil)-2018.indd 150 5/22/2018 6:18:08 PM

## இந்தக் காலத்திலிருந்து வெளியேறி நித்தியத்திற்குள்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மறுவருகையைக் குறித்த எதிர்பார்ப்பு ஆதித் திருச்சபையினரிடம் இருந்தது தவறு; காரணம், அவர் வரவில்லை என்ற கடுமையான விமர்சனங்களை நான் அடிக்கடி கேட்கிறேன். இவர்கள் சொல்வதை நானும் ஏற்றுக் கொண்டு, சற்றும் பிரயோஜனமில்லாத பலன்களைப் பெறுவதைக் காட்டிலும், ஆதித் திருச்சபையினருக்குள் இருந்த எதிர்பார்ப்பு சரியானதுதான் என்று ஏற்றுக் கொண்டு, அவர்கள் பெற்ற அதே நிலையான பலன்களையே நானும் பெற விரும்புகிறேன். ஆதித் திருச்சபையினரின் நிலைப்பாடு தவறு என்றால், நானும் அந்தத் தவறான நிலைப்பாட்டையே எடுத்துக் கொள்கிறேன்.

நேரடியாகச் சொல்கிறேன். அந்தக் கடுமையான விமர்சனங்கள் சரியானவை அல்ல என்றுதான் நான் விசுவாசிக்கிறேன். நேரம் என்பது தத்துவ அறிஞர்களும், இயற்பியலாளர்களும் ஆராய்கின்ற ஒரு சுவாரசியமான விஷயமாயிருக்கிறது. இது ஆராய்வதற்கு மிகவும் கடின மான ஒரு விஷயமாகும். நான் எளிமையான வார்த்தைகளில் இதைச் சொல்கிறேன். மரணத்தில், உங்களுடைய ஆவியும், உங்களுடைய ஆத்துமாவும், கண்களுக்குத் தெரியாதபடி, உங்களுக்குள் இருக்கும் இருக்கும் இவ்விரண்டும் பரலோகத்திற்குச் செல்லும். உங்களுடைய சரீரம் மண்ணிற்குள் அடக்கம் செய்யப்படும் அல்லது புதைக்கப்படும். நீங்கள் இந்த நேரத்தைக் கடந்து, பரலோகத்திற்குள் செல்லும்போது, நீங்கள் இந்த நேரத்தை விட்டு வெளியேறி, நித்தியத்திற்குள் கடந்து செல்கின்றீர்கள். இனி நேரம் என்ற விஷயம் உங்களுக்குப் பொருந்தாது. இதைப் புரிந்து கொள்வதென்பது, மனுஷனுடைய மனதிற்குக் கடின மான ஒரு விஷயமாயிருக்கிறது.

ஆனால் இங்கே சுவாரசியமான உண்மை ஒன்று இருக்கிறது. இயற்பியலாளர்கள் ஒன்றைக் கணக்கிட்டிருக்கிறார்கள். நீங்கள் ஒரு விண்வெளிக்கலத்தில் ஏறி, உச்சபட்ச அதிகமான வேகத்தில் ஒரு தொலைதூர நட்சத்திரத்திற்குச் செல்வீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இரண்டு வாரங்கள் கழித்து திரும்பி வருகின்றீர்கள். இரண்டு வாரங்கள் கடந்து சென்றிருக்கும் என்று நீங்கள் உணருவீர்கள். ஆனால் நீங்கள் பூமியில், அந்த விண்வெளிக்கலத்தை விட்டு வெளியே வரும்போது, மூன்று தலைமுறையினர் இந்தப் பூமியில் பிறந்திருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்வீர்கள். இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்ன ? நேரம் என்பது ஒரு சிக்கலான விஷயம். இதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நான் சொல்ல வருகின்ற விஷயம் இதுதான். மரணத்திற்குப் பிறகு, நேரம் என்பது இருக்காது. ஒருவர் மரித்து, இரண்டாயிரம் வருடங்கள் ஆகி விட்டதா, இல்லையா என்பது விஷயமில்லை. நேரச் சட்டம்



You Matter to God(Tamil)-2018.indd 151 5/22/2018 6:18:08 PM

என்பது பூமிக்குரிய விஷயத்தில் உண்மையாக இருக்கலாம். ஆனால் நித்தியத்திற்குரிய விஷயத்தில் அது உண்மையல்ல.

நான் மரிக்கும்போது, என்னுடைய ஆவியும், ஆத்துமாவும் இந்த நேரத்தைக் கடந்து, நித்தியத்திற்குள் சென்று விடுகின்றது. ஒரு உண்மையான விசுவாசியாய், எனக்கு அடுத்து நடக்கப் போகிற சம்பவம் என்ன? உயிர்த்தெழுதல். என் கண்களை நான் திரும்பவும் திறக்கும்போது, நான் பார்க்கப் போகின்ற முதல் விஷயம் என்ன? கர்த்தராகிய இயேசுதான். ஆகையால் இந்த ஆதித் திருச்சபை விசுவாசிகளின் எதிர்பார்ப்பு தவறான ஒன்றல்ல. இங்கு இந்த நேரத்தில் நிகழப் போகும் உங்களுடைய மரணத்தைக் காட்டிலும், கர்த்தருடைய வருகை தூரமானது அல்ல. உங்களால் இதைப் பார்க்க முடிகின்றதா?

## நமக்கு முன் இருக்கும் சவால்

இந்த அத்தியாயத்தை முடிக்கின்ற இந்நேரத்தில், பரிசுத்தத்திற்கான சவாலை நான் உங்கள் முன் வைக்கின்றேன். இது நமக்கு மிகவும் அத்தியாவசியமாய் தேவைப்படுகிற ஒரு சவாலாகும்.

கர்த்தருடைய வருகையில், உங்களுடைய சரீரம் “குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக” என்றால் என்ன அர்த்தம் என்ற ஒரு கேள்வியை ஆரம்பத்தில் நான் முன் வைத்தேன். ஏதேனும் பதில்கள் உங்களிடம் இருக்கிறதா?

> *சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.*
>
> 1 தெசலோனிக்கேயர் 5:23-24

பின் வரும் இரண்டு சிந்தனைகளையும் ஆழமாய் சிந்திக்கும்படி நான் உங்களுக்கு அழைப்பு கொடுக்கிறேன்.

முதல் சிந்தனை, எந்த பலிபீடத்தில் உங்களுடைய சரீரத்தை நீங்கள் கிடத்தினீர்களோ, அங்கே அது பரிசுத்தமாக்கப்படுகிறது. தேவனுடைய பலிபீடத்தில் நம்முடைய சரீரங்களை பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று வேதவசனம் நமக்கு கட்டளையாகக் கொடுத்திருக்கிறது. இந்தப் பலிபீடம், பலிபொருளை பரிசுத்தமாக்குகிறது. அதாவது, குறைவுபட்ட அற்பமான ஒரு சரீரமாக உங்களுடைய சரீரம் இருந்தாலும், நீங்கள் அதை கர்த்தராகிய இயேசுவிடம் அர்ப்பணிக்கும்போது, அது பரிசுத்தமாக்கப்படுகிறது.

இரண்டாவது சிந்தனை, நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் தேவனுடைய பணிக்கென்று நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும்.



You Matter to God(Tamil)-2018.indd 152 5/22/2018 6:18:08 PM

உங்களுடைய முழு சரீரத்தையும் கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையாகவே அர்ப்பணித்திருக்கிறீர்கள் என்றால், உங்களுடைய கரங்களை அதிலிருந்து எடுத்திருப்பீர்கள். ‘‘தேவனே, இது உம்முடைய சரீரம். நீர் விரும்புகிறதை, இதைப் பயன்படுத்தி செய்தருளும்,’’ என்று சொல்லியிருப்பீர்கள். உங்களுடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் கட்டுப்படுத்தும்படி, கர்த்தராகிய இயேசுவுக்கு அதை ஒப்புக்கொடுத்து, மெய்யாகவே அவருக்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் நீண்ட தூரம் கடந்து வந்திருக்கிறீர்கள் என்று அர்த்தம்.



You Matter to God(Tamil)-2018.indd 153 5/22/2018 6:18:08 PM

# 13
# நீங்கள் ஒரு புதையல்

*சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில்அடிபட்டவளே,*
*தேற்றரவற்றவளே, இதோ, நான் உன்*
*கல்லுகளை பிரகாசிக்கும்படி வைத்து,*
*நீல இரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி,*
*உன் பலகணிகளைப் பளிங்கும்,*
*உன் வாசல்களை மாணிக்கக் கற்களும்,*
*உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்.*
*உன் பிள்ளைகளெல்லாரும்*
*கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்.*
*உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.*
*நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்.*
*கொடுமைக்குத் தூரமாவாய். பயமில்லாதிருப்பாய்.*
*திகிலுக்குத் தூரமாவாய். அது உன்னை அணுகுவதில்லை.*

ஏசாயா **54:11-14**

தேவன் எவ்வளவு ஆச்சரியமான விதத்தில் நம்மை உருவாக்கியிருக்கிறார், நம்மைக் குறித்த அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படி எவ்வளவு மகிமையான ஒரு நோக்கத்தை நமக்காக, நம் ஆவி, ஆத்துமா, சரீரத்திற்காக அவர் வைத்திருக்கிறார் என்பதைக் குறித்து நாம் பார்த்திருக்கிறோம். ஒரு குறைவும், தவறும் இல்லாத அவருடைய பரிபூரண திட்டத்திலிருந்து நாம் ரொம்பவே விலகியிருப்பதைப்போலத் தெரியலாம். அது ஒரு பொருட்டல்ல. ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் களிமண் சரீரத்திற்குள் தேவன் ஊதிய தம்முடைய ஜீவ சுவாசத்தை அவர் ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை. கடைசியில் அவர் இயேசுவை அனுப்பி, அதைத் தம்மோடு சேர்த்துக் கொண்டார்.



You Matter to God(Tamil)-2018.indd 154 5/22/2018 6:18:09 PM

இழந்து போனதைத் தேடவும், தொலைந்து போனதை கண்டுபிடித்து, இரட்சிக்கவுமே இயேசு வந்தார் என்று வேதவசனம் சொல்கிறது. அவர் அதற்காகத்தான் வந்தார். அவர் ஆதாமின் விழுந்துபோன சந்ததி யாருக்காகத்தான் வந்தார். நம் மீது அவர் வைத்திருக்கும் அன்பை அளவிட முடியாது, அது அவ்வளவு பெரியது.

இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களில் முக்கியமான ஒன்று, ''மனுஷ குமாரன்'' என்பதாகும். இது நான்கு சுவிசேஷங்களிலும், எண்பது முறைக்கு மேல் எழுதப்பட்டிருக்கிறது. அவர் தாவீதின் குமாரனாய், ஆபிரகாமின் குமாரனாய் இருந்தார். ஆனாலும், அவர் தம்மை மனுஷ குமாரன் என்று அழைத்துக் கொள்கிறார். அதாவது அவர் ஆதாமின் குமாரனாய், ஆதாம் சந்ததியினுடைய ஒரு பிரதிநிதியாய் வந்தார்.

நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிற ஒரு சத்தியம் இங்கே எழுதப்பட்டிருக்கிறது. 1 தீமோத்தேயு 2:5-6 சொல்கிறது: ''தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.'' இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் நிகழ்ந்து பல வருடங்கள் ஆன பிறகு, இவ்வசனம் எழுதப்பட்டது. மனுஷனாகிய இயேசு, தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் என்பதை இது வெளிப்படுத்துகிறது. மனுஷனாகிய கிறிஸ்து இயேசுதான் அங்கே அமர்ந்திருக்கிறார். இந்த வெளிப்பாட்டை நாம் பெற்று, உள்வாங்கிக் கொள்வோம் என்றால், இது நம்மை ஆச்சரியத்தில் திக்குமுக்காடச் செய்கிற ஒரு சத்தியமாக இருக்கிறது.

நம் இனத்தின் பிரதிநிதி, இப்பிரபஞ்சத்திலேயே உயரிய ஒரு இடத்தில், தம்முடைய இருக்கையில் வீற்றிருக்கிறார். ஆம், மனுஷனாகிய கிறிஸ்து இயேசு தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். பாருங்கள், தேவன் ரொம்பவும் கீழே கிடக்கின்ற ஒன்றை எடுத்து, அதை உயரிய ஒரு நிலைக்கு உயர்த்துகிறார். அவர் பூமியின் மண்ணிலிருந்து அதை ஆரம்பித்தார். ஆனால் சிங்காசனத்தை அதன் முடிவாக அவர் நிர்ணயித்திருக்கிறார்.

தேவனுடைய பார்வையில், நாம் அவ்வளவு விலையேறப்பெற்றவர்களாக இருக்கின்றோம்.

மத்தேயு 13-ம் அதிகாரத்திலிருந்து ஒரு சில வசனங்களைப் பார்த்து, இப்புத்தகத்தை முடிக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இந்த அதிகாரத்தை எப்பொழுதாவது ஆராய்ந்து வாசித்திருக்கிறீர்களா? இந்த அதிகாரத்தில் ஏழு உவமைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இது நமக்கு உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு அதிகாரமாய் இருக்கிறது. இதில் ஆழமான விலையேறப் பெற்ற சத்தியங்கள் புதைந்து கிடக்கின்றன. இதிலிருந்து மிகவும் குறுகிய இரண்டு உவமைகளை நான் எடுத்துக் காண்பிக்க விரும்புகிறேன்.



You Matter to God(Tamil)-2018.indd 155 5/22/2018 6:18:09 PM

ஒரு உவமை ஒரே ஒரு வசனத்திலும், இன்னொன்று இரண்டு வசனங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன. நீங்கள் இதை வாசிக்கும்போது, உங்களுடைய மெய்யான அடையாளத்தைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

### மறைந்து கிடக்கும் புதையல்

என்னுடைய வேதாகமத்தில், ''மறைந்திருக்கும் புதையலின் உவமை'' என்று முதல் உவமைக்கு தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்தேயு 13:44-ம் வசனத்தில் இயேசு இவ்வாறு பேசுகின்றார்: ''அன்றியும், பரலோக ராஜ்யம், நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்திற்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்'' (மத்தேயு 13:44).

மத்திய கிழக்கு நாடுகளைக் குறித்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் நீங்கள் இதை சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்றால், நிலத்தில் எவ்வாறு அந்தப் பொக்கிஷம் மறைக்கப்பட்டிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ஏதோ ஒரு நேரத்தில், ஒரு இராணுவம் அந்த இடத்தின் வழியாக படையெடுத்து வந்திருக்கலாம். ஒரு மனுஷன் தன்னுடைய உடைமைகளையெல்லாம் இழந்து விடுவோமோ என்ற பயத்தில், வேகமாக தன் நிலத்திற்கு ஓடி, தன் விலையேறப்பெற்ற உடைமைகளையெல்லாம், அங்கே புதைத்திருக்கலாம். அடுத்து என்ன நடந்தது என்று யாருக்குத் தெரியும்? யுத்தம் அந்தப் பகுதி முழுவதிலும் நடந்திருக்கலாம். எதிரிகள் அவனை அடிமையாய் கொண்டு சென்றிருந்திருக்கலாம். அவ்வளவுதான், அவன் திரும்பி வரவே இல்லை. அவனுடைய பொக்கிஷங்கள் அங்கே அந்த நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

பல வருடங்கள் உருண்டோடிய பிறகு, இன்னொரு மனுஷன் அங்கே வந்து, அந்தப் புதையலைக் கண்டுபிடிக்கின்றான். புத்திக்கூர்மையுள்ள இந்த மனுஷன் எச்சரிக்கையோடு நடந்து கொள்கிறான். இவன் இதைக் குறித்து ஒருவரிடமும் சொல்லவில்லை. இவன் அதை மூடி மறைக்கின்றான். இவன் அதை இரகசியமாய் காத்துக் கொள்கிறான். ஏதோ ஒரு சாதாரண நிலத்தை வாங்குவதுபோல, இவன் அதை வாங்குகிறான். கொஞ்சம் அதிகமான பணத்தைக் கொடுத்து கூட இவன் அதை வாங்கியிருக்கலாம்.

''அந்த நிலத்தில்தான் ஒன்றுமில்லையே. இவன் ஏன் அதை இவ்வளவு அதிகமான விலை கொடுத்து வாங்குகிறான். இந்த நிலம் அவ்வளவு விலை பெறுமா?'' என்று ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள், குழம்பிப் போனார்கள். ஆனால் அவன் அந்த நிலத்தை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட பிறகு, அவன் அந்தப் புதையலைத் தோண்டி



You Matter to God(Tamil)-2018.indd 156 5/22/2018 6:18:09 PM

எடுக்கின்றான். பாருங்கள், அதற்குப் பிறகு, அவன் ஏன் அதை வாங்கினான் என்று மற்றவர்கள் புரிந்து கொண்டார்கள்.

### உவமையைப் புரிந்து கொள்வோம்

உவமைகளைப் புரிந்து கொள்வதற்கு பல்வேறு வழிகள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் இதை எவ்வாறு புரிந்து கொள்கிறேன் என்பதை இங்கு சொல்கிறேன். இந்த உவமையைக் குறித்த என்னுடைய புரிதல் இதுதான்: அந்த நிலத்தை வாங்கிய அந்த மனுஷன், இயேசு. உவமைகள் நமக்குச் சொல்கிற நிலம், இவ்வுலகமாயிருக்கிறது. இயேசு இந்த முழு உலகத்திற்காகவும் மரித்தார். இந்த உலகம் முழுவதற்கான விலைக்கிரயத்தை அவர் செலுத்தினார். ஆனால் இந்த உலகம் அவருக்குத் தேவையில்லை. அதற்குள் மறைந்திருக்கிற பொக்கிஷம்தான் அவருக்குத் தேவை. அதுதான் அவருக்கு முக்கியம். அந்தப் பொக்கிஷம் எது ? தேவனுடைய ஜனங்கள்தான் அந்தப் பொக்கிஷமாயிருக்கிறார்கள்.

அந்தப் பொக்கிஷமாகிய உங்களையும் என்னையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்படி, வெளியே பார்ப்பதற்கு எவ்வித மதிப்பும் இல்லாததைப்போல தெரிகின்ற ஒரு நிலத்திற்காக விலைக்கிரயம் செலுத்த அவர் விருப்பமுள்ளவராயிருந்தார். அந்த அளவிற்கு அவர் நம் மீது அக்கறையும், கரிசனையும் உள்ளவராயிருக்கிறார். அந்த அளவிற்கு அவர் அதிகமாக நம்மைக் குறித்து சிந்திக்கிறார். அந்த அளவிற்கு நாம் அவருக்கு முக்கியமானவர்களாய் இருக்கின்றோம். நாம் மிகவும் முக்கியமானவர்கள். நாம் விசேஷமானவர்கள். நாம் மிகவும் விலையேறப்பெற்றவர்கள். நாம் எவ்வித மதிப்பும் இல்லாதவர்கள் அல்ல. அவ்வளவு விலையேறப்பெற்றவர்களாய் நாம் இருக்கிறபடியால்தான், நம்மை விலைக்கிரயம் கொடுத்து வாங்கும்படி, இயேசு தம்முடைய ஜீவனையே கொடுத்தார்.

### நீங்களாகவே இருப்பதை நினைத்து சந்தோஷப்படுங்கள்

நீங்கள் அற்பமானவர்கள், எவ்வித முக்கியத்துவமும் இல்லாதவர்கள், மதிப்பற்றவர்கள் என்று உங்களைக் குறித்து இனி ஒருபோதும் பேசாதீர்கள். அப்படிப்பட்ட சிந்தையை உதறித் தள்ளுங்கள். அது வேதவசனத்திற்கு ஒத்திராத சிந்தையாகும். அதற்காக தற்பெருமையோடு வாழுங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லை. மாறாக, உங்களுடைய உண்மையான மதிப்பை உணர்ந்து வாழுங்கள் என்றுதான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். 'நான் எதற்கும் உதவாதவன். நான் அற்பமானவன்,' என்ற சிந்தையினால், நீங்கள் ஒரு நன்மையையும் பெறப் போவதில்லை. இது தேவனுக்குப் பிரியமான ஒரு சிந்தையாய் இருக்காது. நீங்கள் தேவனுடைய மகனாய், மகளாய் இருக்கிறீர்கள். தேவனிடத்தில் இரண்டாம் தர பிள்ளைகள்



You Matter to God(Tamil)-2018.indd 157 5/22/2018 6:18:09 PM

என்று ஒருவரும் இல்லை. நீங்கள் மிகவும் முக்கியமானவர்கள். நீங்கள் மிகவும் விலையேறப்பெற்றவர்கள். நீங்கள் விசேஷமானவர்கள்.

இவ்வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்தவர்களாய், அறிக்கை செய்யுங்கள். மதிப்பற்ற விதத்தில் உணரச் செய்யும் எதையும் தூக்கி எறியுங்கள். நீங்கள் நீங்களாகவே இருப்பதைக் குறித்து வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. தேவன் உங்களைத்தான் நேசிக்கிறார். நீங்கள் இருக்கின்ற விதமாகவே, அவர் உங்களை நேசிக்கிறார். ஆனால் உங்களையே தாழ்த்திக் கொள்ளும்படி முயற்சிப்பீர்கள் என்றால், நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது தாழ்மை அல்ல. உண்மையில், அது அவிசுவாசமாகும்.

நீங்கள் இயேசுவை விசுவாசித்து, ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறீர்கள் என்று அர்த்தம். விலையேறப்பெற்ற ஒரு பொக்கிஷத்தின் ஒரு அங்கமாக நீங்கள் இருக்கின்றீர்கள்.

## புதையலைத் தோண்டி எடுங்கள்

இந்த உவமையின்படி, பொக்கிஷத்தைத் தோண்டி எடுப்பதுதான், சுவிசேஷ ஊழியம் என்று நான் விசுவாசிக்கிறேன். இயேசு அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்கினார். ஆனால் அந்தப் பொக்கிஷத்தைத் தோண்டி வெளியே எடுக்கும் வேலையை அவர் நம்மிடம் விட்டு விட்டார். அந்தப் பொக்கிஷம் மண்ணிற்கு அடியில் இருந்தபடியால், அது கறையும், அழுக்கும் படிந்ததாயிருக்கிறது. அதைத் துடைத்து, சுத்தம் செய்து, பளபளப்பாக்க வேண்டியதும் ஊழியத்தின் ஒரு வேலையாயிருக்கிறது. அந்த ஊழியத்தை தேவன் எனக்குக் கொடுத்திருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். நீண்ட காலமாக நிலத்தின் அடியில் இருந்த பொக்கிஷத்தை சுத்தம் செய்கிற ஒரு ஊழியத்தை நான் செய்கின்றேன். தேவனுடைய ஜனங்களின் மதிப்பைக் குறித்த ஒரு உணர்வை தேவன் எனக்குக் கொடுத்திருக்கிறார்.

## அது உயரிய மதிப்புடையதாயிருக்கிறது

நான் மறுபடியும் பிறந்து, இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவனாகி, இரண்டு வருடங்கள் ஆகியிருந்தது. அப்பொழுது நான் பிரிட்டிஷ் ராணுவத்தின் மருத்துவப் படையில் இருந்தேன். ராணுவம் என்னை சூடான் பகுதியில் பணியமர்த்தியிருந்தது.

சூடன் தேசம், வாழ்வதற்கு மிகவும் கடினமான ஒரு தேசம் என்று நான் சொன்னால், என்னை நம்புங்கள். உண்மையைச் சொன்னால், இப்பொழுது அது இன்னும் கடினமான ஒரு தேசமாகி விட்டது. இன்றைக்கு கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும் தேசங்களிலேயே



You Matter to God(Tamil)-2018.indd 158 5/22/2018 6:18:09 PM

மகா மோசமாக, பயங்கரமாக உபத்திரவப்படுத்துகிற ஒரு தேசமாய் அது இருக்கிறது.

முதலில், அதன் தலைநகரமாகிய கார்ட்டோவும் என்ற பட்டணத்திற்கு நான் சென்றேன். அப்பொழுது ராணுவம் என்னை ரயில் நிலையத்திற்கு வெளியே இருந்த அட்பாரா என்றழைக்கப்பட்ட ஒரு நகரத்திற்கு அனுப்பினார்கள். அங்கு செல்லும்படி நான் ரயிலில் பிரயாணித்தபோது, நான் ஒரு பிரிட்டிஷ் ராணுவ வீரனாய் இருந்தபடியால், நான் பயணித்த ரயில் பெட்டியில், உள்ளூர்வாசிகள் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. அதற்கு நான் பொறுப்போ, காரணமோ கிடையாது. அது அநீதியான செயல் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படித்தான் அங்கே நடந்தது.

கார்ட்டோவுமின் தெற்கிலிருந்த ஒரு ரயில் நிலையத்திற்கு நாங்கள் வந்தோம். நான் வெளியே ரயில் நடைமேடையைப் பார்த்தேன். அது முழுவதும் ஆண்களால், பெண்களால், வயதானவர்களால், குழந்தைகளால், சிறுபிள்ளைகளால், கழுதைகளால், கோவேறு கழுதைகளால், ஒட்டகங்களால், கோழிகளால் இன்னும் பலவற்றால் நிரம்பியிருந்தது.

அப்பொழுது 'இந்த ஜனங்களையெல்லாம் குறித்து தேவன் என்ன நினைக்கிறார்,' என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. நான் அதை நிச்சயமாகவே திட்டமிடவில்லை. எனக்கு உடனடியான ஒரு பதில் கிடைத்தது. நான் அதை எதிர்பார்க்கவில்லை. தேவன் எனக்குக் கொடுத்த பதில் இதுதான்: ''சிலர் பெலவீனர்கள், சிலர் முட்டாள்கள், சிலர் தற்பெருமை கொண்டவர்கள், சிலர் துன்மார்க்கர்கள், சிலர் மிகவும் விலையேறப்பெற்றவர்கள்.'' மனுக்குலத்தையும் தேவன் அப்படித்தான் பார்க்கிறார். சிலரை பெலவீனர்களாக, சிலரை முட்டாள்களாக, சிலரை தற்பெருமை கொண்டவர்களாக, சிலரை துன்மார்க்கர்களாக அவர் பார்க்கின்றார். இவர்கள் மத்தியிலும் சிலரை மிகவும் விலையேறப்பெற்ற வர்களாக அவர் பார்க்கிறார்.

நான் அட்பாரா வந்து சேர்ந்த பிறகு, இராணுவத்தின் மருத்துவ மொழியில், 'நோயாளிகளின் சிகிச்சை மையம்' என்றழைக்கப்படும் ஒரு இடத்திற்கு பொறுப்பாக என்னை நியமித்தனர்.

உண்மையில், அங்கிருப்பது ஒரு அரண்மனையில் இருப்பதுபோல இருந்தது. அங்கு எனக்கு இரண்டு அறைகளும், இரண்டு படுக்கைகளும் இருந்தன. ஒருவரும் அங்கு இல்லை. இரவிலே அணியும் சட்டை ஒன்று முதல்முறையாக அங்கு எனக்குக் கிடைத்தது. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக, நான் என் உள்ளாடையோடுதான் தூங்கிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில், அங்கு ஒரு நோயாளியும் இல்லை. ஆகையால் நான் இரவிலே அணியும் சட்டை அணிந்து கொண்டு, அங்கிருந்த படுக்கைகளில் ஒன்றில் படுத்து தூங்கி விட்டேன்.



You Matter to God(Tamil)-2018.indd 159 5/22/2018 6:18:09 PM

அன்று நடுஇரவில், அந்த சூடான் தேசத்து ஜனங்களுக்காக ஜெபிக்கும்படி இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட பயங்கரமான ஒரு பாரத்தை நான் உணர்ந்தேன். அது என்னை அழுத்தியது. ஒன்றை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். அந்த ஜனங்களை நேசிப்பதென்பது, அவர்களுக்காக பாரப்பட்டு ஜெபிப்பதென்பது எளிதான ஒரு காரியமல்ல. அவர்கள் மூர்க்கத்தனமாக நடந்து கொள்வார்கள். அவர்களிடம் அன்போ, கனிவாக நடந்து கொள்ளும் தன்மையோ இருக்காது. அவர்களிடத்தில் நட்புறவை ஏற்படுத்திக் கொள்வது சுலபமான ஒன்றல்ல.

ஆனாலும் அந்த இரவில், அந்த நடு இரவில், நான் எழுந்தேன். அவர்களுக்காக ஜெபிக்கும்படி நான் பாரப்பட்டேன். அந்த சிறிய அறையில், என்னுடைய மென்மையான, வெள்ளை நிற இரவில் அணியும் சட்டையை அணிந்தவனாய், நான் முன்னும் பின்னும் வேகமாக நடந்து நடந்து ஜெபித்தேன். சூடான் தேச ஜனங்களுடைய ஆத்துமாக்களுக்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, நான் என்னுடைய சட்டையை குனிந்து பார்த்தேன். நான் இதை உங்களிடத்தில் சொல்லியே ஆக வேண்டும். அது அந்த இருளில் அவ்வளவு அதிகமாகப் பிரகாசித்தது. என்னுடைய சட்டை மெய்யாகவே பிரகாசித்து ஒளி வீசுமளவிற்கு, அங்கு தேவனுடைய மகிமை வெளிப்பட்டது. (மற்றவர்களுக்காக பரிந்து பேசும் ஜெபத்தை தேவன் எவ்வளவாய் கனம் பண்ணுகிறார் என்பதை அந்தக் கணத்தில் நான் புரிந்து கொண்டேன். தேவனே எனக்கு இந்த ஒரு சிறிய அனுபவத்தைக் கொடுத்தார்.)

சில நாட்களுக்குப் பிறகு, செங்கடல் அருகே ஜீபாய்ட் என்ற இடத்திலிருந்த இன்னொரு சேவை மையத்திற்கு பொறுப்பாக நான் அமர்த்தப்பட்டேன். அப்பொழுது நான் ராணுவத்தில் எந்த உயரிய பதவியையும் அடைய முடியாது. காரணம், ஆயுதம் ஏந்தி யுத்தங்களில் ஈடுபடாமல், சேவை மையங்களில் பணியாற்றுகிறேன் என்ற வாய்ப்பை நான்தான் தெரிந்து கொண்டேன். எனவே நான் ஒரு சேவை மைய அலுவலராகத்தான் பணிபுரிந்தேன். அந்த இடத்திலிருந்த ஒரு மருத்துவமனையில் பணியாற்றிய சூடான் தேச உள்ளூர் தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பில் நான் நியமிக்கப்பட்டேன். அலி என்பவர் சூடானிய தொழிலாளர் அமைப்பின் தலைவராக இருந்தார். அவரோடு நான் இடைபட வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் என்னுடைய அலுவலகத்தில் நாங்கள் சந்திப்போம். அந்த நாளுக்கான விஷயங்களை நாங்கள் திட்டமிடுவோம்.

வெளிப்படையாகச் சொல்கிறேன். அலிக்கும் எனக்கும் எவ்விதத்திலும் தொடர்பில்லை. எந்தத் தொடர்பையும் என்னால் பார்க்க முடியவில்லை. அவர் எனக்குத் தூரமாய் இருந்தார். நான் அவருக்கு தூரமாய் இருந்தேன்.



You Matter to God(Tamil)-2018.indd 160 5/22/2018 6:18:09 PM

## ஒரு தொடர்பு உண்டானது

ஒருநாள், நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது, அலி சாத்தானை விசுவாசிக்கிறார் என்பதை நான் அறிந்து கொண்டேன். ஆகையால் நான் அவரிடம், ‘‘நானும் சாத்தானை விசுவாசிக்கிறேன்,’’ என்று சொன்னேன். இது விசித்திரமான ஒன்றாகத் தெரிந்தாலும், எங்களுக்கிடையே உண்டான முதல் தொடர்பு இதுதான். நாங்கள் இருவரும் சாத்தானை விசுவாசித்தோம்.

ஒருநாள் அவர் என்னுடைய அலுவலகத்திற்குத் தாமதமாக வந்தார். வரும்போதே, அவர் நொண்டி நொண்டி நடந்து வந்தார். ‘‘என் காலில் அடிபட்டிருக்கிறது. நான் சிகிச்சை மையத்திற்குச் சென்று விட்டு வருகிறேன்,’’ என்று அவர் சொன்னார். வியாதிப்பட்டவர் மீது கைகளை வைத்து, ஒருவர் ஜெபித்ததை நான் பார்த்ததில்லை என்றாலும், எவ்வாறு சுகமளிக்கும் ஜெபம் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறித்து அப்பொழுதுதான் நான் வேதாகமத்தில் வாசித்திருந்தேன். அப்படியே நான் பார்த்திருந்தாலும், அது அப்பொழுது என் நினைவில் வரவில்லை. ஆனால் அது வேதாகமத்தில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆகையால், ‘‘உங்களுக்காக நான் ஜெபிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?’’ என்று நான் அவரிடம் கேட்டேன். ‘‘ஆம், எனக்காக ஜெபியுங்கள்’’ என்று அலி சொன்னார்.

வெடிக்கப் போகிற ஒரு வெடிகுண்டைப்போலத்தான் நான் அவரை நடத்தினேன். எச்சரிக்கையோடு, சற்று தள்ளி நின்று, என் கைகளை அவர் மீது வைத்து, ஒரு எளிமையான ஜெபத்தைச் செய்தேன். அதைத்தான் என்னால் செய்ய முடிந்தது. ஒரு வாரம் கழித்து, அவர் தன் கால்களை என்னிடம் காண்பித்தார். அது முழுமையாய் குணமாகியிருந்தது. அதற்குப் பிறகு, எங்களுக்குள் ஒரு தொடர்பு உண்டானது. நாங்கள் நண்பர்களானோம்.

## அலியோடு உண்டான நெருக்கமான ஒரு பிணைப்பு

அதன் பின் வந்த நாட்களில், ஒரு ஒட்டகத்தின் மீது சவாரி செய்வது எப்படி என்பதை எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அலி விரும்பினார். ஆகையால் நானும் ஒட்டக சவாரியைக் கற்றுக் கொண்டேன். என்னை நம்புங்கள், ஒட்டக சவாரி செய்வதென்பது நகைச்சுவையான ஒரு விஷயம் கிடையாது. ஒட்டகத்தின் மீது சவாரி செய்வதென்றால் என்ன என்பது எனக்குத் தெரியாது. அதன் ஒரு பகுதி மேலே ஏறும். இன்னொரு பகுதி கீழே இறங்கும். ஒட்டக சவாரியில், நிலையான, சீரான ஒரு ஓட்டம் உங்களுக்குக் கிடைக்காது. எகிப்தின் பிரமிடுகளில் அவர்கள் அவிழ்த்து விடுகிற ஒட்டகங்களைக் குறித்து நான் பேசவில்லை. அவை சூடானிய ஒட்டகங்கள் அல்ல.



You Matter to God(Tamil)-2018.indd 161 5/22/2018 6:18:09 PM

அலிக்கும் எனக்கும் இடையே நட்புறவு நெருக்கமானபோது, ஒருநாள், ‘‘வேதாகமத்திலிருந்து நான் உங்களுக்கு வாசித்துக் காண்பிக்க விரும்புகிறீர்களா ?’’ என்று நான் அவரிடம் கேட்டேன்.

அவரும் ‘ஆம்’ என்று சொன்னார். அவருக்கும் அதில் ஆர்வம் உண்டானது. ஆகையால், யோவான் சுவிசேஷத்திலிருந்து நாங்கள் ஆரம்பிக்கலாம் என்று நான் நினைத்தேன். கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பிலிருந்து நான் வாசித்தேன். அந்த நாட்களில், அந்த மொழிபெயர்ப்பைத்தான் பெரும்பாலானோர் வாசித்தனர். ராணுவ வீரர்களிடமிருந்துதான் அலி தனக்குத் தெரிந்த எல்லா ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டிருந்தார். அவரால் எழுத முடியாது, வாசிக்க முடியாது. ஆனால் அவருக்கு நல்ல, துல்லியமான ஞாபகசக்தி இருந்தது.

ஆக, கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பிலிருந்து நான் வாசித்தேன். நான் அதை ராணுவ வீரரின் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தும் சொன்னேன். அது எனக்கு ஒரு கடினமான சவாலாயிருந்தது.

கொஞ்ச நேரம் கழித்து, ‘‘நாம் ஏன் நம்முடைய ஒட்டகங்களின் மீது சவாரி செய்து, எங்காவது சென்று விட்டு வரக் கூடாது ?’’ என்று அலி என்னிடம் கேட்டார்.

நானும் அதற்கு ஒத்துக் கொண்டேன்.

உணவுப் பொருட்கள் என்னுடைய பொறுப்பில்தான் இருந்தது. ஆகையால் எங்களுக்கு சாப்பிடத் தேவையான எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு நாங்கள் புறப்பட்டோம். எங்களுடைய இரு ஒட்டகங்களையும் அவிழ்த்து, அவற்றின் மீது சவாரி செய்து சென்றோம். ஒரு மலையடிவாரத்திற்குச் சென்று, கீழே உட்கார்ந்தோம். உவர் நீரோடை (உப்புத்தன்மையுள்ள தண்ணீர் ஓடை) ஒன்று அங்கே அந்த மலையின் அடிவாரத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுது நான் அங்கு செய்ததை இன்றைக்கு செய்வேனா என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. நான் அதை பரிந்துரை செய்ய மாட்டேன். ஆனாலும் இதுதான் அங்கு நடந்தது.

அப்பொழுது அலி சொன்னார்: ‘‘நாங்கள் (சூடானியர்கள்) இந்தத் தண்ணீரைத்தான் குடிக்கின்றோம். ஆனால் உங்களைப் போன்ற வெள்ளையர்கள் இந்த உப்புத் தண்ணீரைக் குடிக்க மாட்டீர்கள்.’’

நான் சொன்னேன்: ‘‘இங்கு குடிப்பதற்கு வேறு தண்ணீர் இல்லாதபடியால், நான் இதைக் குடிக்கிறேன்.’’

‘‘நீங்கள் எப்படி அதைக் குடிப்பீர்கள் ?’’ என்று அலி கேட்டார்.

நான் இவ்வாறு பதிலளித்தேன்: ‘‘நீங்கள் சாவுக்கேதுவான ஒன்றை குடித்தாலும், உங்களுக்கு ஒன்றும் ஆகாது என்று இயேசு சொல்லியிருக்கிறார். ஆகையால் நான் இதைக் குடிப்பேன்.’’



You Matter to God(Tamil)-2018.indd 162 5/22/2018 6:18:09 PM

ஆக, நான் அந்தத் தண்ணீரைக் குடித்தேன். அவரும் அந்தத் தண்ணீரைக் குடித்தார். எங்களுக்கு ஒன்றும் ஆகவில்லை. நாங்கள் நன்றாகத்தான் இருந்தோம்.

## மறுபிறப்பு அல்லது புதுப்பிறப்பு

அந்த நேரத்தில், நாங்கள் இன்னும் கொஞ்ச நேரம் சேர்ந்து வேதாகமத்தை வாசித்தோம். மறுபடியும் பிறப்பதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற யோவான் சுவிசேஷத்தை நான் வாசித்தேன். 'மறுபடியும் பிறக்க வேண்டும்' என்ற வார்த்தை, அவருடைய மனதில் நன்றாகப் பதிந்து விட்டது.

நாங்கள் எங்களுடைய ஒட்டகங்களில் ஏறி, திரும்பிச் சென்றபோது, ''மறுபடியும் பிறக்க வேண்டுமா? அப்படியென்றால் என்ன?'' என்று அவர் கேட்டார்.

''நல்ல கேள்வி. தேவன் உங்களுக்கு ஒரு புதிய இருதயத்தைக் கொடுப்பார்,'' என்று நான் சொன்னேன்.

அலி சிரித்தார். காரணம், அந்த நாட்களில், இருதய மாற்று அறுவை சிகிச்சைகளெல்லாம் நடக்கவில்லை. ஒரு புதிய இருதயத்தைக் குறித்து அவரால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

''அப்படியென்றால், தேவன் தம்முடைய ஜீவனையே உங்களுக்குக் கொடுப்பார் என்று அர்த்தம்,'' என்று நான் சொன்னேன். பிறகு நான் கேட்டேன், ''நீங்கள் மறுபடியும் பிறக்க விரும்புகிறீர்களா?''

''ஆம்,'' என்று அவர் சொன்னார்.

நான் சொன்னேன்: ''சூரியன் மறைகிற இந்த மாலை நேரத்தில், நீங்கள் உங்களுடைய வீட்டிற்குச் செல்லுங்கள். நான் என் அறைக்குச் செல்கிறேன். மறுபடியும் பிறக்கும்படி நீங்கள் ஜெபியுங்கள். நானும் உங்களுக்காக ஜெபிப்பேன்.''

அதற்கு அவர், 'சரி,' என்று சொன்னார்.

அடுத்த நாள் காலையில் நாங்கள் சந்தித்தபோது, நான் அவரைப் பார்த்து, ''நீங்கள் ஜெபித்தீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆம்,'' என்றார்.

''எதையாவது பெற்றுக் கொண்டீர்களா?'' என்று கேட்டேன்.

''இல்லை,'' என்றார்.

அது எனக்கு ஏமாற்றமாயிருந்தது. ''அவர் ஒரு முஸ்லீம் என்பதை மறந்து விடாதே,'' என்று பரிசுத்த ஆவியானவர் என் காதுகளில் மெல்லிய சத்தத்தில் சொன்னார். அது அலியிடம் இன்னொரு



You Matter to God(Tamil)-2018.indd 163 5/22/2018 6:18:09 PM

கேள்வியை கேட்கும்படி என்னைத் தூண்டியது. நான் கேட்டேன்: ‘‘இயேசுவின் நாமத்தில் நீங்கள் ஜெபித்தீர்களா ?’’

‘‘இல்லை,’’ என்று அவர் பதிலளித்தார்.

‘‘ஒ, நீங்கள் மறுபடியும் பிறக்க விரும்பினால், நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும். நீங்கள் அதைச் செய்ய விரும்புகிறீர்களா ?’’ என்று நான் கேட்டேன்.

‘‘ஆம், விரும்புகிறேன்,’’ என்றார்.

‘‘நல்லது. இன்று மாலை, நீங்கள் உங்களுடைய வீட்டிற்குச் செல்லுங்கள். நானும் என் அறைக்குச் செல்கிறேன். நாம் திரும்பவும் ஜெபிப்போம்,’’ என்றேன்.

அடுத்த நாள் காலையில், நான் அவரைச் சந்தித்தபோது, நான் அவரை உற்றுநோக்கிப் பார்த்து, ‘‘நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள் !’’ என்று சொன்னேன்.

‘‘ஆம், பெற்றுக் கொண்டேன்,’’ என்று உற்சாகமாகச் சொன்னார்.

அலியின் வாழ்க்கையில் நிகழ்ந்த இந்த மாற்றத்தைக் குறித்து மருத்துவமனையிலிருந்த எல்லோரும் கேள்விப்பட்டனர். அவர்கள் என்னிடம் வந்து, ‘‘உங்களுடைய நண்பர் அலிக்கு என்ன நடந்தது ?’’ என்று கேட்டனர்.

‘‘அவர் மறுபடியும் பிறந்திருக்கிறார்,’’ என்று நான் பதிலளித்தேன்.

‘‘என்ன அது ?’’ என்று அவர்கள் கேட்டனர்.

‘‘அது என்ன என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன் !’’ என்று நான் அதைச் சொன்னேன்.

மருத்துவமனையின் உயர் அதிகாரி என்னை அழைத்து, ‘‘உங்களுடைய நண்பர் அலி என்ன ஆயிற்று ?’’ என்று கேட்டார்.

‘‘அவர் மறுபடியும் பிறந்திருக்கிறார்,’’ என்று நான் சொன்னேன்.

இந்த அதிகாரி ப்ரெஸ்பெட்டீரியன் சபைப்பிரிவைச் சேர்ந்தவர். இவர் ஒரு நல்ல மனுஷர், ஒழுங்காக சபைக்குச் செல்பவர். ஆனால் மறுபிறப்பைக் குறித்து, புதுப் பிறப்பைக் குறித்து இவருக்கு ஒன்றும் தெரியாது. ஆக, அலிக்குக் கிடைத்த அனுபவத்தின் விளைவாக, என்னுடைய சக படைவீரர்களில் இருவர் கர்த்தராகிய இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

ஒன்றை நான் தாழ்மையாக இங்கு சொல்ல விரும்புகிறேன். ஒரு நடுஇரவில், சூடான் தேசத்து ஜனங்களுக்காக தேவன் தந்த பாரத்தோடு நான் பரிந்து மன்றாடி ஜெபித்தேன். அதன்



You Matter to God(Tamil)-2018.indd 164 5/22/2018 6:18:09 PM

விளைவாகத்தான் இவ்வளவு நல்ல விஷயங்களும் நடந்தன. பிரசவ வலி இல்லாமல், ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றெடுப்பதில்லை என்று வேதவசனம் நமக்குச் சொல்கிறது. இப்படிப்பட்ட பிரசவ வலி உணர்வோடு நாம் ஜெபிக்கவில்லை என்றால், மற்றவர்களுடைய வாழ்க்கையில் நாம் மறுபிறப்பைப் பார்க்கப் போவதில்லை. ஏசாயா 66:8 சொல்கிறது: ‘‘சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டு (பிரசவ வேதனைப்பட்டு), தன் குமாரரைப் பெற்றெடுத்திருக்கிறது.’’ எவ்வளவு சீக்கிரமாய் சபையானது பிரசவ வலியோடு ஜெபிக்க ஆரம்பிக்கிறதோ, அவ்வளவு சீக்கிரமாய் அவள் குழந்தைகளைப் பெற்றெடுக்க ஆரம்பிப்பாள்.

**வியாபாரியும், முத்தும்**

அடுத்த உவமை எனக்கு மிகவும் பிடித்த, நான் மிகவும் நேசிக்கின்ற ஒன்றாகும்: ‘‘மேலும் பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் (அதைத் தனக்குரியதாக்கிக் கொள்கிறான்)’’ (மத்தேயு 13:45-46).

இந்த வேதப்பகுதியை பல்வேறு விதங்களில் நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நான் என்னுடைய புரிதலை உங்களுக்குக் கொடுக்கிறேன். இது நிச்சயம் உங்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உண்டாக்கும். இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கிற நபர் ஒரு வியாபாரி என்பதை முதலில் நான் சுட்டிக் காண்பித்து விடுகிறேன். இவன் ஊர் ஊராய் சுற்றுலா செல்கிற ஒரு நபரல்ல. முத்துக்களை வாங்குவதிலும், விற்பதிலும் இவன் தன் வாழ்நாள் முழுவதையும் செலவழித்திருக்கிறான். ஒரு முத்தின் உண்மையான மதிப்பு என்ன என்பது இவனுக்குத் தெரியும். விலையேறப்பெற்ற, இவனை ஆச்சரியப்படுத்தக்கூடிய ஒரு முத்தை இவன் பார்க்கும்போது, அவன் தனக்கிருந்த எல்லாவற்றையும் விற்று, அதைத் தனக்குச் சொந்தமானதாக்கிக் கொள்கிறான்.

இந்த உவமையை இன்றையச் சூழ்நிலைக்கேற்றபடி கொஞ்சம் மாற்றி நான் சொல்கிறேன். ஒருவன் தன் வீட்டிற்குச் சென்று, தன் மனைவியிடம், ‘‘டியர், நம்முடைய காரை நான் விற்று விட்டேன்,’’ என்று சொல்கிறான்.

அவள் அதிர்ச்சியடைந்து, ‘‘என்ன, நம்முடைய காரை விற்று விட்டீர்களா? ஏன் அப்படிச் செய்தீர்கள்?’’ என்று கேட்டாள்.

‘‘ஒரு முத்தை நான் கண்டுபிடித்தேன்,’’ என்று அவன் சொன்னான்.



You Matter to God(Tamil)-2018.indd 165 5/22/2018 6:18:09 PM

“ஒரு முத்தா ? ஒரே ஒரு முத்தா ?” என்று அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

“ஆம்,” என்றான்.

“நல்ல வேளை, நம் வீட்டையாவது விட்டு வைத்தீர்களே, கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்,” என்று நிம்மதி பெருமூச்சுடன் அவள் சொன்னாள்.

“இல்லை, டியர். நம் வீட்டையும் விற்று விட்டேன்!” என்று சொன்னான்.

பாருங்கள், இந்த மனுஷன், பொருட்களின் மதிப்பை நன்கு அறிந்தவனாய் இருக்கிறான். வாழ்க்கையில், அதுவரை அவன் சம்பாதித்த எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் அதிக விலைமதிப்பை உடைய ஒரு முத்தை அவன் கண்டுபிடித்தான். எனவே அவன் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் விற்று, அந்த முத்தை வாங்கி, தனக்குச் சொந்தமானதாக்கிக் கொண்டான்.

நீங்கள் இதை ஒரு கனம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களை அந்த முத்தாக சிந்தித்துப் பாருங்கள். நீங்கள்தான் அந்த தனித்தன்மை வாய்ந்த, அழகான, மிகவும் விலையேறப்பெற்ற முத்து என்பதை எண்ணிப் பாருங்கள்.

சில கடினமான விஷயங்களைக் கடந்த பிறகுதான் முத்துக்களாக உருவாக்கப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு கடல் சிப்பியை, ஒரு மண் துகள் அரிப்பதினால், முத்து வெளி வருகின்றது. ஒருவேளை, நீங்களும் வலிவேதனை நிறைந்த சூழ்நிலைகளின் வழியாகக் கடந்து சென்று கொண்டிருக்கலாம். தேவன் மெய்யாகவே உங்களை நேசிக்கிறாரா என்ற கேள்வி உங்களுக்குள் எழ ஆரம்பித்திருக்கலாம். “நான் எதற்கும் பிரயோஜனமில்லாதவன். நான் தேவனுக்கு முக்கியமானவன் அல்ல. என்னைத் தவிர மற்ற எல்லோரும் அவருக்கு முக்கியமானவர்களாய் இருக்கிறார்கள்,” என்று நீங்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கலாம்.

ஆனால் அது உண்மையல்ல என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் தேவனுக்கு முக்கியமானவர்கள் என்பதுதான் மாறாத உண்மை. உங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவையே கொடுத்தார். குறிப்பாக, உங்களுக்காக அவர் அதைச் செய்தார். அந்த அளவிற்கு நீங்கள் தேவனுக்கு முக்கியமானவர்கள்.

இயேசு தம்மிடமிருந்த எல்லாவற்றையும் விற்றார். அவர் பரலோகத்தின் எல்லா மகிமையான ஐசுவரியங்களையும் விட்டார். ஒரு தச்சனுடைய குமாரனாய் அவர் வந்தார். அவர் எங்கும் பிரயாணம்



You Matter to God(Tamil)-2018.indd 166 5/22/2018 6:18:09 PM

செய்து பிரசங்கித்தார். அவர் சிலுவையில் மரித்தபோது, அவரிடம் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் உண்மை! இன்னொருவரிடமிருந்து கடனாக வாங்கப்பட்ட கல்லறையில், கடனாக வாங்கப்பட்ட மெல்லிய துணியினால் சுற்றப்பட்டு, அவர் அடக்கம் செய்யப்பட்டார். பவுல் அதை இவ்வாறு எழுதுகிறார்: ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படி, உங்கள் நிமித்தம் தரித்திரர் ஆனாரே’’ **(2 கொரிந்தியர் 8:9).** இயேசு தம்மிடமிருந்த எல்லாவற்றையும் விற்றார். அவர் உங்களுக்காக தம்முடைய அனைத்தையும் விட்டுக் கொடுத்தார்.

அவர் அந்த நிலத்தில் மறைந்திருந்த புதையலை விலைக்கு வாங்கினார் என்பது எனக்குத் தெரியும். அது தேவனுடைய ஜனங்களை ஒட்டுமொத்தமாகக் குறிக்கிறது. ஆனால் அவர் விலைமதிக்க முடியாத ஒரு முத்தையும் விலைக்கு வாங்கினார். அது நீங்கள்தான்.

ஆம், நீங்கள்தான்.

நீங்கள் பெலவீனர்களாய் இருக்கலாம். நீங்கள் நிறைய தோல்விகளைத் தழுவியிருக்கலாம். நீங்கள் ஞானத்தில் குறை வுள்ளவர்களாய் இருக்கலாம். நீங்கள் தனிமையில், பயத்தோடு, விரக்தியடைந்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனாலும் இயேசு உங்களுக்காக மரித்தார் என்பது மாறாத உண்மை.

இரட்சிக்கப்படுவதற்கு வேறு ஒருவரும் இல்லையென்றாலும், இயேசு என் ஒருவனுக்காகவே மரித்திருப்பார் என்பதுதான் உண்மை. இன்றைக்கு இந்த பூமியில் கோடிக்கணக்கான ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுக்கு நன்றி. ஆனால் வேறு ஒருவருமே இங்கு இல்லையென்றாலும், இயேசு என் ஒருவனுக்காகவே தம்முடைய எல்லாவற்றையும் கொடுத்திருப்பார். நான் இதை மெய்யாகவே விசுவாசிக்கிறேன். இதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இதைக் குறித்த உறுதியும், நிச்சயமும் எனக்குள் உண்டு.

இயேசுவின் அன்பை தனிநபருக்குரியதாய் நான் பார்க்க விரும்புகிறேன். நான் அதை தனிப்பட்ட விதத்தில் எனக்குரியதாய் ஆக்கிக் கொள்ள விரும்புகிறேன். ‘‘இயேசு எனக்காக மரித்தார். அவர் தம்முடைய சிங்காசனத்தை எனக்காக விட்டுக் கொடுத்தார். அவர் தம்முடைய ஜீவனையே எனக்காக ஒப்புக்கொடுத்தார். அவர் எனக்காக சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டார். அவர் எனக்காக உயிர்த்தெழுந்தார், பரமேறிச் சென்றார், பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.’’

நீங்கள் தேவனுக்கும், மற்றவர்களுக்கும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உணருவதில் உங்களுக்கு ஏதேனும்



You Matter to God(Tamil)-2018.indd 167 5/22/2018 6:18:09 PM

பிரச்சனை இருக்கிறதா? உங்களைக் குறித்து ரொம்பவும் அற்பமாக நினைக்கிறீர்களா? உங்களுடைய உண்மையான மதிப்பை உங்களால் உணர முடியவில்லையா? ஆம், இந்தச் சத்தியம் உங்களுக்கானதுதான். நீங்கள் தனிமையில் வேதனைப்படலாம். இதை வாசிக்கும் ஒரு சூழ்நிலைக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று நீங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கலாம். தேவன்தான் இதை வாசிக்கும் சூழ்நிலைக்குள் உங்களைக் கொண்டு வந்திருக்கிறார். தேவனே இப்பொழுது உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார்.

இவ்விதத்தில் உங்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். அந்த முத்தை விலை கொடுத்து வாங்கின அந்த வியாபாரியைப் பாருங்கள். அவன் தன் உள்ளங்கையில் அந்த முத்தை வைத்திருக்கிறான். அவன் அதைப் பார்த்து இவ்வாறு சொல்கிறான்: ''நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். நான் இதுவரை பார்த்ததிலேயே நீ தான் மிகவும் அழகாய் இருக்கிறாய். என்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்து, உன்னை வாங்கியிருக்கிறேன். நீ அவ்வளவு விலையேறப்பெற்ற ஒரு முத்தாய் இருக்கிறாய். நீ மிகவும் அழகாயிருக்கிறாய்.''

நீங்கள் இதைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள்தான் தனிப்பட்ட விதத்தில் அந்த முத்து என்பதை உணருங்கள். இப்பொழுது நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் கரத்தில் இருக்கிறீர்கள். அவர் உங்களைப் பார்த்து, ''நீ மிகவும் அழகாயிருக்கிறாய். நான் உன்னை நேசிக்கிறேன். எனவேதான் என்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்து, உன்னை வாங்கியிருக்கிறேன். உனக்காக மரித்ததை நினைத்து, நான் சந்தோஷப்படுகிறேன், உற்சாகமாயிருக்கிறேன்.''

## உறுதியான ஒரு தீர்மானமெடுத்து ஜெபியுங்கள்

நாம் இந்தப் புத்தகத்தின் முடிவுக்கு வந்திருக்கிறோம். இப்பொழுது நான் உங்களுக்கு இன்னும் கொஞ்சம் உதவி செய்ய விரும்புகிறேன். தங்களைக் குறித்து மிகவும் குறைவுபட்ட மதிப்பையும், நம்பிக்கையையும் உடையவர்களிடம் காணப்படுகிற பிரச்சனை எவ்வளவு ஆழமானது என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களுக்கு நான் உதவியிருக்கிறேன். நீங்கள் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை விசுவாசிப்பதில் உங்களுக்குப் பிரச்சனை இருக்குமென்றால், ஒன்றைச் செய்யும்படி, நான் உங்களுக்கு ஆலோசனை கொடுக்கிறேன். இப்பொழுதே நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உங்களை ஒரு ஜெபத்தில் வழிநடத்த விரும்புகிறேன். அதில் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். மெய்யாகவே உங்களுடைய மதிப்பு என்ன என்பதில் உங்களுக்கு ஒரு பிரச்சனை இருக்குமென்றால், பயப்படாதீர்கள். வெட்கி, குறுகிப் போகாதீர்கள். நான் சொல்லப் போகிற ஜெபத்தை நீங்களும் சேர்ந்து சொல்லுங்கள்.



You Matter to God(Tamil)-2018.indd 168 5/22/2018 6:18:09 PM

இது உண்மையாய் செயல்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு நேரமாய் இருக்கிறது. இந்தப் போதனையை வெளிக் கொண்டு வராதபடி, பிசாசு தன்னால் இயன்ற அளவிற்கு முயற்சி எடுத்து, என்னைத் தடுக்கப் பார்த்தான். ஆனாலும் அவன் தோற்கடிக்கப்பட்ட ஒரு சத்துரு. அவன்தான் தோற்றுப் போனான்.

அந்த விலையேறப்பெற்ற முத்தாக இப்பொழுது உங்களையே நீங்கள் பாருங்கள் என்று நான் அழைப்பு கொடுக்கிறேன். கொஞ்ச நேரத்திற்கு, மற்ற எல்லா விஷயங்களுக்கும் கதவை அடைத்து விடுங்கள். இயேசுவின் உள்ளங்கையில் இருக்கும் ஒரு முத்தாக உங்களையே பாருங்கள். அந்தக் கரங்களில், சிலுவையில் அவருக்கு உண்டான காயங்களின் தழும்புகளும் இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இயேசு உங்களைப் பார்த்துப் பேசுகிற வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள். அவர் சொல்கின்றார், ''நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். என்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்து, உன்னை எனக்குச் சொந்தமாக்கியிருக்கிறேன். நீ அதற்குத் தகுதியானவன், தகுதியானவள்தான். உனக்காக என் ஜீவனையே கொடுத்தது, எனக்கு சந்தோஷத்தைத்தான் கொடுக்கிறது.''

இந்தப் படத்தை உங்களுடைய மனதில் நிலைநிறுத்தினவர்களாய், பின் வரும் வார்த்தைகளை உங்களால் சொல்ல முடியுமா? தயவுசெய்து, கீழ்க்காணும் பத்திகளில் வரும் வார்த்தைகளைச் சொல்லி, ஜெபியுங்கள்:

*கர்த்தராகிய இயேசுவே, நீர் எனக்காக மரித்தீர். அதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன். என்னை விலைக்கிரயம் கொடுத்து வாங்கும்படி, சிலுவையில் நீர் உம்மையே மரணத்திற்கும், வார்த்தைகளில் விவரிக்க முடியாத வலிவேதனைகளுக்கும், நிந்தை அவமானத்திற்கும் ஒப்புக்கொடுத்தீர்.*

*கர்த்தராகிய இயேசுவே, இப்பொழுது நான் உமக்குச் சொந்தம். நான் என்றும் உம் ஒருவருக்கே சொந்தம். நீர் ஒருபோதும் என்னை விட்டு விலக மாட்டீர், என்னைக் கைவிட மாட்டீர் என்பது எனக்குத் தெரியும். நீர் உம்முடைய உள்ளங்கையில் என்னைப் பொறித்து வைத்திருக்கிறீர்.*

*உம்முடைய கண்களில், நான் மிகவும் அழகானவனாக, அழகானவளாக இருக்கிறேன். இந்தப் பிரபஞ்சத்தில் நீர் சிருஷ்டித்த மற்ற எந்த ஒரு விஷயத்தைக் காட்டிலும், நான் மிகவும் அழகாக இருக்கிறேன். காரணம், நீர் உம்முடைய அன்பை என் மீது நிலையாய் பதித்திருக்கிறீர். நீர் என்னை நேசிக்கிறீர். கர்த்தராகிய இயேசுவே, நானும் உம்மை நேசிக்கிறேன்.*

*என்னுடைய அன்பை ஏற்றுக் கொள்ளும். இப்பொழுது என்னை முற்றிலும் புதிதாக அர்ப்பணிக்கின்றேன். இப்பொழுது நான் எதற்கு பிரயோஜனமில்லாதவன் அல்ல. உமக்கு நன்றி சொல்கிறேன். நீர் என்னை வெறுத்து, ஒதுக்கவில்லை. உமக்கு*



You Matter to God(Tamil)-2018.indd 169 5/22/2018 6:18:09 PM

*நன்றி. நீர் என்னைத் தூக்கி எறிந்து விடவில்லை. உமக்கு நன்றி. நீர் என்னை நிராகரிக்கவில்லை. உமக்கு நன்றி. உமக்கு மிகவும் பிரியமானவரான கர்த்தராகிய இயேசுவுக்குள் நீர் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறீர். உமக்கு நன்றி. உமக்கு நன்றி. உமக்கு நன்றி, நன்றி, நன்றி என்று நான் நன்றி சொல்லிக் கொண்டே இருக்கிறேன்! சிலுவையில் நீர் ஊற்றிய உம்முடைய ஆச்சரியமான அன்பிற்காக, உமக்கு நன்றி. கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி.*

இப்பொழுது நீங்கள் இந்த ஜெபத்தை ஜெபித்திருக்கிறீர்களா? ஆம் என்றால், அடுத்த சில நாட்களில், நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய அடியைக் குறித்து நான் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு நெருக்கமான ஒரு நபரிடம் செல்லுங்கள். நீங்கள் என்ன ஜெபித்தீர்கள் என்பதை அந்த நபரிடம் சொல்லுங்கள். அந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டிய தேவை அந்த நபருக்கு இருக்கலாம். அந்த ஜெபம் அவருக்கும் தேவைப்படலாம். அந்த நபரின் கண்களைப் பார்த்து, அவருக்கு நேராக நின்று இதைச் சொல்லுங்கள், ‘‘நான் நிராகரிக்கப்பட்டவன் அல்ல. நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன் அல்ல. நான் தேவனுக்குப் பிரியமானவன், பிரியமானவள். நான் கர்த்தராகிய இயேசுவுக்கு விலையேறப்பெற்றவன், விலையேறப்பெற்றவள்.’’ நீங்கள் அதைச் செய்வீர்களா?

இந்தப் புத்தகத்தை முடிக்கின்ற நேரத்தில், இந்த ஆச்சரியமான சத்தியத்தை நீங்கள் திரும்பவும் ஒருமுறை அறிக்கை செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தயவு செய்து, இதைத் திரும்பவும் சொல்லுங்கள்: ‘‘நான் நிராகரிக்கப்பட்டவன் அல்ல. நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன் அல்ல. நான் தேவனுக்குப் பிரியமானவன். நான் கர்த்தராகிய இயேசுவுக்கு விலையேறப்பெற்றவன்.’’

## வேறுபிரிக்கப்படுதலுக்கான ஜெபம்

1 தெசலோனிக்கேயர் 5:23-ம் வசனம், நாம் யார், நாம் எதை நோக்கிச் செல்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான ஒரு திறவுகோல் வசனமாக இருக்கின்றது. நாம் இவ்வசனத்தை அடிக்கடி பார்த்தோம். அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக, அதாவது கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்த ஒரு ஜெபமாய் இது இருக்கிறது. தெசலோனிக்கே பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்காக குறிப்பாக, பவுல் இதை ஜெபித்தார். ஆனால் அவருடைய ஜெபம் நமக்காக செய்யப்பட்டது என்பதும் உண்மையாயிருக்கிறது.

தொடர்புடைய முக்கியமான ஒரு வசனத்தை எடுத்து அல்லது ஒரு வேதப்பகுதியை எடுத்து, அதை ஒரு அறிக்கையாக, ஜெபமாக நான்



You Matter to God(Tamil)-2018.indd 170 5/22/2018 6:18:09 PM

செய்து வருகின்றேன். கடந்த பல வருடங்களில், இது எனக்கு அதிக பிரயோஜனமாயிருக்கிறது என்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன். உண்மையில், நானும் ரூத்தும் இதை தனிப்பட்ட விதத்தில் ஒரு அறிக்கையாகச் செய்து வருகின்றோம்: ‘‘சமாதானத்தின் தேவன்தாமே எங்களை முழுவதுமாய் பரிசுத்தமாக்குவாராக. நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது, எங்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.’’

இதை உங்களுடைய தனிப்பட்ட ஜெபமாய் ஜெபிக்கும்படி இப்பொழுது நான் உங்களுக்கு அழைப்பு கொடுக்கிறேன். உங்களுடைய ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பார் என்ற விசுவாசத்தோடு நீங்கள் ஜெபிக்கும்போது, அது உங்களுக்கு அர்த்தம் நிறைந்ததாய் இருக்கும்.

வேறுபிரிக்கப்படுதல் என்றால், ‘‘பரிசுத்தமாக்கப்படுதல்’’ என்று அர்த்தம். இதை நீங்கள் பெரும்பாலும் அறிந்திருப்பீர்கள். தேவனே உங்களை பரிசுத்தமாக்கும்படி, இந்த ஜெபத்தில் நீங்கள் ஜெபிக்கப் போகிறீர்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு மிகவும் அத்தியாவசியமாய் எது தேவைப்படுகிறது என்று கேட்டால், அது பரிசுத்தம் என்றுதான் நான் சொல்வேன். ஆகையால் இது மிகவும் தேவையான ஒரு ஜெபமாகத்தான் இருக்கிறது.

இப்பொழுதே அதன் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தையும் உணர்ந்தவர்களாய் ஏன் ஜெபிக்கக்கூடாது? நீங்கள் ஆயத்தமா?

> *‘‘சமாதானத்தின் தேவன்தாமே என்னை முழுவதுமாய் பரிசுத்தமாக்குவாராக. நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது, என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.’’*

நீங்கள் இவ்விரண்டு ஜெபங்களையும் ஜெபித்திருக்கிறீர்கள் என்றால், தேவன் உங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் உறுதியாய் அறிக்கை செய்திருக்கிறீர்கள், அறிவித்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். அது மட்டுமல்ல, உங்களை முழுமையாய், அதாவது உங்களுடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தை முழுமையாய் அவருக்குச் சொந்தமானதாய் ஆயத்தப்படுத்தும்படி நீங்கள் அவரிடம் ஜெபித்திருக்கிறீர்கள் என்றும் அர்த்தம். இந்த ஜெபத்திற்கு அவர் எப்பொழுதுமே, நிச்சயமாய் பதில் கொடுப்பார்.

நீங்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? இதைக் குறித்த சில அடிப்படையான விஷயங்களை இந்தப் புத்தகத்தின் பக்கங்களில் நான் கொடுத்திருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். தேவனுடைய பார்வையில் நாம் எப்படி இருக்கிறோம், அவர் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்ற



You Matter to God(Tamil)-2018.indd 171 5/22/2018 6:18:09 PM

உண்மை, நம்மை திக்குமுக்காடச் செய்கிறது, தடுமாறச் செய்கிறது. நீங்கள் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்ற அறிவிலும், சந்தோஷத்திலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் வளருவீர்களாக.



You Matter to God(Tamil)-2018.indd 172 5/22/2018 6:18:09 PM

# நூலாசிரியரின் பின்னணி

டெரிக் பிரின்ஸ் (1915 - 2003) ஆங்கிலேய பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்த மகன். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில், இவர் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் அறிஞராக கல்வி பயின்றார். கிங்ஸ் கல்லூரியில், பண்டைய மற்றும் நவீன தத்துவ படிப்பில் அவர் பட்டப்படிப்பை தொடர உதவியும் பெற்றிருந்தார். எபிரெய மற்றும் அரபிய மொழிகள் போன்ற பல நவீன மொழிகளை, கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்திலும், எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைகழகத்திலும் இவர் கற்றுக்கொண்டார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில், பிரிட்ஷ் ராணுவத்தில் பணியாற்றின போது, அவர் வேதத்தை படிக்க துவங்கி, இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வை மாற்றும் ஒரு அனுபவத்தை பெற்றார். இந்த அனுபவத்திலிருந்து, அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு உயிரோடு இருக்கிறார் என்றும்; இரண்டாவது, வேதம் சத்தியமான, நவீன காலத்திற்கும் பொருத்தமுடைய புத்தகம் என்பதே. இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றின. இதன் விளைவாக, அவர் வேதத்தை ஆராயவும் அதை போதிக்கவும் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதத்தை விளக்கி, அதின் சத்தியத்தை மிக தெளிவான மற்றும் எளிய முறையில் விளக்கும் டெரிக்கின் வரத்தினால், கோடிக்கணக்கான ஜனங்களுடைய வாழ்வில் விசுவாசத்தின் அஸ்திபாரம் போட அது உதவி செய்துள்ளது. சபை பிரிவு சார்பற்ற, குழு பிரிவு சார்பற்ற அவருடைய அணுகுமுறை, அவருடைய போதனைகள் எல்லா இன மற்றும் மத பின்னணிகளிலிருந்து வந்தவர்களுக்கும் பிரயோஜனமாகவும், உதவுகிற தாகவும் அமைந்துள்ளது.

60க்கும் மேற்பட்ட புத்தகங்களையும், 600 ஒலிபதிவு செய்யப்பட்ட போதனை கள், மற்றும் 100 வீடியோ போதனை பதிவுகளையும் அவர் வெளியிட்டுள்ளார். இவைககளில் பல, 60க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்ப்பு செய்து, வெளியிடப்பட்டுள்ளன. அவருடைய வானொலி ஒலிபரப்பு அரபிக், சீன மொழிகள் (அமொய், கண்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), க்ரோயேஷிய மொழி, ஜெர்மன், மலகாஸி, மொங்கோலியன், ரஷியன், சமோவன், ஸ்பானிஷ், இந்தோனேசிய பஹாசா மற்றும் டொங்கன் மொழிபெயர்ப்புடன் அனுதினமும் ஒலிபரப்பப்படுகிறன. உலகமெங்கும் இந்த ஒலிபரப்பு இன்னும் அநேக மக்களை சென்றடைகிறது.

“இயேசு வரும் வரை” என்ற கட்டளையை நிறைவேற்றும் விதமாக, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள், 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை, போதனைகளை கொண்டு சந்திக்கும் ஊழியத்தை தொடர்ந்து செய்து வருகிறது. உலகமெங்கும், 30 நாடுகளில் உள்ள டெரிக் பிரின்ஸ் அலுவலகங்களின் ஊழியங்களால், இது சாத்தியமாகிறது. இவைகளில் சில முக்கிய அலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, மியான்மார், நேபாள், நெதர்லாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, யூ.கே., பசிபிக் தீவுகள் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உள்ளன. இவைகளை குறித்தும், உலகமெங்கும் உள்ள மற்ற இடங்களையும் குறித்து அறிந்துக்கொள்ள, www.derekprince.in என்ற இணையதளத்திற்கு சென்று பாருங்கள்.

**உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

For orders, prayer requests & other enquiries please contact :

DERERK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

**உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Derek Prince Ministries - India

எங்களது இணையதள்த்தில் உங்களுக்காக சிறப்பு சலுகைகள் மற்றும் வெளியீடுகள் காத்திருக்கின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையதள முகவரிக்கு சென்று பாருங்கள்.

**www.derekprince.in**

**ஃபேஸ்புக்கில் எங்களது முகவரி:**

**Derek Prince Ministries - India**
web page has a lot of offers 'n' resources for you.

Visit our web page at:

www.derekprince.in

Find us on Facebook, by typing:
Derek Prince Ministries - India

You Matter to God(Tamil)-2018.indd 176 5/22/2018 6:18:09 PM